

# லெனினும் ஆசியாவும்

த. துரைசிங்கம்

3/

# லெனினும் ஆசியாவும்

(லெனினின் 110வது பிறந்த தினத்தை யொட்டி எழுதப்பட்டது)

த. துரைசிங்கம்

சோஷலிச ஆய்வுக் கழகம்
கொழும்பு
1981

தமிழாக்கம்: பண்ணுமத்துக் கவிராயர்
வெளியிட்டோர்: சோஷலிஸ ஆய்வுக் கழகம், 31, வில்ஸன் வீதி, கொழும்பு-12.
அச்சகம்: பிரகத்தி அச்சகம், 93, மாளிகாகந்தை ரோட், கொழும்பு-10.

# முன்னுரை

லெனின், சாஸ்வதமான ஒரு கருப்பொருள். ஆகவே லெனின் பற்றிய நூல்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும்.

லெனின் ஒரு மாபெரும் சிந்தனையாளர், அறிஞர், வெகுஜனத் தலைவர், முதலாவது சோஷலிஸ ராஜ்யத்தின் ஸ்தாபகர். உலக உழைக்கும் மக்களின், பாட்டாளி வர்க்கத்தின் விமோசனத்துக்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

ஆசியாவில் வாழும் எமக்கு லெனின் விசேஷ முக்கியத்துவம் பெறுகிறார். ஒருமுறை வியத்நாம் புரட்சியின் தந்தையான ஹோ சி மின் குறிப்பிட்டது போல், கலோனியல் பிரச்சினை பற்றிய லெனினுடைய அணுகல் முறை, அடக்கியொடுக்கப்பட்ட ஆசிய மக்கள் மத்தியில் பெருங்கவனத்தைப் பெற்றது.

லெனின் ஆசிய மக்களின் விமோசனத்துக்குப் பெரும் பங்காற்றியுள்ளார். அது மாத்திரமன்றி உலகத்தின் பிரகாசமான எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பெரும் பணியில் சுயேச்சையான பங்காளர்களாகவும், புதிய வாழ்வின் நிர்மாணிகளாகவும் பங்கெடுக்கும்படி அறைகூவல் விடுத்தார். சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யங்கள் நிலைத்திருந்த காலத்தில் அவர் இந்த அறைகூவலை விடுத்தார்.

தோழர் த. துரைசிங்கம் அவர்களின் லெனின் பற்றிய இந்த நூல் ஆசியாவைப் பகைப்புலனாகக் கொண்டுள்ளது. இம்மாபெரும் கண்டத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த மகா புருஷர் லெனின் செலுத்திய பங்கும் இங்கே எடைபோடப்பட்டுள்ளது.

தோழர் துரைசிங்கம் பழம்பெரும் புரட்சிவாதிகளில் ஒருவராவார். லெனின் பற்றி எழுத அவருக்குத் தகுதியுண்டு. லெனின் ஒரு வரலாற்று புருஷர் மாத்திரமல்லர், உலக மக்களின் இதயத்தில் சாஸ்வதமாக வாழ்ந்து கொண்டிருப்பவரும் கூட.

வரலாற்றில் இடம் பெறுதவர்கள் ஆசிய மக்கள் என அவர்கள் ஒரு காலத்தில் குறிப்பிடப் பட்டனர். அந்த நிலைமை மாறுவதற்கும் அவர்கள் வரலாற்றில் பிரவேசித்து தமது விடுதலையைப் பெறுவதற்கும் லெனினும் லெனினஸமும் தான் காரணம். இதையும் தோழர் துரைசிங்கம் மிகத் தெளிவாக விபரித்துள்ளார்.

இந்நூல், அவர் மேற்கொண்ட இடையறாத உழைப்பினதும் லெனின்பால் அவர் கொண்டுள்ள ஈடுபாட்டினதும் ஒரு வெளிப்பாடாகும். இந்த நூலுக்கு அதற்குரிய வரவேற்புக் கிடைக்குமென்று நான் நினைக்கிறேன்.

டி. ஈ. டபிலியூ. குணசேகர
செயலாளர், சர்வதேசப் பிரிவு,
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| I. | ஆசியாவில் புரட்சிக் குமுறல் | 09 |
| II. | மார்க்ஸிஸ-லெனினிஸக் கோட்பாடு | 21 |
| III. | ஏகாதிபத்தியவாதமும் கலோனியல்வாதமும் | 32 |
| IV. | அக்டோபர் மகா புரட்சி | 36 |
| V. | ஆசிய மக்கள் மீது அக்டோபர் புரட்சி ஏற்படுத்திய தாக்கம் | 45 |
| VI. | தேசிய விடுதலை இயக்கத்தின் மீது அக்டோபர் மகாபுரட்சியின் செல்வாக்கு | 51 |
| VII. | சோஷலிஸ சர்வதேசியங்கள் | 59 |
| VIII. | கம்யூனிஸ்ட் அகிலம் | 80 |
| IX. | கிழக்குலக புரட்சிவாதிகளின் ஆசான், நண்பன் | 88 |
| X. | முதலாளித்துவம் தவிர்த்த வளர்ச்சிப் பாதை | 94 |
| XI | லெனினிஸ சமாதானக் கொள்கை | 105 |

அனுபந்தம்

| | | |
|---|---|---|
| I. | ஆசியாவின் விழிப்பு | 115 |
| II. | மார்க்ஸியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும் | 117 |
| III. | சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன? | 124 |
| IV. | ஏகாதிபத்தியம்: முதலாளித்துவத்தின் விசேஷ கட்டம் | 126 |
| V. | உழைக்கும் மக்களதும், சுரண்டப்பட்ட மக்களதும் உரிமைப் பிரகடனம் | 128 |
| VI. | கம்யூனிஸ்ட் அகிலம் | 131 |
| VII. | தேசிய இன, காலனிப் பிரச்சினைகள் | 133 |
| VIII. | கிலக்குலக நிலவரம் | 139 |
| IX. | சமாதானக் கட்டளை | 144 |

# I

## ஆசியாவில் புரட்சிக் குமுறல்

20ம் நூற்றாண்டின் தொடக்கமளவில் ஆசியாவில் வெடித்த புரட்சிக் குமுறல், முதலாளித்துவத்துக்கெதிராக ஐரோப்பிய தொழிலாளிவர்க்கம் நடத்திவந்த போராட்டத்துக்கு மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாய் காணப்பட்டது. இதைக் குறிப்பிட்டு லெனின், ''ரஷ்யப் புரட்சி (1905)யைத் தொடர்ந்து துருக்கியில் பாரசீகத்தில், சீனாவில் புரட்சிகள் வெடித்தன. ஐரோப்பாவில் இந்தப் புரட்சிகளினதும் அவற்றின் ''விளைவுகளி''னதும் சகாப்தத்தில்தான் நாம் வாழ்கிறோம். ஆசியாவில் பழைய அடிமைத்தனத்தை மீளக் கொணரவோ அல்லது ஆசிய நாடுகளில் மக்களது வீரஞ்செறிந்த ஜனநாயகத்தைத் துடைத்தெறியவோ உலகின் எந்த சக்தியாலும் முடியாது.'' என்று கூறினார்.

.உலகப் புரட்சிப் போக்குக்கு ஆசியப் புரட்சிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, லெனின் ஆசிய நாடுகளின் வரலாற்று வளர்ச்சிகளையும் பொருளாதார அரசியல் நிலைமைகளையும் ஆழ்ந்து கற்றுத் தெளிந்தார்,

ஆசியா பல நாகரீகங்களின் தொட்டிலாகும். அவை அவற்றின் காலங்களில் செழுமையுற்றுப் பரவின. பதினாறும் நூற்றாண்டில், ஆசிய நாடுகளோடு லாபமிகு வர்த்தகம் ஐரோப்பிய வர்த்தகர்களை இந்து மகாசமுத்திரத்தின் கரைகளிலும் அவற்றைச் சுற்றியும் வர்த்தக நிலையங்களை வைத்திருப்பதற்குக் கவர்ந்திழுத்தன.

சந்தைகளையும், லாபங்களையும் தேடி இவ்வைரோப்பிய அரசுகள் உலகெங்கிலும் பதவி செல்வந்தத்தின் மீது தணியாதாகம் கொண்டு தம் கவனத்தைக் காலனிகள் பக்கம் திருப்பின. இக்காலத்தில்தான், அந்திய மக்களை அடிமைப்படுத்துதல், வெட்கமற்ற சூறையாடல், அவற்றின் செல்வங்களைக் கொண்டுபோதல் முதலிய அதன் சகல குரூரங்களுடனும் கலோனியல்வாதம் உருப்பெற்றது. முதலில் ஸ்பானியரும், போர்த்துக்கேயரும், அப்புறம்

ஆங்கிலேயரும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நாடுகள் மீது பசிப் பார்வை வீசினர். கொடிய, இரக்கமற்ற ஸ்பானிய, போர்த்துக்கேய கனவான்கள் மத்திய அமெரிக்காவைப் பாழ்நிலமாக்கினர். வட அமெரிக்க பூர்வீகமக்கள் தொகையின் பெரும்பகுதியை ஆங்கிலேயர் துடைத்தெறிந்தனர். ஒல்லாந்தர் தென்கிழக்கு ஆசியாவில் ஊடுருவல் செய்தனர்.

ஆங்கில, ஸ்பானிய போட்டியாளர்களுக்கெதிராக, வெகு தூரம் பின்தங்கிவிட்ட ஒல்லாந்தர் சீக்கிரமே இழந்துபோன நேரத்தை ஈடுகட்டத் தொடங்கினர். பதினேழாம் நூற்றூண்டில் டச்சுக் கலோனியல்வாதத்தின் வரலாறு, துரோகம் லஞ்சம், கொலை, கீழ்ந்தரமானக் கொடுமைகளின் பட்டியல் கொண்ட ஆரம்பகால கலோனியல் ஆட்சியின் உயர்ந்த, உதாரணமாக விளங்கியது:

டச்சுக் கலோனியல்வாதிகள், ஜாவாவின் அடிமைத் தொகையுடன் சேர்ப்பதற்காக செலிபிஸ் தீவிலிருந்து மனிதர்களைக் கடத்திச் செல்லும் மிகவும் கீழ்த்தர நிலைக்கு இறங்கினர். இக்காரணத்துக்காக ஆள்கடத்தும் பிரிவுகள் அமைக்கப்பட்டன. கொள்ளைக்காரர்கள், வியாபாரிகள், மொழி பெயர்ப்பாளர்கள், சகமனித ஜீவிகளை விற்கும் அடிமை வியாபாரத்தைத் தூண்டுபவர்களாய் இருந்தனர்; அதே வேளை உள்ளூர்ப்பிரதானிகள் பிரதான வியாபாரிகளாய் காணப்பட்டனர்.

18ம் நூற்றூண்டிலும் 19ம் நூற்றூண்டின் இறுதியிலும் பிரிட்டனில், அதன் பின்னர் ஐரோப்பாவில் உண்டான உற்பத்தித் தொழில், தொழில்நுட்பப் புரட்சிகள், பண்டங்கள், யந்திரங்கள், ஆயுதங்கள் உற்பத்தியில் ஐரோப்பிய அரசுகள் முன்னணி ஸ்தானம் பெறச் செய்தன. வர்த்தகத்தினதும், கப்பற்றுறையினதும் துரிதப்படுத்தப்பட்ட வளர்ச்சியை கலோனியல்வாதம் சாத்தியமாக்கியது. ஏமாற்றுத்தனம், அதிசிறந்த ஆயுதங்களின் பிரயோகம். காட்டுமிராண்டித்தனமான கொலைச்சங்காரம் இவற்றின் மூலம் ஐரோப்பிய அரசுகள் பல ஆசிய நாடுகளை அடிமைப் படுத்தி அவற்றை கட்டுப்பாட்டின் கீழ் கொணர்ந்தன. ஏகபோக வர்த்தகக் கம்பனிகள் மூலதனத்தைக் குவிக்கும் சக்திவாய்ந்த நெம்பு கோலாக விளங்கின. துரித வேகத்தில் பெருகிவந்த உற்பத்தியாலைகளுக்கு. காலனிகள் நம்பத்தகுந்த பண்டச் சந்தைகளை வழங்கி, இச்சந்தைகளின் ஏகபோகம் தீவிரமாகப் பொருள் குவிப்பதற்கு இட்டுச் சென்றது அப்பட்டமான கொள்ளை, சொந்த நாட்டு மக்களை அடிமைப்படுத்தல், கொலை இவற்றின் மூலமாக குவிக்கப்பட்ட லாபம் இவ்வர்த்தகக் கஜானுக்களில் சென்றுநிரம்பி, கலோனியல் நாடுகளின் உழைக்கும் மக்களை சுரண்டுவதைத் தீவிரப்படுத்த உதவி புதிய மூலதனத்தை வழங்கியது. ஆரம்பப் பொருள்குவிப்பு நிகழ்ந்து கொண்டிருக்கும்போது அவர்கள் படிப்படியாக வறுமையுற்றனர்.

கலோனியல் அமைப்பு, அடிமைப்பட்ட மக்களை ஈவிரக்கமின்றி சுரண்டியது, ஆளாக்கியது; இச்சுரண்டல் இடைஞ்சலின்றி

வெற்றிகரமாக நடப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் புதிதாகக் கைக்கு வந்த பகுதிகளின் வெகுஜனங்கள் வறுமையுற்று வாடுவதை நிச்சயப்படுத்திக் கொண்டது. கலோனியல் மக்களது வாழ்க்கைநிலை மோசமுற்றிருந்த அளவுக்கு அவர்களது உழைப்புக்கு மிகவும் குறைந்த கூலியே கொடுக்க வேண்டியிருக்கும் என அவர்கள் நம்பினர். எனவே, கலோனியல் வாதிகள் இக்காலனிகளது உற்பத்தித் தொழில் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தி, ஐரோப்பிய உற்பத்தித் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களை உற்பத்தி செய்யுமாறும், பின்னர் கலோனியல்வாதிகளின் நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களை வாங்குமாறும் இந்நாட்டு மக்களை கலோனியல் வாதிகள் வற்புறுத்தினர்.

''இச்சூறையாடும் கொள்கை வழக்கமாக கலோனியல் கொள்கை என அழைக்கப்படுகின்றது. முதலாளித்துவ உற்பத்தித் தொழில் வேகமாக வளர்ச்சியுறும் ஒவ்வொரு நாடும் சீக்கிரம் காலனிகளைத் தேட வேண்டியிருக்கும். அதாவது, உற்பத்தித் தொழில் வளர்ச்சியலவீனமுற்ற நாடுகளை, பெரும்பாலும் பிதுர்வழி வாழ்க்கைமுறை இன்னும் நிலவுகின்ற நாடுகளை உற்பத்திப் பொருட்களின் சந்தையாகவும் பெரும் லாபம் திரட்டக் கூடிய இடமாகவும் காணப்படும் நாடுகளைத்தேட வேண்டியிருக்கும். விரல்விட்டெண்ணக்கூடிய ஒருசில முதலாளிகளது லாபத்துக்காக வேண்டி, பூர்ஷுவா அரசுகள் முடிவற்ற யுத்தங்களை நடத்தின. ஆரோக்கியமற்ற அயனமண்டல நாடுகளில் சாவதற்காகத் உருப்புகளை களை அனுப்பின. மக்களிடமிருந்து உறிஞ்சியெடுத்த கோடிக் கணக்கான நாணயத்தை விரயமாக்கின. காலனி மக்களை வேறு வழியின்றிக் கலகஞ் செய்யவும், வறுமையில் வாடவும் செய்தன. இந்தியாவில் பிரிட்டிஷாருக்கெதிராக நாட்டுமக்கள் கலகஞ் செய்ததையும் அங்கு நிலவிய பஞ்சத்தையும் நாம் நினைவுபடுத்திக் கொண்டாலே போதும்'' என லெனின் 1900 டிசெம்பரில் ''இஸ்க்ரா''வில் கட்டுரையொன்றில் எழுதினுல்.

நூற்ருண்டின் திருப்பத்தில் ஆசியாவின், வடஅமெரிக்காவின் பெரும்பாலான நாடுகளில், வருங்கால விடுதலை இயக்கத்துக்கான விதை ஏற்கனவே தூவப்பட்டுவிட்டன. கலோனியல், அடிமை நாடுகளில் புதுவகையானச் சுரண்டல் இந்நாடுகளின் இயற்கை வளங்களையும், மக்களையும் ஐரோப்பிய, வட அமெரிக்க மூலதனத்தின் நலன்களைப் பேணுதற்காக நடைபெற்றது. முதலாளித்துவ உறவுகளும் தோன்றின.

முதலாளித்துவ வளர்ச்சியின் ஏகாதிபத்தியக் கட்டத்தை தனித்துக் காட்டும் மூலதன ஏற்றுமதி. மலிவான மூலப்பொருட்களும் உழைப்புச் சக்தியும் எல்லையற்றுக் காணப்பட்ட ஆசிய நாடுகளில் முதலாளித்துவ உற்பத்திக் தொழில் நிலையங்களை, பெருந்தோட்டங்களை, சுரங்கங்களை நிறுவுவதற்கு இட்டுச் சென்றது. மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்யவும், ஐரோப்பிய உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்யவும் ஏற்பட்ட தேவையும் நகரங்கள் பெருகியமையும் இந்நாடுகளில் புகையிரதச் சேவை

பாதைகள், துறைமுகங்கள், பொது சாதனங்கள் நிர்மாணிக்கப்படுவதற்கு வழிவகுத்தன. ஐரோப்பியர்கள் அமைத்த பெருந்தோட்டங்களிலும், பாக்டரிகளிலும் தொழிலாளிவர்க்கமொன்று வளரத் தொடங்கியது. அனேக காலனி நாடுகளில் அதன் தோற்றம் உள்நாட்டு உற்பத்தித் தொழில் பூர்ஷுவா வர்க்கத்தின் தோற்றத்தை முந்திக் கொண்டது,

தொழிலாளர்கள்-அவர்களின் அநேகர் ஐரோப்பிய உற்பத்திப் பண்டங்கள்வந்து குவிந்தமையால் மோசமுற்ற பழையகைவினைஞர் ஐரோப்பிய தொழில் எஜமானர்களதும் அவர்களின் ஓவர்சியர்களதும், ஆட்சேர்க்கும் ஏஜன்டுகளதும் கொடிய சுரண்டலுக்கு அடிமையாகினர். தொழிலாளர்கள் பெரும்பாலும் எல்லோருமே பாமரர்களாவர். பொதுவாக தமதுபூர்வீக்கிராமங்களோடுநெருங்கிய தொடர்பை வைத்திருந்தனர்; மத்தியகால மத, சாதிச் சம்பிரதாயங்களின் செல்வாக்கிலிருந்தனர். இத்தொழிலாளர்களது வர்க்க உணர்வு உருவாக்கம் பெறும் ஆரம்ப கட்டத்திலிருந்தது; எனினும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் அவலநிலை, பொருளாதார உரிமை கோரி பல்வேறு திடீர் ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கச் செய்தன.

ஏகாதிபத்திய ஏகபோகங்களது ஆதிக்கம் உள்நாட்டு உற்பத்தித் தொழில் பூர்ஷுவா வர்க்கத்தின் வளர்ச்சியைத் தடுத்தது. முன்னேற்றமடைந்த முதளாளித்துவ நாடுகளால் விற்கப்பட்ட பண்டங்களோடு போட்டியிடுவது சாத்தியமற்றதென்பதை உள்நாட்டு உற்பத்தித் தொழில்பூர்ஷுவாவர்க்கம்கண்டது. முதலாளித்துவநாடுகளின் பிரதிநிதிகள் பெருஞ்சுறலுகையை அனுபவித்தனர். இச்சூழ்நிலைகளில் தலையெடுத்த உள்நாட்டு பூர்ஷுவா வியாபாரத்திலும், பெரிய அளவு மூலதன முதலீடு தேவைப்படாத சிறு உற்பத்தித் தொழில் முயற்சிகளிலும் திருப்திகாண வேண்டி நேர்ந்தது. உள்நாட்டு சந்தையோடு மட்டுமே அவர்கள் தொழில் நடவடிக்கைகளிருந்தன. கலோனியல், அடிமை நாடுகளைத் தமது விவசாய உற்பத்தியின் ஆதாரங்களாகப் பாதுகாத்துக் கொள்வதில் சொந்த அக்கறை கொண்டிருந்த ஏகாதிபத்தியவாதிள். உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தியைக் கொண்டிருந்த இந்நாடுகளின் உற்பத்தித் தொழில்மயமாக்கல் கொண்டிருந்த இந்நாடுகளின் முட்டுக்கட்டைகளைப் போட்டனர்

ஏகாதிபத்தியவாதிகளுக்கு அவர்களது காளனிகளிலும் சாதாரணமாகச் சுதந்திரம்பெற்ற நாடுகளிலும், பிற்போக்கு நில எஜமான வர்க்கமும், இந்நாடுகளுக்கும் அந்நிய முதலாளிகளுககும் இடையே வர்த்தகத் தரகுபுரிந்துக் கொளுத்த கம்பரடோர்களும் காவல்கொத்தளங்களாகவிளங்கினர். நிலத்தின் பெரும்பகுதி பெரும் நிலஎஜமானர்கள் கையில் இருந்ததானது நிலத்துக்காக ஏங்கியோரையும், நிலமற்றோரையும் நசுக்குகின்ற வாடகைமூலம் சுரண்டுவதற்கு வழிசெய்தது. இது நிலப்பிரபுத்துவச் சகாப்தத்துக்குரிய தன்மையாகும். நிலஎஜமானர்கள் விவசாயிகளை அவர்களது உற்பத்தியின் பெரும்பகுதியைக் கொள்ளையடிப்பதில் பல்வேறு வழிகளில் வெற்றி கண்டனர். முதலாளித்துவ விவசாய

முறைகளைப் புகுத்த அவர்கள் விரும்பவேயில்லை. சில உற்பத்தித் தொழிற் பயிர்களை உற்பத்தி செய்வதில் மட்டுமே கூலி உழைப்பும், பெரிய அளவு உற்பத்தி முயற்சிகளும் நிலஎஜமானருக்கும், செல்வந்த விவசாயிகளுக்கும் பயனுள்ளதாகக் காணப்பட்டன.

விவசாய மக்களில் ஒரு சிறுபகுதியினர் மட்டுமே, புதிய நிலைமையில் வளமுற முடிந்தது. உழவர்களின் பெரும் பகுதியினர் அழிவு நாசத்தால் தாக்குண்டு, தமது நிலத்தை இழந்து, வலிமை மிகுந்த நிலஎஜமானர்களுக்குக் கடன்பட்ட அடிமைகளாய் மாறினர்.

உழைக்கும் வெகுஜனங்கள் மட்டுமன்றி தேசிய பூர்ஷுவாக்களும் இந்நாடுகளில், நிர்வாகத்தில் பங்கு மறுக்கப்பட்டு தொடர்ச்சியான ஒடுக்கு முறைக்கும், பாகுபாட்டுக்கும் உட்படுத்தப்பட்டனர். அரசியல், நிர்வாக, சட்ட அதிகாரங்கள் யாவும் ஏகாதிபத்தியவாதிகள் கைகளிலும் அவர்களது அடிவருடிகளான உள்நாட்டு பிற்போக்கு வர்க்கங்களின் கைகளிலுமிருந்தன. இவை யாவும் கலோனியல் மக்களுக்கும் - ஏகாதிபத்தியவாதிகளுக்கு மிடையே இணக்கம் காணமுடியாத முரண்பாடுகள் எழச்செய்தன.

அரைகாலனி நாடுகளில், உழைக்கும் மக்களும், தேசிய பூர்ஷுவாக்களும் ஊழல் நிறைந்த கொடுங்கோலாட்சிகளால் தலைமை தாங்கப்பட்ட பெரும் நிலஎஜமானர்களாலும், துரைத்தனத்தாராலும் நேரடியாக எதிர்க்கப்பட்டனர். இது எவ்வாறிருப்பினும், அரை காலனி நாடுகளின் பின்தங்கிய பொருளாதார, அரசியல் நிலைமையை அப்படியே வைத்திருப்பதன் மூலம் தம் நலன்கள் பாதுகாக்கப்பட்ட அந்நிய அரசுகளின் கைகளில் இவர்கள் அடக்கமான கருவிகளாக இருப்பதை விடவும் சற்று மிஞ்சியவர்களாய் காணப்பட்டபோதிலும், பத்தாம்பசலி நிலப்பிரபுத்துவ ஆட்சிகளின் பிரதான ஆதரவாளருக ஏகாதிபத்தியவாதிகளின் பாத்திரத்தை, இந்நாடுகளின் முற்போக்குவாதிகளில் அனேகர்கள் கூட இன்னும் தெளிவாகப் புரிந்து கிரகித்துக்கொள்ளவில்லை.

இருபதாம் நூற்ருண்டுத் தொடக்கமளவில், சகல ஆசிய நாடுகளிலும் நிலப்பிரபுத்துவத்துக்கும் அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்துக்கும் எதிரான போராட்டம், சுதந்திரமான தேசிய வளர்ச்சியை எய்துவதற்கு அத்தியாவசியமானதாக, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பணியாக மாறியிருந்தது. இந்நாடுகளின் புத்திஜீவி வர்க்கம் இப்பெருகிவரும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் குரலாக மாறவிருந்தது.

லெனின் தேசிய விடுதலைப் புரட்சிகளின் போர்தந்திரம் உபாயங்களையும் விரிவுபடுத்தி, காலனி-எதிர்ப்பு விடுதலை இயக்கத்தின் பல்வேறு கட்டங்களில் பூர்ஷுவா தேசியவாதத்தைக்கணிப்பதற்கான விஞ்ஞானபூர்வமான அளவுகோலை உருவாக்கியெடுத்தார். பூர்ஷுவா தேசியவாதம், பூர்ஷுவா வர்க்கத்தின் சித்தாந்தமாக, சர்வதேசியமயமான சித்தாந்தம் கொண்ட பாட்டாளி வர்க்கத்தின் நலன்களோடு முரண்படுகிறதென மார்க்ஸிய-லெனினிஸ விஞ்ஞானம் நிலைநாட்டுகிறது.

எனவே, இந்த அல்லது அந்த வரலாற்று நிலைமையில் பூர்ஷுவா தேசியவாதத்தின் வெளிப்பாடு குறித்து ஒவ்வொரு பாட்டாளி வர்க்கக் கட்சியும் கடைப்பிடிக்கும் போக்கை வரையறுத்துக்கொள்வது அவசியமாகிறது. பூர்ஷுவா சமுதாயத்தில் தேசியவாதம் வரலாற்று ரீதியாகத தவிர்க்கமுடியாதக் கொள்கையாகுமென்றும் இந்நிலையிலிருந்து மார்க்ஸிஸம் தேசிய இயக்கங்களின் வரலாற்று ரீதியான சட்டபூர்வத்தன்மையை அங்கீகரிக்கின்றதென்றும் லெனின் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டினார். எனினும், இததகைய அங்கிகாரத்திலிருந்து, அதற்குச் சமாதானம் கூறும் நிலைக்கு நழுவி விழுவதையிட்டு அவர் எச்சரித்தார். அத்தகைய அங்கீகாரம், "இவ்வங்கீகாரம் பாட்டாளி வர்க்க உணர்வை மழுங்கச் செய்யும் பூர்ஷுவா சித்தாந்தத்துக்கு இட்டுச்செல்லாத முறையில், இவ்வியக்கங்களில் முற்போக்கானதாய் காணப்படுவதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாய் இருக்க வேண்டும்" என அவர் கூறினார்.

ஆசியாவில் பூர்ஷுவா ஜனநாயப் புரட்சிகளின் சகாப்தம், 1905—1907 ரஷ்யப் புரட்சியோடு ஆரம்பமாகியது. நிலப்பிரபுத்துவத்துககும், அந்நிய ஆட்சிக்கும் எதிரான போராட்டச் சுலோகத்தின் கீழ் துலாம்பரமடையும்போது, அதாவது, அரசியல் சுய உணர்வு பெறுமாறு மக்களுககு உதவி, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் முக்கிய கருவியாக முற்போக்கானதொரு பாத்திரம் வகிக்கும்போது ஏறுமுகமாய்க் காணப்படும் தேசியவாதத்துக்கும், பாட்டாளிவர்க்கத்துக்கும், வெகுஜன புரட்சி இயக்கத்துக்கு எதிராக யூர்ஷுவாக்களின் கைகளில் கருவியாகப் பயன்படும் தேசியவாதத்துக்கு மிடையே வித்தியாசத்தை இனம் கண்டுக்கொள்ள வேண்டிய அவசியமான கடமைப்பாடு உண்டென மார்ஸிஸம் கூறுகிறது. பூர்ஷுவா தலைமை பூண்ட தேசிய இயக்கத்தைத் திட்டவட்டமான நிலைமைகளில் ஆதரித்தபோதிலும், பாட்டாளிவர்க்கம் எப்போதும் அதன் வர்கக நலன்களிலும் அதன் சொந்த போராட்டத்திலும் கடமையிலும், கண்ணுயிருக்க வேண்டும்.

லெனினின் அனுதாபம் மாற்றமேதுமின்றி அடிமைப்படுத்தப்பட்ட காலனி, அரை காலனி மக்கள்மீதே இருந்தது. ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் மாபெரும் விடுதலைப் போராட்டம் வெடித்ததை அவர் வாழ்த்தி வரவேற்று, அடிப்படை உரிமை மறுக்கப்பட்டு அறியாமையில் வீழ்த்தப்பட்டுக் கிடக்கும் லட்சோப லட்ச மக்களின் அரசியல் நடவடிக்கையாக அது தூண்டப்படவேண்டுமென வலியுறுத்தினர்.

லெனின் கலோனியல்வாதிகளின் சாராம்சத்தை, குறிக்கோளை முறைகளை அம்பலப்படுத்தியதோடு "நாகரிகப் படுத்தும் தூது" பற்றிய அவர்கள் புளுகுகளை எள்ளிநகையாடினர். "நாகரிக முற்ற" நாடுகள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளைத் தாககுவதில், பல்லாயிரக் கணக்கான சமாதான ஜீவிகளான மக்களைக் கொன்று குவிப்பதில், எஞ்சியோரை அடிமைத்தனத்தில், அவல வாழ்வில் வீழ்த்துவதில் இப்படுபாதகக் குற்றங்கள் யாவினதும் குறிக்கோள் விரல் விட்டெண்ணக் கூடிய சில பிரிட்டிஷ், ஜெர்மன் அமெரிக்க மற்றும்

நிதி தொழிலுற்பத்தி நலன்களது உபரிலாபத்தை உறுதிப்படுத்துவதாகவேயிருந்தது. மிருகத்தனமான கலோனியல் யுத்தங்கள் மூலம் மக்களின் இரத்தத்திலும் உழைப்பிலுமிருந்து ஆதாய நாணயம் வடித்தல்—இத்தகையது தான் ஏகாதிபத்தியத்தின்''நாகரிகப்படுத்தும் தூது''

லெனின் தமது கட்டுரைகளிலொன்றுக்கு ''பின்தங்கிய ஐரோப்பாவும் முன்னேற்றமடைந்த ஆசியாவும்'' என்று தலைப்பிட்டார். லெனின் குறிப்பிட்டார்: ''இப்புதிரான தலைப்பில் கசப்பானதோர் உண்மை அடங்கியுள்ளது. அதிகார மோசச்சும் பூர்ஷுவா வர்க்கம் வளர்ந்துவரும் பாட்டாளிவர்க்கத்தின் வலிமை கண்டு அஞ்சி பிற்போக்கானவை, மரணதசைசெய்தியவை, மத்திய காலத்தவை யாவுக்கும் ஆதரவளிக்க முன்வருகையில், நாகரிகமுற்ற முன்னேற்றமடைந்த ஐரோப்பாவில் அதன் உயர் வளர்ச்சியுற்ற உற்பத்தித் தொழிலுடன், செல்வத்துடன், பல்வடுவ கலாச்சாரத்துடன், யாப்பமைப்புகளுடன் வரலாற்றில் ஒரு கட்டம் அடையப் பெற்றுள்ளது. பூர்ஷுவா வர்க்கம் அதன் அந்திம நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆட்டம் காணும் கூலி அடிமைத் தனத்தைப் பாதுகாக்கும் எத்தகைய முயற்சியிலும் அது பத்தாம் பசலித்தன சக்திகளோடு சேர்ந்து கொள்கின்றது என்று லெனின் குறிப்பிட்டார்.

''முன்னேற்ற மடைந்த ஐரோப்பா பிற்போக்கான யாவையும் ஆதரிக்கும் பூர்ஷுவா வர்க்கத்தினல் அதிகார மோசசப்படுகிறது. நமதுகால ஐரோப்பா, நல்லவேளையாக, பூர்ஷுவா வர்க்கத்தையும் மீறி, முன்னேற்றங் கண்டுள்ளது; ஏனெனில் பாட்டாளி வர்க்கம் மட்டுமே பிரகாசமானதோர் வருங்காலத்துக்கான போராளிகளின் லட்சக்கணக்கான படைவலிமையை பெருகச் செய்து வருகின்றது. அதுமட்டுமே, பின்தங்குதல், மிருகத்தன்மை, சலுகை, அடிமைத்தனம், மனிதனை மனிதன் இழிவுபடுத்தல் இவற்றின் மீது பிடிவாதமான வெறுப்பைப் பேணவும், பரப்பவும் செய்கின்றது. ''முன்னேற்றமடைந்த'' ஐரோப்பாவில், பாட்டாளி வர்க்கமே முன்னேற்றமடைந்த ஒரே வர்க்கம். வாழும் பூர்ஷுவா வர்க்கத்தைப் பொறுத்தமட்டில், செத்துக்கொண்டிருக்கும் முதலாளித்துவ அடிமைத்தனத்தைத் தாங்கிப் பிடிப்பதற்காக, காட்டுமிராண்டித் தனத்தின், மிருகத்தனத்தின், பாதகக் குற்றச் செயலின் எந்த எல்லைக்கும் செல்லத் தயாரரயுள்ளது.

''நிதி கையாடல் செய்வோரின், முதலாளித்துவச் சுரண்டல்காரர்களின் சுயநலன்களை வளர்ப்பதற்காக ஆசியாவில் அது பிற்போக்குக்கு வழங்கும் ஆதரவை விடவும் அதிக புலப்பாடான உதாரண மொன்றை, மூழு ஐரோப்பிய பூர்ஷுவா வர்க்கத்தினதும் க்ஷீணித்த இவ் வழுகுதலுக்குக் காண்பதரிது.''

கலோனியல் ஒடுக்குமுறை கிழக்குநாடுகளின் பொருளாதார, அரசியல், கலாச்சார வளர்ச்சியைப் பெரிதும் பின்தங்கச் செய்தது என்ற உண்மை லெனினல் நன்கு காட்டப்பட்டது. ஏகாதிபத்திய அரசுகள்மக்களை அறியாமையிலும், வாக்குரிமையற்றவர்களாக

வும் வைத்திருக்கவே விரும்புகின்றன; அரசியல் பொருளாதாரப் பின்தங்கள், மிருகத்தனமான சுரண்டல், மத்தியகாலத்தேக்க நிலை இவற்றை. கிழக்கு மக்களது இளம், வீறுகொண்ட, முற்போக்கான, விரிவடைந்துவரும் இயக்கத்துக் கெதிரான அவற்றின் போராட்டத்தின் ஒரு பகுதியாக விடாமல் வைத்துக்கொள்வதே அவற்றின் நோக்கமென அவர் எழுதினார்.

இவ்வியக்கத்தின் மாபெரும் முக்கியத்துவம் குறித்து லெனின் எழுதினார்: "ஆசியாவின் விழிப்பும், ஐரோப்பாவின் முன்னேற்றமடைந்த பாட்டாளி வர்க்கம் அதிகாரத்துக்காக நடத்தும் போராட்டமும் இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில் தொடங்கிய உலக வரலாற்றின் புதிய கட்டத்தினது குறியீடாகும்."

*(பார்க்க: அனுபந்தம் 1)*

1905 அளவில் ஆசியாவெங்கிலும் கலோனியல் ஒடுக்குமுறையாளர்களுக்கெதிராகத் தேசிய சக்திகள் போராட்டத்துக்காகத் திரண்டன. ஜப்பானினால் ஜாரிஸம் முறியடிக்கப்பட்டதை (நவீன காலத்தில் ஆசிய நாடொன்று ஓர் ஐரோப்பிய நாட்டின் மீது முதன் முறையாக வெற்றிபெற்றமை ஆசியாவில் ஆழ்ந்த எதிரொலிகளை கிளப்பியிருக்கையில்) தொடர்ந்து இது உலக முன்னேற்றத்தின் அலையெழுச்சியையும், முதல் ரஷ்யப் புரட்சியின் ஆரம்ப வெற்றிகளையும் பிரதிபலித்தது. இந்தியாவில் இந்திய தேசியக் காங்கிரஸின் தலைமையில் தேசிய இயக்கம் வலிமையுற்று வந்தது.

இந்தியாவில் போராட்டத்தைத் துரிதப்படுத்திய உடனடியான பிரச்சினை அப்போது இந்தியாவில் அரசியல் முன்னேற்றத்தின் மத்தியஸ்தானமாய் விளங்கிய வங்காளத்தின் பிரிவினையாகும். வைஸ்ராய் கர்ஸன் பிரபுவால் வகுக்கப்பட்டு அவ்ரையடுத்து வந்தவரால் அமுலாக்கப்பட்ட திட்டம் இது. எங்கிலும் கோபக்குமுறல் வெடிக்கச் செய்த இப்பிரிவினைக் கெதிராக, 1905 ஆகஸ்ட் 7ல் அந்நியத்துணி பகிஷ்காரம் பிரகடனஞ் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து இத் தேசிய இயக்கத்தின் வேகமான முன்னேற்றப் பாய்ச்சல் ஏற்பட்டது.

இயக்கத்தின் புத்தெழுச்சியைத் தொடர்ந்து அரசாங்கத்தின் அடக்கும் கரம் நீண்டது. ராஜத்துரோகக் கூட்டங்களின் சட்டம் 1907ல் நிறைவேற்றப் பட்டது. அதைத் தொடர்ந்து 1910ல் புதியதொரு கடுமையான பத்திரிகைச் சட்டம் நிறைவேறியது. 1818ம் ஆண்டில் சட்டவிதிகளின் அடிப்படையில் "தீவிரவாதத்" தலைவர்களுக்கெதிராக, விசாரணை யேதுமின்றி தேசப் பிரஷ்டம் செய்யும் முறை அமுலுக்கு வந்தது இவை யாவும் இந்தியா காரியதரிசியாய் இருந்த "தாராளவாத" மோர்லே பிரபுவின் கீழ் நடந்தன. 1909ல் அரசாங்கத்தை அதிகம் கிலி கொள்ளச் செய்த திலகர், அவரது பத்திரிகையில் வெளியான் கட்டுரை யொன்றுக்காக ஆறு வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, 1914ம் ஆண்டு யுத்தம் வெடிப்பதற்கு முந்திய மாதம் வரையில் மண்டலே சிறையில் வைக்கப்பட்டார். திலகர் கைது செய்யப்பட்டமை பம்பாய் நெச

வுத் தொழிலாளர்களது பொதுவேலைநிறுத்தமொன்றை வெடிக்கச் செய்தது. இந்திய பாட்டாளி வர்க்கத்தின் இம் முதல் அரசியல் நடவடிக்கை லெனினால் அப்போது வருங்காலத்தின் முன்னறிவிப்பு என வாழ்த்தி வரவேற்கப்பட்டது. மற்றும் பிரபலத் தலைவர்கள் அனேகர் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர், அல்லது நாடுகடத்தப் பட்டனர், அல்லது தண்டனைக்குத் தப்புவதற்காகத் தீவாந்திர வாசஞ் செய்தனர். 1906க்கும் 1909க்கும் இடையே வங்காளத்தில் மட்டும் 550 அரசியல் வழக்குகள் நீதிமன்றத்தின் முன் வந்தன. போலிஸ் தடல்புடல் மூர்த்தண்யமாய் விளங்கியது. கூட்டங்கள் கலைக்கப்பட்டன; பஞ்சாபில் விவசாயிகள் கலகம் அரக்கத்தனமாக நசுக்கப்பட்டது; தேசியப் பாடல்களை இசைத்தமைக்காகப் பாடசாலைப் பிள்ளைகள் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவில் இந்நிலைமை குறித்து அபிப்பிராயம் தெரிவிக்கையில் லெனின் எழுதினார்:

“இந்தியாவில், சமீப காலமாக “நாகரிகமடைந்த” பிரிட்டிஷ் முதலாளிகளின் அந்நாட்டு அடிமைகள் தமது “எஜமானர்”களுக்குத் தலையிடியாக மாறியுள்ளனர். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிமுறை என்ற பெயரில் நடக்கும் வன்செயல்களுக்கும், கொள்ளைகளுக்கும் முடிவே கிடையாது. உலகின் வேறெங்கிலும்—ரஷ்யாவைத் தவிர்த்து—இவ்வளவு இழிவான வறுமையை, பசிப்பிணியை மக்கள் மத்தியில் காண முடியாது. சுதந்திர பிரிட்டனில் மிகவும் தாராளவாத, தீவிரவாத பிரமுகர்கள்,—ரஷ்யர் ரஷ்யரல்லாத கெடேட்டுகள்பற்றி அதிகாரபூர்வ அறிவுடைத்த, “முற்போக்கு” பத்திரிகை யெழுத்தின் (நடைமுறையில் முதலாளித்துவ அடிவருடி) சுடர்விளக்கான—ஜான் மோர்லே போன்றோர் இந்தியாவை ஆளுவதற்கு நியமிக்கப்பட்டு வழக்கமான ஜெங்கிஸ்கான்களாக மாறிவிட்டனர். தம்பொறுப்பிலான மக்கள்தொகையினரை “அமைதிப்படுத்தும்” சகல சாதனங்களையும், அரசியல் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குக் கசையடிவழங்கும் அளவுக்குக்கூட ஆற்றல் வாய்ந்தவர்களாய் மாறிவிட்டனர்...............

“ஆனால் இந்தியாவில் அதன் எழுத்தாளர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் ஆதரவாக வீதி யெழுச்சி தொடங்கிவிட்டது. இந்திய ஜனநாயகவாதி திலகர் மீது பிரிட்டிஷ் நரிகள் விதித்த அபக்கியாதியான தண்டனை, அவர் மீது நீண்டகால தேசப் பிரஷ்ட தண்டனை விதிக்கப்பட்டது—அவர் விடுதலைசெய்யப்படல் வேண்டுமென இந்திய ஜூரார்கள் தீர்ப்பளித்தபோது, பிரிட்டிஷ் ஜூரார்களது வழக்கினால் தண்டனை நிறைவேற்றப்பட்டதென்பதை பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் எழுப்பப்பட்ட கேள்வி அம்பலமாகியது!—பணமுட்டைகளின் அடிவருடிகள் ஜனநாயகவாதியொருவருக்கெதிராய்ப் பலிவாங்கியமை, வீதியார்ப்பாட்டங்களையும் பம்பாயில் வேலைநிறுத்தமொன்றையும் தூண்டி விட்டது. இந்தியாவில்கூட, தொழிலாளிவர்க்கத்தின் உணர்வுகொண்ட அரசியல் வெகுஜனப் போராட்டம் ஏற்கனவே, வளரத் தொடங்கிவிட்டது—எனவே, இதன் விளைவாக ரஷ்ய பாணி பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் வீழ்ச்சியுறப்போகிறது! ஐரோப்பியர்கள் ஆசிய நாடுகளில் கலோனியல் கொள்ளைத்

த்னம் மூலமாக அவற்றிலென்முன, ஜப்பானை வஜ்ரம் கொள்ளச் செய்து விட்டனர். அது பெரும் ராணுவ வெற்றிகளை ஈட்டிய தோடு இவ்வெற்றிகள் அதன் சுயாதீனமான தேசிய வளர்ச்சியை உறுதிப் படுத்தின. இந்தியாவில் பழமையாகிப் போன பிரிட்டிஷ் சூறை யாடல், பாரசீக, இந்திய ஜனநாயகத்துக் கெதிராக இம் ''முன் னேற்றமடைந்த'' ஐரோப்பியர் நடத்தும் நடப்புகாலப் போராட் டம் ஆசியாவின் கோடானுகோடித் தொழிலாளர்களை வஜ்ரம் கொள்ளச்செய்து, ஜப்பானியருடையதைப்போன்று வெற்றிவாகை சூடக் கூடிய போராட்டத்தை ஒடுக்குமுறையாளர்களுக்கெதிராக நடத்துவதற்குத் தூண்டிவிடும். வர்க்க உணர்வு பெற்ற ஐரோப்பி யத் தொழிலாளி இப்பொழுது ஆசியாவில் தோழர்களைப் பெற்று விட்டான்; அவர்களது தொகை பல்கிப் பெருகும்.''

சீனாவில் ஐரோப்பியர் சலுகை வாய்ந்த ஸ்தானத்தைப் பிடித்துக் கொண்டனர். ஆரம்பத்தில்' சீனர்கள் ஐரோப்பியரைக் கான்டனில் மாத்திரமே வர்த்தகம் புரிய அனுமதித்தனர். எனி னும் பின்னர் மற்றைய பகுதிகளிலும் வர்த்தக, மற்றும் சலுகை களை அவர்கள் வழங்கவேண்டி நேர்ந்தது. சீன மக்கள் இவ்வாக் கிரமிப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, 'பாக்ஸர்' எழுச்சி என்று சொல்லப்படும் வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐ ஹோ துவான் இயக்கத்தை ஆரம்பித்தனர்.

இவ்வெழுச்சி 1894-95ன் சீன-ஜப்பான் யுத்தத்துக்குப் பின் னர் வந்த சக்திகளால் தமது நாடு பிரித்துத் துண்டாடப் படுவதை யெதிர்த்து மக்கள் வழங்கிய தீர்ப்பாகும். சீன-ஜப்பான் யுத்தத் தின் போது ஏகாதிபத்தியவாதிகள் அநேகம் சீனப் பகுதிகளை பிடித்துக் கொண்டு, முக்கியமானத் துறைமுகங்களை 99 வருடக் குத்தகைக்குத் தருமாறு சீன அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து நாட் டைச் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்திருந்தனர். இவ்வாறு மஞ்சூரியா ரஷ்ய மண்டலமாகியது; பத்து மத்திய, தென் மாகா ணங்கள் பிரிட்டிஷ்செல்வாக்கின்கீழ் வந்தன; ஷான்துங் ஜெர்மன் செல்வாக்கு மண்டலமாகியது. இத்தியாதி, ஏகாதிபத்திய சூறையாடல் சுமக்கமுடியாத வரிப்பளுவுக்கும், உழவர், கைப் பணியாளர்களது வறுமைக்கும், பொதுவான பொருளாதாரச் சீர் குலைவுக்கும் இட்டுச் சென்றது. எனவே இயக்கத்தின் பிரதான கோரிக்கை அன்னியரை வெளியேற்றுவது என்பதே.

1900 ஜூனில் பெரிய ஐ ஹோ துவான் கோஷ்டிகள் பீகிங் குள் நுழைந்து அந்நிய சக்திகள் மீது போர்த்தொடுக்குமாறு சாம் ராஜ்ய அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தன. அந்நிய அரசுகள் கலகக்கா ரர்களுக்கெதிராக 60, 000 பேர் கொண்ட படையை அனுப்பி இவ்வெழுச்சியை மிகவும் அரக்கத்தனமாக அடக்கியது. முழு நக ரங்கள் தரை மட்டமாக்கப்பட்டன. விலை மதிப்பற்ற சின்னங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டன. நாட்டின் பெருவாரிச் செல்வம் சூறை யாடப்பட்டது.

சீனாவில் அந்நியப் படைகளை வைத்திருப்பது, அந்நிய கட்டுப் பாடுகொண்ட தூதுவர் முகாமொன்றைவைத்திருப்பது இத்தியாதி

அடங்கிய பெரும் பாதுகாப்பை வழங்கும் உடன்படிக்கைத் தயாரிப்பு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடுமாறு பீகிங் அரசு 1901ல் தூண்டப்பட்டது. இது உள்ளமையிலேயே சீனுவை அரைகாலனியாக மாற்றியது. ஜாரிஸ அரசாங்கம் மஞ்சூரியாவைப் பிடித்துக் கொள்வதற்கு இச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டது.

சீனு துண்டாடப் படுவது சம்பந்தமாக கருத்து தெரிவித்து லெனின் எழுதினுர்:

''ஒன்றன் பின்னென்ருக ஐரோப்பிய அரசாங்கங்கள் வெறித்தனமாகச் சூறையாட, அல்லது அவர்கள்சொல்வதுபோல், சீன எல்லையை ''வாடகைக்குப் பெற'' த் தொடங்கின. சீனுவைத் துண்டாடும் பேச்சுவார்த்தைக்கு இது காரணம் தேடிக் கொடுத்தது எனினும் நாம் விவகாரங்களை சரியான பெயர்ச்சொல்லி அழைப்பதாயின் ஐரோப்பிய அரசாங்கங்கள் (ரஷ்ய அரசு அதில் முதலாவதாகும்) ஏற்கனவே சீனுவைக் கூறுபோடத் தொடங்கி விட்டன. எனினும் இத்துண்டாடலைப் பட்டவர்த்தனமாகச் செய்யாமல் கள்வர்கள்போன்று திருட்டுத்தனமாகச்செய்தனர். பேய்கள் பிணம் திருடித் திண்பது போன்று அவர்கள் சீனுவைத் திருடத் தொடங்கினர். பிணம்போல் கிடந்த அது எதிர்க்கத் தலைப்பட்ட போது அவர்கள் மீண்டும் அதன் மீது' மூர்க்க விலங்குகள் போன்று பாய்ந்தனர். முழு கிராமங்களைத் தீக்கிரையாக்கினர்; நிராயுதபாணிகளான மக்கள், மனைவியர் பிள்ளைகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் 'செய்தனர்; அவர்களை பேனட்டுகளால் குத்தினர்; அமுர் நதியில் மூழ்கடித்தனர்.''

ஏகாதிபத்திய சக்திகளின் கலோனியல் கொள்கை பற்றிக் கூறுகையில் லெனின் எழுதினுர்:

''நிதி மூலதனம்... பரிபூரண சுதந்திரம் அனுபவிக்கும் நாடுகளைக்கூடத் தனக்குக்கீழ் கொண்டுவரும் ஆற்றல் வாய்ந்தது; உண்மையிலேயே கீழ்ப்படுத்தவும் செய்கிறது. நிதிமூலதனம்அதற்குக் கீழ்ப்பட்ட நாடுகளும், மக்களும் அரசியல் சுதந்தரத்தைப் பறிகொடுக்கச் செய்யும் முறையொன்றை மிகவும் ''வசதியான'' முறையாகவும் பெரு வாபம் சம்பாதிக்கும் முறையாகவும் கருதுகிறது. இவ்விஷயத்தில் அரைகாலனி நாடுகள் ''மத்திய கட்டத்'' தின் சரியான உதாரண மொன்றை வழங்குகின்றன. அரைசுதந்திரம் கொண்ட இந்நாடுகளுக்கானப் போராட்டம், நிதி மூலதனச் சகாப்தத்தில்—உலகின் ஏனைய பகுதிகள் ஏற்கனவே கூறுபோடப் பட்டிருக்கும் பொழுது--கடுமையாவது இயற்கையே.''

பிரமாண்டமான எண்ணெய் வளமும், கேந்திரத்தன்மையும் கொண்ட நிலப்பிரபுத்துவ விவசாய ராஜ்யமான ஈரானை லெனின் இவ் வரைகாலனி நாடுகளின் பட்டியலில் சேர்த்தார். இவற்றின் மீதான போராட்டம் 20ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் குறிப்பாகக் கடுமையுற்றது.

மத்திய கிழக்கில் ஏகாபத்திய அரசுகளுக்கிடையிலான முரண்பாடுகளின் கொதிப்பு நிலமாக லெனின் ஈரானை மீண்டும்

மீண்டும் குறிப்பிட்டார். மூலப்பொருட்கள், மூலதன முதலீட்டு மண்டலங்கள், ஏகபோகலாபங்கள்இவற்றுக்கான போராட்டத்தில் பிரிட்டன், ஜெர்மனி, அமெரிக்கா, ஜாரிஸ ரஷ்யாவின் நலன்கள் அங்கு மோதிக் கொண்டன.

பிரிட்டனும், ஜாரிஸ ரஷ்யாவும் நாட்டின் மீது மிகவும் வலுவான பிடிவைத்திருந்தன. அங்கு அவை எண்ணெய், தந்திச் சேவை, பாதை-நிர்மானம் மற்றும் பிரதான சலுகைகளைச் சொந்தமாகக் கொண்டிருந்தன. பல்வேறு கடன்கள் மூலம் ஈரானின் நிதிகளைக் கட்டுப்படுத்தின. முதலாவது உலக யுத்தத்தின் ஆரம்பத்தில் பிரிட்டனுக்கும், ரஷ்யாவுக்கும் ஈரானின் கடன் சுமார் 70 லட்சம் பவுண்டுகளை எட்டியிருந்தது; அந்நாளில் இது மிகவும் பெரியதொரு தொகையாகும்.

ஈரானிய மக்களின் ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்வ எதிர்ப்புப் போராட்டத்தை லெனின் மிகவும் உன்னிப்பாய்க் கவனித்தார். 1905-1907 ரஷ்யப் புரட்சியின் கங்குகளால் தூண்டப்பட்ட 1905-1911 ஈரானியப் புரட்சியை லெனின் உற்சாகத்தோடு ஆதரிக்க முன்வந்தார்.

ஈரானிய மக்கள் அரசியல் வாழ்வுக்கு ஜனநாயக, தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு விழிப்புற்றெழுவதன் அறிகுறியாக லெனின் 1905-1911 ஈரான்புரட்சியைக் கண்டார். ஈரானும், முழு ஆசியாவும் பூர்ஷுவா-ஜனநாயக தேசிய விடுதலை இயக்கங்களின் சகாப்தத்தில் நுழைந்துவிட்டதென அவர் நம்பினார். ''நாடுகளின் சுயநிர்ணய உரிமை'' என்ற தனது நூலில் லெனின் எழுதினார்: ''கிழக்கு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சிகள் 1905 வரை ஆரம்பமாகவில்லை. ரஷ்யாவில், பாரசீகத்தில், துருக்கியில், சீனாவில் புரட்சி, பால்கன்யுத்தங்கள்—நமது காலத்தில் நமது ''கீழ்த்திசை'' யில் சம்பவங்களின் சங்கிலிக்கோவை இத்தகையதாய் இருந்தது. இச்சம்பவக்கோவையில் தேசியச் சுதந்திரம் கொண்ட, தேசிய ஒரு சீர் கொண்ட ராஜ்யங்களை உருவாக்கப்பாடுபடும் பூர்ஷுவா ஜனநாயக இயக்கங்களின் முழு தொடர்ச்சியான விழிப்புணர்ச்சியைக் கண்டுகொள்ளத் தவறுவோர் குருடராகவே இருக்க முடியும்.''

சம்பவங்களின் ஆழவேர்களையும், வர்க்கங்கள் கட்சிகள் அரசாங்கங்களின் நோக்கங்களையும் லெனினால் எப்பொழுதுமே பிரட்தியட்சமாக்க முடிந்தது. அவர்களின் பெரும் வார்த்தை ஜாலப் பிரகடனங்களின் பின்னால் மறைந்திருந்த வர்க்க நலனை அவர் அம்பலப்படுத்தினார். இம்முறை உண்மையை வெளிக் கொணர அவருக்கு உதவியது.

# II

## மார்க்ஸிஸ-லெனினிஸக் கோட்பாடு

கடந்த நூற்றாண்டுகளின் முற்போக்குக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட கார்ல்மார்க்ஸ், பிரெடரிக் எங்கல்ஸுடைய போதனைகள் பரந்து பரவியுள்ளன. கற்பனாவாத சோஷலிஸம் கூட இக்கருத்துக்களில் பலவற்றை உள்ளாக்கியிருந்தது. எனினும் மார்க்ஸிஸம் இவற்றை விஞ்ஞான அடிப்படையில் மீளவிளக்கஞ் செய்துப் புனரமைத்தது. வருங்கால சமுதாயத்தையும், ராஜ்யத்தையும் பற்றி கற்பனாவாத சோஷலிஸ்ட்டுகள் அநேக ஊகங்களை வழங்கிய போதிலும், அவர்கள் சமூக நிலைமையை புனிதமான பூர்வீகம் கொண்டதெனவோ அல்லது விதிவிலக்கான தனி நபர்களது சித்தத்தினால் உருவாக்கப்படும் ஒன்று என அடிக்கடி கருதினர்.

மார்க்ஸும் எங்கல்ஸும், மறுபக்கம், மனிதசமுதாயத்தை விஞ்ஞான ஆய்வுக்கான ஒன்றாக அணுகினர். இது அவர்கள் விஞ்ஞான சோஷலிஸத்தை விரிவுபடுத்த உதவியது. விஞ்ஞான சோஷலிஸம் மனித இன வரலாற்றின் அர்த்தத்தையும், உத்தேசத்தையும் சரியாக விளக்கியது. இக் கோட்பாடு, முதலாளித்துவத்தை அகற்றி அவ்விடத்தில் அமரப்போகும் புதியதொரு சோஷலிஸ அமைப்பு உதயமாவதன் தவிர்க்க முடியாமையை நிரூபித்தது. விளாடிமிர் லெனினால் விருத்தி செய்யப்பட்டு, ரஷ்யாவில் வெற்றிகரமாகக் கடைப்பிடிக்கப்பட்ட இக் கொள்கைதான், உலகின் முதலாவது தொழிலாளர் விவசாயிகள் அரசின் ஸ்தாபிதத்துக்கு இட்டுச் சென்றது.

அநேக ஆசிய நாடுகள் மார்க்ஸிஸ சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு, அந்நாடுகளில் சோஷலிஸ சமுதாயங்களை நிர்மாணித்து வருகின்றன. ஏனைய நாடுகளில் அநேகமானவை அவற்றுள் ராஜ்ய அமைப்பில் சில மார்க்ஸிஸக் கொள்கைகளை—சில நாடுகள் அதிகமாகவும், சில நாடுகள் கொஞ்சமாகவும்—ஏற்றுக்கொண்டுள்ளன.

**மார்க்ஸீயம் பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தமாகும்; அதன் நலன்களது விஞ்ஞானக் கருத்துருவமாகும். தேசி**

விடுதலைக்கு, சமாதானத்துக்கு, சோஷலிஸத்துக்குப் போராடும் உழைக்கும் மக்களது போராட்டத்தின் தார்மீக ஆயுதமாகும். விஞ்ஞான சோஷலிஸத்தின் மாபெரும் ஸ்தாபர்களான மார்க்ஸும் எங்கல்ஸும் விஞ்ஞானத்திலும், சோஷலிஸ சித்தாந்தத்திலும் உண்மையானதொரு புரட்சியை உண்டுபண்ணினர். அவர்கள் சோஷலிஷ வளர்ச்சியின் புறவயமான அடித்தளங்களை கண்டுபிடித்ததோடு, முதலாளித்துவத்தின் இறுதியான வீழ்ச்சியினதும், சோஷலிஸ அமைப்பின் வெற்றியினதும் தவிர்க்க முடியாமையை நிரூபித்தனர்.

முதலாளித்துவ சமுதாயத்தின் ஒழிப்பு, சமூக ஏற்பாட்டின் தூரவீச்சுள்ள புரட்சிகரப் புனர்நிர்மாணம், சுதந்திரம், சமத்துவம், சினேகத்தன்மை, சமாதானம், உழைப்பு என்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட நவ சமுதாயத்தைக்கட்டியெழுப்புதல் - இவ்வனைக் குறிக்கோள்கள் தொழிலாளி வர்க்கம், உழைக்கும் மக்களின், விவசாயிகளின் சமூகத்தின் முற்போக்குப் பகுதியின் ஆதரவோடும் அவர்களின் நலனுக்காகவும் நிறைவேற்றப்போகும் வரலாற்று நோக்கத்தில் அடங்கியுள்ளன. சோஷலிஸப் புரட்சி மார்க்ஸ்-எங்கல்ஸ் போதனைகளுக்கேற்ப என்றென்றைக்குமாக எல்லாவித கலோனியல், இன ஒடுக்குமுறைகளுக்கும் முற்றுப் புள்ளிவைக்கும்.

மார்க்ஸ்-எங்கல்ஸின் விவேகமிகு சீடரும் அவர்களது லட்சியத்தின் வாரிசுமான விளாடிமிர் லெனின் மார்க்ஸிஸ -லெனினிஸ சித்தாந்தத்துக்கு மாபெரும் பங்களிப்பு வழங்கியுள்ளார். ''கார்ல் மார்க்ஸின் போதனைகள்'' என்ற தலைப்பிட்ட அவரது கட்டுரை சுருக்கமான, அதேவேளை மிகவும் மேதைமை வாய்ந்த மார்க்ஸிஸத்தின் தொகுப்புரையாகும். அது மார்க்ஸியத்தினதும் அதன் அங்கப்பகுதிகளதும் ஆழ்ந்த ஆய்வாகும். இங்கு லெனின், செயலுக்கு வழிகாட்டியாக மார்க்ஸிஸத்தின் ஆக்கத் தன்மையையும், திரிய வாதத்தோடும், வரட்டுக் கொள்கை வாதத்தோடும் அதன் இணங்காமையையும் வலியுறுத்துகிறார். மார்க்ஸியத்தின் சரியான தன்மையை வரலாறு பூரணமாக உறுதிப்படுத்தியுள்ளதை அவர் காட்டுகிறார். ''மார்க்ஸியத்தின் மூன்று மூலாதாரங்களும், மூன்று அங்கப்பகுதிகளும்'' என்ற லெனின் கட்டுரை மார்க்ஸியத்தின் மூலாதாரங்களும், அங்கப்பகுதிகளும் பற்றியதொரு சுருக்கமான தூய வர்ணனையைத் தருகிறது. (பார்க்க: அனுபந்தம் 2)

தொழிலாளி வர்க்கம் அதன் தார்மீக லட்சியத்தில் வெற்றிவாகை சூடுவதற்குத் தேவையான அறிவை மார்க்ஸீயம் வழங்குகிறதென்பதை லெனின் உணர்ந்தார். ''அறிவில்லாமல் தொழிலாளர் பாதுகாப்பற்றோராவர்........., அறிவோடு அவர்கள் ஒரு சக்தியாவர்!'' என அவர் எழுதினார். சர்வதேசப் புரட்சி இயக்கத்தின் முழு அனுபவத்தையும் பொதுவாக்கிக் கிரகித்துக் கொண்ட மார்க்ஸீயம், தொழிலாளி வர்க்கத்துக்கு, அதன் போராட்டத்தின் குறிக்கோள்கள், பணிகள், அமைப்பு பற்றிய தெளிவான கருத்தை வழங்குகிறதென அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

லெனின் மார்க்ஸியத் தத்துவத்தை மேலும் வளர்த்தெடுத்து பல முக்கியக் கொள்கைகளை அதனுடன் சேர்த்தார். விஞ்ஞானக் கம்யூனிஸத்தின் தத்துவ அடித்தளங்களை விரிவுபடுத்தும் பணியை அவர் தொடர்ந்து, தொழிலாளி வர்க்கக் கட்சி, சோஷலிஸப் புரட்சி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் சம்பந்தமான சோஷலிஸ, கம்யூனிஸ நிர்மாணத்துக்கான வழிவகைகள் இத்தியாதி சம்பந்தமான கோட்பாடுகளை உருவாக்கினார்.

கூட்டுமொத்தமான மனித அறிவிலிருந்து உதித்த இண்மையான ஒரே புரட்சிவாதக் கொள்கையாக அவர் மார்க்ஸியத்தின் முக்கியத்துவத்தைப் பிரத்தியட்சப் படுத்தினார். அதன் முடிவுகளை புறவயமானப் பொருள்முதல்வாத யதார்த்தத்துக்கு உறுதிப்படுத்தி இம்முடிவுகளை சமூக—வரலாற்று நடைமுறையில் பரீட்சித்துப்பார்த்தார். மார்க்ஸியத்தின் சகல அங்கங்களும்—தத்துவம், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞானக் கம்யூனிஸம்—லெனின் படைப்புகளிலும், நடைமுறைச் செயலிலும் விரிவுபடுத்தப்பட்டு, வளர்க்கப்பட்டு, ஸ்தூலமயமாக்கப்பட்டது.

பொருள்முதல்வாதத்தின் உண்மையை இயற்கை விஞ்ஞானம் உறுதிப்படுத்தியதென்பதை, உலகையும் அதில் காணப்படும்போக்குகளையும் விஞ்ஞான பூர்வமாக விளக்கும் ஒரே போதனை தர்க்கவியல் பொருள்முதல் வாதமேயாகையால், விஞ்ஞானிகள் தர்க்கவியல் பொருள்முதல் வாதத்தை ஏற்றுக்கொள்ளுதல் விஞ்ஞானத்தின் முன்னேற்றத்துக்கு தவிர்க்க முடியாத நிபந்தனையாகுமென்பதை லெனின் நம்பக்கூடியவகையில் நிரூபித்தார். திட்டவட்டமாக இப்பாதை பல முன்னேற்றமடைந்த இயற்கை விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

லெனின் தர்க்கவியல் முறைக்குப் பெரும் முக்கியத்துவமளித்து, பொருள்முதல்வாதத் தர்க்கவியல் மார்க்ஸியத்தின் ஆன்மாவென மொழிந்தார். தர்க்கவியலின் உள்ளடக்கத்தைக் காட்டுவதில் அவர், எதிரானவைகளின் ஐக்கியத்தினதும், போராட்டத்தினதும் விதியை நம்பகமான முறையில் வெளிப்படுத்தினார். பொருளின் சுயவளர்ச்சியை, அவ்வளர்ச்சிப் போக்கில் பழையதின் இடத்தைப் புதியது பிடித்துக்கொள்வதைப் புரிந்து கொள்வதற்கான திறவு கோலை இது வழங்குகிறது. எனவே தான், முன்னேற்றத்துக்காக, பழையதின் இடத்தில் புதியது புகுத்தப் படுவதற்காக அறைகூவல் விடுக்கும் மார்ஸியத் தர்க்கவியல் முறையின் விமர்சனப் பாங்கையும் புரட்சிவாதப் போக்கையும் லெனின் எப்பொழுதும் கோடிட்டும் கூறினார். பொருள்முதல் வாதத் தர்க்கவியல், பழசாகிப்போய் இனிமேல் மனித இனத்தின் தேவைகளை நிறைவேற்ற முடியாததாகிவிட்ட, புதிய முன்னேற்றமானதொரு சமூக அமைப்பில் தவிர்க்க முடியாதவாறு குடிபோடப்படப் போவதைக் காட்டுகின்ற முதலாளித்துவச் சமுதாயத்தின் சாஸ்வதமற்றச் தன்மையை மறுக்கமுடியாதவாறு நிரூபிக்கின்றது.

சமூக முன்னேற்றத்தின் புறவயமான போக்கு, உழைக்கும் மக்களது அபிலாஷைகளோடும் அதன் தலைமையான, மிகவும் புர

ட்சிவாத வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தோடும் உடனிகழ்ச்சியாகவுள்ளது. அவை முதலாளித்துவத்தை அகற்றி அதனிடத்தில் புதிய கம்யூனிஸ அமைப்பை வைக்க ஆவல் கொண்டுள்ளதோடு, வரலாற்று அவசியமான இதை சாதிக்குமாறு அவை அறைகூவல் விடுக்கப்படுகின்றன. சித்தாந்தம், அரசியல் சம்பந்தமான கட்சிக் கொள்கை லெனினால் ஆதாரப்படுத்தப்பட்டு, வளர்க்கப்பட்டு, மிகவும் முற்போக்கான சமூகச்சக்திகளோடு—தொழிலாளி வர்க்கத்தோடு—அதனது புரட்சவாதக் கருத்துக்களும், அபிலாஷைகளும் மிகவும் சரியானதாகவும், நியாயமானதாகவும் இருப்பதால்—உணர்வுபூர்வமாக ஆதரவான நிலைஎடுக்குமாறு மக்களைத் தூண்டுகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப்போராட்டத்தினது உச்சகட்டம் புரட்சியாகும். கம்யூனிஸ விரோதிகள் பாட்டாளிவர்க்கப் புரட்சியை ஒரு சிறு கும்பலான கம்யூனிஸ "சதிகாரர்"களால் நடத்தப்படும் சதியாகக் காட்டுகின்றனர். இது உண்மையல்ல. மார்க்ஸிஸம்-லெனினிஸம், "அரண்மனை புரட்சிகளை" புட்சுக்கள், ஆயுதமேந்திய சிறுபான்மையோர் ஆட்சியைக் கைப்பற்றுதல் போன்ற உபாயங்களை அங்கீகரிப்பதில்லை. சமூகப் போக்கின் மார்க்ஸிய எண்ணக் கருவிலிருந்தே இது தர்க்கரீதியாகத் தொடர்கிறது. புரட்சியின் காரணிகள் அடிப்படையில் சமூகத்தின் வாழ்வினது ஸ்தூல நிலைமைகளில், உற்பத்திசக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்குமிடையிலான மோதல்களில் தங்கியுள்ளன. இம்மோதல், தனித்தனி நபர்களின், கோஷ்டிகளின் அல்லது கட்சிகளின்கூட, சித்தத்தில் தங்கியிராத புறவயமான காரணிகளின் செல்வாக்கின்கீழ் போராட்டத்துக்காகக் குதித்தெழும் பெரும் பகுதியான மக்களின், வர்க்கங்களின் மோதலில் வெளிப்பாடு பெறுகின்றது. கம்யூனிஸ்ட் கட்சி வெகுஜன நடவடிக்கையை உருவாக்கி, நெறிப்படுத்துகின்றது. ஆனால் "அவர்களுக்காக" தனது சொந்த சக்திகளைக் கொண்டு புரட்சி செய்ய யத்தனிப்பதில்லை.

முக்கியத்துவம் வாய்ந்த பல அம்சங்கள், தொழிலாளி வர்க்கத்தின் சோஷலிஸப் புரட்சியை அதற்கு முந்திய சகல புரட்சிகளிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டுகின்றது. அவற்றில் பிரதானமானது, சகல முன்னைய புரட்சிகளும் ஒருவகை சுரண்டலுக்குப் பதிலாகஇன்னொருவகைச் சுரண்டலைப் புகுத்துவதாகவே இருந்த அதே வேளையில் சோஷலிஸப் புரட்சி சுரண்டலை ஒழித்துக்கட்டி இறுதியாக வர்க்கங்களை ஒழிப்பதற்கு இட்டுச் செல்கின்றது என்ற உண்மையாகும். இதுஎல்லா சமுதாய மாறுதல்க்ளிலும்பார்க்கமிகவும்ஆழம் வாய்ந்ததாகும். சமூக உறவுகளை அடிமுடியாக முற்றிலும் மாற்றியமைத்தலாகும். சோஷலிஸப் புரட்சி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நிலவிவந்த சுரண்டும் வர்க்கச் சமுதாயத்தின் முடிவைக் குறிக்கின்றது; சகலவித ஒடுக்குமுறைகளிலிருந்தும் சமூக விடுதலையைக் குறிக்கின்றது; மக்கள் மத்தியில் உண்மையான சகோதரத்துவ சமத்துவ சகாப்தம் ஆரம்பமாவதைக் குறிக்கின்றது; நிலையான சமாதானத்தை நிறுவுதலையும் மனித இனத்தின் முழு மறுமலர்ச்சியையும் குறிக்கின்றது. முழு மனித சமுதாயத்துக்குமான பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பிரமாண்டமான முக்கியத்துவம் இதில் தங்கி

யுள்ளது. மனிதகுல வளர்ச்சியில் இது முக்கிய திருப்புமுனையாகின்றது.

சோஷலிஸப் புரட்சியின் வரலாற்றுப்பணி, உற்பத்தி சாதனங்களினதும், முதலாளித்துவ உற்பத்தி உறவுகளினதும் முதலாளித்துவ தனிநபர் சொத்துடைமையை ஒழித்தலிலும், அதனிடத்தில் உற்பத்திச் சாதனங்களினதும், உற்பத்தி உறவுகளினதும் பொதுஜன சோஷலிஸ சொத்துடைமையை வைத்தலுமாகும். எனினும் பூர்ஷுவா ஆட்சியைப் பிடித்துக்கொண்டிருக்கும்வரை இம் மாற்றம் சாத்தியமற்றதாகும். பூர்ஷுவா அரசு, முதலாளித்துவ சமுதாயத்தை மாற்றியமைப்பதில் பிரதானத் தடையாக உள்ளது; அது சுரண்டல் கொள்ளைகாரர்களுக்கு உதவுவதோடு அவர்களது உடைமைகளை மிகுந்த ஈடுபாட்டோடு காவல் புரிகின்றது. ஆளும் வர்க்கத்தின் உடைமைகளைப் பறித்து அவற்றை முழு சமுதாயத்துக்கும் வழங்குவதற்கு, அரச அதிகாரம் முதலாளித்துவவாதிகளிடமிருந்து பிடுங்கப்பட்டு உழைக்கும் மக்களின் கரங்களில் கொடுக்கப்படல் வேண்டும். பூர்ஷுவா அரசு அகற்றப்பட்டு அதனிடத்தில் உழைக்கும் மக்களின் அரசொன்று வரச்செய்தல் வேண்டும்.

''அரசும் புரட்சியும்,, என்ற தனது நூலில் லெனின் முதன் முறையாக, கவுட்ஸ்கியாலும் மற்றும் சந்தர்ப்பவாதிகளாலும் கொச்சைப் படுத்தப்பட்ட மார்க்ஸின் அரசு மீதான போதனையை மேதையோடும் ஒழுங்குமுறையோடும் விவரித்தார். இப்போதனையைச் சரியாகப் பரிசோதித்து விளக்குவது மிகவும் அத்தியாவசியமாய் இருந்தது; ஏனெனில் ரஷ்யாவில் சோஷலிஸப் புரட்சி பக்குவமடைந்து வருவதுடன், அரசு வகிக்கும் பாத்திரம் பற்றிய பிரச்சினை உடனடியான கொள்கை, நடைமுறைப் பிரச்சினையாக மாறிவிட்டது.

பூர்ஷுவா சித்தாந்திகள், சோஷலிஸக் கட்சிகளின் சந்தர்ப்பவாதிகளால் எதிரொலிக்கப்பட்டு, சுரண்டும் வர்க்கங்களின் ஆட்சியை நியாயப்படுத்தும் நோக்குகொண்ட, பூர்ஷுவா அரசின் உண்மையான வர்க்கத்தன்மையை முலாம்பூசி மறைக்கும் எண்ணற்ற கொள்கைகளை முன்வைத்தனர். அவர்களது அபிப்பிராயத்தில் பூர்ஷுவா அரசு வர்கங்களுக்கு அப்பாற்பட்டதோர் ஸ்தாபனமாகும்; அதன் பணி சமூகத்தின் பல்வேறு வர்க்கங்களின் நலன்களை சமரசஞ் செய்தலாகும். லெனின் இதை நிராகரித்ததுடன் மார்க்ஸிய சித்தாந்தமே முதன்முறையாக அரசின் பூர்வீகத்துக்கு உண்மையான விஞ்ஞான விளக்கம் வழங்கியதோடு அதன் சுயரூபத்தை அம்பலமாக்கியதென்பதை வலியுறுத்தினார்.

அரசு, அப்பதத்தின் சரியான அர்த்தத்தில், ஒருவர்க்கம் இன்னொரு வர்க்கத்தைச் சுரண்டுதற்கான கருவியென மார்க்ஸியம் போதிக்கின்றது. மக்கள்மீது சுரண்டும் வர்க்கங்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் ஏனைய கருவிகளைப் போன்று, தனிநபர் சொத்துடைமைதோன்றி முரண்பாடான வர்க்கங்களுகெதிராக சமூகம் பிளவுபட்டதும், அரசு தோன்றியது. அடிமைமுறை சமுதாயத்திலும், நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலும் மட்டுமன்றி, முதலாளித்

துவ சமுதாயத்திலும் அரசு மக்கள் தொகையின் மிகப்பெரும் பகுதியாக அமையும் உழைக்கும் மக்களை ஒடுக்கும் கருவியாகவுள்ளது. லெனின் எழுதினர், ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் பூர்ஷுவா அரச யந்திரம் ''பூர்ஷுவா சர்வாதிகாரம்'' பெரிதும் தீவிரப்படுத்தப் படுகிறது; துரைத்தன,ராணுவயந்திரம் முன்னென்றுமில்லாதவாறு அதிகரித்துப் பெருகி அது புரட்சிவாத பாட்டாளி வர்க்கத்துக்கும், ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்துக்கும் எதிராகத் திருப்பப்படுகிறது; இன்னும் இத்தியாதி, அரசு பற்றிய மார்க்ஸிய சித்தாந்தத்தின் அடிப்படைகளை விவரிக்கும் போது லெனின், முன்னைய புரட்சிகள் யாவும், பூர்ஷுவா அரச யந்திரத்தை விருத்தி செய்தன எனக்கூறினர். அவையாவும் பூர்ஷுவா சர்வாதிகாரங்களாகும். பாட்டாளி வர்க்கப் புரட்சி இச் சர்வாதிகாரத்தை நொறுக்கித்தள்ள வேண்டும், அதைத்துவம்சம் செய்து அதனிடத்தில் ஒரு தொழிலாளி வர்க்க அரசயந்திரத்தை—வர்க்கச் சர்வாதிகாரத்தை—அமர்த்த வேண்டும்.

''சுரண்டல்காரரின் எதிர்ப்பை அடக்குதற்கும்,மக்கள்தொகையின்பெரும்பகுதினரை பாட்டாளிவிவசாயிகள் அரைபூர்ஷுவாக்கள் அரை-பாட்டாளி வர்க்கத்தினரை சமூகப் பொருளாதாரச் சீரமைக்கும் பணியில் தலைமைதாங்குதற்கும் தொழிலாளி வர்க்கத்துக்கு அரச அதிகாரம், மையப்படுத்தப்பட்டதொரு சக்தியமைப்பு, ஒரு வன்முறை ஸ்தாபனம் தேவை,'' என லெனின் எழுதினர். மார்க்ஸியத்தின் சாராம்சம் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரச் சித்தாந்தமாகும்: ''வர்க்கப் போராட்ட அங்கீகரிப்பை, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் அங்கீகரிப்புக்கு விஸ்தரிப்பவனே உண்மையான மார்க்ஸியவாதி.''

லெனின், தம் பணி உலகை விளக்குவதமட்டுமல்ல, ஆனல் பிரதானமாக அதை புனர் நிர்மாணஞ் செய்தல் என்று நம்பிய சிந்தனையாளர்கள் வரிசையைச் சேர்ந்தவராவார். பாட்டாளி வர்க்கத்தின் உண்மைத் தலைவரான அவர், வர்க்கங்களின் வாழ்வையும் போராட்டத்தையும் சலிப்பறக் கற்றுத்தேர்ந்ததோடு, உழைக்கும் வர்க்கத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்; பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்துக்கு வெற்றி கொணர்ந்த போர்தந்திரங்களையும் தந்திரோபாயங்களையும் பாடுபட்டுத் தீட்டிக்கொடுத்தார்;முதலாளித்துவத்துகெதிராகத் தொழிலாளர்களது புரட்சிப் போராட்டத்தை நெறிப்படுத்தினர். அவரது படைப்புகள் யாவிலும் மார்க்ஸிய உணர்வு நித்திய ஜீவியமான, வெள்ளும் தன்மைக்கான போதனையாய், கொள்கை விசுவாசத்தை கோருவதாய், வரட்டுத்தனமான வடிவங்களையும், கொள்கைகளையும் நிராகரிப்பதாய் உண்மையான வரலாற்று நிலைமையின் ஸ்தூலமான கணிப்பிலிருந்து புறப்படுவதாய் ஊடுபாவியிருந்தது.

மார்க்ஸ்-எங்கல்ஸ் கருத்துக்களை ஆக்கபூர்வமாய் வளர்த்தெடுத்து அவர்களால்நிறுவப்பட்ட கம்யூனிஸ்ட் லீகினதும்,சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தினதும அனுபவத்தைக் கணக்கிலெடுத்து லெனின், புதுவகையானதொரு புரட்சிக் கட்சியின், பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையும்,பிரதான ஆயுதமான கட்சியின்,

அது இல்லாமல் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கியெறியவும், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி சோஷலிஸத்தைக் கட்டியெழுப்பவும் முடியாத கட்சியின் அறிவுமிகுந்த போதனையை அவர் வகுத்தெடுத்தார். தொழிலாளி வர்க்கப் புரட்சிக் கட்சியின் போதனையை வகுத்தெடுப்பதுடன் சேர்ந்து அவர் அத்தகையதொரு கட்சியை—சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியை—உருவாக்கி, வளர்த்தெடுத்தார்.

''அதிகாரத்துக்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு ஸ்தாபன அமைப்பைத்தவிர வேறு ஆயுதம் கிடையாது'' என லெனின் அழுத்தமாய்க் கூறினர். உயர்தலைமை வாய்ந்த ஸ்தாபன அமைப்பொன்றை ஏற்படுத்துவதன் மூலமாகவே தொழிலாளி வர்க்கம், எந்த வர்க்க எதிரியும் தாக்குப்பிடித்து நிற்கமுடியாத சக்தியாக மாறுகின்றது. தனது போராட்டத்தை ஐக்கியப்படுத்துவதற்கு, சீரமைப்பதற்கு, நெறிப்படுத்துவதற்கு அது சொந்த அரசியல் கட்சியைக் கொண்டிருக்க வேண்டும். லெனின் அத்தகையதொரு கட்சியை நிருவி அதன் அமைப்புரீதியான, சித்தாந்தரீதியன, உபாயரீதியாச, தத்துவரீதியான கோட்பாட்டுகளை உருவாக்கியெடுத்தார்.

தொழிலாளிவர்க்கக் கட்சி அதன் பணியில், புரட்சிகரமுறைகளில் சமூகத்தின் பொருளாதார, அரசியல், சமூகப் புனர்நிர்மாணத்திற்சான விஞ்ஞான பூர்வத் திட்டமொன்றைக் கம்யூனிஸ்ட்களுக்கு வழங்கும், மார்க்ஸிய, புரட்சிக் கொள்கையால் வழிகாட்டப்பட்டால் ஒன்று திரட்டும், நெறிப்படுத்தும் நிலையமாக அது தன் பாத்திரத்தை நிறைவேற்ற முடியும் என லெனின் நினைத்தார்.

கட்சியின் ஐக்கியத்துக்கு அவர் முகப்பிரதான மிக்கியத்துவம் வழங்கியதோடு இவ்வைக்கியம் கண்ணின் மணி போன்று காக்கப்படல் வேண்டுமென அவர் வலியுறுத்தினர். கட்சி உறுப்பினர் சகலரதும்—தலைவர்களுக்கும் ஒரே விதமான அதிகாரக் கட்டளையாக அமைந்த—மிகுந்த கடடுப்பாட்டை அவர் வேண்டினர்; கட்சியின் பொதுமார்க்கத்தை மீறும், அதன் சாதாரண உறுப்பினர்களைக் கெடுக்கும் ஆபாயக் கூச்சல் வாதிகளுக்கும், சரணுகதியாளருக்கும், சந்தர்ப்பவாதிகளுக்கும் எதிரான தாட்சண்யமற்றப் போராட்டத்தை அவர் வேண்டினர்.

கம்யூனிஸ்ட்கள் வெற்றிமமதை கொள்வோராகவும், மரியாதைக்கும் சுயதிருப்திக்கும் விட்டுக்கொடுப்போராகவும் இருக்கக் கூடாது என்றும் தவறுகளை அவர்கள் தீர்க்கத்துடன் விமர்சித்து அகற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டுமென்றும் அவர் கோரினர். முழுக்கட்சியும் அதன் ஒவ்வொரு உறுப்பினரும் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராகவும் அவர்களின் நம்பிக்கையை மதிப்பவராகவும், அவர்களது ஜீவாதார நலன்களை அறிந்தவராகவும் இருத்தல் அத்தியாவசியமென அவர் நம்பினர். மக்கள் நினைப்பதைச் சரியான முறையில் வெளிப்படுத்தினுல் மட்டுமே கம்யூனிஸ்ட்கள், சிறு தொகையினராய் இருந்த போதிலும் மக்களுக்குத் தலைமைத்தாங்க முடியுமென அவர் கூறினர்.

ஜனநாயகமும் மையவாதமும் தனிமுழுமையொன்றின் இரண்டறக்கலந்த பிரிக்கமுடியாத அம்சங்களாகவுள்ள ஜனநாயக மையவாதம் புதுவகையானதொரு கட்சியின் அடிநாதமாய் அமைகிறது.

ஒவ்வொரு கம்யூனிஸ்டும், ஒவ்வொரு கட்சிஅமைப்பும் கடைபிடிக்க வேண்டிய கட்டளையாக அமைந்துள்ள அதன் திட்டத்திலும் விதிகளிலும் அடங்கியுள்ள, கட்சியின் சித்தாந்த, தந்திரோபாய, அமைப்புக் கொள்கைகளுக்கிடையிலான ஐக்கியத்தின் முக்கியத்துவத்தை இது குறிக்கின்றது. கட்சி அதன் அதி உயர் அங்கமாகக் காங்கிரஸைக் கொண்டுள்ளது; காங்கிரஸுகளுக்கிடையில் இடைக்கால கட்டத்தில் மத்தியக்குழுவைக் கொண்டுள்ளளது. கட்சிக் கட்டுப்பாடு சகல உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும் ஒன்றாகும். சிறுபான்மையினர். பெரும்பான்மையினருக்குக் கட்டுப்படுதல், கீழ் ஸ்தாபனங்கள் உயர் ஸ்தாபனங்களுக்குக் கட்டுப்படுதல் என்பதில் கட்சி நடவடிக்கை தங்கியுள்ளது. ''தகுதிவாய்ந்த அமைப்புகள் தீர்மானித்தபின் நாமெல்லோரும் கட்சி உறுப்பினர்கள் என்ற முறையில் ஒரு மனிதனாகச் செயற்பட வேண்டும்.'' என்று லெனின் எழுதினார்.

பாட்டாளிவர்க்கச் சர்வாதிகார மார்க்ஸியப் போதனையை லெனின் விஸ்த்தரித்தமை சர்வகேசப் புரட்சி இயக்கத்துக்கு அதி முக்கியம் வாய்ந்தவொன்றாகும். பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம் சோஷலிஸப் புரட்சியின் அடிப்படைப் பிரச்சினையும் மார்க்ஸியத்தின் பிரதான மூலமாகவும் ஆகும் என லெனின் வலியுறுத்தினார்; எனவே அச் சர்வாதிகாரத்தின் அதிமுக்கியமான அம்சங்களை அதன் சமூகத்தன்மையை, அது நிறுவப்பட்ட நிலைமைகளை, அதன் பிரதான பணிகளை வடிவங்களை, அதன் பாத்திரத்தை முக்கியத்துவத்தை அவர் விஸ்தரித்தார். பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தையெதிர்த்த சந்தர்ப்பவாதிகளுக்கு அவர் தீர்க்கமான பதிலடி கொடுத்து, சோஷலிஸ நிர்மாணத்துக்கு, சுரண்டலற்ற நவசமுதாயத்தின் நிர்மாணத்துக்குச் சாதனமாக பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் வரலாற்று அவசியத்தை அவர் நிரூபித்தார். மனிதகுலம் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம் மூலமாகவே சோஷலிஸத்தை அடைய முடியும் என்றார் அவர். சுரண்டும் சிறுபான்மையோரின் நலன்களைக் கொண்ட பூர்ஷ்வா ஜனநாசகத்துக்கு நேர்மாற்றாக லெனின், நிர்வாகத்திலும், சமூக ராஜ்ய விவகாரங்களிலும், மக்களின் பரவலான பகுதியினர் பங்குகொள்வதையும், மிகப் பெரும்பான்மையான மக்களது நலன்களையும் வெளிப்படுத்தும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை அடிப்படையில் புதிய உயர்ந்தொரு ஜனநாயக முறையை முன்வைத்தார்:

பாட்டாளிவர்க்கச் சர்வாதிகார மார்க்ஸிய போதனையின் ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கு லெனினின் மிகப்பெரும் பங்களிப்பு புதுவகையான அரசாக சோவியத்துக்கள் பற்றிய அவரது கருத்தாகும். எந்தவொரு பூர்ஷ்வா பாராளுமன்ற குடியரசை விடவும் அளக்கமுடியாத அளவு மிகவும் ஜனநாயகத் தன்மைவாய்ந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ராஜ்ய வடிவமாக சோவியத்துக்களின் குடியரசின் வரலாற்று முக்கியத்துவத்தை லெனின் காட்டினார்.

1905-07ல் ரஷ்யாவில் பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சியின் போது தாமே முன்வந்து தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத் சபைகளை நிறுவிய மக்கள் முயற்சியினாலே லெனின் இம்முடிவுக்குக் கொணரப்பட்டார். இவ்வாறு சோவியத்துக்கள் மக்களது வரலாற்று முன் முயற்சியிலிருந்து தனித்தெழுகின்றன. இவற்றில் உழைக்கும் மக்களது சோஷலிஸ ராஜ்யத்தின் முன்மாதிரியைக் கண்டார் லெனின்.

சோவியத்துகளைப் புதிய உயர்வகையான ஜனநாயகமாகக் குணநலன் காட்டி அவர் எழுதினார்: ''அது எல்லோருக்கும் திறந்து விடப்பட்டதோர் அதிகாரமாகும், அது தனது பணியாவையும் மக்களின் கண்முன்னாலேயே செய்தது, மக்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருந்தது, பொதுமக்களின் அவர்களது சித்தத்தின் உடனடியான கருவியாக இருந்தது.''

மார்ச் 1919ல் லெனின் ஆற்றிய உரையொன்றில் சோவியத் ஆட்சியின் சாராம்சத்தை வடித்துத் தந்தார்.
(பார்க்க: அனுபந்தம் 3)

புரட்சிகர விஞ்ஞானம் மீதான லெனின் போக்கை இவ்வாறு சுருக்கமாக உருவடிக்கலாம்: ஆட்டம் கொள்ளாமல் மார்க்ஸியத்தைத் தூக்கிப்பிடித்தல், பாதுகாத்தல், அதை உறுதியாக வளர்த்தெடுத்து புரட்சி இயக்கத்தின் கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையே தொடர்பை உறுதிப்படுத்தல். மார்க்ஸ்-எங்கல்ஸின் மிகவும் உறுதியான சீடராகவும் அவர்கள் உருவாக்கிய புரட்சிகர விஞ்ஞானத்தின் விஸ்வாசமான, உணர்ச்சிமிக்க பாதுகாவலராகவும் லெனின் மார்க்ஸிய சித்தாந்தத்துக்குப் பிரமாண்டமான பங்களிப்பு வழங்கினார். விஞ்ஞான சோஷலிஸத்தை ஆக்கபூர்வமாக வளர்த்து, செழுமைப்படுத்தி புதியதொரு உயர் கட்டத்துக்கு உயர்த்தினார். லெனினிஸம், ஏகாதிபத்தியத்தினதும் தொழிலாளி வர்க்க புரட்சியினதும் சகாப்தத்தில், சோஷலிஸத்தினதும் கம்யூனிஸ நிர்மாணத்தினதும் சகாப்தத்தில், உலக சோஷலிஸ அமைப்பின் தேசிய விடுதலைப் புரட்சிகளின் தோற்றத்தினதும், வளர்ச்சியினதும் கலோனியல் அமைப்பின் வீழ்ச்சியினதும் சகாப்தத்தில், கம்யூனிஸத்துக்கு மனிதகுலம் மாறுதலுறும் சகாப்தத்தின் மார்க்ஸியம் ஆகும்.

மார்க்ஸியத்துக்கு லெனினது பங்களிப்பின் சுருக்கம் இங்கு தரப்பட்டுள்ளது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவர் மார்க்ஸியத்தைப் புரட்சிவாதப் போதனையின் மட்டத்துக்கு மீட்டெடுத்தார். கவ்ட்ஸ்கியினதும், சீர்திருத்தவாதிகளினதும் போலித்தனங்களிலிருந்து அவர் அதை விடுவித்தார்.

திரிபுவாதத்துக்கெதிராக விட்டுக்கொடாத போராட்டத்தில் லெனின் உறுதியாகப் பற்றிய பிரதான மார்க்ஸ்-எங்கல்ஸ் கருத்துக்கள் யாவை?

முதலாவது, புரட்சிகர சமுதாய மாற்றத்தின் பிரதான உந்து சக்தியாக பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பணி பற்றிய கருத்து.

இரண்டாவது, சோஷலிஸப் புரட்சி பற்றிய கருத்து: புரட்சியின் போது பாட்டாளி வர்க்கம் பூர்ஷுவா ராணுவ துரைத்தன யந்திரத்தை அழித்தொழிக்காவிட்டால் புரட்சி தவிர்க்க முடியாதவாறு மாய்ந்துவிடும் என்ற அர்த்தத்தில் மார்க்ஸினால் ஆதாரப் படுத்தப்பட்ட ஏற்பாட்டை சந்தர்ப்பவாதிகள் மறந்து போனதொன்றாக மறைத்து வைத்தனர்.

மூன்றாவது, தொழிலாளிவர்க்கச் சர்வாதிகரேம்—சேஷேலிஸ நிர்மாணத்தில் பிரதான கருவியாக—தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் அரசு பற்றிய கருத்து.

நாலாவது, அதிகாரப் போராட்டத்தில் புரட்சிவாத மார்க்ஸிய கட்சி வகிக்கும் வழிகாட்டும் பாத்திரம் பற்றிய கருத்து.

லெனினிஸக் கருத்துக்கள் கணிசமான அளவு மார்க்ஸியத்தை விருத்தி செய்துள்ளன. சோஷலிஸப் புரட்சி முதலில் பல நாடுகளில் அல்லது தனியொரு நாட்டில்கூட, வெற்றியடையும் சாத்தியம் பற்றிய கருத்து அத்தகையதொன்றாகும். உலக முதலாளித்துவ அமைப்பு விழ்ச்சியுறுவது உலக சோஷலிஸப் புரட்சியின் போக்காக வமைதல் சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் தேசியவிடுதலை இயக்கத்துடன் நேசஉறவுபூணுவது, நேர்எதிரான இரு சமூகப்-பொருளாதார அமைப்புகளின் நீடித்த சகவாழ்வு இத்தியாதி பற்றிய அவரது தீர்க்கதரிசனம்.

திட்டமாக மார்க்ஸியத்துக்கும் லெனினிஸத்துக்குமிடையே பிரிக்கமுடியாத தொடர்பு காரணமாக, கம்யூனிஸ்ட்கள் இருபதுக்களின் ஆரம்பத்திலிருந்தே ''மார்க்ஸியம்-லெனினிஸம்', என்ற பதப் பிரயோகத்தைக் கையாண்டுவருகின்றனர். மார்க்ஸிஸம் லெனினிஸத்தின் அடித்தளமாகும். லெனினிஸம் மார்க்ஸிய வளர்ச்சியில் குணரீதியில் புதியதொரு உயர் கட்டமாகும்.

தொழிலாளிவர்க்கத்தின் அதிகாரப் போராட்டத்துக்குத்தலைமை தாங்குவதில், புரட்சிவாத மார்க்ஸிஸ்ட்டுகள், குறிப்பிட்டவொரு நாடு அடைந்துள்ள லௌகிச், தொழில்நுட்ப மட்டத்தையும், சமூகப் பொருளாதாரப் பக்குவத்தின் மட்டத்தையும் கடுமையாகக் கருத்தில் கொள்ளவேண்டிய கடமைப்பாட்டை லெனின் திரும்பத் திருந்த வலியுறுத்தினர். அத்தகையக் கரிசனமின்மை அரசியலில் சாஹஸவாதம் நிறைந்துபோய் தொழிலாளிவர்க்கத்தைத் தோல்வியில் விழுத்துகிறது.

தனது பொருளாதார ஆய்வில், எல்லாவற்றுக்கும் மேலாக ''ஏகாதிபத்தியம், முதலாளித்துவத்தின் ஆகவும் உயர்ந்த கட்

டம்'' என்ற தனது நூலில் லெனின், முதலாளித்துவம் ஏகபோகக் கட்டத்துக்கு மாறுவதோடு, முழு முதலாளித்துவப் பொருளாதாரத்தின் உலக அமைப்பு, உலக சோஷலிஸ அமைப்பு அதனிடத்தைப் பிடித்துக்கொள்ளும் வகையில் கனிந்துவிட்டதென்பதை லெனின் நிரூபித்தார்.

மார்க்ஸ்-எங்கல்ஸால் உருவாக்கப்பட்டு லெனினல் விரிவுபடுத்தப்பட்ட விஞ்ஞானக் கம்யூனிஸக் கொள்கை, சோவியத் யூனியனதும் ஏனைய சோஷலிஸ நாடுகளதும் அனுபவத்தால். இன்னும் பிறனைக கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளதும், அனுபவத்தால் செழுமைப் படுத்தப்பட்டுள்ளது: அது உலக சோஷலிஸ அமைப்பில் அடங்கியுள்ளது; அவ்வமைப்புகளைக் கொண்ட நாடுகளில் அமுலாக்கம்பெறும் தூர நலன் பயக்கும் சோஷலிஸ மாற்றத்தின் முதுகெலும்பாக அது அமைகிறது. சோஷலிஸத்தில் தமது வருங்காலத்தைக் காணும் சகல மக்களினதும் தொழிலாளிவர்க்கப் போராட்டத்துக்கு ஆதார உந்துசக்தியாக விளங்குகின்றது.

# III

# ஏகாதிபத்தியவாதமும் கலோனியல்வாதமும்

மார்க்ஸியத்தின் ஸ்தாபகர்கள் முதலாளித்துவ அமைப்பின் உதயம், வளர்ச்சி, வீழ்ச்சிகளை ஆளும் விதிகளை அம்பலமாக்கினர். ஆனால் மார்க்ஸ்-எங்கல்ஸுடைய நாட்களில் சோஷலிஸப் புரட்சி இன்னும் உடனடி நோக்கமாகவில்லை புதிய சகாப்தத்தின் ஆழ்ந்த பகுப்பாய்வை வழங்கிய முதலாவது மார்க்ஸிட்-லெனின் ஆவார். 1916ல் எழுதப்பட்ட ''ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் ஆக உயர்ந்த கட்டம்'' என்ற தனது நூலில் அவர் இதைச் செய்தார். நூற்றுண்டின் தொடக்கத்தில் முதலாளித்துவம் புதியதொரு கட்டத்தை, ஏகாதிபத்தியத்தை அடைந்துவிட்டது; அது ''உலகின் மிகப் பெரும்பான்மையான மக்கள்மீது விரல் விட்டெண்ணக்கூடிய ஒருசில முன்னேற்றமுள்ள நாடுகள் கலோனியல் ஒடுக்குமுறையை. நிதி நசுக்களை உண்டு பண்ணும் உலக வியாபகமானதொரு அமைப்பாக மாறிவிட்டது'' என்பதை அவர் சுட்டிக்காட்டினர். ஏகாதிபத்தியம் பாட்டாளிவர்க்கச் சமூகப் புரட்சியின் புகுமுக வேளையாகும்; சோஷலிஸப் புரட்சியொன்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான புறயயமான ஆயத்தங்களை அது உருவாக்கியுள்ளது. ''ஏகாதிபத்தியம். முதலாளித்துவத்தின் ஆக உயர்ந்த கட்டம்'' என்ற நூலில் கொடுக்கப்பட்டுள்ளது போல் ஏகாதிபத்தியத்துக்கு விளக்கம் (அனுபந்தம் 4ல்) தரப்பட்டுள்ளது.

சோஷலிஸப் புரட்சி சகல அல்லது பெரும்பான்மையான முன்னேற்றமடைந்த நாடுகளில் ஒரே காலத்தில் நிகழ வேண்டுமென்ற நிலையை மார்க்ஸ்-எங்கல்ஸ் கொண்டிருந்தனர். ஆனால் அப்போதிருந்து நிலைமைகள் மாறிவிட்டன. எனவே முதலாளித்துவத்தின் இயல்பும் மாறிவிட்டது

19ம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் முதலாளித்துவம் அதன் ஏகபோகக் கட்டத்தில் நுழை

ந்தது. சோஷலிஸப் புரட்சிக் கோட்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு, லெனின், கண்டபடியான மேடுபள்ளமான முதலாளித்துவ வளர்ச்சிமீது உருவாக்கிய ஏகாதிபத்தியமும் சட்டமும் பற்றிய அவரது எழுத்துக்களை நாம் படிப்பதவசியம். 20ம் நூற்றுண்டின் திருப்பத்தில் முதலாளித்துவ வளர்ச்சியுடன் ஏற்பட்ட புதிய அம்சங்கள் ஏகாதிபத்தியம் பற்றிய லெனின் நூலில் விவரமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு, தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரக் குணநலன்களாவன: உற்பத்தியும்மூலதனமும் உயர்ந்த அளவில் ஒன்றுகுவிதல்: நிதி மூலதனத்துக்கும், நிதியின் குழுவாட்சிக்கும் இட்டுச்செல்லும் உற்பத்தி மூலதனத்தோடு வங்கியை ஒன்றாக இணைத்தல்: பண்டஏற்றுமதியை விட மூலதன ஏற்றுமதி மேன்மையடைதல்; சர்வதேச ஏகபோக கழகங்கள் உருப்படுதல்; முதலாளித்துவ நேச உறவாளர்கள் மத்தியில் உலகைப் பங்குபிரித்தல் (ராணுவத்தின் மூலம் பங்குபோடுதல் உட்பட); வளர்ச்சியுற்ற முதலளித்துவ நாடுகளுக்கிடையே பிரதேச பிரிவினை பூர்த்தியுறலும். உலகைப் புனர் பங்கீடு செய்வதற்காய் புதியப் போராட்டமொன்றும் தொடங்குதல்.

அரசியல் ரீதியாக ஏகாதிபத்தியம் பிற்போக்குச் சக்திகளது தாக்குதல் தொடுப்பதை குறிப்பிடுகின்றது. நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்துக்கான மாற்றத்தின் காலகட்டத்தின் போது முற்போக்கு வர்க்கமாகக் காணப்பட்ட பூர்ஷுவா, பிற்போக்கு வர்க்கமாகவும் முன்னேற்றத்துக்கும் ஜனநாயகத்துக்கும் ஒரு முட்டுக்கட்டையாகவும் மாறுகிறது.

மார்க்ஸ் எங்கல்ஸின் விஞ்ஞான பூர்வமான தத்துவத்தை வழிகாட்டியாகக்கொண்டு லெனின் ஏகாதிபத்தியத்தின் அங்கபூர்வமான போதனையை வகுத்தெடுத்தார் முதலாளித்துவம் அதன் ஏகாதிபத்திய வளர்ச்சிக்கட்டத்தில், பொருளாதார. அரசியல் முரண்பாடுகள் குமுறி வெடிக்கும் நிலையை அடைந்து வருகின்றது, ஏகாதிபத்திய யுத்தங்களைக் கட்டவிழ்த்து விடுவதற்கும் பிற்போக்கை ஆரம்பிப்பதற்கும் இட்டுச் செல்லும் காலகட்டத்தை அடைகிறதென்ற கூற்றை லெனின் வகுத்தெடுத்து அதற்கு ஆதாரம் வழங்கினுர்; இக்காலகட்டம் உழைக்கும் மக்களின் மீதான சுரண்டலே மிகவும் தீவிரமடைவதையும் தேசிய ஒடுக்குமுறை அதிகரிப்பதையும் காண்கிறது.

முதலாளித்துவத்தின் புதிய, ஏகாதிபத்தியக் கட்டத்தின் அம்சங்களது நுணுக்கமான பகுப்பாய்வின் அடிப்படையில் லெனின், ஏகாதிபத்தியத்தின் ஆழவேரோடிய முரண்பாடுகளும், புண்களும் குணப்படுத்த முடியாதவை என்பதையும், ஏகாதிபத்தியத்தின் சகாப்தத்தில் முதலாளித்துவம் அழிவுற்றுச் செத்து சமுதாயத்தை சோஷலிஸத்துக்குக் கொணர்கிறது. சமூக வரலாற்று வளர்ச்சி தொழிலாளி வர்க்கப் புரட்சி பற்றிய பிரச்சினையை, அழித்து அதனிடத்தில் சோஷலிஸத்தை வைப்பதற்கான தேவையை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கின்றது. லெனின் எழுதினுர்: ''முதலாளித்துவ ஏகாதி

யத்தின் சகாப்தம், சரிந்துவிழப்போகும், சோஷலிஸத்துக்கு இடம் விட்டுக் கொடுக்கும் அளவுக்கு முற்றிப்போன, கனிந்த, அழுகிக் கனித்த முதலாளித்துவ சகாப்தமாகும்.''

முதாளித்துவத்தின் ஏகபோகத்துக்கு முந்திய கட்டத்தை விடவும், ''அதிகவன்முறையான, கட்டுதிட்டமற்ற, நாசத்தன்மைவாய்ந்த, முரண்பாடுமலிந்த'' ஒரு சகாப்தமாக ஏகாதிபத்திய வளர்ச்சியை ஆளும் புதிய விதிகளை, வெளிச்சத்துக்குக் கொணர்ந்து லெனின் சோஷலிஸம் ஆரம்பத்தில் ஒருசில நாடுகளில் அல்லது ஒருநாட்டில் வெற்றியீட்டச் செய்ய முடியுமென்ற முடிவுக்கு வந்தார் அவர் எழுதினுர்: ''முதலாளித்துவ வளர்ச்சி வெவ்வேறு நாடுகளில் சிறிதும் சீரற்ற முறையில் நிகழ்கிறது அல்லாவிட்டால் அது பண்ட உற்பத்தியின் கீழ் இருக்க முடியாது. இதிலிருந்து சோஷலிஸம் எல்லா நாடுகளிலும் ஒரேநேரத்தில் வெற்றிவாகை சூட முடியாது என்பது மறுக்கமுடியாதவாறு வெளியாகின்றது. அது முதலில் ஒரு நாட்டிலோ அல்லது அனேக நாடுகளிலோ வெற்றியீட்டும் அதேவேளை ஏனையவை சில காலத்துக்கு பூர்ஷுவாவாகவோ, அல்லது பூர்ஷுவாவுக்கு முந்திய காலத்தினதாகவோ எஞ்சியிருக்கும். இது எதிர்ப்புத் தன்மையை உண்டாக்கக்கூடியது மட்டுமன்றி, சோஷலிஸ ராஜ்யங்களின் வாகைசூடிய தொழிலாளிவர்க்கத்தை நசுக்குவதற்கு மற்றையநாட்டு பூர்ஷுவா வர்க்கம் நேரடியாகப் பிரயத்தனஞ் செய்யவும் வழிகோலும். இத்தகைய விவகாரத்தில் யுத்தமொன்று எம்மைப் பொறுத்தவரையில் சட்டபூர்வனமானதும், நியாயமானதுமாகும். அது சோஷலிஸத்துக்கான, பூர்ஷுவாவர்க்கத்திடருந்து ஏனைய ராஜ்யங்களை விடுதலை செய்வதற்கான யுத்தமாகும்.

''ஒரு நாட்டில் மட்டுமல்லாது முழுஉலகிலும் நாம் பூர்ஷுவா வர்க்கத்தைத் தூக்கியெறிந்து இறுதியாக வெற்றி கொண்டு பலஹீனம் செய்தபிறகுதான் யுத்தங்கள் சாத்தியமற்றனவாகும். சோஷலிஸ மாற்றத்துக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததான பெரும் போராட்டம் தேவைப்படும் மிகக்கடின பணியான பூர்ஷுவா வர்க்கத்தின் எதிர்ப்பைத் தகர்த்துத் தவிடு பொடியாக்கும் பணியைதவிர்த்து ஒதுங்குவதோ அல்லது மூலாம்பூசிமறைப்பதோ விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் மிகவும் தவறுகும்-சிறிதும் புரட்சித் தன்மையற்றதாகும். ''சமூக'' நபர்களும், சந்தர்ப்பவாதிகளும் வருங்கால சமாதான பூர்வ சோஷலிஸம்பற்றிய கனவுகளை வளர்த்துக் கொள்ள எப்பொழுதுமே தயாராகவுள்ளனர். ஆனுல் அவ்வெழில்மிகு வருங்காலத்தைச் சாதிப்பதற்குத் தேவையான கடுமையான வர்க்கப் போராட்டும் பற்றி யோசித்து சிந்தனை செய்வதற்கு அவர்கள்மறுப்பதொன்றே அவர்களை புரட்சிவாத சமூக-ஜனநாயகவாதிகளிலிருந்து இனம் பிரித்துக் காட்டுகிறது.''

பாட்டாளிவர்க்கப் புரட்சி பெரும்பான்மையான வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒரே நேரத்தில் நிகழ்ந்தால் மாத்திரமே வெற்றியீட்டமுடியுமென்ற முன்னைய மேலோங்கி நின்ற மார்க்ஸிய கண்ணோட்டத்திலிருந்து அடிப்படையில் வித்தியாசப்படும் இம்முடிவை ரஷ்ய அக்டோபர் மகாபுரட்சி ருஜுப்படுத்தியது.

சோஷலிஸம் ஒரு நாட்டில் வெற்றியீட்டமுடியும் என்ற லெனின் போதனை மார்க்ஸியத்தின் வளர்ச்சியில் மிக முக்கியமானதொரு புதிய கட்டமாகும். சோஷலிஸ புரட்சி தூரமான வருங்காலத்தில் உள்ள ஒன்றல்ல என்பதையும், ஒரு அல்லது இன்னொரு முதலாளித்துவ நாட்டில் தேவையான புறவயமான, அகவயமான முன் தேவைகள் உருப் பெற்றதுமே சுரண்டல்காரர்களை தூக்கியெறிவதிலும் ஆட்சியதிகாரத்தைத் தன்கையில் எடுத்துக்கொள்வதிலும் தன்னம்பிக்கையோடு செயல்பட வேண்டுமென்பதையும் அது தொழிலாளி வர்க்கத்துக்குக் காட்டிக் கொடுத்தது. இச் சாத்தியப்பாடு, உலக முதலாளித்துவ அமைப்பின் ஆகவும் வலுவிழந்த கரணையான, சோஷலிஸப் புரட்சியை நடத்துவதற்கு தொழிலாளி வர்க்கம் ஆகவும் தயாராயிருந்த ரஷ்யாவில் முதலில் தோன்றி வெற்றிகரமாகப் பயன்தடுத்திக் கொள்ளப் பட்டதை நினைவில் கொள்ள முடியும்.

முதலாளித்துவ அமைப்பின் ஆகவும் உயர்ந்த கட்டமாக ஏகாதிபத்தியம் என்பது பற்றிய பகுப்பாய்வு லெனினது சோஷலிஸப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் தங்கியுள்ளது.

லெனின் மேற்கொண்ட முதலாளித்துவத்தின் நிகழ்வுப்போக்கு பற்றிய ஆக்கபூர்வ பரிசோதனை மார்க்ஸியக் கொள்கைகளை ஆதரித்துக் காப்பது மட்டுமன்றி மாறிய சூழ்நிலைகளின் தொடர்பில் அவற்றை வளர்ப்பதையும் சாத்திய மாக்கியது. ஏகபோக முதலாளித்துவத்தின்வளர்ச்சியும். பின்னர்ராஜ்யஏகபோகமுதலாளித்துவத்தின் வளர்ச்சியும் சாராம்சத்தில், முதலாளித்துவம் ஒருசமூக அமைப்பா என்று மறுப்பதை லெனினைவிட யாருமே வலுவுடன் வலியுறுத்த வில்லை. அதேவேளை, வளர்ந்துவரும் உற்பத்திச் சமூகமயமாக்கம், ஒழுங்குபடுத்தப்பட்ட உயர்வடிவமாக "முதலாளித்துவத்"தின் பரிணாமம்; இவ்வமைப்பின் புரட்சிவாதச் சீர்திருத்தத்தின் திட்டவட்டமான பிரச்சினையை உடனடி அவசியமாக்கியதை லெனினை விடவும் வேறெவரும் அதிக வலுவுடன் சுட்டிக்காட்டவில்லை. முதலாளித்துவம் முதிர்ச்சியெய்துதல், "சோஷலிஸப் புரட்சியின் அண்மையையும், வசதியையும், சாத்தியப்பாட்டையும், அவசர அவசியத்தையும் நிரூபிக்கும் தர்க்கமாகுமே அல்லாமல் அத்தகையப் புரட்சியை மறுதலிப்பதை, சில சீர்த்திருத்தவாதிகள் சாதிக்க முயல்வதுபோல் முதலாளித்துவத்தை அதிக கவர்ச்சியுடையதாகத் தோற்றச் செய்வதைச் சகித்துக் கொள்வதற்கான தர்க்கமேயல்ல."

# IV

## அக்டோபர் மகா புரட்சி

சிறந்ததொரு வாழ்வுக்கான தேடலாக, தார்மீக சமுதாயமொன்றுக்குப் பாடுபடலாக மனித வரலாற்றைத் தொகுத்துரைக்க முடியும். மனிதர் நீண்ட நெடுங்காலமாக வேதனையுடன் தேடியதுபோன்றதொரு சமூக அமைப்புக்கான தத்துவார்த்த அடித்தளங்களை மார்க்ஸ்—எங்கல்ஸ் இட்டனர். பின்வந்த வருடங்களிலும் தசாப்தங்களிலும், அவர்கள் கருத்துக்கள்—விஞ்ஞான சோஷலிஸம், கம்யூனிஸம் பற்றிய கருத்துகள்—மக்கள் மத்தியில் மென்மேலும் அதிக ஆதரவாளர்களை வென்றெடுத்தது.

ரஷ்யாவில் 20நூற்றுண்டின் தொடக்கத்தில் புரட்சிப் பொங்கல் வளர்ந்தது, அநேக காரணிகளின்—ஜாரிஸத்தின் ஜன விரோதத் தன்மை, ரஷ்ய முதலாளித்துவத்தின் திட்டவட்டமான இயல்பு, மத்தியில் புரட்சி விழிப்பையுண்டுபண்ணுவதற்கான கட்சியின் பிரமாண்டப் பணி ஆகியவற்றின்—செயற்பாடு பலனளித்துக்கொண்டிருந்தன,

ஜாரிடமிருந்து உதவிகிடைக்கும் என்ற நம்பிக்கையில் 1905 ஜனவரி 9ம் திகதி பீட்டர்ஸ்பர்க்கில் இருந்த ஜார் மாளிகை நோக்கி அணிதிரண்டுச் சென்ற சமாதான ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுவீழ்த்தப்பட்டமை உழைக்கும் மக்களின் வலிமை மிகு நடவடிக்கைகளைத் தூண்டி விட்டதோடு ரஷ்யாவில் முதல் புரட்சியின் தொடக்கத்தைக் குறித்தது. அப்புரட்சியின் முதல் வருடம் புயல் மூண்டதாகக் காணப்பட்டது. அக்கால கட்டத்தில். அதற்கு முந்திய நாட்களில் போன்று தொழிலாளர் வேலைநிறுத்தங்கள் போராட்டத்தின் பிரதான வடிவங்களிலொன்றாக விளங்கியது.

இருபது லட்சத்துக்கும் அதிகமான மக்க்ள் பங்குபற்றிய அகில ரஷ்ய அரசியல் வேலைநிறுத்தம் அக்டோபர் 1905ல் ''முடியரசு வீழ்க!'' ''ஜனநாயகக் குடியரசு வாழ்க!'' என்ற சுலோகங்களின் கீழ் நடைபெற்றது.

அப்புரட்சி நாட்களில் தான் உழைக்கும் மக்களின் வெகுஜன அரசியல் ஸ்தாபனங்களான சோவியத்துகள் (சபைகள்) ஏற்பட்டன. பன்னிரண்டு வருடங்களின் பின்னர் அவை சோஷலிஸ ராஜ்யத்தின் அரசியல் அடிப்படையாக, காலப் பரீட்சையில் தேறிய தொழிலாளர் அரசின் வடிவமாக மாறின.

1905 டிஸம்பரிலிருந்து ஜனவரி1906 வரை ரஷ்ய உற்பத்தி நகர்களில் அநேகமானவற்றில் எழுச்சிப் பேரலை பிரவாகித்துப் பாய்ந்தது. டிசெம்பர் 1905 மாஸ்கோவில் அது உச்சகட்டத்தையடைந்தது எனினும் இங்கு தொழிளாளர் எழுச்சி தோல்வி கண்டது. இதற்குப்பின் 1905-07 புரட்சி அடங்கியது. பிற்போக்கினதும் அரக்கத்தனமான அடக்குமுறையினதும் இருண்ட வருடங்கள் தொடர்ந்தன. ஏகாதிபத்தியச் சகாப்தத்தின் முதலாவது மக்கள் புரட்சியிது; முதன் முறையாகப் பொது மக்கள் புரட்சி நடவடிக்கைக்குத் தூண்டப்பட்டனர். தொழிலாளரும், விவசாயிகளும், தமது பொருளாதார அரசியல் நடவடிக்கைக்குத் குந்தகமான நிலப்பிரபுத்துவ ஜாரிஷத்தளைகளை உடைத்தெறிவதற்கான தேவையை உணர்ந்துகொண்ட ரஷ்ய பூர்ஷுவா வர்க்கத்தின் பிரிவொன்றும் புரட்சியில் சம்பந்தப்பட்டிருந்தனர், எனினும் அப் புரட்சியின் முதுகெலும்பும் அமைப்புச் சக்தியும் பாட்டாளி வர்க்கமாகும்.

1905-07 புரட்சி தேசிய ரீதியாகவும், சர்வதேசிய ரீதியாகவும் பெரும் மூக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஜாரின எதேச்சாதிகார அமைப்பில் அது பெரும் விரிசலையுண்டுபண்ணியது. அதன் அனுபவமும் படிப்பினைகளும் மேற்கத்திய நாடுகளது தொழிலாளருக்கு விலைமதிக்க முடியாத ஆஸ்தியாக விளங்கியது. அதுவரை ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கிக்கிடந்ததுபோல் தென்பட்ட கிழக்கு நாடுகளை அது தட்டியெழுப்பியத. 1905ன் பொது ஒத்திகையின்றி 1917ன் அக்டோபர் புரட்சி வெற்றிவாகை சூடியிருக்க முடியாது.

1914 ஆகஸ்ட் 1ல், முதலாவது உலக யுத்தம் வெடித்து மக்களுக்குச் சொல்லொணுக் கஷ்டங்களைக் கொணர்ந்தது. பபக்டரி சொந்தக் காரரும், நில எஜமானரும், தளகர்த்தர்களும், உயர் அதிகாரிகளும் ஏற்கனவே நிரம்பியிருந்த தம் ஜேப்புகளை இன்னும் நிரப்பிக்கொள்வதற்கு, லட்சோப லட்சம் சாதாரண மக்கள், தொழிலாளர், விவசாயிகள் பல்வேறு போர்முனைகளில் உயிரிழந்தனர். அவர்களின் மனைவியரும் குழந்தைகளும் ஜீவனோபாயம் தேடித்தருவோரையிழந்து பட்டினி கிடந்தனர். திடுக்கிடச் செய்யும் இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படல் வேண்டுமென மக்கள் விசனமுற்றதையுணர்ந்த லெனினும் ஏனைய போல்ஷவிக்குகளும், மக்களின் சமாதான ஆவலைப் பகிர்ந்து கொண்டனர்.

நிலையான சமாதானத்தைஉத்தரவாதம் பண்ணி மேலும் யுத்தங்களை சாத்தியமற்றதாக்குவதற்கு. அல்லது அவை ஏற்படுவதற்கான அபாயத்தையாவது குறைப்பதற்கு யுத்தத்துக்கான

காரணிகளையப்படல் வேண்டும்: ஏகாதிபத்தியம் வீழ்த்தப்படல் வேண்டும்.

ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவதற்குப் பொருத்தமான நிலைமைகளை ஏகாதிபத்திய யுத்தம் வழங்கியதென்பதை லெனின் காட்டினார். ஏன்? ஏனெனில் யுத்தம் மக்களின் கஷ்டங்களை மிகவும் மோசமாக அதிகரித்தது: விலைவாசிகளை உயரச் செய்தது; மக்களைப் பட்டினியிலும் வறுமையிலும் வீழ்த்தியது: இவற்றின் மூலம் பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகளில் பாரதூரமானப் பிரச்சினையை உண்டுபண்ணியது. யுத்தம் தொடரும் போது இப்பிரச்சினை மென மேலும் பாரதூரமடைந்து மக்களது புரட்சி வேட்கைக்கு மின்சாரம் பாய்ச்ச உதவும். இப்பிரச்சினையைத் தீர்ப்பது எப்படி? வர்க்க உணர்வுபெற்ற பாட்டாளிகளால் இது பயன்படுத்திக் கொள்ளப்படுவது எப்படி? இக் கேள்விகட்கு லெனின் பதிலளித்தார்.

மக்களை ஆயுதமேந்தச் செய்வது அவசியமென்பதை ஆளும் வர்க்கங்கள் கண்டுகொண்டது. ஒருவரையொருவர் கொல்வதற்காக வேண்டி அவை தொழிலாளர் விவசாயிகள் கையில் துப்பாக்கிகளைக் கொடுத்திருந்தன. எனினும் இத்துப்பாக்கிகள் இன்னொரு திசையில் முதலாளித்துவவாதிகளுக்கெதிராக, நில எஜமானர்களுக்கெதிராக, கலோனியல் வாதிகளுக்கெதிராக, ஏகாதிபத்திய சக்திகளுக்கெதிராகத் திருப்பப்பட முடியும்; திருப்பப்படல்வேண்டும்.

எனவே, லெனின் தமது மிகவும் முக்கியமான யுத்தகால சுலோகத்தை வடித்தெடுத்தார்: ஏகாதிபத்திய யுத்தம் உள்நாட்டு யுத்தமாக மாற்றப்படல்வேண்டும். வேறுவார்த்தைகளில், ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறிவதன் மூலம் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படல் வேண்டும்.

'யுத்தம் இழுபட்டுச் கொண்டு செல்கையில் பல ஐரோப்பிய நாடுகளுக்கு அது பாரதூரமான பொருளாதாரச் சேதங்களையுண்டு பண்ணியது; கடுமையான உணவுத தட்டுப்பாட்டையுண்டு பண்ணி மக்களது வாழ்க்கை நிலையில் பெரும் சீர்கேட்டுக்கு இட்டுச்சென்றது யுத்தத்தினால் பூர்ஷுவா வர்க்கம்சம்பாதித்தபெரும் லாபம் யுத்தத்தின் ஏகாதிபத்திய இயல்பைக் காட்டியது. ராணுவ போலிஸ் கண்காணிப்பையும் தொழில் ராணுவமயப்படுத்தப்பட்டதையும் மீறி யுத்தத்துக்கும் முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கும் எதிரான வெகுஜன ஆர்ப்பாட்ட இயக்கமொன்று போர்சன்னத்த நாடுகளின் உள்நாட்டு முனைகளில் வேகமாகச் செல்வாக்குறத் தொடங்கியது.

யுத்தப் பளுவைத் தாங்கிக் கொள்வதற்கு ஏனையப் போர் புரிந்த நாடுகளை விடவும் குறைந்த பொருளாதார வசதிபடைத்த ஜாரிஸ ரஷ்யா மீது பொருளாதாரத்தினதும், உணவுத்தட்டுப்பாட்டினதும் நெருக்கடி குறிப்பாக மிகவும் கடுமையாகியது.

போர் வீரரது பங்கீடுகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. போர்முனைமோதலின் அவலம் போதாதென்பதுபோல் ரஷ்யப்

போர் வீரர்கள் பட்டினியில் வேறு வாடத்தொடங்கினர். ராணுவ விநியோகங்களில் ஊழல் தலைவிரித்தது. இதுபற்றிய வதந்திகள் மேலும் பரவ போர்வீரர் மத்தியில் அதிருப்தி அதிகரித்தது.

அதேவேளை வீடுகளில் பட்டினி கிடந்த பெண்கள் ரொட்டிக் கடைகளை முற்றுகையிட்டனர் யுத்த எதிப்புச் சுலோகங்களை தாங்கிக் கொண்டு வீதிகளில் கண்டன ஊர்வலங்கள் கிளம்பினர்; வேலை நிறுத்தஇயக்கம் சீர்கிரய அரசியல் சாயம்பெற்றது. 1916ல் "இரத்த ஞாயிற்றுக்கிழமை" நினைவு தினத்தின்போது பீட்ரோகிராடில் (ஜெர்மனியுடன் யுத்தத்தின் போது இவ்வாறு மறுபெயர் பூண்ட செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில்) தொழிலாளர் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை ஏற்பாடு செய்து "யுத்தம் ஒழிக!" என்ற சுலோகப் பதாகை உயர்த்திப் பிடித்து புரட்சிக் கீதங்களை இசைத்துக் கொண்டு வீதிகளூடு அணிவகுத்துச் சென்றனர். நாட்டுப் புறங்களில் விவசாயிகளது கொந்தளிப்பு மூண்டது. "1905ன் உணர்விலை் முழு நாட்டுப் புறமும் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றது" என்று உள்விவகார அமைச்சர் ஜாருக்கு எச்சரிக்கை செய்தார். 1916 வேனிலின்போது மத்தியாசியாவினதும் கஸாக்கிஸ்தானினதும் தொழிலாளர்கள் ஜாரிஸ்க் கலோனியல் ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்தனர்.

1905ன் புரட்சிப் பாரம்பர்யத்துக்கு விசுவாசமாக, பீட்ரோகிராட் தொழிலாளர் பிரமாண்ட வேலைநிறுத்தங்களைத் தொடங்கினர். 1917 ஜனவரியில் "இரத்த ஞாயிற்றுக்கிழமை"யின் பன்னிரண்டாவது ஞாபக தினத்தினபோது 150,000 தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் இறங்கினர். மார்ச் 3ம் திகதி நகரின் மிகப்பெரும் பாக்டரிகளில் ஒன்றான புடிலோவ் யந்திர நிலயத்தைச்சேர்ந்ததொழிலாளர்வேலைநிறுத்தஞ்செய்தனர்கதவடைப்புச்செய்யுமாறு நிர்வாகம் கட்டளை பிறப்பித்தது. வீதியில் இறங்கிய தொழிலாளரோடு. ரொட்டி கியூவரிசையில் நின்ற பெண்மணிகளும் சேர்ந்து கொண்டனர். ஏனைய பாக்டரிகளைச் சேர்ந்த தொழிலாளர் அனுதாப வேலைநிறுத்தம் தொடங்கினர்.

மார்ச் 11ல் தலைநகரின் பல்வேறு பகுதிகளில் முழுநாளும் வீதிச்சண்டை இடம்பெற்றது. ஜார் நிக்கலஸ் நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் மொகிலேவுக்கு அருகாமையில் பொது தலைமை பீடத்தில் இருந்தார். டூமாவின் தலைவன் மிஹாயில் ரொத்ஜியான்கே நாட்டின் நம்பிக்கையைப் பெற்ற புதிய அரசாங்க மொன்றை நிறுவுமாறு ஜாருக்கு தந்தி மேல் தந்தி அனுப்பிக் கொண்டிருந்தார். எனினும் சலுகைகள் செய்வதற்கு நிக்கலஸ் விரும்பவில்லை. "தடியன் ரொத்ஜியான்கே எல்லாவித மான குப்பைகளையும் எனக்கு மீண்டும் எழுதிக் கொண்டிருக்கிறான்." ஜார்தன் மனைவிக்கு அறிவித்தார்.

மார்ச் 12 மாலையளவில் பீட்ரோகிராட் கலகக்காரர் கைவசமாய் விட்டது அப்போது ரஷ்யாவில் அமுலிலிருந்த கலண்டர்படி திகதி பெப்ரவரி 27ஆகும். எனவே தலைகரில் வெற்றி சூடிய இரண்டாவது ரஷ்யப்புரட்சி பெப்ரவரிப் புரட்சியென வழங்கப்படுகின்றது.

புரட்சிப்புயல் பீட்ரோகிராட் வீதிகளில் வீசிக்கொண்டிருந்த வேளையில் டூமாவிலிருந்த கிலிபிடித்த பூர்ஷுவா தலைவர்கள் அவசர அவசரமாக தற்காலிகக் குழுவொன்றை அமைத்துக் கொண்டிருந்தனர். அதே தினத்தன்று (மார்ச் 12), பீட்ரோகிராட் தொழிலாளர், போர்வீரர் டெப்பியூட்டிகள் அமைக்கப்பட்டு, அதன் முதல் கூட்டம் நடைபெற்றது. இதை அறிந்ததும் அடுத்த நாள் டூமா குழு அரசாங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்கப் போவதாக அறிவித்தது. சோவியத் தலைவர்கள் மத்தியில் சமாதானம் செய்து கொள்வோர் இம்முடிவை மகிழ்ச்சியோடு அங்கீகரித்தனர். மார்ச் 15ந் திகதி தற்காலிக அரசொன்று அமைக்கப்பட்டது. அதன் மந்திரிசபை அமைச்சர்கள் அநேகமானோர் பூர்ஷுவா கட்சிகளின் உறுப்பினர்களாவர். அதன் ஒரே ''ஜனநாயகவாதி'' சட்டவாதி கெருரனஸ்கி ஆவர். பீட்ரோகிராட் சோவியத்தில் அவர் இடதுசாரிசொற்றொடர்களை வாரிக்கொட்டினார். அவர் நீதியமைச்சரானார்.

அதே தினம் ரெயில்வே தொழிலாளர் பீட்ரோகிராட் சென்று கொண்டிருந்த ஜாரின் ரயில் வண்டியை பாசகோவில் தடுத்து நிறுத்தினர். அந்த இடத்திலேயே ரெயில் வண்டியில் வைத்து முடிதுறக்கும் தஸ்தாவேஜொன்றைக் கைச்சாத்திடுமாறு ஜார் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

ரஷ்யாவில் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு சமரஸம் செய்து கொள்வோர், பூர்ஷுவா வர்க்கத்தை அனுமதித்தபோதிலும், பூர்ஷுவா தற்காலிக அரசு தொழிலாளர் விவசாயிகள் சோவியத்துகளில் உருப்பெற்றிருந்த, புதிய அதிகாரத்தைத் தணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. விசித்திரமான நிலைமையொன்று உருவாகியது. லெனின் ''இதை இரட்டை அதிகாரம்'' எனக் குறிப்பிட்டார்.

மக்களின் நிர்ப்பந்தம் காரணமாக சோவியத்தின் தலைமை அதன் சமரஸம் செய்துகொள்ளும் போக்கைக்கைவிடுமாறு வற்புறுத்தப்பட்டு தற்காலிக அரசாங்கத்தின் அரசியல் போக்குக்கு முரணாக வோடிய நடவடிக்கைகளை நிறைவேற்றியது. எனவே, பீட்ரோகிராட் சோவியத்தின் எடுத்துக் காட்டுப்படி தொழிலாளர் படையொன்று அமைக்கப்பட்டது: மக்கள் நீதிமன்றங்கள் தெரிவு செய்யப்பட்டன; விசேடமாகத் தெரிவு செய்யப்பட்ட ராணுவ வீரர் குழுக்கள், அதிகார உத்தியோகஸ்தர் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்காக, ஒவ்வொரு ராணுவப் பிரிவிலும் உருவாக்கப்பட்டன.

1917 ஏப்ரிலில் லெனின் ரஷ்யாவுக்குத் திரும்பி, எல்லா அதிகாரங்களையும் சமாதானமுறையில் சோவியத்துகளுக்கு மாற்றுவதற்கான விண்ணப்பத்தை உடனடியாக விடுத்தார்: ''தற்காலிக அரசாங்கத்துக்கு ஆதரவு கிடையாது. எல்லா அதிகாரமும் சோவியத்துக்கு!''

லெனின் தலைமையில் போல்ஷவிக்குகள் மக்களுக்கு அறிவூட்டுவதிலும் அவர்களை ஸ்தாபன ரீதியாகத் திரட்டுவதிலும், சமரஸம் செய்துகொள்வோரை அம்பலப்படுத்துவதிலும் சோவியத்தின் நிர்வாக அங்கங்களில் பெரும்பான்மையைப் பெறுவதிலும் சுறுசுறுப்பாய் ஈடுபட்டனர். புரட்சி அதன் பூர்ஷுவா கட்டத்திலிருந்து சோஷலிஸக் கட்டத்துக்கு சமாதான வளர்ச்சியுகுவதே நோக்கமாயிருந்தது.

மக்கள் பூர்ஷுவா அரசாங்கத்தைக் கள்ளமில்லாமல் நம்பினர். புரட்சியின் குறிக்கோளான அவசர அவசியமான பணிகளை அது நிறைவேற்றும், அதாவது அது ஏகாதிபத்திய யுத்தத்துக்கு முடிவுகாணும், விவசாயிகளுக்கு காணி வழங்கும்; எட்டுமணித்தியாள வேலையை புகுத்தும்; தேசிய ஒடுக்குமுறையை ஒழித்துக்கட்டும்; பஞ்சத்தையும், பொருளாதாரச் சீர்கேட்டையும் எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கும் என்றெல்லாம் அவர்கள் எதிர்ப்பார்த்தனர். எனினும் தற்காலிக அரசாங்கம் இவ்வபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு எதுவுமே செய்யவில்லை.

லெனினின் கருத்துக்கள் மென்மேலும் செல்வாக்கு பெறத் தொடங்கின. மக்கள் சமாதானத்துக்காக ஏங்கினர். எனினும், தற்காலிக அரசாங்கமோ ''யுத்தத்தை வெற்றிகரமான முடிவுக்கு இட்டுச் செல்லுதல்'' என்ற சுலோகத்தின் கீழ் ஏகாதிபத்திய யுத்தத்தை தொடர விரும்பியது. ஜூன் மாதம் ரஷ்யப் படைகள் லிவோவ் மீது தோல்வியான தாக்குதலைத் தொடங்கின. செப்டம்பர் மாதம் ரீகா படுதுரோகமான முறையில் ஜர்மனியரிடம் சரணடைந்தது. பூர்ஷுவா அமைச்சர்களது அபக்கியாதியான கொள்கை—சமாதானம், ரொட்டி, சுதந்திரம் ஆகியவற்றுக்கு அவாவுற்ற—தொழிலாளர், விவசாயிகள் மத்தியில் அதிருப்தி பெருகச் செய்தது. எனினும் தற்காலிக அரசாங்கம் மக்களது கோரிக்கைகளைத் திருப்தி செய்வதற்கு முயற்சிகளெதுவும் மேற்கொள்ளவில்லை.

எல்லா அதிகாரமும் சோவியத்துக்களின் கைக்கு மாறவேண்டுமெனக் குரலெழுப்பிய தொழிலாளர்களும், ராணுவ வீரர்களும் ஜூலை 1917ல் பீட்ரோகிராடு வீதிகளில் கூட்டங் கூட்டமாகக் கிளம்பினர். தற்காலிக அரசாங்கத்தின் கட்டளைகளின்படி புரட்சி எதிர்ப்புப் படைகள் சமாதானமாக நிகழ்ந்த கண்டன ஊர்வலங்கள்மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தன. இணக்கக் காரர்களது ஆதரவுடன் பூர்ஷுவாக்கள் பூரண அதிகாரஞ் செலுத்தத் தொடங்கினர். கெரென்ஸ்கி பிரதமரானார். போல்ஷுவிக்குகள்மீது அடக்குமுறைகள் தூண்டிவிடப்பட்டன. உயிராபத்து ஏற்படவே லெனின் தலைநகருக்கு வெளியே ரஷ்லிவ் ஏரிக்கு அருகாமையில் பாழடைந்த இடமொன்றில் பதுங்குமாறு நிர்பந்திக்கப்பட்டார்.

புரட்சியின் சமாதானக் கட்டம் முடிவுற்றது. இரகசியமாகக் கூடிய ஆறுவது போல்ஷுவிக்குக் காங்கிரஸ், தொழிலாளி வர்க்கம் விவசாயிகளது உதவியுடன் ஆயுதக் கிளர்ச்சி மூலம் பூர்ஷுவா சர்வாதிக்காரத்தைத் தூக்கியெறிந்துவிட்டு பலவந்தமாக அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென அறைகூவல் விடுத்தது. சோஷலிஸப் புரட்சிக்கான அறைகூவல் இது.

அக்டோபர் 25-26 இரவின்போது, பொழுது புலர்வதற்கு வெகு முன்பாகவே போல்ஷுவிக்குக் கட்சியால் தலைமை தாங்கப்பட்ட தொழிலாளர்கள், போர்வீரர்கள், மாலுமிகள் ரஷ்ய சக்கரவர்த்திகளின் முன்னாள் வசிப்பிடமான பீட்ரோகிராடில் உள்ள பனிக்கால மாளிகையை முற்றுகையிட்டுப் பிடித்துக் கொண்டனர்.

அதன் ஒரு பகுதியில் அடைக்கலம் தேடிப் பதுங்கியிருந்த் தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினர்களைக் கைது செய்தனர்.

மூன்று மணித்தியாளங்களின் பின், தொழிலாளர், போர்வீரர், விவசாயிகள் டெப்பியூட்டுகளது சோவியத்துகளின் இரண்டபவது அகில ரஷ்ய காங்கிரஸ், அரச அதிகாரய் மக்கள் கைக்கு மாறி விட்டதென்றும்; மற்றெந்த வர்க்கத்தை விடவும் நிர்கதியான, சுரண்டப்படும் வர்க்கமான. மிகவும் புரட்சிகரமான மிகச் சிறந்த ஒழுங்கமைப்புக்கொண்ட தொழிலாளி வர்க்கம் அரசாங்கத்தின் தலைமைப்பீடத்தில் அமர்ந்துவிட்டதென்றும் பிரகடனஞ் செய்தது.

யுத்தத்திலிருந்து ரஷ்யாவை மீட்பதும், நிலத்தை விவசாயிகள் கைக்கு மாற்றுவதுமே சோவியத் அரசு எதிர்நோக்கிய மிக அவசரமான பிரச்சினைகள்.

சோஷலிஸப் புரட்சியின் முதல் தினமான அக்டோபர் 25(நவம்பர் 7ம்) திகதியே சோவியத்துக்களின் இரண்டாவது அகில ரஷ்ய காங்கிரஸ் சமாதானம் மீதான சட்டத்தை நிறைவேற்றியது. மற்ற நாடுகளது எல்லைகளைக் கைப்பற்றுவதை விட்டுவிடல், கப்பம் வாங்குவதைக் கைவிடல் என்பவற்றின் அடிப்படையில் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு போர்ச்சன்னத்தங் கொண்ட சகல நாட்டு அரசாங்கங்களுக்கும் அது அறைகூவல் விடுத்தது. இரகசிய இராஜதந்திரத்தை அது ஒழித்துக்கட்டியதோடு, ஜாரிஸ்ட்டு அரசாங்கத்தாலும், தற்காலிக அரசாங்கத்தாலும் கைச்சாத்திடப்பட்ட இரகசிய ஒப்பந்தங்களையும் ரத்து செய்தது.

இச் சட்டம் புதுவகையானதொரு சர்வதேச உறவுகளுக்கு வழிசமைத்தது.

சோவியத்துகளது காங்கிரஸ் நிறைவேற்றிய அடுத்த சட்டம் நிலம் சம்பந்தமானது. இதன்படி, நஷ்டஈடின்றி நிலம் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டு பிரதேச நிலக்கமிட்டிகளின் பொறுப்பிலும், விவசாய டெப்பியூட்டிகளது மாவட்ட சோவியத்துக்களின் பொறுப்பிலும் விடப்பட்டது இச்சட்டம் "நிலத்தின்மீது விவசாயியின் உரிமை"யை உட்படுத்தியிருந்தது. "நிலத்தின்மீது தனிநபர் உரிமை என்றென்றைக்குமாக ஒழித்துக் கட்டப்படும்" என இது நிபந்தனை விதித்தது நிலத்தை வாங்கவோ, விற்கவோ முடியாது என்றும் உழைக்கும் மக்களின் உபயோகத்துக்காக அது பாதுகாக்கப்படுமென்றும் நிபந்தனை விதித்தது விவசாயிகளைத் தொழிலாளர் வர்க்கத்தின் பக்கம் வென்றெடுக்கவும், அவர்களுக்கிடையே நேசத்தை வலுப்படுத்தவும் நிலத்தின் மீதான சட்டம் பெரும் பலவளித்தது. லெனினுல் தலைமை தாங்கப்பட்ட தொழிலாளர் விவசாயிகள் அரசின்—மக்கள் கமிஸார்களது சவுன்சிலின்—ஸ்தாபித்ததோடு காங்கிரஸ் கூட்டங்கள் முடிவுற்றன.

நாட்டைப் புத்தம் புதியதாய் நிர்மாணிப்பதே புதிய அரசின் பிரதான நோக்காயிருந்தது. புதியதொரு பொருளாதார அமைப்பு உருவாக்கப்பட்டது. மக்களுக்கும் நவ சமுதாயத்துக்குமிடையே

புதிய உறவுகள் உண்டாயின. பட்டங்களும் அந்தஸ்து வேறுபாடுகளும் கொண்ட அதிகாரக் குழு முறை புரட்சிவாத சமத்துவத்துக்கு இடம் விட்டகன்றது. நாட்டின் சகல குடியிருப்பாளரும் ரஷ்யக் குடியரசின் பிரஜைகளென விசேட சட்டமொன்றினுல் பிரகடனஞ் செய்யப்பட்டது.

முன்னர் ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னைய ரஷ்ய சாம்ராஜ்யத்தின் ஏனைய மக்கள் தொகையினருடன் சமத்துவமாக உரிமைகள் வழங்கப்பட்டனர்.

ரஷ்யாவின் முன்னர் ஒடுக்கப்பட்ட மக்களது சமத்துவத்தை சட்டபூர்வகாக உறுதிப்படுத்திய சோவியத் அரசினதும், போல்ஷிவிக்குக் கட்சியினதும் தேசிய இனங்கள் சம்பந்தமான கொள்கையின் மிக முக்கியமான தஸ்தாவேஜு 1918ல் நிறைவேறிய ரஷ்ய மக்கள் உரிமைகள் பிரகடனமாகும். (அனுபந்தம் பார்க்கவும்). ஜாரிஸக் கொடுங்கோலாட்சியாலும், தற்காலிக அரசாங்கத்தாலும் கடைப்பிடிக்கப்பட்ட, குரோதத்தையும் பிளவையும் உண்டுபண்ணும் கொள்கைக்குப் பதிலாக புதியதொரு கொள்கையை—ரஷ்ய மக்களது மனம் விரும்பிய உண்மையான உறவுகளின் கொள்கையை அவர்கள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையையும் நட்புறவையும் தூண்டும் கொள்கையை —அது பிரகடனப் படுத்தியது அப்பிரகடனத்தில் சோவியத் ரஷ்ய அரசு பின்வரும் கொள்கைகளை அதன் தேசிய இனங்கள் கொள்கையின் அடிப்படைகளாப் பிரசித்தஞ் செய்தது: ரஷ்ய மக்களது சமத்துவமும் இறைமையும்; பிரிந்து சுதந்திரமான அரசை அமைக்கும் உரிமை உட்பட ரஷ்ய மக்களது சுயநிர்ணய உரிமை; சகல தேசிய, தேசிய மதச் சலுகைகளையும் கட்டிப்பாடுகளையும் ஒழித்துக்கட்டுதல்; ரஷ்ய எல்லையில் வதியும் தேசிய சிறுபான்மை இனங்களதும், இனக்குழுக்களதும் சுதந்திரமான முன்னேற்றம்.

கம்யூனிஸ்ட் கட்சி தேசிய ஒடுக்குமுறையினதும், பலவந்தத்தினதும் கொள்கையின் நிராகரிப்பைப் பிரகடனஞ் செய்தது மட்டுமல்ல; முன்னர் ஒடுக்கப்பட்டிருந்த தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களுக்கு, நிர்வாகம், தேசிய அரசை நிர்மாணித்தல் சம்பந்தமான பிரச்னைகள்மீது சுதந்திரமாகத் திர்மானிக்கும் உரிமையை அவர்கள் வழங்கினர்.

மற்றும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் காணப்பட்டன. அரசிலிருந்து மதபீடம் பிரிக்கப்பட்டத. மதபீடத்திலிருந்து பாடசாலை வேருக்கப்பட்டது. நீண்டகாலமாக அடிமைப்பட்டுக்கிடந்த பெண்கள் ஆண்களோடு சரிநிகர்சமான உரிமைப் பெற்றனர்.

யுத்தத்தால் எற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவுக்கு முகங்கொடுக்க நேர்ந்த நிலையில் தொழிலாளர்களது வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக சோவியத் அரசு தன்னாலியன்றதைச் செய்தது. நாளொன்றுக்கு 8 மணி நேர வேலையை உலகிலேயே முதன் முதல் அறிமுகப்படுத்திய நாடு சோவியத் ரஷ்யாவாகும் சமூகப் பாதுகாப்பு. பெண்களுக்கும் இளைஞருக்கும் தொழில் பாதுகாப்பு, இன்னபிற சட்டங்களும் நிறைவேறின

கல்வி மக்கள் கமிஸாரியத் (அமைச்சு) நாடுமுழுவதற்குமான விண்ணப்பமொன்றில், படிப்பறிவின்மை நீக்குதல் பிரதான சமூகப் பணியென்றும், ஒவ்வொரு பிரஜையினதும் கடமையென்றும் அறிவித்தது. பொருத்தமான நடைமுறை நடவடிக்கைகளுடன் சேர்ந்து இவ்விண்ணப்பம் நாட்டிலே உண்மையான கலாச்சாரப் புரட்சிக்கு அடித்தளமமைத்தது. கலாச்சார மதிப்பீடுகளை அனுபவிப்பது சம்பந்தமான சகல வர்க்கச் சலுகைகளும் நீக்கப்பட்டன. பாடசாலைகள், உயர்கல்வி ஸ்தாபனங்கள், நூதனகாட்சிசாலைகள், நூல்நிலையங்கள் யாவும் தொழிலாளர்களுக்காகக் கதவுகளைத் திறந்துவிட்டன. ஒரு தொழிலாளியோ அல்லது விவசாயியோ வகுப்பறைக் கரும்பலகையில், ''நாம் அடிமைகள் அல்லோம்; இனிமேல் அடிமைகளாயிரோம்,'' என்று எழுதும்போது அவன் உண்மையிலே அறியாமைக்கு மட்டுமல்லாமல் அரசியல் அறியாமைக்கும் ஒரு கும்பிடுபோட்டான்.

நவ சமுதாயமொன்றை நிர்மாணிப்பதற்கு தேவையான அறிவை உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த சகல ஆண் பெண்களுக்கும் வழங்குவதே அப்போதையப் பணியாக விளங்கியது. சமூக—அரசியல் புரட்சியைத் தர்க்க ரீதியாகத் தொடர்ந்த கலாச்சாரப் புரட்சி புதியதொரு வாழ்க்கை முறைக்கு, ஒழுக்க நெறிகளுக்கு உழைப்பின் மீதும், சகமனிதன் மீதும் சமூகத்தின் மீதும் புதிய நாகரீகமொன்றே உருவாகியது.

உட்டோப்பியாவாதிகளும் (கற்பனு உலகவாதிகள்) ஆரம்பகால சோஷலிஸ்ட்களும் கனவு கண்ட சமுதாயம் விஞ்ஞானக் கம்யூனிஸத்தின் மூலவர்கள் பொதுவான வார்த்தைகளில் எழுதி வாணித்த—லெனின் ஸ்தூலமாக வர்ணித்த—அந்தச் சமுதாயம் மனித ஜாதியின் வரலாற்றிலேயே முதன் முறையாக, உறுதியாக, பிரமாண்டமான அளவில் நிறுவப்பட்டது.

# V

# ஆசிய மக்கள் மீது அக்டோபர் புரட்சி ஏற்படுத்திய தாக்கம்.

அக்டோபர் புரட்சி மனித இன வரலாற்றிலேயே புதியதோர் சகாப்தத்தை, சோஷலிஸ சகாப்தத்தை மலரச் செய்தது. கலோனியல் ஒடுக்குமுறையிலிருந்து சகல மக்களதும் விடுதலையின் சகாப்தத்தை அது தோற்றுவித்ததோடு வெற்றிவாகை சூடிய தேசிய விடுதலைப் புரட்சிகளுக்கு வழிசமைத்தது. குழுவாழ்க்கையிலிருந்து, மானிய முறைச் சமூகத்திலிருந்து, கலோனியல் வாதத்திலிருந்து, ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை விமோசனம் பெறுவதற்கான போராட்டத்தில் குதிக்கையில் அக்டோபர் புரட்சி ஆசிய மக்களுக்கு உந்து சக்தியாய் அமைந்தது.

லட்சோப லட்சக்கணக்கான ஆசிய மக்கள் வரலாற்று அரங்கில் முன்னணிக்கு வருவர் என லெனின் தமது இறுதிநாள் வரை அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். ''ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்ட, விழிப்புற்ற மக்கள் இறுதியாக தூண்டப்பட்டு, அவர்களது விடுதலை விமோசனத்துக்காகத் தீர்க்கமான நீண்ட கடுமையான போராட்டம் தொடங்கும் உலக வரலாற்றின் நாளைய தினமாகும்'' என அவர் 1922ல் எழுதினர்.

ரஷ்யப் புரட்சியின் சேதி முதன் முதலாகச் சீனவை அடைந்தபோது, சன் யாட் சென்னும் அவரது புரட்சிவாத ஜனநாயகக் கூட்டத்தினரும் படுஏமாற்ற நிலையை அனுபவித்துக் கொண்டிருந்தனர். சீனவின் தேசிய மறுமலர்ச்சிக்காக அவர்கள் மீண்டும் மீண்டும் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்று, சீன ராணுவ நிலப்பிரபுத்துவப் பகுதிகளாகப் பிளவுண்டு போகும் பேராபாயம் அச்சுறுத்திக் கொண்டிருந்தது. சன் யாட்சென்னும் அவரது கோமிங்டாங் கோஷ்டியும் நாட்டை ஐக்கியப்படுத்தி, தேசிய விடுதலையை வென்றெடுத்து, பொருளாதார முன்னேற்றத்துக்கான நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்குச் சரியான வழியைத் தேடிக்கொண்டிருந்தனர்.

அக்டோபர் புரட்சி அவருக்கு மகிழ்ச்சியளித்தது. போராட்டத்தைத் தொடர்வதற்கான தீர்மானத்தை அவர் உறுதிப்படுத்திக் கொண்டார். ''ரஷ்யப் புரட்சியின் வெற்றி மனித இனத்துக்குப் புதிய நம்பிக்கையைக் கொணர்ந்துள்ளது'' என்றார்—அவர் ரஷ்யப் புரட்சியின் வெற்றிக்கான காரணங்களைப் புரிந்து கொள்ளவும் அவர்களது அனுபவத்திலிருந்து முடிந்த அளவு பயன்தரும் அறிவைப் பெறவும் அவர் முயன்றார். அந்த அனுபவத்தை—லெனினிஸக் கோட்பாட்டையும் நடைமுறையையும்—படித்தறியும்போது சிக்கலான முரண்பாடான முறையில், நீடித்துத் தங்கிநின்ற தமது சொந்தக் கருத்துக்களைப் புனர்மதிப்பீடு செய்யத்தலைப்பட்டார். அக்காலை அவர் பக்குவ முதிர்ச்சிபெற்ற ஒரு சிந்தனையாளராகவும், அரசியல்வாதியாகவும் ஏலவே மாறியிருந்தார். தனது நாட்டின் மேலும் அபிவிருத்தி குறித்தும், தனது சமூக லட்சிய நோக்குகள் குறித்தும் அவரது கோட்பாடு தெளிவுபெற்றது.

லெனினோடும், ரஷ்யப் புரட்சியின் ஏனைய தலைவர்களோடும் சன் யாட் சென் தொடர்பு கொள்ளத் தொடங்கினார். வெளிவிவகாரங்களது மக்கள் கமிஸார் ஜி. வி. சிசேரினுக்கு 1921ல் எழுதிய கடிதமொன்றில் சன் யாட் சென் கூறுகிறார், ''உங்களை நான் நேரில் சந்திக்க விரும்புகிறேன். உங்களையும் மாஸ்கோவில் உள்ள எனது மற்றைய நண்பர்களையும் சந்திக்க விரும்புகிறேன். உங்களது விவகாரங்களில் நான் மிகுந்த அக்கறை காட்டுகிறேன். குறிப்பாக, உங்களது சோவியத், உங்களது ராணுவம், கல்வி—இவற்றின் நிர்வாகங்கள் குறித்து அக்கறை காட்டுகிறேன். மாஸ்கோ செய்துள்ளது போன்று, சீனக்குடியரசு சொன்றுக்கான அடித்தளத்தை, வருங்கால உழைக்கும் மக்களான இளம் சந்ததியினரின் மனதில் ஆழப்பதிக்க விரும்புகிறேன். உங்களுக்கும், லெனினுக்கும், மனித இனத்தின் விடுதலைக்காக அளப்பரிய சேவையாற்றியுள்ள மற்றும் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.''

வியத்நாமிய மக்களது மகத்தான வெற்றிகளுக்கு லெனினும், அக்டோபர் புரட்சியும் உந்து சக்தியாகவும், வழிகாட்டியாகவும் அமைந்ததை இனம் காணமுடிகிறது. வியத்நாமிய கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் குழு செயலாளர் நாயகம் லே டுவான் அக்டோபர் புரட்சிபற்றிய தனது கட்டுரையில் இவ்வாறு எழுதுகிறார்:

''முழு மனிதகுலத்தினதும் திரும்பு முனையான அக்டோபர் புரட்சி உழைக்கும் வர்க்கத்தை, அது இன்று வகிக்கும் மத்திய ஸ்தானத்தில் அமர்த்தியது மட்டுமல்லாமல் உழைக்கும் மக்களையும், ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட நாடுகளையும் விழித்தெழச் செய்தது. வர்க்க விடுதலைக்காக, தேசிய விடுதலைக்காக, சுதந்திரத்துக்காக, மனித கௌரவத்திற்காக, தாமே தமது விதியின் எஜமானர்களாக விளங்கும் உரிமைக்காகப் போராடுவதற்கு அவர்கள் ஆர்த்தெழுந்தனர்.

''வியத்நாம் இந்நாடுகளில் ஒன்ருக விளங்கியது. அப்போது அது ஏகாதிபத்தியத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் அடிமைப் பட்டுக் கிடந்தது. வியத்நாமின் தேசிய விமோசனத்துக்கான இயக்கம் அரசியல் ஆற்றுப்படுத்துதலுக்கான பிரச்சினையை எதிர் நோக்கியது. வழிதெரியாதவாறு இருள் மண்டிக்கிடந்தது. அப்போது தான் அக்டோபர் புரட்சியின் எதிரொலி இடிமுழக்க மாகக் கிளம்பியது. குமுறிக்கொண்டிருந்த இந்நாட்டுக்கு அக்டோபர் காற்று மிகவும் புரட்சிகரமான மார்க்சிஸ—லெனி னிஸ சித்தாந்தத்தைச் சுமந்துவந்தது. அங்கு அது தொழிலா ளர் இயக்கத்தோடும் இரண்டறக் கலந்தது. இது வியத்நாம் கம்யூனிஸ்ட்கட்சி உதயமாகச் செய்தது. 1930-1931ல் தொழி லாளர் விவசாயிகளது மாபெரும் புரட்சிக் கனலுக்குத் தூபம் வார்த்து, அதன்மூலம் வியத்நாம் தேசத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கியமான திரும்புமுனையை ஏற்படுத் தியது''

''ஒருவரது நாட்டைக் காப்பாற்றுவதற்கும், ஒருவரது தேசத்தை விடுதலை செய்வதற்கும் தொழிலாளி வர்க்கப் புரட்சி யைத் தவிர வேறுவழி கிடையாது'' அத்துடன் ''சோஷலித்தாலும் கம்யூனிஸத்தாலும் மட்டுமே உலகெங்கிலுமுள்ள ஒடுக்கப்பட்ட நாடுகளையும், உழைக்கும் மக்களையும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க முடியும்'' என்ருர் தோழர் ஹோஷிமின். இவ்வுண்மை யைக் கண்டுகொண்ட முதலாவது வியத்நாமியர் அவர்.

''உலகப் புரட்சிக்கான பங்களிப்பாக கலோனியல் பிரச்னைக்கு சரியான தீர்வு காணவேண்டியதன் முழு முக்கியத்துவத்தை உணர்ந்த, வலியுறுத்திய முதல்மனிதர் லெனினேயாவார்......... கலோனியல் மக்களை புரட்சி இயக்கத்துக்குள் இழுத்தெடுக்க வேண்டியதன் முழுமுக்கியத்துவத்தை உணர்ந்து கணிப்பிட்ட முதல் மனிதர் லெனினேயாவார்...... காலனியலில் வெற்றிகர மாகப் பணியாற்றுதற்கு, அந்நாடுகளில் செல்வாக்கு பெற்றுவந்த தேசிய விடுதலை இயக்கத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள அறிந்திருப்பது அவசியமென்பதை லெனின் தன்னோடு உடன்பிறந்த தெளிந்த திருஷ்டியின் மூலம் உணர்ந்தார். இவ் வியக்கத்துக்கு உலகத் தொழிலாளி வர்க்க ஆதரவுடன், சோஷ லிஸப் புரட்சிக்கானப் போராட்டத்தில் நாம் புதிய வலுவான நண்பர்களைப் பெறுவோமென அவர் உணர்ந்தார்''. என்று ஹோ ஷி மின் சுட்டிக்காட்டியுள்ளார். ஜாரிஸ் அடக்குமுறை ஆட்சியை ஒழித்துக்கட்டிய ரஷ்யப் புரட்சி இலங் யின் தீவிர சிந்தனை படைத்த மக்கள் பகுதியினரிடையே பெரி தும் பரபரப்பை உண்டுபண்ணியது.

''யங் லங்கா''லீக் முன்னணி உறுப்பினர்களில் ஒருவரான வலன்டைன் எஸ். பெரேரா ஜூலை 1918ல் ''வருங்காலம் பற்றியதொரு திருஷ்டாந்தம்'' என்ற கட்டுரையில் ''மக்களுக்கு மக்களால் மக்களது அரசாங்கமொன்றின் உண்மையான ஸ்திரத்தன்மையை ரஷ்யர்கள் நிறுவியுள்ளமையால் ரஷ்யா பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கும்,'' என்று குறிப்பிட்டார்.

லெனின் தலைமை தாங்கிய அக்டோபர் புரட்சி 1917ல் ஈட்டிய வெற்றி இலங்கை சுதந்திர இயக்கத்துக்குப் புதிய நிலைமைகளை உருவாக்கியதை முன்னோடித் தேசியத் தலைவர்களான சர். பொன்னம்பலம் அருணாசலம் போன்றோர் ஏற்றுக் கொண்டுள்ளனர் அக்காலை பிரிட்டிஷ் கலோனியல் வாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்த ஆங்கிலப் பத்திரிகைகள் இதற்காக அவரைக் கிண்டல் செய்தன. ''போல்ஷவிலிஸத்துக்குள் இழுபட்டுச் செல்கிறார்.'' என்று வர்ணித்தன. ''நாம் நல்ல துணைவர்களைப் பெற்றுள்ளோம்'' என்பதுதான் சர். பொன்னம்பலம் அருணாசலத்தின் பதில்.

இலங்கையில் தொழிற்சங்க இயக்கத்தின் ஸ்தாபகரும் 1922ல் இருந்து ஒரு தசாப்த காலம் நகர்ப்புற தொழிலாளி வர்க்கத்தின் காவலராகத் திகழ்ந்த எ.ஈ. குணசிங்கா லெனினாலும், ரிதிகைாபர் புரட்சியாலும் பெரிதும் ஆகர்ஷிக்கப் பட்டவராவார். ''கம்கரு ஹண்ட'' (தொழிலாளர் குரல்) என்ற தந்து வாரப்பத்திரிகையில் லெனின் பற்றியும் அவரது சாதனைகள் பற்றியும் அனேகம் கட்டுரைகள் வரைந்தார். 1925ல் இப்பத்திரிகையில் அவர் பின்வருமாறு எழுதினார்.

''நிக்கோலாய் லெனின், ரஷ்ய எகாதிபத்தியத்திடமிருந்து மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்த மாபெரும் வீரராவார். 1917ல் போல்ஷவிஸத்தின் அடிப்படையில் ரஷ்யக் குடியரசை, புதியதொரு அரசாங்கத்தை தீர்க்கத் திறனுடன் நிறுவிய மிகவும் அற்புதமான மனிதர் அவர். தாம் மேற்கொண்ட பிரமாண்டமான பணிகளில் அவர் வெற்றியீட்டினார்.'' 1930க்களின் ஆரம்பத்தில் குணசிங்கா லமது முன்னைய புரட்சி உணர்வுகளைக் குடியோடவிட்டு சீர்த்திருத்தவாத பிரிட்டிஷ் தொழிற்சங்க காங்கிரஸினதும் ராம்ஸே மக்டோனல்டு போன்ற அதன் தலைவர்களினதும் செல்வாக்குட்பட்டோர். தொழிலாளர் இயக்கத்தலைமைஅதன் பின்னர் மார்க்ஸிய- லெனினிஸக் கடசிகளான லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட கட்சி ஆகியவற்றின் கைக்கு மாறியது.

இந்தியாவில், வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூர், உருதுக் கவிஞர் முஹம்மத் இக்பால், மலையாளக் கவிஞர் வள்ளத்தோல், தமிழ்க்கவி சுப்பிரமணியப் பாரதி மற்றும் பலரும் சோவியத் ரஷ்யாவின் புரட்சிகர மாறுதல்களுக்கு வாழ்த்துப் பாடினர். இந்தியாவின் அப்போதைய தலைவர்கள் அக்டோபர் புரட்சியில்

முக்கியத்துவதை வெகு உயர்வாக மதித்தனர்: "இந்திய தரிசனம்" என்ற நூலில் ஜவஹர்லால் நேரு எழுதினார்; "சோவியத் புரட்சி மனித சமுதாயத்தைப் பெருந்தாவலாக முன்னேறச் செய்துள்ளது என்பதிலும், அணைக்கமுடியாத கனலை மூட்டிவைத்துள்ளது என்பதிலும் உலகம் முன்னேறிச் சென்றடைய வேண்டிய புதிய நாகரீக மொன்றுக்கான அத்திவாரத்தை இட்டுள்ளது என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை."

ரவீந்திரநாத் தாகூர் இப்புதிய நாகரீகத்தின் அபிமானியாக மாறியதுடன் தன் சொந்த நாட்டின் நிலைமைகளிலிருந்து இதை வேறுபடுத்திக் கண்டார். மரணப்படுக்கையிலிருந்து அவர் விடுத்த கடைசிச் செய்தியில் "பிணியையும், படிப்பறிவின்மையையும் எதிர்த்துப் போராடும் முயற்சியிலும், அறியாமையையும், வறுமையையும் இல்லாதொழிப்பதில் வெற்றி காண்பதிலும், பாரிய கண்டத்திலிருந்து இவ்வவமானத்தைத் துடைத்தெறிவதிலும் ரஷ்யாவின் இம்மியும் குறையாத சக்தி" பற்றி அவர் குறிப்பிட்டார்: "அதன் நாகரீகம் வகுப்புகளுக்கிடையே, பிரிவுகளுக்கிடையே பகைமையை வளர்க்கும் பாகுபாடுகளிலிருந்து விடுதலை பெற்றது. அதன் துரிதமான வியத்தகு வளர்ச்சி என்னை மகிழ்ச்சியிலாழ்த்துகிறது. அதே வேளை பொறாமையடையச் செய்கிறது. பிரிதோரிடத்தில், சில வருடங்களுக்கு முன்பு வரை வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலிருந்த சுமார் 200 தேசிய இனங்கள் சமாதானத்தோடும் சந்துஷ்டியோடும் முன்னேற்றப் பாதையில் பீடுநடைபோடுவதையும், அதேவேளை எனது நாட்டில் மிக உயர்ந்த நிலையடைந்த அறிவு ஜீவிகள் கூட காட்டுமிராண்டித்தனமான பிளவுப் பிணக்குகளில் பிசணியுறுவதையும் நான் காண்கையில் இரண்டு வகையான அரசு முறைகளையும் வேறுபடுத்திப் பார்க்காமல் இருக்க என்னால் முடியவில்லை. ஒன்று ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டது. மற்றது சுரண்டலை அடிப்படையாகக் கொண்டது இச்சுரண்டலே முரண்பாடான நிலைமைகளுக்குக் காரணம்."

இனங்களின் சுயநிர்ணய உரிமையை தனது பதாகையில் பொறித்துள்ள அக்டோபர் புரட்சி, ஜாரிஸ்ட் சாம்ராஜ்யத்திலிருந்து ஒடுக்கப்பட்ட இனங்களை விடுவிடுப்பதன் மூலம் இக்கொள்கைக்கு வலுவூட்டிய அக்டோபர் புரட்சி இந்திய நிலைமையின் மீது பிரமாண்டமான தாக்கத்தை உண்டுபண்ணியது. இந்தியாவின் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் மீது 1918ல் வெளியிடப்பட்ட மொண்டேகு—கெல்ம்ஸ்போர்டு அறிக்கை தெளிவாக ஒப்புக்கொள்கின்றது:

"ரஷ்யப் புரட்சி கொடுங்கோன்மையின் மீதான வெற்றியாக இந்தியாவில் கருதப்படுகின்றது. இந்திய அரசியல் அபிலாஷைகளுக்கு அது வேகம் வழங்கியுள்ளது.

"யுத்தத்துக்குப் பின் ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கிலும் பல்வேறு முனைகளிலிருந்து திரும்புகின்ற போர்வீரர்கள் மூலமாக, கிராமங்களிலுள்ள மக்கள் தூரதேசமான ரஷ்யாவில் நிகழும்

சம்பவங்கள் பற்றி கேள்விப்படுகின்றனர். வடஇந்தியக் கிராமங்களை, குறிப்பாக இந்திய ராணுவத்தின் பெரும் பகுதியினர் சேர்க்கப்பட்ட பஞ்சாப்பைப் பொறுத்தமட்டில் இது உண்மையாகும்.''

வாஸ்தவத்தில், யுத்தத்துக்குப் பிந்திய சுதந்திர இயக்கக் கிளர்ச்சி பஞ்சாபில் தொடங்கி பின்னர் நாடுமுழுவதற்கும் பரவியதன் மிக முக்கிய காரணம் இதுவேயாகும்.

பின்னர், மகாத்மா காந்தி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்துக்குப் பின், 1919ல் அமிர்தஸரஸில் உள்ள ஜல்லியன் வாலாபாக் படுகொலை, பஞ்சாப் மார்ஷல் சட்டம் ஆகியவற்றால் விழிப்புற்ற இந்திய இடதுசாரிகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் சரியான தந்திரோபாயத்தை தேடி அக்டோபர் புரட்சியின்பால் திரும்பினர். அக்டோபர்புரட்சியின் கருத்துக்கள் இந்தியத் தேசிய விடுதலை இயக்கத்தின் தொடங்கின. தற்மீது மிகவும் நேரடியான தெளிவான செல்வாக்கு செலுத்தத் செயலாக, பிரசித்தமான மீரத் சதிவழக்கில்1929) லெனினின்) சிருஷ்டிகள், ரஷ்யப் புரட்சியின் மீது அவர் எழுதியது உட்பட, இந்தியாவின் ''சட்டபூர்வமான'' அரசைக்கவிழ்க்கும் சதிக் குற்றத்தில் ''குற்றஞ் சாட்டப்பட்டவர்கள்'' குற்றவாளிகள் என ''நிரூபிப்பதற்கு'' ஆதாரங்களாகக் காட்டப்பட்டன.

அக்டோபர் புரட்சியின் பிரமாண்டமான செல்வாக்கு தூர நாடான இந்தோனேஷியாவின் மீது படிந்தது. இந்தோனேஷியக் குடியரசு ஜனாதிபதி டாக்டர் சுகர்னோ அவதானித்ததுபோன்று, ''ரஷ்ய அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர், கொள்ளைக்காரர்களது ஒடுக்குமுறையை எதிர்த்து, தேசிய விடுதலைக்காக ஆசிய மக்கள் நடத்திய போராட்டம் புதிதாகக்கனன்றெழுந்தது. இப்போராட்டம் மிகவும் நெறிப்படுத்தப்பட்டதாகவும் அதன் குறிக்கோள் தெளிவானதாகவும் விட்டுக்கொடாததாகவும், பெயரிட்டுச் செல்வதாயின் உடனடியான சுதந்திரமாகவும் காணப்பட்டது.''

தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி, அக்டோபர் புரட்சி உலகின் ஒடுக்கப்பட்ட நாடுகள் மீது எவ்வளவு ஆழமாகச் செல்வாக்கு செலுத்தியது என்பதைக் காட்டியதோடு ஏகாதிபத்தியத்தின் கலோனியல் முறையின் வீழ்ச்சியின் தொடக்கத்தையும் குறித்தது.

# Vi

# தேசிய விடுதலை இயக்கத்தின் மீது அக்டோபர் மகாபுரட்சியின் செல்வாக்கு

ரஷ்யாவில் வெற்றிவாகை சூடிய தொழிலாளர் புரட்சி 1917ல் சோஷலிஸ சகாப்தத்தை மலரச் செய்தது மட்டுமன்றி, தேசிய விடுதலை இயக்கத்தின் சித்திரத்தையே முழுமையாக மாற்றியமைத்தது, அந்நாள்வரை தேசிய விடுதலை இயக்கம் தன்னிச்சையான தனித்த போக்கு கொண்டதாய், வெகுஜனத்தன்மையற்றதாய் காணப்பட்டது. அடிமைப்படுத்தப்பட்டுக் கிடந்த நாடுகளது பின்தங்கிய நிலைமை, மக்களின் நசுங்கி மிதிபட்ட நிலைமைகள், கலோனியல் ஒடுக்குமுறைக்காரர்களால் அவர்கள் மீது சுமத்தப்பட்ட பெருஞ்சுமைகளால் மட்டுமன்றி முழுமையான ஏகாதிபத்திய அடிமைத்தனம் அடக்குமுறை இவற்றின் கீழ் தேசிய விடுதலைக்கான சாத்தியப்பாட்டில் இந்நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு நம்பிக்கை வரட்சியேற்பட்டதும் இதற்குக் காரணமாகும். 1917க்கு முற்பட்ட சகல தேசிய விடுதலைப் போராட்டங்களும் ஏகாதிபத்தியத்தின் அதிசக்தி வாய்ந்த அரசுகளால் முறியடிக்கப்பட்டன.

தேசிய ஒடுக்குமுறையின் ஏகாதிபத்தியக் கொள்கை ஜாரிஸ்ட் ரஷ்யாவில் முழுமையாக கடைப்பிடிக்கப்பட்டது, தேசியக் குரோதம், ஒடுக்குமுறை, யுத்தங்கள், தாரதம்மியம் காட்டப்பட்ட மக்கள் மீதும் சுரண்டப்பட்ட இனங்கள் மீதும் வன்முறை இவைதான் ரஷ்யாவில் பூர்ஷுவா நிலச்சுவான்தார் ஆட்சியிடமிருந்து இளம் சோவியத் அரசு பெற்ற பிதுரார்ஜிதமாகும். தேசிய ஒடுக்குமுறையின் தளையை அக்டோபர் புரட்சி ஒரே தாக்குதலோடு சுக்கலாய் நொறுக்கியதுடன், மக்கள் மத்தியிலே நிலவிய பழைய உறவுமுறைகளைக் குப்புறக் கவிழ்த்து, பழைய தேசியக் குரோதத்தைத் துவம்சம்செய்து, மக்களது ஒத்துழைப்புக்கு வழிசமைத்து, மற்றும் இனங்களைச் சேர்ந்த தம் சகோதரர் மத்தியில் ரஷ்யாவில் மட்டுமல்லாமல், ஐரோப்பாவிலும்

ஆசியாவிலும் கூட ரஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் மீது நம்பிக்கையை வென்றெடுத்தது.

சிறிய பெரிய நாடுகளது புனர்ஜீவனுக்கும், எழுச்சிக்கும் சோவியத் யூனியனில் மகத்தான திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அக்டோபர் புரட்சி தொழிலாளிவர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் சகல மக்களதும், இனங்களதும் வளர்ச்சிக்கு மாபெரும் வழிசமைத்தது; அவர்களது உற்பத்தி சக்திகளதும் கலாச்சாரத்தினதும் வளர்ச்சிக்கு முன்னென்றும் கண்டிராத வேகத்தில் ஊக்கம் வழங்கியது; சகல விதமான பேராதிக்க ராணுவ வாதத்துக்கும், பூர்ஷுவா தேசிய வாதத்துக்கும் மரண அடிகொடுத்தது.

சமத்துவ மின்மையைக் களைந்தெறிவதில் பிரதான கவனஞ் செலுத்தப்பட்டது. எல்லைப்புறங்களைச் சேர்ந்த இனங்களுக்கு ஜாரிஸம் இழைத்த வரலாற்று அநீதியின் விளைவுகள் துடைத்தெறியப்பட்டன. செல்வந்தர்களான ரஷ்யக் குடியேற்றக்காரர்களதும் கூட்டுக் கம்பனிகளதும் நிலங்களும், சுயாதீனமான காணிகளும் மத்திய ஆசியா, கஸாக்கிஸ்தான், காக்கஸஸ் பகுதிகளைச் சேர்ந்த இனத்தவர்களுக்கும், பாடுபட்டுழைக்கும் விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்பட்டன. பாரிய கைத்தொழில் உற்பத்தி நகரங்களிலிருந்து திறன்வாய்ந்த பொறியலாளர்களும், விவசாய நிபுணர்களும், பொருளியலாளர்களும், டாக்டர்களும் கம்யூனிஸ்டுகளும் கட்சி அங்கத்தவரல்லாதோருமாக அங்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஒவ்வோரிடத்திலும் ராஜ்யமுறை தேசியப் பழக்க வழக்கங்களுக்கேற்ப ஒழுங்கமைக்கப்பட்டது; அரசாங்கமும் பொருளாதார அமைப்புகளும், நிர்வாகமும், நீதிமன்றமும் பிராந்திய மொழிகளிலேயே விவகாரம் நடத்தின. எல்லாவற்றுக்கும் மேலாக பிரதேச மக்களது மொழியையும் பழக்க வழக்கங்களையும் நன்கறிந்த, அவர்களது தேவைகளில் அக்கறை கொண்டவர்களே பதவிகளிலமர்த்தப்பட்டனர். புரட்சிவாத ஜனநாயகவாதிகளையும், முற்போக்கு எண்ணம் படைத்தவர்களையும்—குறிப்பாக மிகவும் சிறு தொகையினராகக் காணப்பட்ட அறிவுஜீவிகளை—தொழிலாளர் விவசாயிகள் அரசின் பக்கம் வென்றெடுப்பதற்காக எல்லைப் பிராந்தியங்களில் பிடிவாதமான இயக்கம் நடந்து கொண்டிருந்தது. பிரதேச தேசிய நிபுணர்களைப் பயிற்றிக்கல்வியூட்டலையும் தேசிய வடிவமும் சோஷலிஸ உள்ளடக்கமும் கொண்ட கலாச்சாரத்தை வளர்த்தெடுத்தலையும் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட.

ரஷ்யாவில் தேசிய ஒடுக்கு முறையைத் தீர்த்துக்கட்டியதன் மூலம் அக்டோபர் புரட்சி முழு உலகுக்கும் ஸ்தூலமானதொரு படிப்பினையை வழங்கியது. ஏகாதிபத்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டத்தில், கலோனியல், அடிமைப்பட்ட மக்களுக்கு அக்டோபர் புரட்சி மாபெரும் உந்து சக்தியாக விளங்கியது அதிசயமல்ல. விடுதலையையும்

தேசிய சுதந்திரத்தையும்வென்றெடுப்பதற்கு அக்டோபர் புரட்சி அவர்களுக்கு வழிகாட்டியது. மேலும், தலைவீட்டாளர்களது படைகளை முறியடித்து சோஷலிஸ ஆதாயங்களைப் பாதுகாத்த சோவியத் யூனியனது உதாரணம், ஏகாதிபத்திய அரசுகளது ஆதிக்கம் தம்மீது எவ்வளவுதான் உறுதியாக இருந்தபோதிலும், கலோனியல் ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுதல் உண்மையில் சாத்தியமானதே என்பதை இவர்களுக்குக் காட்டியது. அக்டோபர் புரட்சி வெடித்துவிட்டதென்பதை அறிவித்த ''அவ்ரோரா'' போர்க்கப்பலின் வெடிச்சத்தம் மார்க்ஸிஸம்—லெனினிஸத்தையும், விடுதலை நம்பிக்கையையும் கிழக்குல மக்களுக்குக் கொணர்ந்தது.

தேசிய, கலோனியல் பிரச்சினைகள் மீது லெனின் அதிக கவனஞ் செலுத்தினர், அவற்றின் முக்கியத்துவத்தை தனது எழுத்துகளில் விளக்கினர். ''சோஷலிஸப் புரட்சியும், நாடுகளது சுய நிர்ணய உரிமையும்'' என்ற அவரது கோட்பாடு, தேசிய, கலோனியல் பிரச்சினைகள் மீது புதியதொரு போல்ஷ்விக் திட்டப் பிரகடனத்தை வழங்கியது; சோஷலிஸப் புரட்சி, அதன் மூலாதாரங்களும் நண்பர்களும், கலோனியல், ஒடுக்கப்பட்ட நாடுகளது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துக்கு நேரடியான அதன் ஆதரவு இவற்றோடு பின்னிப்பிணைந்த பிரிக்கமுடியாததோர் அங்கமாக இதில் தேசியப் பிரச்சினைகள் காட்டப்பட்டுள்ளன.

சுயநிர்ணயச் சுலோகம் மூன்று பிரதான கோஷ்டிகளான அல்லது மாதிரிகளான நாடுகளுடன் தொடர்பு படுத்தப்படல் வேண்டும் என அவர் எழுதினர். மேற்கு ஐரோப்பாவையும், ஐக்கிய அமெரிக்காவையும் சேர்ந்த் மிகவும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் முதல் வகையைச் சேர்ந்ததாகும். இப்'பெரும்' நாடுகள் ஒவ்வொன்றும் காலனிகளிலும், நாட்டினுள்ளும் ஏனைய இனத்தவர்களை ஒடுக்கின. இப்பிரதான பூர்ஷுவா நாடுகளைச் சேர்ந்த தொழிலாளிவர்க்கம் காலனிகளது விடுதலையையும், இப் 'பெரும்' அரசுகளினுள்ளே காணப்படும் ஒடுக்கப்பட்ட இனத்தவர்களது விடுதலையையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். பாட்டாளி வர்க்கம் அதன் சொந்தநாட்டு பேரரசு, குறுகிய தேசியவாதத்தை எதிர்த்துப் போராட வேண்டும்.

இரண்டாவது கோஷ்டி கிழக்கு ஐரோப்பாவை—ஆஸ்திரியா, பால்கன்ஸ், குறிப்பாக ரஷ்யா ஆகிய நாடுகளை உள்ளடக்கியதாகும். இங்கு இருபதாம் நூற்றுண்டில் பூர்ஷுவா—ஜனநாயக தேசிய இயக்கங்கள் வளர்ச்சிபெற்று தேசியப்போராட்டம் மிகவும் கூர்மை பெற்றுள்ளது. நாடுகளது சுயநிர்ணய உரிமையை விடாப்பிடியாக முன்னெடுத்துச் சென்றலன்றி இந்நாடுகளில் பாட்டாளிவர்க்கம் பூர்ஷுவா—ஜனநாயகச் சீர்திருத்தங்களையும், சோஷலிஸப் புரட்சியையும் பொறுத்தமட்டில் தனது பணிகளை நிறைவேற்ற முடியாது. இவ்விஷயத்தில், ஒடுக்குகின்ற நாடுகளையும் ஒடுக்கப்பட்ட நாடுகளையும் சேர்ந்த உழைப்பாளிமக்களது வர்க்கப் போராட்டம் தமது பொது எதிரியான நிலச்சுவான்தார்களையும்,

பூர்ஷுவாக்களையும் எதிர்த்து ஐக்கியப்பட வேண்டும்; அல்லது சங்கமிக்க வேண்டும்.

மூன்றுவது கோஷ்டி அரைகலோனியல் நாடுகளான சீனு, பாரசீகம், துருக்கி, இன்னும் 100 கோடி மொத்த மக்கள்தொகை கொண்ட சகல காலனிகள் யாவையும் உள்ளடக்கியதாகும். முக்கியமான பூர்ஷுவா ஜனநாயக இயக்கங்களும் ஏகாதிபத்தியத்துக்கெதிரான கலகங்களும் வெடித்துக் கிளம்பக் கூடிய வேளையை இந் நாடுகள் நெருங்கிக் கொண்டிருந்தன. மார்க்ஸிஸ கட்சிகளும், கோஷ்டிகளும் காலனிகளின் உடனடியான விடுதலைக்குக் குரலெழுப்புவதோடு இப் பூர்ஷுவா ஜனநாயக தேசிய விடுதலை இயக்கங்களது மிகவும் புரட்சிகரமான அம்சங்களுக்குத் தீர்க்கமான ஆதரவு வழங்கி, ஒடுக்குகின்ற எாதிபத்திய அரசுகளை யெதிர்த்துப்போராட அவர்களுக்குச் சகலவகைகளிலும் உதவி நல்கவேண்டும்

ஏகாதிபத்திய சகாப்தத்தில் நாடுகளது சுயநிர்ணய உரிமையோடு தொடர்புபடுத்தி நாடுகளைக் கோஷ்டி பிரிப்பது ஆழ்ந்த விஞ்ஞான பூர்வமானதொரு முறைக்குமாதிரியாகும்; அதேவேளை, சித்தாந்த அரசியல் போராட்டத்தில் மிகவும் சிக்கலானதொரு பிரச்சினைக்கு தீர்வுகாணும் வரலாற்று ரீதியான ஸ்தூலமானதோத அணுகுதல் முறையாகும்.

பெரிய ஒடுக்குகின்ற நாடுகளையும், சிறிய ஒடுக்கப்படும் நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்குக் கல்வியூட்டும் பிரச்சினைக்கு சர்வதேசிய உணர்வில் லெனின் தெளிவான விடை தந்தார். அணுகுதல்முறை ஒரேவிதமானதாக இருக்க முடியாது; ஏனெனில் தேசியப் பிரச்சினையின் கோணத்தில் தொழிலாளிவர்க்கத்தின் நிலைமை ஒரேவிதமானதல்ல. ஒடுக்கப்பட்ட நாடுகளது தொழிலாளிகளைச் சுரண்டுவதன்மூலம் பூர்ஷுவாக்கள் பெறும் பெருலாபத்தின் எழும்புத் துண்டுகளை ஒடுக்குகின்ற நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் ஒரு பகுதி பெறுவதால் பொருளாதார வித்தியாசம் காணப்படுகின்றது. ''ஒடுக்கப்பட்ட நாடுகளின் தொழிலாளர்களை (மக்கள் தொகையினரையும்) சூறையாடுவதில் ஒடுக்குகின்ற நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஓரளவுக்கு பூர்ஷுவாக்களுடன் பங்காளியாயிருக்கின்றனர்.'' என்று லெனின் எழுதினுர். அரசியல் வாழ்வின் பலதுறைகளில், ஒடுக்குகின்ற நாடுகளின் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் நாடுகளின் தொழிலாளர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது சலுகைமிக்கதொரு நிலையை அனுபவிப்பதால் அரசியல் வித்தியாசமும் காணப்படுகின்றது. இறுதியாக, இவ் வித்தியாசம் காணப்படுகின்றது: ஒடுக்கப்படும் நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்மீது ஒடுக்குகின்ற நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள், நிந்தனை காட்ட வேண்டுமென்ற உணர்வில் கொள்ளுமாறு பூர்ஷுவாக்களால் பயிற்றப்படுகின்றனர்.

இக்காரணங்களால், ஒடுக்குகின்ற நாடுகளின் பாட்டாளிவர்க்கத்தின் சர்வதேசியக்கல்வி, கலோனியல் நாடுகளதும் ஒடுக்கப்பட்ட நாடுகளதும் பிரிந்துசெல்லும் உரிமைக்கோரிக்கையை மையமாகக்

கொண்டிருக்க வேண்டுமென லெனின் நம்பினர். மறுபுறம் ஒடுக்கப்பட்ட நாடுகளின் சோஷலிஸ்டுகள், ஒடுக்கப்பட்ட நாடுகளையும் ஒடுக்குகின்ற நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களது ஐக்கியத்தை முன்னெடுத்துச் சென்று நடைமுறைப்படுத்தவேண்டும். அப்படியல்லாமல் சுயாதீனமான பாட்டாளிவர்க்கக் கொள்கையையும், மற்று நாடுகளது பாட்டாளி வர்க்கத்துடன் ஒருமைப்பாட்டையும் தூக்கிப்பிடிப்பது சாத்தியமாகாது. ஒடுக்கப்பட்ட நாடுகளது சோஷலிஸ்டுகள் சகல விதமான சூழ்நிலைகளிலும் தேசியக் குறுகல் மனப்பான்மை, தன்னகங்காரம், தனிமை மனப்பான்மை இவற்றுக்கெதிராகப் போரிடல் வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசியக்கல்வி, பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பின்னரும் பிரதானப் பணியாக விளங்குமென லெனின் விளக்கினர். சோஷலிசப் புரட்சியை நடத்திவிட்டதால் மட்டும் பாட்டாளிவர்க்கம் ஞானியாகவோ, மாறிவிடாது; தவறிழைக்க மாட்டாததாகவும், குறைபாடுகள் இல்லாததாகவும் உத்திரவாதம் பெற்றுவிடாது. ''தேசியக் குரோதங்கள் அவ்வளவு சீக்கிரம் மறைந்து விடமாட்டா: வெறுப்—ஒடுக்கப்பட்ட ஒரு நாடு ஒடுக்கியவன்மீது கொள்ளும்- நியாயமான வெறுப்பு சிறிதுகாலம் நீடித்திருக்கும்; சோஷலிஸத்தின் வெற்றிக்குப் பின்னர்தான்-நாடுகளுக்கிடையே பூரண ஜனநாயக உறவுகளின் இறுதியான ஸ்தாபிதத்துக்குப் பின்னர்தான் அது மறைந்தொழியும்.''

ஏகாதிபத்தியத்தின்கீழ் ஒரு நாடு அரசியல் சுதந்திரப் பெறுவதானது அந்நாடு பொருளாதாரச் சுதந்திரம் பெற்றுவிட்டதென அர்த்தமாகாது என்ற லெனினின் பிரஸ்தாபனை இந்நாளில் விசேஷ முக்கியத்துவம் பெறுகின்றது. சகல பொருளாதார, சர்வதேச உறவுகளிலும் நிதி மூலதனம் அவ்வளவு பெரிய, அவ்வளவு தீர்மானமான சக்திசென்று கூறமுடிவும்; பூரண அரசியல் சுதந்திரத்தை அனுபவிக்கும் நாடுகளைக்கூடத் தனக்கு அடிமைப்படுத்திவிட அதனால் முடியும்; உண்மையிலேயே அடிமைப்படுத்தியும் விடுகின்றது.'' ஏகாதிபத்தியத்தினால் ஒடுக்கப்பத்ட நாடுகள் அரசியல் விடுதலை மட்டுமன்றிப் பொருளாதார விடுதலையும் பெறவேண்டுமென லெனின் நினைத்தார். ஆனல், கலோனியல் அரைகலோனியல் நாடுகள், வலிமையற்ற சிறியநாடுகள் ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து உண்மையான பொருளாதார உதவி பெறலாமென எதிர்பார்க்க முடியாது. அதற்கு நேர்மாற்றமாக, ''பொருளாதார உதவி'' என்ற போர்வையில் கலோனியல்வாதிகள் இந்நாடுகள் மீதான தமது அமுக்குப் பிடியை இன்னும் இறுக்கமாக்க முயல்கின்றனர்.

சோஷலிஸம் மட்டுமே, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உண்மையான விடுதலைச் சகாப்தத்தைக் கொணரும் என லெனின் நம்பினல்· வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கம் அதிகாரத்துக்கு வரும்போது, சகல கலோனியல், அடிமைப்பட்ட மக்களுக்கும் பிரிந்து செல்லும் அளவுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குவது மட்டுமல்லாமல், சுதந்திர வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ள பின்தங்கிய ஆசிய ஆபிரிக்க மக்களு

டன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு மிகக் கூடுதலான முயற்சியையும் மேற்கொள்ளும்; சொந்த நலன் பாராட்டாத உதவி வழங்கி அவை ''யந்திர உபயோகத்துக்கு, உழைப்பை இலகுவாக்குவதற்கு, ஜனநாயகத்துக்கு சோஷலிஸத்துக்கு மாறிட'' உதவிபுரியும்.

''தேசிய இனங்களது பிரச்சினை அல்லது சுயாட்சி மயமாக்கல்'' என்று 1922ன் பிற்பகுதியில் லெனின் எழுதிய குறிப்புகள் சோவியத் குடியரசினுள் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதை அவர் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதியதைக் காட்டுகின்றன. ஆசியாவில் நிகழப்போகும் விடுதலைப் போராட்டங்கள் குறித்து அவர் எழுதினார்: ''கிழக்கின் அரங்கேற்ற வேளையில் அது விழித்தெழும் போழ்தில் அதன் மக்களோடு எமக்குள்ள மரியாதையை, நமது சொந்த ரஷ்யரல்லாத தேசிய இனங்களுக்கு நாம் இழைக்கக் கூடிய மிகவும் அற்பமான தீங்கு அல்லது அநீதம் மூலமாக வேனும் கெடுத்துக் கொள்வது மன்னிக்க முடியாத சந்தர்ப்பவாதமாகும்''

சுயாட்சி மயமாக்கல், என்ற பிரயோகம், ரஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிஸக் குடியரசுடன் சுயநிர்வாகப் பகுதிகளாக இணைப்பதன் மூலம் சோவியத் குடியரசுகள் ஐக்கியமாக்கப்படல்வேண்டும் என்ற யோசனையைக் குறிக்கின்றது. ஸ்டாலினால் சமர்ப்பிக்கப்பட்டு, மத்தியக்குழுவின் முழு நிறை கூட்டமொன்றுக்கான பிரேரணைகளைவரைந்தெடுப்பதற்காக நியமிக்கப்பட்டமந்தியக் குழு கமிஷனால் செப்டெம்பர் 1922ல் நிறைவேற்றப்பட்ட, ர. சோ. ச. சோ. கு. வுக்கும், உக்ரேயன், பைலோ ரஷ்யா திரான்ஸ் காக்கஸியன் சமஷ்டி ஆகிய சுதந்திரக் குடியரசுகளுக்கும் இடையிலான உறவுகள் சம்பந்தமான நகல் தீர்மானம் இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டமைந்தது. அரசியல் சபை உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதமொன்றில் (செப்டெம்பர் 27, 1922) லெனின் இந்நகல் தீர்மானத்தைக் கடுமையான விமர்சனத்துக்குட்படுத்தினார். அடிப்படையில் வித்தியாசமான தீர்வொன்றை அவர் பிரேரித்தார். ஒவ்வொரு உறுப்பினரும் பூரண சமத்துவத்தை அனுபவிக்கும் சோவியத் குடியரசுகளின் யூனியனில் ர. சோ. ச. சோ. கு. உட்பட சகல குடியரசுகளதும் தம்மிசையான ஐக்கியமே அத்தீர்வு, '' உக்ரேயன் சோவியத் குடியரசோடும், ஏனையவற்றோடும் நமது சமத்துவத்தை நாம் ஏற்றுக் கொள்வதோடு, அவற்றுடன் ஒன்றாய் நாம் புதிய யூனியனில் புதிய சமஷ்டியில் சேர்வோம்...'' என லெனின் எழுதினார். மத்தியக் குழு கமிஷன் லெனினது பிரேரணைக்கு ஒத்திசைவாகப் பிரேரணையை புனராக்கம் செய்தது புதிய நகல் பிரேரணை 1920 அக்டோபரில் மத்தியக்குழுவின் பிளினரி கூட்டத்தில் அங்கீகாரம் பெற்றது. சோவியத் சோஷலிஸக் குடியரசைப் பிரகடனஞ் செய்த, 1922 டிஸம்பர் 30ல் நடந்த சோவியத்துக்களின் முதலாவது அகில யூனியன் காங்கிரஸில் முடிந்த சகல விதமான ஆரம்ப நடவடிக்கைகளுக்கும் இத்தீர்மானம் அடிப்படையாக அமைந்தது.

முன்னர் ஒடுக்கப்பட்டிருந்த மக்களது நம்பிக்கையைவென்றெடுப்பதன் அத்தியாவசியத்தைச் சுட்டிக்காட்டி லெனின் சோவியத் நாட்டில் தேசியப் பிரச்சினைக்குச் சரியான தீர்வு காண்பதன் சர்வதேச முக்கியத்துவத்தைச் வலியுறுத்தினார்.'' இது உலகு பரந்த முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகும்—உலகு பரந்த முக்கியத்துவம் என்பது மிகைபடக் கூறியதாகாது. இது இந்தியாவைப் பாதிக்கும், கிழக்குலகைப் பாதிக்கும். இதில் ஒருவர் ஆயிரம் முறை கவனமாக இருக்கவேண்டும்'' என்று அவர் எழுதினார்.

சோஷலிஸத்தின் நலன்களுக்கு பல்வேறு நாடுகளையும் தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர்களிடையே பூரணநம்பிக்கையும், நெருங்கிய நட்புறவும் தேவையென அவர் சுட்டிக் காட்டினார். மூலதனம் ஒரு சர்வதேச சக்தியாகும். அதை முறியடிப்பதற்கு தொழிலாளர்களுக்கு சர்வதேச உறவுகளும், நேசத்தன்மை வாய்ந்த சர்வதேச ஐக்கியமும் தேவை. கம்யூனிஸ்ட்கள் தேசியப் பகைமையை, தேசியப் பூசலை, தேசியத் தனிமையை எதிர்க்கின்றனர் என அவர் சொன்னார். அவர்கள் சர்வதேசியவாதிகள். சகல நாடுகளதும் தொழிலாளர் விவசாயிகள் மத்தியில் நெருங்கிய ஐக்கியத்துக்காக அவர்கள் பாடுபடுகின்றனர்.

சர்வதேச ஐக்கியத்துக்காகப் போராடும் அதே வேளையில் கம்யூனிஸ்ட்டுகள் தேசிய அவிஸ்வாசததின் மிச்ச சொச்சங்கள் இருப்பதையிட்டு ஜாக்கிரதையுடனும் பொறுமையுனுடம் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையும்இருக்க வேண்டுமென லெனின் எச்சரித்தார் ''நாம்வேண்டுவது நாடுகளின் தம்மிச்சையான ஐக்கியத்தை'' என்று லெனின் வலியுறுத்தினார்: ஒரு நாட்டை இன்னொரு'' நாடுகட்டாயப்படுத்துகின்றதை விலக்கும் யூனியனை—பூரண நம்பிக்கையின் மீது, சகோதரத்துவ ஒருமைப்பாட்டின் தெளிவான அங்கீகாரத்தின் மீது, கிஞ்சிற்றேனும் நிர்ப்பந்தமில்லாத சம்மதத்தின் மீது அமைக்கப்பட்ட யூனியனை இத்தகைய யூனியனை எடுத்த எடுப்பில் சாதித்துவிட முடியாது. காரியத்தைக்கெடுத்துக் கொள்ளாத வகையில், தப்பெண்ணத்தையுண்டு பண்ணாத வகையில்—நூற்றுண்டு கணக்கான நிலச்சுவான்தார, முதலாளித்துவ ஒடுக்குமுறைகளிலிருந்து முதுசமாகப் பெற்றுத் தப்பெண்ணமும். தனிநபர் சொத்துரிமை அதன் பங்கீட்டு மறுபங்கீட்டு முறைகளினால் ஏற்பட்ட பகைமையும் நீங்குவதற்குச் சந்தர்ப்பமளிக்கும் வகையில் நாம் மிகுந்த பொறுமையோடும், கவனத்தோடும் அதனையடைவதற்காகப் பணியாற்ற வேண்டும்.''

பலதேசிய இனங்களைக் கொண்ட ஒருநாட்டில் தொழிலாளி வர்க்க அதிகாரத்தைக் கைப்பற்றும்போது ஐக்கிய சமஷ்டி அரசொன்றை உருவாக்கும் எண்ணத்தை அக்டோபர் புரட்சிக்கு முன்னரே லெனின் வெளிவிட்டார். புரட்சிக்குப் பின்னர் அவர் இக்கருத்தைச் சம்பூரணமாக விரிவுபடுத்தியெடுத்தார், சுயாதீனமான சோவியத் குடியரசுகளை யூனியனொன்றில் ஒன்றிணைத்தெடுப்பதற்குஆதரவாக அவர்ஆழ்ந்துசிந்தித்து முடிவுசெய்ததொரு நிலையையெடுத்தார்-1920 வேனிலின்போது தமது ''தேசிய, கலோ

னியல் பிரச்சினையின் மீதான ஆரம்ப வரைவாக்கத்''தில் இது சம்பந்தமான அடிப்படை ஏற்பாடுகளைத் தொகுத்துரைத்தார். அவர் எழுதினார்; முதலாவதாக, ''சோவியத் குடியரசுகளிடையே நெருங்கிய நட்புறவு இல்லாமல்'' முதலாளித்துவ முற்றுகையின் கீழ் அவை தம்மைப்பாதுகாத்துக் கொள்வது முடியாத காரியம். இரண்டாவதாக, சோவியத் குடியரசுகளிடையில் நெருங்கிய பொருளாதார உடன்பாடு அவ்சியம், அல்லாவிட்டால் ஏகாதிபத்தியத்தால் அழிவுற்ற உற்பத்தி சக்திகளை மீட்பதும் உழைக்கும் மக்சளின் சந்துஷ்டியான வாழ்வை உத்திரவாதம் செய்வதும் சாத்தியப்படாது'' மூன்றுவதாக, அத்தகைய நட்புறவு உடன்பாடு பொதுவானதொரு திட்டத்தின் பிரகாரம் வளர்ச்சியுறும் தனித்த சோஷலிஸப் பொருளாதாரமொன்று உருவாவதைச் சாத்தியமாக்கி வைக்கும். சோவியத் குடியரசுகளது ஐக்கியம் சமஷ்டியின் மூலம் அடையப்பெறல் வேண்டும் என அவர் கூறினார். ''சமஷ்டி பற்றிய புத்திசாலித்தனம்'' ஏலவே ர. சோ. ச. சோ. கு. வுக்கும் ஏனைய சோவியத் குடியரசகளுக்கும் இடையிலும்—ர. சோ. ச. சோ. கு. வுக்குள்ளும் காணப்படும் உறவுகளில் நடைமுறையில் காட்டப்பட்டு வருகின்றது. பூரண ஐக்கியத்துக்கு மாறுதலடையும் வடிவமாக சமஷ்டியை இனம்காண்பதில், நெருங்கிய சமஷ்டி ஐக்கிய்த்துக்காக என்றென்றும் பாடுபடுவது அத்தியாவசியமாகும்.'' என்று அவர் எழுதினார். அதில் சேரும் குடியரசுகள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையும், அவற்றின் நிர்ப்பந்தமில்லாத சம்மதமும் அத்தகைய சமஷ்டியின் அவசியமான நிபந்தனையாகும்.

சோவியத் குடியரசுகளை ஐக்கியப்படுத்தும் லெனினது திட்டம் அவர் முனனர் வரையறுத்தெடுத்த சோவியத் சமஷ்டியாட்சி கோட்பாடுகளினதும்நாட்டில்தேசியவளர்ச்சியின்அனுபவத்தொகுப்பினதும் அடிப்படையிலமைந்தது. ஐக்கியத்தின் திட்டவட்டமான வடிவங்களை அதுவரையறுத்தது. சமத்துவமான சுயாதீனமான சோவியத் குடியரசுகளது நிர்ப்பந்தமற்ற ஒன்றிணைப்பை அடிப்படையாகக் கொண்ட சோவியத் சோஷலிஸக் குடியரசுகளது யூனியன் இது மார்க்ஸிஸக் கோட்பாட்டுக்கும், சோஷலிஸ நிர்மாணத்தின் நடைமுறைக்கும் பிரதானமானதோர் பங்களிப்பாகும். புதுவகையான பல்தேசிய இன ராஜ்யமொன்றை, உடனடியான, புதுவகை சமஷ்டி பாட்டாளிவர்க்க ராஜ்யமொன்றை—ஐக்கியமுற்ற பல்தேசிய சோஷலிஸ ரஜ்ஜ்யமொன்றை, பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தினல் ஆளம்படும் சமத்துவமான, இறைமை வாய்ந்த நாடுகளது நிர்ப்பந்தமில்லாத யூனியனை லெனின் உருவாக்கினர்?

1922 டிசம்பர் 30ல் சோவியத்துகளின் முதலாவது அகில யூனியன் காங்கிரஸில் சோவியத் குடியரசுகளின் யூனியன் அமைக்கப்பட்டது. காங்கிரஸின் பணி, ஐ. சோ. சோ. கு. வை அமைப்பதற்கான யூனியன் ஒப்பந்தம் பிரகடனம் யாவும் லெனினது திட்டத்தை உள்ளடக்கியிருந்தன. சமத்துவம், மக்கள் மத்தியில் சினேகபூர்வ ஒத்துழைப்பு ஆகிய லெனினின் கருத்துகளில் பாட்டாளிவர்க்க சர்வதேசியம் என்ற கருத்தில் தோய்ந்ததாகக் காணப்பட்டன.

## vii

# சோஷலிஸ சர்வதேசியங்கள்

முதலாளித்துவ அமைப்பைப்போன்று, தொழிலாளர் இயக்கம் அடிப்படையில் சர்வதேசியத் தன்மை வாய்ந்ததாகும். உற்பத்தித் தொழில்களும் போக்குவரத்து, தொடர்புச் சாதனமுறைகளும் எல்லா தேசிய எல்லேகளேயும் கடந்து செல்வதுபோல் பாட்டாளிவர்க்க உணர்வும் அவற்றைக் கடந்து செல்கின்றது பல்வேறு நாடுகளுக்கு முதலாளித்துவம் பரவுதலும், உலக சந்தையின் வளர்ச்சியும் தவிர்க்கமுடியாதவாறு தொழிலாளர் மத்தியில் சர்வதேச உணர்வுகளே உண்டுபண்ணுகின்றன. பூர்ஷுவா கருத்தோட்டங்களிலிருந்து விலகி வரத்தலேப்பட்டு அவர்கள் சோஷலிஸக் கொள்கைகளின்பால், கண்ணேட்டங்களின்பால் பார்வையைத் திருப்பும்போது விசேடமாக, இவ்வாறு நேர்கிறது. குறிப்பிட்ட தொரு தொழிலாளர் இயக்கத்தின் அரசியல் முதிர்ச்சியை அதன் ஜீவதுடிப்பாகக் காணப்படும் சர்வதேசியத்தின் அளவைக் கொண்டு நன்கறிந்துவிட முடியும்.

19ம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் இளம் பாட்டாளிவர்க்கம் சர்வதேச அளவில் ஐக்கியத்துக்கான மிகப்பெருந்தேவையை உணர்ந்தது. தேசிய ரீதியாக ஒருவருக்கொருவர் மிகுந்த விரோதம் பாராட்டியபோதும், தொழிலாளி வர்க்கத்தின் திட்டவட்டமான சோரிக்கைகளே எதிர்ப்பதில் வலுமிகு சர்வதேச ஐக்கியத்தைக் கடைப்பிடித்த உண்மையான முதலாளிகளுக்கெதிராக வளர்ந்துவரும் அரசியல் பொருளாதாரப் போராட்டத்தில் தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் உதவிபுரிவதும் அவசியமாகின்றது. இங்கு ஸ்தூலமாக, தொழிலாளர்கள் சர்வதேச வேலே நிறுத்த—உடைப்பு நடவடிக்கைகளுக்கெதிராகப் போராடவேண்டியேற்பட்டது. யுத்தத்துக்கெதிராகப் போராட்டம் நடத்துதற்கு வளர்ந்துவரும் தேவையையும் அவர்கள் உணர்ந்தனர். அவர்கள் சோஷலிஸ்ட்டுகளாக மாறிய அளவுக்கு சர்வதேசவாதிகளாகவும் வளர்ந்தனர். மிகப்பெரிய, மிகச்சிறந்த வளர்ச்சிபெற்ற தொழிலாளி வர்க்கத்தைக்கொண்ட, தொழிற்சங்க முறையைப் பிரசவித்த, ஆரம்பகால முதலாளித்துவத்தின் இருதய பீடமாக

விளங்கிய இங்கிலாந்து இயற்கையாக, பாட்டாளிவர்க்கத்தின் சர்வதேச ஒருமைப்பாடு, அமைப்பு ஆகியவற்றுக்கான ஆரம்ப முயற்சிகள்பலவற்றன் அரங்கமாக விளங்கியது. 1830 க் களில் தொழிலாளர் இயக்கத்தின் வலிமைமிகு எழுச்சி ஏற்பட்டதிலிருந்து வளர்ந்துவரும் தொழிலாளர் சர்வதேச உணர்ச்சி அனேக வெளிப்பாடுகள் பெற்றுள்ளன. சார்ட்டிஸ்ட் இயக்கம் வலிமைமிகு சர்வதேசப் போக்குகளைக் காட்டியது. அதன் ஸ்தாபகர்களில் ஒருவரான வில்லியம் லொவட் ''சர்வதேசக்கண்ணோட்டம் படைத்த நவீன காலத்தின் முதலாவது தொழிலாளி'' என வர்ணிக்கப்பட்டுள்ளார். எக்ஸால்ஸ் லீக் (1834-36,) நியாயவாதிகள் சம்மேளனம், (1836-39,) கம்யூனிஸ்ட் லீக் (1847-52) ஆகியன நிச்சயமாக சர்வதேசக் கண்ணோட்டமும் பிரதானமாக, பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டமும் அங்கத்துவமும் வாய்ந்தனவாகும். அவற்றன் பிரதான நடவடிக்கைகளும், நிலையங்களும் இங்கிலாந்தில் அமைந்திருந்தன.

தொழிலாளர் இயக்கம் கணிசமான அனுபவம் பெற்று, தொழிலாளிவர்க்கம் அதிகம் சீரமைக்கப்பட்ட பின்னர் மட்டுமே, பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்துடன் ஈடுகொடுக்கக் கூடியதென நிரூபிக்க முடிந்த விஞ்ஞான கோட்பாடு உண்டாகும் சாத்தியம் ஏற்பட்டது. இக்கோட்பாடு, சமூக வளர்ச்சியின் விதிகளதும், வர்க்கமற்ற மகோன்னத சமூக அமைப்பை, கம்யூனிஸத்தை அடைவதற்கான வழிமுறைகளதும் ஒழுங்குமுறையான வெளிப்பாடுகளை வழங்குகின்றது. தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்களான கார்ல் மார்க்ஸும், பிரடெரிக் எங்கல்ஸுமே இக்கோட்பாட்டின் கர்த்தாக்களாவர்.

1845 மார்க்ஸ் பிரஸ்ஸல்ஸில் வாழ்துகொண்டிருந்தார். அங்கு புரட்சிகர ஸ்தாபனங்களிலும், ஜனநாயகக் கழகத்திலும், பொதுத் தொழிலாளர் சங்கத்திலும் அரசியல் சுறுசுறுப்புடன் இயங்கினார். பெப்ரவரி 1846ல் இங்கிலாந்தில் வாழ்ந்துகொண்டுருந்த எங்கல்ஸுடன் சேர்ந்து இருவரும் தொர்புகள் கொண்ட கம்யூனிஸக் குழுக்களை அமைக்கத் தொடங்கினர். இக்குழுக்கள் அண்டை நாடுகளில் கம்யூனிஸப் பிரச்சாரத்தை நடத்தின. சில பேச்சுவார்த்தைகளின் பின்னர் இப் பல்வேறு குழுக்கள் 1847 வேனிலின் போது லண்டனில் ஒன்று கூடின. இக்கூட்டத்தில் எங்கல்ஸ் கலந்து கொண்டார். இங்கு அவர்கள் கம்யூனிஸ்ட் கழகத்தை அமைத்தனர். இதுவே முதலாவது சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கமாகும். இதுவே ஒன்றரைத் தசாப்தங்களின் பின்னர் உருவான சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் முன்னோடியாகும். கம்யூனிஸ்ட் கழகம் லண்டனில், பாரிஸில், பிரஸ்ஸல்ஸில்—பிரதானமாக தீவாந்திர வாசம்புரிந்த தொழிலாளர்கள், அறிவு ஜீவிகளைக் கொண்டமைந்தது. 1847ல் நவம்பர் 29லிருந்து டிஸம்பர் 8வரை இக்கழகம் அதன் இரண்டாவது காங்கிரஸைக் கூட்டியது. இதில் மார்க்ஸும் எங்கல்ஸும் கலந்து கொண்டனர். இங்காங்கிரஸில் யாப்பொன்றை நிறைவேற்றுவதன் மூலமும், திட்டமொன்றை வழங்குவதன் மூலமும் கழகம் தன்னைத் திட்டமாக ஒழுங்கமைத்துக் கொண்டது. திட்டமொன்றை வரைந்தெடுக்கும் வேலை நன்கு வள

ர்ச்சியடைந்த, பட்டவர்த்தனமான ஒரு கம்யூனிஸ்ட்டாக பரவலாக அறிமுகமாகியிருந்த கார்ல்மார்க்ஸிடம் ஒப்படைக்கப்பட்டது. 1847 டிசம்பர், 1848 ஜனவரி பூராவிலும், மார்க்ஸ¬ம் எங்கல்ஸ¬ம் நகல் யாப்பை தயாரிப்பதில் ஈடுபட்டனர். ஜனவரி இறுதியில் அது பூர்த்தி செய்யப்பட்டு லண்டனுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு பெப்ரவரியில் வெளியிடப்பட்டது. ''கம்யூனிஸ்ட் அறிக்கை'' என வெகு பிரசித்தமாகக் குறிப்பிடப்படும் ''கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை'' மனிதகுல வரலாற்றிலேயே மிகவும் முக்கியமான தனிதஸ்தாவேஜு, வெளியாகியது.

''கம்யூனிஸ்ட் அறிக்கை'' உலகத் தொழிலாளர்களது முதல் புரட்சிகர வேலைத்திட்டமாகும். அப்போதிருந்து சோஷலிஸத்துக்கான தமது பாதையில் தொழிலாளிவர்க்கச் சிந்தனையினதும் செயலினதும் உறுதியான அடித்தளத்தை தொழிலாளர்களுக்கு அது அமைத்துக்கொடுத்தது. முதலாளித்துவத்தின் கீழ் தம்மைப் பாதுகாதுக் கொள்வது எப்படி, முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டுவது எப்படி, நவசோஷலிஸ சமுதாய அமைப்பை நிறுவுவதெப்படியென அது அவர்களுக்குக் காட்டியது. ''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!'' என்ற சுலோகத்தை அது உயர்த்திப் பிடித்தது. தொடர்ந்த தசாப்தங்களில் மார்க்ஸ¬ம், எங்கல்ஸ¬ம், லெனினும் மற்றோரும் மார்க்ஸிஸத்தின் மீது அநேக நூல்கள் எழுதவிருந்தனர். அவர்களது எழுத்துக்கள் அறிக்கையின் அடிப்படை உத்தேசனைகளை விரித்துரைக்கவும் அவற்றுக்கு ஆதரவு நல்கவும் செய்தன. இன்று, மாபெரும் தஸ்தாவேஜு எழுதப்பட்டு 130க்கும் அதிகமான வருடங்களின் பின்னர், ''கம்யூனிஸ்ட் அறிக்கை'' மலை போன்று உறுதியாக நிற்கின்றது; சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்குத் தெளிவாக வழிகாட்டியாகத் திகழ்கின்றது; தலைமுறை தலைமுறையான புரட்சிவாத அனுபவங்களினால் நியாயப்படுத்தப்பட்டு முதலாளித்துவ எதிரிகளின் தாக்குதல்களால் ஊடுருவமுடியாது வஜ்ரத்தன்மையுடன் விளங்குகின்றது.

1848க்கு முன்னர் சோஷலிஸத்துக்கான இயக்கம் முதலாளித்துவம், சிரமைப்பு வடிவங்கள், போராட்டமுறைகள், இறுதியான குறிக்கோள் பற்றிய கோட்பாடு ஆகியன பற்றிய பகுப்பாய்வு விஷயத்தில் சிக்கலும் குளறுபடியும் நிறைந்துகிடந்தது. புராதன வாதம், கற்பனாவாதம், சாஹஸவாதம், சந்தர்ப்பவாதம் இவற்றின் கலப்படமாக அது காணப்பட்டது. ஆனால் மார்க்ஸ், எங்கல்ஸின் உற்சாக உதவியுடன், கம்யூனிஸ்ட் அறிக்கையில் மேதை மிகு ஒரேசாடலில் கருத்துமுதல்வாதம் அறியாமை, திருச்சபைவாதம் ஆகியவற்றை ஒதுக்கித் தள்ளியதுடன சோஷலிஸ இயக்கத்தை முதன்முறையாக விஞ்ஞான அடித்தளத்தின் மீது நிறுவினார்.

இரு மாபெரும் கம்யூனிஸ்டுகள் என மார்க்ஸ¬ம் எங்கல்ஸ¬ம், சோஷலிஸம் பற்றி நிலவிவந்த நிச்சயமற்ற தன்மை, உட்டோப்பிய ஊகக் கணிப்புகள் சகலதையும் புறத்தொதுக்கி' பிரச்சினையை விஞ்ஞான அடிப்படையின் மீது வைத்தனர்.

பாடுபடும் மக்களைச் சுரண்டி வந்த, தொழிலாளிவர்க்கத்தை உருவாக்கிய, சோஷலிஸ உதயத்தைத் தவிர்க்க முடியாததாக்கிய முதலாளித்துவ அமைப்பின் இயக்கப்பாடுகளை அவர்கள் வெளிக் கொணர்ந்தனர். வரலாற்று ரீதியாக ''முதலாளித்துக்குச் சவக் குழி தோண்டுவோர்'' தொழிலாளர்கள்தான் என்பதை, பாட்டாளி வர்க்கம் மட்டுமே சோஷலிஸத்துக்கு மக்களை இட்டுச் செல்ல வல்லது என்பதைக் காட்டினர். லெனின் சொல்கிறார்: ''சோஷலிஸச் சமுதாயமொன்றின் நிர்மாணியாக பட்டாளி வர்க்கத்தின் உலகளாவிய வரலாற்றுப் பாத்திரத்தின் விளக்கமே மார்க்ஸுடைய போதனையின் பிரதான அம்சம்''

உட்டோப்பிய வாதிகள் செய்ததுபோல் வருங்கால சமுதாயத்தின் ஒவ்வொரு விவரணத்தையும் வரைந்தெடுக்க முயற்சியாமல், மார்க்ஸும், எங்கல்ஸும் அது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமாய் இருக்குமென்றும், ''ஒவ்வொருவருக்கும் அவரது ஆற்றலுக்கேற்ப என்பதிலிருந்து ஒவ்வொருவருக்கும் அவரது வேலைக்கேற்ப'' என்ற அதன் கொள்கையுடன் இன்னும் உயர்ந்த ''ஒவ்வொருவருக்கும் அவரது ஆற்றலுக்கேற்ப என்பதிலிருந்து ஒவ்வொருவருக்கும் அவரது தேவைக்கேற்ப'' என்ற கொள்கையுடைய கம்யூனிஸ சமுதாயத்துக்கான ஆரம்ப கட்டமாய் அது இருக்குமென்றும் காட்டினர். இப்பொழுது, திட்டமாக சோஷலிஸம் நோக்கி, கம்யூனிஸம் நோக்கிப் பீடுநடைபோடும் மனுக்குலத்தின் மூன்றிலொரு பகுதியினரால் இம் மார்க்ஸிஸப் பகுப்பாய்வு பூரணமாகப் ருஜுவாக்கப்படுகின்றது.

கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்கள் எண்ணிக்கையில் அதிகமானோராயில்லாதிருந்த போதிலும் 1848 புரட்சியில் உற்சாகமாய்ப் பங்குபற்றினர். முதலாளித்துவ வர்க்கம் மேற்கு ஐரோப்பாவிலும். உலக முழுவதிலும் அதன் ஆட்சியை முற்போற்க்காக நிறுவிக்கொள்வதற்கு உதவிய பல்வேறு எழுச்சிகளில் இப்புரட்சியும் ஒன்றாகும். ''கண்டப்புரட்சி'' என மார்க்ஸ் அழைத்த இப் புரட்சி பிரான்சில் தொடங்கப்பட்டு திடீரென்று ஜெர்மனி, ஆஸ்திரிய, இத்தாலி, ஹங்கேரி, பெல்ஜியம், போர்த்துகல் மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சூழ்ந்து கொண்டது. இங்கிலாந்தும் அயர்லாந்தும்கூட இதன் தாக்கத்தைத் தெளிவாக உணர்ந்தது. ரஷ்யாவையும், போலந்தையும் பொறுத்தமட்டில் அதன் செல்வாக்கு மிகவும் கூர்மையாகப் பதிந்தது. ஐக்கிய அமெரிக்கா, லத்தீன் அமெக்கா காவிலும்கூட அது எதிரொலி கிளப்பியது. நலிவுற்ற நிலப்பிரபுத்துவத்துக்கெதிராக எழுச்சியுற்று வந்த முதலாளித்துவம் கொடுத்த என்றுமேயில்லாத மிகப்பெரும் அடிகளில் ஒன்றாகும் இது பத்தாம் பசலி நிலப்பிரபுத்வத்தின் கொளுவலெடுத்து பொருளாதார அரசியல் தளைகளுக்கெதிராக துரிதவேகத்தில் வளர்ச்சியுற்று வந்த உற்பத்தித் தொழில்மயம் அதே வேகத்தில் விரிவடைந்து வந்த தொழிலாளிவர்க்கத்துடன் சேர்ந்து உண்டுபண்ணிய நெருக்குதலே பரந்த பூர்ஷுவா புரட்சியின் அடிப்படைக் காரணமாக விளங்கியது. பரவலடைந்த உற்பத்தித் தொழில் மந்தம், வேலையில்லாத் திண்டாட்டம், மொத்தமாக மக்களின் நிர்க்கதியான நிலையை ஏற்படுத்திய 1847ம்

ஆண்டையப் பொருளாதாரப் பிரச்சினைதான் புரட்சிக்கான உடனடி காரணமாக விருந்தது. நீண்டகாலமாகத் தலைமறைவாகியிருந்த சமூக விடுதலைச் சக்திகள் வலுப்பெற்று வேகமும் வீச்சுமடைந்து வந்தன. 1848ல் எரிமலை வெடித்தது முழு ஐரோப்பாவும் புரட்சிக் கொந்தளிப்பினால் ஆட்கொள்ளப்பட்டது. புரட்சி முதலாவது சிசிலியில் வெடித்தது. வெகுஜன இயக்கங்களை நசுக்குவதில் பேர்போன அரசன் ஆட்டங்கண்ட தனது சிம்மாசனம் சீக்கிரம் கவிழுமென்பதை யுணர்ந்து தொடர்ச்சியான பல சலுகைகளுக்கு அவசரமாக ஒப்புக்கொண்டான. பிற்போக்கு அமைச்சர்கள் சகலரும் பதவி நீக்கப்பட்டு, யாப்பமைப் பொன்றுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டது.

பெப்ரவரி 22—24ல் புரட்சி பிரான்சில் வெடித்தது. ஆயிரக்கணக்கான தொழிலாளரை வீதிக்குக் கொணர ஓர் அற்பச் சம்பவமே போதுமானதாயிருந்தது. சீக்கிரம் வழித்தடைகள் போடப்பட்டு காலஞ்செல்வதற்குள் முழு நகரமும் கலகக்காரர்களின் கைகளுக்குள் வந்தது. கலகத்தை தேநீர் கோப்பைக்குள் ஏற்பட்ட சூருவளியென முதலில் வர்ணித்த பிரதமர், பின்னர் புரட்சிகர பாரிஸிலிருந்து பெண்வேடமிட்டு ஓடவேண்டியேற்பட்டது. மறுநாள் அவரைப்பின் தொடர்ந்து அரசனும் சென்றான். அரண்மனையுள் உடைத்துக் கொண்டு நுழைந்த கலகக்காரர்கள் அரியாசனத்தை நகரின் கல்பதித்த வீதிகளில் இழுத்துக் கொண்டு வந்து பஸ்டிலில் வைத்து வெற்றிக் கும்மாளங்களின் மத்தியின் தீ வைத்தனர்.

மார்ச் 13ந் திகதி வழித்தடைகள் வியன்னாவின் வீதிகளில் தோன்றின. இப்பொழுது ஆஸ்திரிய சான்ஸலர் தப்பியோட வேண்டியமுறை வந்தது. புடாபெஸ்ட்டும், பிராஹாவும் வியன்னாவின் உதாரணத்தைப் பின்பற்றின. சீக்கிரத்தில் பல்தேசிய இன மயமான முழு ஆஸ்திரிய சாம்ராஜ்யமே புரட்சிக் கொந்தளிப்பால் குமுறத் தொடங்கியது. மார்ச் 18ந் திகதி வெகுஜன எழுச்சியொன்று பெர்லினைக் கைப்பற்றியது. இவ்வெற்றிக்கு முன்னர் பல மேற்கு ஜெர்மன் ராஜ்யங்களில் வாளைகள் சூடப்பட்டன. இத்தாலிய ராஜ்யங்களில் பிரமாண்டமான புரட்சிப் பிரவாகமொன்று பெருக்கெடுக்க விருந்தது. லொம்பார்டியில் இத்தாலியக் கலகக்காரர்கள் ஆஸ்திரிய ஆக்கிரமிப்பாளர் சக்திகளை முறியடித்தனர். வெகுஜன எழுச்சி ஆஸ்திரிய ராணுவத்தைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. வெனிஸியாவிலிருந்து ஆஸ்திரியர்கள் வெளியேற்றப்பட்டனர். பின்னர் அது சுதந்திரக் குடியரசாகப் பிரகடனஞ் செய்யப்பட்டது. இங்கிலாந்தில் மக்கள் சாஸன உரிமை இயக்கம் அதன் உச்சகட்டத்திலிருந்தது. ஸ்பெயினுக்கும், சுவிட்ஸர்லாந்துக்கு, பெல்ஜியத்துக்கும்கூடப் புரட்சி இயக்கம் பரவியது; போலந்து மக்கள் நாட்டின் பிரிவினைக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர், அத்திலாந்திக் கரையிலிருந்து ஜார் நிக்கலசுடைய சாம்ராஜ்யத்தின் எல்லைகள்வரை வெறுக்கப்பட்ட ஆட்சிகளையும், முடிமன்னர்களையும், மந்திரிமாரையும் சடசடவெனச் சரியச் செய்து முழு ஐரோப்பாவின் குறுக்காகப் பாய்ந்துப்படர விருந்தது புரட்சிப் பிரவாகம்.

பாரிஸில் புரட்சியின் ஆரம்பத்தில் அதிகாரம், முடியாட்சியைக் கவிழ்ப்பதில் தீர்மான பங்கு வகித்த கலகக்காரர்களின் கைகளிலிருந்தது. தொழிலாளர்கள் இன்னும் ஆயுதந்தாங்கியவர்களாகத் தலைநகர வீதிகளின் எஜமானர்களாகக் காணப்பட்டனர். பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கையின் மீது பூர்ஷுவா அரசியல் வாதிகளின் நோக்கங்களுக்கு மாறாக 1848 பெப்ரவரி 24ந் திகதி பிரான்சு குடியரசாகப் பிரகடனஞ் செய்யப்பட்டது.

தனது புரட்சியார்வ ஆர்ப்பரிப்பில் போதியளவு ஸ்தாபன ரீதியாக இல்லாதிருந்த தனது பணிகளையும் இலக்குகளையும் அறியாதிருந்த உண்மை நிலையே பிரெஞ்சு பாட்டாளி வர்க்கத்தின் பலவீனமாக விருந்தது. தமது போராட்டத்துக்குக் கட்டமைப்பையும் திசைமார்க்கத்தையும் வழங்கியிருக்கக்கூடிய தம் சொந்த கட்சியை பாட்டாளிகள் கொண்டிராதது மட்டுமல்ல, அவர்களுக்குத் தொழிற்சங்கங்கள் கூட இருக்கவில்லை. எண்ணற்ற அரசியல் கழகங்கள் தலைதூக்கின எனினும் பொதுவான குறிக்கோள்கள் ஒருசிலவே அவை மத்தியில் காணப்பட்டன. பிணக்குகள் அவை மத்தியில் சர்வசாதாரண வழக்காயிருந்தன. உண்மையான தலைவர்கள்கூட பட்டாளி வர்க்கத்துக்கு இருக்கவில்லை. ஒரு பூர்ஷுவா அரசை வற்புறுத்துவதன் மூலம், அதனோடு பேச்சு வார்த்தை நடத்துவதன் மூலம் சோஷலிஸச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்துவிடலாமென்று நம்பிய சுற்பனை சோஷலிஸ்ட்டான லூயி பிலானே என்பவரை பெரும்பான்மையான தொழிலாளர்கள் குருட்டுத்தனமாகப் பின்பற்றினர்.

புரட்சியின் ஆரம்ப கட்டத்தில் தொடை நடுக்கம் கொண்டு தொழிலாளர் மீது தமது சிநேகபூர்வ உணர்வுகளை நயவஞ்சகத்துடன் உறுதிப்படுத்திய பூர்ஷுவா அரசியல் தலைவர்கள் தொழிலாளரது குருட்டுத்தனமான நம்பிக்கையையும், கட்டமைப்பற்ற தன்மையையும் திறமையுடன் பயன்படுத்திக் கொண்டனர். முதலில் பூர்ஷுவா அரசியல்வாதிகள் உண்மையான அதிகாரத்தைப் பெற்றிராத போதிலும், கபடத்தையும், தந்திரத்தையும் கையாளுமாறு தூண்டப்பட்டனர். இதன் விளைவாக இடைக்கால அரசொன்றை அமைப்பதில் அவர்கள் வெற்றி கண்டனர்.

பூர்ஷுவாவர்க்கத்தினதும் அதன் அரசியல்ஆதரவாளர்களினதும் பிரதானநோக்கம், திறமையாக மூடிமறைக்கப்பட்டிருந்தபோதிலும் தொழிலாளி வர்க்கத்தைச் சரணடையச்செய்வதும், அது புதிதாகச் சுவீகரித்த அதிகாரத்தை அதற்குமறுப்பதுமாய் இருந்தது. ஜனநாயகப் புரட்சியொன்றின் நிலைமைகளில் பாட்டாளி வர்க்கத்தைத் தூரத்தில் தள்ளிவைப்பது எப்படி யென்பதுதான் பிரச்சினையாக விருந்தது. பாட்டாளி வர்க்கத்தை அதன் நேச சக்திகளிடமிருந்து தனிமைப்படுத்தி வைப்பதுதான் சிறந்த வழியென பூர்ஷுவா அரசியல்வாதிகள் உணர்ந்தனர். விவசாயிகளையும், நகரப்புற குட்டி பூர்ஷுவாக்களையும் பாட்டாளி வர்க்கத்தின் மீது வெறுப்பு கொள்ளச் செய்வதற்கு, அதிகாரத்தைத் தம் கையில் வைத்திருந்த பூர்ஷுவாவர்க்கம் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டது.

தேசியத்தொழில் கூடங்களை மூடிவிடும்படி ஜுன் 21ம் திகதி கட்டளையொன்றைப் பிறப்பித்தது அரசாங்கம். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வீதியில் குதித்தனர். அத்தகையக் கட்டளையொன்றை தொழிலாளர் ஏற்றுக்கொள்ள மாட்டாரென்பதை அரசு நன்கறிந்திருந்தது. நிலைமை பாட்டாளிவர்க்கத்துக்கும் பாதகமாக இருக்கப்போகும் நிலையில் புதியகலகமொன்று வெடிக்க வேண்டுமென அவர்கள் கணக்குப் போட்டனர்.

எதிர்பார்த்தது போல், தொழிலாளி வர்க்கம் சவாலை ஏற்றுக்கொண்டது. கார்ல்மார்க்ஸ் அபிப்பிராயமுறைத்தார்: "தொழிலாளருக்கு வேறு வழியிருக்கவில்லை; அவர்கள் பட்டினி கிடக்கவோ அல்லது பொங்கியெழவோ வேண்டியிருந்தது. நவீன சமுதாயத்தைப் பிளவுபடுத்திய முதலாவது மாபெரும் போராட்டம் நிகழ்ந்த பிரமாண்டமான கிளர்ச்சியில் ஜுன் 23ந் திகதி அவர்கள் குதித்தனர். பூர்ஷுவா அமைப்பைப் பாதுகாப்பதா அல்லது பூண்டறுப்பதா என்பதற்கான போராட்டம் அது."

தேசியத் தொழிற் கூட்டங்களைச் சேர்ந்த தம் சகோதரர்களுடன் இணைந்து பாரிஸின் முழு பாட்டாளிவர்க்கமுமே வழித்தடைகளமைத்து நின்றது. இலட்சியத்துக்காக இன்னுயிரீயத் தயாராய் தொழிலாளர் வீரஞ் செறிந்த போராட்டத்திலிறங்கினர். வெகு அரிதாக வழிபிறழச் செய்த ராணுவப் பிரச்சினைகளை உள்ளுணர்வோடு அணுகுவதில் அவர்கள் மகத்தான திறனையும், ஆர்வத்தையும் வெளிப்படுத்தினர். மழையாய்ப்பொழிந்த குண்டுகள் மத்தியில் பெண்களும், குழந்தைகளும் அச்சமின்றி கணவன்மாருக்கும், சகோதரர்களுக்கும், தந்தையருக்கும் உதவினர். கலகத்தில் குதித்த பாட்டாளி வர்க்கத்தின் துணிவும் திடசித்தமும் உலகையேத் திகைப்பிலாழ்த்தியது.

எனினும், யாவுமே அவர்களுக்கு விரோதமாயிருந்தது. சொத்துடைமை நலன்கள் யாவும் தொழிலாருக்கெதிராகத் திரட்டிக் குவிக்கப்பட்டது. பெரிய பூர்ஷுவாவர்க்கம், எண்ணிக்கையில் பலஹீனமானத் தமது வர்க்க எதிரிமீது மூர்க்கமான தாக்குதலைத் தொடுத்தது. கலகம் குரூரமாகக் கொடியமுறையில் அடக்கப்பட்டது.

ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வெடித்த புரட்சிகளும் முறியடிக்கப்பட்டு, முழு ஐரோப்பாவிலும் எதிர்ப்புரட்சியின் வெற்றி முழுமையுற்றது. 1850ன் தொடக்கமளவில் கம்யூனிஸ்ட் கழகமும் காலாவதியாகியது. 1848ன் புரட்சிகள் தோல்வியில் முடிந்தபோதும் அதைத் தொடர்ந்த ஐரோப்பிய வரலாற்றுப் போக்கில் அது பிரதான செல்வாக்கு செலுத்த விருந்தது. அடிமைமுறை ஒழிப்பு, ஆஸ்திரிய சாம்ராஜ்யத்தில் தேசிய ஒடுக்குமுறை கணிசமான அளவு குறைந்தமை, சில பூர்ஷுவா சுதந்திரச் சீர்திருத்தங்கள் போன்ற பல்வேறு சலுகைகளை வென்றெடுத்ததால் மட்டும் அவை முக்கியத்துவம் பெறவில்லை. இப்புரட்சிகள் ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்துக்கு அர

சியல் போராட்டத்தில் விலைமதிப்பற்ற அனுபவங்களை வழங்கியது. சில வருடங்களின் பின்னர், முதலாவது அகிலம் உதயமான நிலைமையை உருவாக்குவதில் அவை தீர்மானமான சக்தியாய் விளங்கின.

முதலாளித்துவத் தொழிலுற்பத்தியின் துரித முன்னேற்றம் தவிர்க்கமுடியாதவாறு, தொழிலாளி வர்க்கத்தின் துரித வளர்ச்சியோடு கைகோர்த்துச் சென்றது. பாட்டாளிவர்க்கத்தின் வர்க்க உணர்வு, அதன் கட்டமைப்பு, மூர்த்தண்யம் யாவும் அதனுடன் வளர்ச்சியுற்றன. இக்காலமளவில் தொழிலாளி வர்க்கம் வர்க்கப் போராட்டத்தில் கணிசமான அனுபவத்தைப் பெற்றிருந்தது.

1848-1849ன் புரட்சிகளதும், எதிர்ப்புரட்சியினதும் படிப்பினைகளும் தவிர்க்கமுடியாத விலைமதிப்பற்ற அனுபவமாகின. தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஸ்தாபனங்களை அமைக்கத்தலைப் பட்டனர். பிரிட்டனில், பிரான்ஸில், ஐக்கிய அமெரிக்காவில், ஜெர்மனியில் தொழிற்சங்கங்கள் தோன்றின. வேலை நிறுத்தங்கள் அடிக்கடி தோன்றின. இம்முறையினால் ஈட்டப்பட்ட வெற்றிகள் முழு இயக்கத்துக்கும் உற்சாக உந்துசக்தியாகியது. சோஷலிஸக் குழுக்கள், வட்டங்கள் அமைக்கப்பட்டன. தொழிலாளர் குறிப்பிட்டத் தமது சொந்த பாக்டரியின், நகரத்தின், நாட்டின் குறுகிய கோணத்திலிருந்து பிரச்சினைகளை அணுகும்முறை இனிமேலும் நீடிக்கவில்லை. சர்வதேசப் பாட்டாளிவர்க்க ஐக்கியம்—குறிப்பாக 1860க்களின் தொடக்கமளவில்—வெகுவேகமாகச் செல்வாக்கு பெறத்தொடங்கி விட்டது.

கணிசமான அனுபவத்தைத் திரட்டிச் சேர்த்து வர்க்க உணர்வின் புதிய கொடுமுடிகளை அடைந்த தொழிலாளர் இயக்கம் இப்போது தனது சக்திகளை சர்வதேச அடிப்படையில் ஐக்கியப்படுத்தத் தயாராகின விட்டது.

1864 செப்டெம்பர் 28ல் லண்டனில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றில், சர்வதேசத் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டது. இக் கூட்டத்தில் ஜெர்மன் தொழிலாளரது பிரதிநிதியாகக் கலந்து கொண்டவர், தொழிலாளி வர்க்க விடுதலையின் ஈடிணையற்ற தலைவரான, கார்ல் மார்க்ஸ் ஆவார். ''அங்குரார்ப்பண உரை''யையும், ''பொதுவிதிகளை''யும் வரைந்தெடுக்கும் பொறுப்பு அவர்மீது சுமத்தப்பட்டது. அவரும் பிரெடரிக் எங்கல்ஸும் இயக்கத்தின் பிரதான தலைவர்களும், அதன் ஈடிணையற்ற சிந்தனையாளர்களுமாவர். வர்க்க உணர்வில் பல்வேறு தராதரங்களைப் பெற்ற தொழிலாளர்கள் சர்வதேச சங்கத்தில் சேர்ந்தபடியால், ''அங்குரார்ப்பண உரை'' விஞ்ஞானக் கம்யூனிஸத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு விசுவாசமான அதேவேளையில் எல்லோரும், ஏற்றுக் கொள்ளத் தக்கதாயும் தெளிவு மிக்கதாயும் தீட்டப்பட வேண்டியிருந்தது. அற்புதத் திறமையுடன் இப்பணியை நிறைவேற்றினார் மார்க்ஸ். ''அங்குரார்ப்பண உரை'' முதலாளித்துவத்தின் கீழ்

தொழிலாளர் வாழ்ந்தக் குரூரமான பயங்கர நிலையை வர்ணித்த துடன் இக்காரணத்தால ''அரசியல் அதிகாரத்தை அடைவது தான் தொழிலாளிவச்கத்தின் முன்னுள்ள முதல் பணியாக மாறி யுள்ளது'' எனச் சுட்டிக் காட்டியது. வெற்றிகரமான போராட்ட மொன்றை நடத்தும் அளவுக்கு தொழிலாளி வர்க்கம் ஏற்கனவே போதியளவு பெரிதாயுள்ளது; என்ற போதிலும் கட்டமைப்பும், அனுபவமும் எண்ணிக்கையை விடவும் முக்கியத்துவத்தில் குறைந்த தாகிவிடாது என உரையில்குறிப்பிடப்பட்டது. நாடுபிடிக்கும் யோர் களையும், ஆக்கிரமிப்பையும் கூட எதிர்க்கு மாறு ''அங்ராரர்ப்பண உரை'' வேண்டுகோள்விடுத்தது.

அவ்வேளையில் தொழிலாளி வர்க்கஅரசியல் கட்சிகள் இன் னும் உதயமாகியிராத போதிலும், அநேக தொழிற்சங்கள் கூட்டு றவுச் சங்கங்கள், தொழிலாளர் கல்விக் குழுக்கள் ஐரோப்பாவை யும், அமெரிக்காவையும் சேர்ந்த மற்றும் பல்வேறு ஸ்தாபனங்கள் முதலாவது சர்வதேசியத்தில் சேர்ந்தன சர்வதேசியத்தில் சேர்ந்த சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் தேசியக் கிளைகள் பல்வேறு நாடுகளில்நிறுவப்பட்டுகுறுகியகாலத்துக்குள் சர்வதேசசங்கம் பரந்த சர்வதேச தொழிலாளர் இயக்கமாக மாறியது. அதன் காங்கிரஸ் அதன் பிரதான நிர்வாக அமைப்பாக மாறியது. காங்கிரஸு களுக்கு இடைப்பட்ட காலங்களில் லண்டனில் கூடிய பொதுச் சபை சர்வதேச நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கியது. பொதுச் சபையின் அரசியல் தலைவராகக் கார்ல் மார்க்ஸ் திகழ்ந்தார். அவரது எழுத்துகள் அதற்கு உற்சாகவேகம் வழங்கின.

சித்தாந்தப் பணியில் ஈடுபட்டிருந்த மார்க்ஸ் தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்த சாதாரண தொழி லாளர்கள் மத்தியில் தமது அன்றாட நடைமுறை புரட்சி நடவடி க்கைகளை ஒருபோதும் கைவிட வில்லை. அவரது தலைமையின் கீழ், பொதுச் சபை சர்வதேசத் தொழிலாளர் வர்க்கத்தின் போர்க் குணம்வாய்ந்ததலைமைப்பீடமாகமாறியது. சர்வதேசசங்கம்,தொழி லாளர் வேலை நிறுத்த இயக்கத்துக்கு —அரசியல் வழிகாட்டலும், பொருளுதவியுமாக—உற்சாக உதவி வழங்கியது. அக்கால கட்டத் தில் பிரிட்டன், சுவிட்ஸர்லாந்து, பெல்ஜியம் போன்ற பல நாடுகளில் வேலைநிறுத்தங்கள் நடத்தப்பட்டன. சர்வதேசசங்கத்தின் உதவியும் வழிகாட்டலும், பல வேலைநிறுத்தங்கள் வெற்றிகளை ஈட்டவும், தம் எஜமானர்களிடமிருந்து முக்கியமான சலுகைகளைப் பெறவும் வழிசமைத்தன. இவ்வுண்மை தொழிலாளி வர்க்கத்தின்மத்தியில் சர்வதேசசங்கம் உறுதிபெறவும், அதன் அதிகாரம் விரிவடையவும் உதவியது. சர்வதேசசங்கத்தின் ''சகல நாடுகளதும் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்'' என்ற சுலோகத்தை நடை முறையில் சாதிப்பதற்காக பாடுபடுவதன் மூலம் எவ்வளவு சாதிக்க முடியும் என்பதை சம்பவங்கள் இப்பொழுது தொழிலாளர்க் குணர்த்தின.

சர்வதேசசங்கத்தின் பிரதான சாதனைகளிலொன்று தொழிற் சங்கப் பிரச்னையில் அது வகுத்தெடுத்த தெளிவான மார்க்கம், அற்பப் பொருளாதாரச் சலுகைகளை வென்றெடுப்பதற்கான கருவி

களாக மட்டும் சங்கத்தைக் கருதிய இங்கிலாந்தின் சனுதனப் போக்கு கொண்ட சங்க வாதிகளிலிருந்து தொழிற் சங்கங்களைப் பொதுவாகத் தேவையற்ற சுமையாகவும், தொழிலாளர்களுக்கு ஆபத்தானவையாகவும், கருதிய பிரான்சின் பிருடொனிஸ்ட்டுகள் வரை இப்பொது விஷயத்தில் பல்வேறு நாடுகளிலும் அநேகம் குளறுபடிகள் காணப்பட்டன. அன்றுடப் போராட்டத்தில் தொழிற் சங்கங்களின் மகத்தான மதிப்பைச் சர்வதேசியம் கண்டு கொண்டது. தொழிலாளி வர்க்கத்துக்குக் கல்வி யூட்டும் வலிமை மிகு சக்தியாகவும் அதைக் கண்டதே, பாட்டாளி வர்க்க விடுதலைக்கான போராட்டத்தில் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அதைக் கருதியது. தொழிற் சங்கங்களை "தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படை மூலம்" என மார்க்ஸ் நீண்டகாலமாகக் கருதி வந்தார். அவரால் எழுதப்பட்ட தொழிற்சங்கப் பிரேரணை இவ்வாறு குறிப்பிட்டது; "மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான கொரில்லாப் போரில், தொழிற் சங்கங்கள் இன்றியமையாதனவாகிவிட்ட தென்ருல், வேதன உழைப்பு முறையையே அழித்தொழிக்க வகை செய்வதற்கு சீர்படுத்தப்பட்ட அமைப்புகளாக அவை அதைவிட அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்." அவை காட்டிவந்ததை விடவும் அதிகமாக அரசியல் நடவடிக்கையில் கவனம் காட்டுமாறும், அத்துடன் தொழிற் திறனற்ற விவசாயத் தொழிலாளர்களையும் அவற்றின் அணிகளில் சேர்த்துக் கொள்ளுமாறும் றொழிற்சங்கங்களைப் பிரேரணை வலியுறுத்தியது. முதலாவது அகிலத்திஞல் வகுத்தெடுக்கப்பட்ட தொழிற் சங்கக் கோட்பாடு, முதலாளித்துவ உலகம் முழுவதிலும் இன்னும் மார்க்ஸிஸத் தன்மை வாய்ந்ததாகவேக் காணப்படுகின்றது.

உடனடியாகப் போராடிப் பெற வேண்டிய அரசியல் குறிக்கோளாக சட்டபூர்வ 8 மணித்தியாள வேலையை அங்கீகரித்தமை அகிலயத்தின் முக்கியமானதோர் நடவடிக்கையாகும். அவ்வேளையில் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 10 மணித்தியாள வேலைக்ாகவேப் போராடிக் கொண்டிருந்தனர். இந்நடவடிக்கை அவர்கள் போராடியடைவதற்கானதோர் உயர்ந்த இலக்கை அமைத்துக் கொடுத்தது. நாளொன்றுக்கு 8 மணித்தியாளவேலையை ஓர் அடிப்படைச் சர்வதேசக் கோரிக்கையின் தரத்துக்கு உயர்த்தியபடியால் அதைத் தொடர்ந்த தசாப்தங்களில் அது மிகப் பெரும் முக்கியத்துவம் பெற விருந்தது. பெண்கள் இரவில் வேலை செய்ய வேண்டிய நிலை ஒழித்துக் கட்டப்படல் வேண்டுமென்றும், உற்பத்தித் தொழிற் துறையில் பெண்களும், சிறுவர்களும் வேலை செய்வதற்குச் சட்டதிட்டம் வகுக்கப்படல் வேண்டுமென்றும் அகிலம் கோரிக்கை யெழுப்பியது.

சித்தாந்தஸ்தாபன ரீதியான கண்ணேட்டத்தில் முதலாவது அகிலம் அதிகம் நெருங்கப் பிணைக்கப்பட்ட செல்வாக்குமிக்க ஸ்தாபனமாக மாறவிருந்தது. உழைக்கும் வர்க்கத்தை ஒடுக்குவோருக்கெதிரான விடுதலை போராட்டம் இப்போது கவனத்தை ஈர்க்கக்கூடிய உச்சங்களை அடைந்திருந்தது.

1869ன் இறுதியில் பிரான்சுக்கும், ரஷ்யாவுககும் இடையிலான யுத்த மேகங்கள் அதிகரிக்கத் தொடங்கின. 'போனப்பார்ட்டும், பிஸ்மார்க்கும் யுத்தம் வேண்டுமென்றனர். அதற்கான முஸ்தீப்புகளில் அவர்கள் ஈடுபட்டனர். சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் சபை, பிரெஞ்சு-ஜெர்மன் யுத்தமொன்று மூளக்கூடிய அபாயம் பற்றி நீண்டகாலமாக தொழிலாளர்களை எச்சரித்து வந்திருந்தது. அதிகரித்துவந்த மோதல் திடீரென்று வெடித்த போது, நான்கு நாட்களின் பின்னர், 1870 ஜூலை 29ந் திகதி அது தொழிலாளரது சர்வதேச ஒருமைப்பாட்டைக்கோரி அறிக்கையொன்றை வெளியிட்டது. மார்க்ஸினால் வரையப்பட்ட அறிக்கை யுத்தத்துக்காக பிரான்சினதும், ஜெர்மனியினதும் ஆட்சியாளர்களைக் குற்றஞ் சாட்டியது. பிற்போக்கு ரஷ்யா அதன் கிழக்கு எல்லைகளில் தலை நீட்டிக்கொண்டிருக்க, ஜெர்மனி பாதுகாப்பு நிலைக்கு யுத்தத்தில் தள்ளப் பட்டிருக்கிறதென அது குறிப்பிட்ட அதே வேளையில், யுத்தம் நாடு பிடித்தலாக 'மாறக்கூடிய அபாயம் குறித்து அது ஜெர்மன் தொழிலாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தது.

பல்வேறு நாடுகளில் தொழிலாளர்கள் உயர்ந்த சர்வதேசியப் பண்புகளை வெளிக்காட்டினர். ஜெர்மனியில் லீய்ப்னெக்ட்டும், பெபலும், யுத்தக் கடன்களுக்கெதிராகப் பாராளுமன்றத்தில் வாக்களித்து அதற்காகச் சிறை சென்றனர். பிரமாண்டமான கூட்டங்களை நடத்திய ஜெர்மன் தொழிலாளர்கள் ''பிரான்சு தொழிலாளர்களால் எம்மை நோக்கி நேசக்கரம் நீட்டப்பட்டமைக்காக மகிழ்கிறோம்'' என்றனர். பிரான்சில் இதே போன்ற சர்வதேச உணர்வு காணப்பட்டது. ஜெர்மன் தொழிலாளர்களோடு அவர்கள் ''கலைக்க முடியாத ஐக்கியத்துவத்தை'' பிரதிக்ஞை செய்தனர். ஐக்கிய அமெரிக்காவில் குடியேறியிருந்த தொழிலாளர்கள் மத்தியிலும் யுத்த எதிர்ப்பு அறிக்கைகள் பரவலாக விநியோகிக்கப்பட்டன. யுத்தத்தை ஆட்சேபித்து பிரெஞ்சு—ஜெர்மன் தொழிலாளர் கூட்டாகச் சேர்ந்த கூட்டங்கள் நடத்தப்பட்டன.

நன்கு தயார் நிலையிலிருந்த ஜெர்மன் படைகளால் யுத்தம் வேகமாக உச்ச நிலையை அடைந்தது. பிரெஞ்சுப் படைகள் ஒன்று மாறி ஒன்றாக விக்கினமானத் தோல்விகளைக்கண்டன. ஆறு வாரங்களில் யுத்தத்தின் தரைக் கட்டம் முடிந்தது. 1870 செப்டெம்பர் 2ல், ஸீடனில் வைத்து போனபார்ட்டும் அவரது படைகளும் நிபந்தனையின்றிச் சரணடைந்தன.

ஸீடன் சம்பவம் பற்றிய செய்தி பாரிஸை எட்டியதும் மக்கள் வெகுண்டெழுந்தனர். 1870 செப்டெம்பர் 4ந் திகதி அவர்கள் போனபார்ட் ஆட்சியைத் தூக்கியெறிந்துவிட்டு குடியரசொன்றை நிறுவினர். 1871 பெப்ரவரி 8ல் தெரிவுசெய்யப்பட்ட புதிய அசெம்பிளி, எவ்வாறிருந்தபோதிலும் மூன்றில் இரண்டு பங்கு முடியரசுவாதிகளையும், மூன்றில் ஒருபங்கு குடியரசுவாதிகளையும், தொழிலாளி வர்க்கத்துக்கு விவகாரங்கள் ருசிக்கும்படிச் செய்வதற்கு ஒரு சில குட்டி பூர்ஷுவாக்களையும் உட்படுத்தியதாய் இருந்தது.

ஜெர்மன் ராணுவம் பாரிஸின் சுவர்களையடைந்து நகரை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தது. அதனுள் சுமார் 200,000 நன்கு ஆயுதந்தாங்கிய படைகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்ததாலும் பாரிஸ் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்ட உணர்வுகளை நன்கறிந்ததாலும் பிஸ்மார்க் பாரிஸைத் தாக்குவதற்குத் தயங்கினார். பிரதானமாகத் தொழிலாளர்களைக் கொண்ட தேசியக் காவற்படையால் பெரும்பாலும் அமைந்த பாரிஸ் துருப்புகள் 25 உறுப்பினர்களைக் கொண்ட மத்தியக் குழுவொன்றை பெப்ரவரி 15ல் தெரிவு செய்தன. முற்றுகையிடப்பட்ட பாரிஸை அது பெரிதும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. புரட்சிவாத பாட்டாளி வர்க்கத்துக்கு அஞ்சி நகரை ஜெர்மனியின் கையில் ஒப்படைத்துவிட ஆவலாயிருந்த தியர்ஸ் அரசாங்கத்தின் சதிமுயற்சிக் கெதிராக தேசியக் காவற்படை விசேஷமாக ஜரூராயிருந்தது. பாரிஸை விட்டுக் கொடுப்பதற்குச் சம்மதித்து பெப்ரவரி 26ந் திகதி போர்நிறுத்த ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது அரசு.

கலகக் குமுறல் கொண்ட பாரிஸைச் சரணடையச் செய்யும் நோக்குடன், தியர்ஸ் மார்ச் 18ந் திகதி தனது படைகளை ஜெனரல் வின்ஸி தலைமையில், தேசியக் காவற்படையின் 250 பீரங்கிகளைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபடுத்தினான். முற்றுகையிடப்பட்ட, பஞ்சத்தினால் பாதிப்புற்ற பாரிஸ் வெகுண்டெழுந்து செயலில் குதிக்கும்வரை இத்திட்டம் வெற்றியளிப்பதுபோல் தென்பட்டது. பெண்கள் முன்னணி ஸ்தானம் வகிக்க, மக்கள் சதகாதர உறவாடலாலும், தாக்குதலாலும் முற்றுகையைத் தடுத்தனர். பதினொரு மணியளவில் தியர்ஸின் படைகள் முற்றிலும். முறியடிக்கப்பட்டு நகரம் தொழிலாளர் கைகளுக்குள் வந்தது சண்டையில் இரண்டு அரசாங்கத் தளகர்த்தர்கள் கொல்லப்பட்டனர். ஹோட்டல் டி வில்லாலேயின்மீது செங்கொடி கம்பீரமாய்ப் பறந்தது. தேசியக் காவற்படையின் மத்தியக்குழு இடைக்கால அரசாங்கமாகக் கடமை புரிந்தது. ''பாரிஸ் பாட்டாளிகள் ஆளும்வர்க்கங்களின் தோல்விகளுக்கும், தேசத்துரோகங்களுக்கும் மத்தியில். பொதுவிவகாரங்களை நடத்துவதை தங்கள் சொந்தக் கைகளில் எடுத்துக் கொள்வதன் மூலம் நிலைமையைச் சமாளிப்பதற்கான நேரம் வந்துவிட்டதென்பதை உணர்ந்து விட்டனர்.'' என மத்தியக் குழு பிரகடனஞ் செய்தது.

சர்வஜன ஆண்கள் வாக்குரிமையின் அடிப்படை மீது சட்ட நிருபண, நிர்வாக அமைப்பாகக் கம்யூன் விளங்கியது. சகல உறுப்பினர்களும் விலக்கப்படக் கூடியவிதியின்கீழ் வந்தனர். பாரிஸ் பொது மாதிரியாக விளங்கியது. பிரான்சின் சகல நகரங்கள், பட்டினங்கள், கிராமங்களிலும் இத்தகைய கம்யூன்களை நிறுவுவதே புரட்சித்திட்டம். யாவும் அவற்றின் பிரதிநிதிகளை பாரிஸில் தேசிய பிரதிநிதிகள் சபைக்கு அனுப்பவேண்டியிருந்தது. இவ்வமைப்பு ''கிராமப்புற உற்பத்தியாளர்களை, அவர்களின் மாவட்டங்களைச் சேர்ந்த மத்திய நரகங்களின் புத்திரீதியான தலைமையின் கீழ் கொணர்ந்து தொழிலாளர்களிடையே, அவர்களது நலன்களின் உண்மையான பாதுகாவலர்களைத் தேடிக்கொடுத்தது'' என மார்

க்ஸ் கூறுகிறார். பாட்டாளி வர்க்கத்தின் தலைமைத்துவமான புரட்சிப் பாத்திரத்தின் தெளிவான அங்கீகரிப்பாம்:

கம்யூனின் அடிப்படைப் பலஹீனங்கள் தொழிலாளர்களுக்குக் கட்சியொன்றின்மையும் திட்டமொன்றின்மையுமே; போராட்டத்தின் விளைவால் ஏற்பட்ட புரட்சியும், அரசாங்கங்களும் யாவும் முன்னேற்பாடற்றவைகளாயமைந்தன. மக்களின் பெயரால் இயங்கிய மத்தியக் குழு 18ந் திகதியே செய்திருக்க வேண்டியது யாதெனில் அன்றையதினம் பாரிஸிலிருந்த தியர்ஸ் அரசாங்கத் தலைவர்களைக் கைது செய்து, பிற்போக்கு அரசின் ஆசனமாக விளங்கிய வர்ஸய்ல்ஸ் மீது அணிதிரண்டு சென்றிருக்க வேண்டும். கலகத்தின் காரணமாக அரசாங்கச் சக்திகள் பெரிதும் நம்பிக்கையிழந்து போயிருந்தன. சரியான தாக்குதலொன்று நடத்தப்பட்டிருப்பின் அவை அதைத் தாக்குப்பிடித்து நின்றிராது என்பதைக் பின்னர் தியர்ஸ் ஒப்புக்கொண்டான். எனினும், துரதிர்ஷ்டவசமாகப் பின்னர் கம்யூனுக்குப் பாதகமாக அமையும் வகையில் அவர்களது படைகளைப் புனரமைத்துக் கொள்வதற்கு அவர்களுக்குப் போதிய நேரம் வழங்கப்பட்டது.

ஏப்ரில் 19ல் கம்யூன் அதன் முதலாவது திட்ட அறிக்கையை வெளியிட்டது. இது பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சியின் சட்டகத்தினுள் அமைந்திருந்தது. ''குடியரசின் அங்கீகாரத்தை, உறுதிப்பாட்டை, கம்யூனின் பூரண சுயாதீனம் பிரான்சின் சகல பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுவதை, இதனால் ஒவ்வொன்றுக்கும் அதன் உரிமைகள் உத்திரவாதம் செய்யப்படுவதை, மனிதன் என்ற முறையிலும், பிரஜையென்ற முறையிலும், உற்பத்தியாளன் என்ற முறையிலும் ஒவ்வொரு பிரெஞ்சு மகனும் அவனது ஆற்றலையும், திறனையும் முழுமையாக வெளிப்படுத்துவதை'' திட்ட அறிக்கை கோரியது. அப்புறம் அது தேவையான சிவில் உரிமைகளை வரையறுத்துக் கூறியது. மேலும், ''பாரிஸினால் அவாவுறப்படும் அரசியல் ஐக்கியம், சகல ஸ்தல முன்முயற்சிகளையும் சம்பந்தப்படுத்தும் இஷ்டபூர்வமான இணைப்பாகும்; நல்வாழ்வு, சுதந்திரம், மக்களின் பாதுகாப்பு ஆகிய பொதுக் குறிக்கோளுடன் எழும் சகல தனிச்சக்திகளின் சுயேச்சையான ஒத்துழைப்பாகும்.''

மார்க்ஸ், எங்கல்ஸின் நேரடியான உற்சாக உந்துதலின் கீழும், தலைமையின் கீழும் அகிலத்தின் பல்வேறு பகுதிகளும், கம்யூனுக்கு, சாத்தியமான உதவிகள் யாவையும் வழங்கின. பாரிஸில் அகில வாதிகள் உற்சாகத்துடன் செயல்பட்டனர். புரட்சி தொடங்கி மூன்று வாரங்களுக்குப்பின் கூஜல்மானுக்கு எழுதுகையில் மார்க்ஸ் தற்போதைய பாரிஸ் எழுச்சி—பழைய சமுதாயத்தின் ஓநாய்கள், பன்றிகள், விசர் நாய்களினால் நசுக்கப்பட்டாலும் — பாரிஸில் ஜூன் கலகத்துக்குப் பின்னர் நிகழ்ந்த நமது கட்சியின் மகத்தான சாதனையாகும்.'' எனப்பறைந்தார். பாரிஸியர்கள் ''சுவர்கத்தின் வாயிலை முற்றுகையிட்டனர்'' என்று அவர் பறையறைந்தார். பல்வேறு பிரிவுகள் கோஷ்டிகள் மத்தியில் பேதங்கள்; பிரான்சின் ஏனைய பகுதிகளிலிருந்து தனிமைப்பட்டமை

உட்படப் பல குறைபாடுகளைக் கம்யூன் கொண்டிருந்தது. தெளிவான திட்டமின்மை, உறுதியாக அமைக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின்மை முதலியனவும் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை கம்யூனின் கழுத்தில் பாராங்கல்போல் தொங்கிக் கொண்டிருந்தது. மேலும், 72 நாட்கள் மற்றுமே நீடித்த கம்யூன், உருவாகி வந்த உள்நாட்டு யுத்தமொன்றுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. ஆயுளுடன் இருப்பதற்குப் போராடும் அதேவேளையிலும் கம்யூன் பல ஆக்க பூர்வமான சாதனைகளைப் புரிந்தது. உண்மையான கலங்கரை விளக்காக நின்று சோஷலிஸம் நோக்கி தொழிலாளர்களுக்கு வழிகாட்டக் கூடிய வகையில் தன் பெயரை அழிக்கமுடியாதவாறு சரித்திரத்தில் பதியச் செய்வதற்கு இச்சாதனைகளேப் போதுமானவையாய்த்தென்பட்டன.

அதன் பிரதான அரசியல் தீர்மானங்களாக, கம்யூன் மக்கள் ராணுவத்துக்கு ஆதரவாக, நடைமுறையிலிருந்த ராணுவத்தைக் கலைத்தது; போலிஸிடமிருந்து அரசியல் அம்சங்களை நீக்கியது; எல்லா அதிகாரிகளையும் தொகுதிகட்குப் பொறுப்பாளிகளாக்கியது; வருடாந்தம் 6,000 பிராங்குகளை உச்சகட்ட சம்பளமாக்கியது. நீதியரசர்களை நியமித்துக் கட்டுப்படுத்தியது, இலவசப் பொதுக் கல்வியை நிறுவியது; சிரச்சேத யந்திரத்தைச் தீயிலிட்டது.வெடொமே ஸ்தூபியை ராணுவவாதத்தின்சின்னமென பெயர்தெறிந்தது. பல பொருளாதார சமூக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன—பேக்கரிகளில் இரவு நேர வேலை ஒழித்துக் கட்டப்பட்டது; வேலைத்தளங்களில் வேலை கொள்வோன் அபராதம் விதிக்கும் முறை ரத்து செய்யப்பட்டது. அடகுக் கடைகள் மூடப்பட்டன. மூடப்பட்ட தொழிற் கூடங்கள். தொழிலாளர் கூட்டுறவுகளால் நடத்தப்படுவதற்காகக் கைப்பற்றப்பட்டன: பெருந்தொகையினரான வேலையற்றோருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது: தொழிலாளர் புள்ளிவிவரப்பகுதி யொன்று அமைக்கப்பட்டது. குடியிருப்புகளையும் பங்கீடு செய்து கடன்காரர்களுக்கு உதவி வழங்கியது. இப்பணிகள் யாவும் ஆழ்ந்த சர்வதேச உணர்வுடன் மேற்கொள்ளப்பட்டன. உலகப் புரட்சி இயக்கத்தின் செங்கொடியை குழு தனது கொடியாகக் கொண்டிருந்தது.

ஏப்ரில் தொடக்க மளவில் உள்நாட்டு யுத்தம் மூளத் தொடங்கி விட்டது. கம்யூனைச் சேர்ந்தவர்கள் வீரஞ்செறிந்த, ஆனால் தோல்வியில் முடிந்த சண்டையில், ஈடுபட்டனர் தியர்ஸுடைய சக்திகள் மிருகத்தனமான பொய்களையும், இருட்டடிப்புகளையும் கையாண்டு பிரான்சின் பெரும்பகுதியான விவசாயிகளை கம்யூனுக்கெதிராக அணிதிரட்டினர். வர்ஸய்ல்ஸ் அரசாங்கத்துக்கு உதவுவதற்காக பிஸ்மார்க்கும் யுத்தக்கைதிகளான 100,000 பிரெஞ்சு விவசாயிகளை விடுதலை செய்தான் மே 21ல் வர்ஸய்ல்ஸ் துரும்புகள் பாரிஸில் புகுந்தன இரத்தம் சிந்திய போராட்டம் 8 நாட்கள் நீடித்தன. பலத்த சோதனைகளுக்கிடையே கம்யூன் வாதிகள் வீதி, வீதியாகத் தாக்குப்பிடித்து நின்றனர். மே 28ம் திகதி அவர்களது கடைசித் தாக்குப்பிடிப்பும் பெரேலா ஷேஸ் பெல்லேவில்லேஅடக்கஸ்தலம், மற்றும் பல தொழிலாளர் மாவட்டங்களில் முறியடிக்கப்பட்டது. கம்யூன் நசுக்கப்பட்டது.

ஐரோப்பாவின் பிற்போக்கு ஆட்சியாளர்கள் பாரிஸில் நிகழ்ந்த சங்காரத்தை தயிட்டுக் களித்துக் செய்திகள் வந்து குவிந்தன. மற்றைய நாடுகளிலும் சோஷலிஸத்தைத் துடைத்தெறிவதற்கான அடக்குமுறைகளை அவர்கள் கட்டவிழ்த்து விட்டனர். குறிப்பாக பிரான்சில் "பூர்ஷுவாக்கள் திருப்தியடைந்தனர். 'வெகுநீண்டகாலத்துக்கு நாம் இப்போது சோஷலிஸத்தைத் தீர்த்துக் கட்டிவிட்டோம்' என அவர்களின் தலைவன், இரத்த வெறிக்குள்ளன், தியர்ஸ், அவனும் அவனது தளபதிகளும் பாரிஸ் பாட்டாளிவர்க்கத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தபின் கூறினன். எனினும் இப் பூர்ஷுவாக்காகங்கள் கரைந்தமை வீணேயாம். கம்யூன் நசுக்கப்பட்டு ஆறுவருடங்களின் பின், அதன் போராளிகள் அனேகர் இன்னும் வெஞ்சிறையில் வாடிக்கொண்டு, அல்ல தீவாந்திரவாசம் அனுபவித்துக் கொண்டு இருக்கும்போது பிரான்சில் புதியதொரு தொழிலாளர் இயக்கம் மலர்ச்சியுற்றது" என்கிருர் லெனின்.

பாரிஸ் கம்யூன், அது இறுதியாகத் தூக்கியெறியப்பட்ட போதிலும், உலகத் தொழிலாளிவர்க்கத்தின் முதலாவது உண்மையான புரட்சிவாகையாகும். அது முதலாளித்துவ அமைப்பில் முதலாவது கீறலை உண்டுபண்ணியது. அரைநூற்ருண்டின் பின்னர் மாபெரும் ரஷ்யப் புரட்சி அதைத் தொடர்ந்து உலக முதலாளித்துவத்தின் மதில்களில் பழுது திருத்த முடியாத மாபெரும் உடைசலை உண்டு பண்ணவிருந்தது. அதன் தவறுகள் யாவுடனும், கம்யூன் "பத்தொன்பதாம் நூற்ருண்டின் மாபெரும் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மாபெரும் உதாரணமாகும்" என்ருர் லெனின்.

பாரிஸ் கம்யூனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து முதலாவது அகிலம் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் பெருகிவரும் துன்புறுத்தல்களுக்கு ஆளாகியது, கம்யூனின் வீழ்ச்சிக்குப் பின்னர் அவ்விஸ்தாபனத்தைப் பாதித்த உள் பிரச்சினைகள் பொலிஸ் துன்புறுத்தல்களை விடவும் படுபயங்கரமாகவிருந்தன. மார்க்ஸிஸ்ட்டுகளுக்கும், பகூனிஸ்டுகளுக்கும் இடையே வெடித்த சித்தாந்தப் போராட்டமே இப்பிரச்சினை. சில வருடங்களில் சர்வதேச தொழிலாளர் சங்கம் ஆயுளொழிந்தது. முதலாவது அகிலம் அது அமைக்கப்பட்டிருந்த வகையில் புதிய சகாப்தத்தின் திட்டவட்டமான பணிகளை நிறைவேற்ற முடியவில்லை. இது சம்பந்தப்பட்ட நாடுகளில் வளர்ந்து வந்த இளம் இயக்கங்களது பிரதான பணியாக் அமையவேண்டியிருந்தது. சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் அனுபவம், நிர்க்கண்டமான பகுதிகள் வலுமிக் மார்க்ஸிஸ்ட் சர்வதேச தலைமையொன்றை உருவாக்கும் வகையில் இன்னும் வளர்ச்சியுறவில்லையென்பதைக் காட்டியது. இதைக் குறிப்பிட்டு லெனின் சொன்ஞர்: "முதலாவது அகிலம் அதன் வரலாற்றுப் பணியை முடித்துக் கொண்டு, உலகின் சகல நாடுகளிலும் தொழிலாளர் இயக்கத்தின் எல்லையற்றப் பெரும் வளர்ச்சியின் சகாப்தமொன்றுக்கு பெயரிட்டுச் சொல்வதாயின், அதன் விஸ்தரிப்பின் தனித்த தேசிய ராஜ்யங்களின் அடிப்படையில் சோஷலிஸ பாட்டாளி வர்க்க வெகுஜனக் கட்சி உருவாக்கத்தின் சகாப்தத்துக்கு இடம்விட்டுக் கொடுக்க நேர்ந்தது."

பிரதான முதலாளித்துவ நாடுகளில் இது வேதனத் தொழிலாளர்களது எண்ணிக்கையில் பிரமாண்ட அதிகரிப்பின் காலமாக விளங்கியது. தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகளில் குறிப்பாக வேலைத்திறன் வாய்ந்த தொழிலாளர்கள் விஷயத்தில், அற்ப முன்னேற்றத்தின் காலமாகவும் அது விளங்கியது. பிரதான நாடுகளின், குறிப்பாக இங்கிலாந்தின், பெரும் முதலாளிகள் தொழிலாளிவர்க்கத் துரைத்தனத்தாரை அற்பச் சலுகைகளால் கெடுக்கும் முயற்சிகளில் ஏற்கனவே இறங்கிவிட்டனர். இவ்வாறு அவர் தொழிலாளிகளது போராட்ட ஒருமைப்பாட்டை பிளவு படுத்தியும், ஸ்தம்பிக்கச் செய்தும் வந்தனர்.

இது தொழிலாளி வர்க்க எழுச்சிகளினதும் பூர்ஷுவா புரட்சிகளினதும் காலகட்டமாக இல்லாது இருந்தபோதிலும், அதேவேளை அளவிலும், கட்டுப்பாட்டிலும், கட்டமைப்பிலும், கால நீட்சியிலும் உதாரணம் காட்ட முடியாத அநேகம் வேலைநிறுத்தங்களது காலகட்டமாகவும் இருந்தது. இது பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் உண்மையாக விருந்தது. எனினும் விசேடமாக ஐக்கிய அமெரிக்காவில் 1877ல் அங்கு நடந்த தீவிரமான பொது ரயில்பாதை வேலைநிறுத்தத்துடன்னும் 1886ல் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேசிய எட்டு மணித்தியாள வேலை நிறுத்தத்துடனும் இதுவே உண்மை நிலையாக விருந்தது. மற்றும் பல வேலைநிறுத்தங்கள் மத்தியில், இங்கிலாந்தில் அதன் சகாப்த மாறுதலைக் கொணர்ந்த 1889ம் ஆண்டைய துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் இடம் பெற்றது. ரஷ்யாவிலும், தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாகத திரளவும், வேலைநிறுத்தஞ் செய்யவும் தலைப்பட்டனர். ஐந்தாண்டு கால கட்டத்துள் (1881—86) அந்நாட்டில் 48 வேலைநிறுத்தங்கள் இடம் பெற்றன. இவற்றில் 80,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். இவையாவும் வன்முறையாக அடக்கி நசுக்கப்பட்டன.

இக்காலகட்டத்தில், இதற்கமைய, முதலாளித்துவம் வளர்ச்சி பெற்றிருந்த நாடுகள் முழுவதிலும் தொழிற்சங்க இயக்கம் பெரிதும் விரிவடைந்தது. சம்பந்தப்பட்ட நாடுகளில் சோஷலிஸக் கட்சிகளின் ஸ்தாபிதத்தாலும் இக்கால கட்டம் குறிக்கப்பட்டது, முதலாவது கட்சி ஜெர்மனியில் 1869ல் உருவாகியது. இதைத் தொடர்ந்து சோஷலிஸக் கட்சிகள் துரிதவேகத்தில் 1870ல் ஒல்லாந்தில், 1871ல்டென்மார்க்கில், 1872ல் பொஹீமியாவில், 1876ல் ஐக்கிய அமெரிக்காவில், 1879ல் பிரான்ஸில், 1879ல் ஸ்பெயினில் 1880ல் இங்கிலாந்தில் (குழு), 1883ல் ரஷ்யாவில் (குழு), 1887ல் நோர்வேயில், 1889ல் ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டன. பின்னர் உருவாக்கப்பட்ட கட்சிகளின் திகதிகள் ஆஸ்திரேலியாவும் பின்லாந்தும் 1890ல், போலந்தும் இத்தாலியும் 1892, பல்கேரியா, ஹங்கேரி, சிலி 1893ல் ஆர்ஜன்டீனு 1896ல்ஜப்பான்1901ல் ஸேர்பியா1903ல் கனடா1904 சீனு1911 பிரேஸில்1916ல் ஆரம்பகால சோஷலிஸக் கட்சிகள் பெரும்பாலும் முதலாவது அகிலத்தின் அமைப்புகளிலும், கோஷ்டிகளிலுமிருந்தே பிறவியெடுத்தன. சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின்

காலகட்டத்தின்போதை விடவும் அதிகமான நாடுகள் இவ்வாறு இப்புதிய சர்வதேச இயக்கத்தைத் தழுவின.

புதிய கட்சிகளில் அனேகம், தொழிற்சங்கங்களைப்போல் அரசாங்கங்களினுல் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகின. இவ்விஷயத்தில் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் அனுபவ ஈடிணையற்றதாகும். ஜெர்மன் கெய்சருக் கெதிராக மேற்கொள் ளப்பட்ட இரண்டு கொலைத் தாக்குதலைப் பயன்படுத்திக்கொண்டு (இதற்கும் சோஷலிஸ்ட்டுகளுக்கும் எதுவித சம்பந்தமும் இருக்க வில்லை) சான்ஷலர் பிஸ்மார்க் அபக்கியாதியான சோஷலிஸ எதிர்ப்புச் சட்டங்களின் கீழ் கட்சியை சட்டவிரோதமாக்கியதன் மூலம் அதை அழித்தொழிக்க முயன்றுன். 1878 அக்டோபரி லிருந்து 1890 இறுதிவரை சட்டவிரோதக் காலகட்டம் நீடித்தது. இக்காலகட்டத்தின்போது சோஷலிஸ ஸ்தாபனங்களும், கூட்டங் களும் தடைசெய்யப்பட்டன. பல தலைவர்கள் நாடுகடத்தப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டனர்; கட்சிப் பத்திரிகைகள் தடைசெய்யப் பட்டன. தனது திட்டத்தின் மறு அம்சமாக பிஸ்மார்க் தொழி லாளருக்குத் துணிக்கைகளாக எலும்புக்கூடான சமூகக் காப்புறுதி முறையொன்றுக்கு இணங்கினுன். கட்சி அதன் சம்மேளனங்களை வெளிநாட்டில் நடத்தியது. ரகசியமாகப் பத்திரிகைகளையும் நடத் தியது. பிஸ்மார்க்குடைய கொடுங்கோன்மை, தந்திரம் இவற்றுக் கிடையிலும் கட்சி வளர்ந்தது. அதன் தேசிய வாக்குகள் 1878ல் 493,000த்திலிருந்து 1890ல் 1,427,000மாக அதிகரித்தது. இவ் வெற்றிகள் பிஸ்மார்க்கை ராஜிநாமா செய்ய நிர்ப்பந்திந்தடன், சோஷலிஸ்ட்டுகளுக் கெதிரான தடையை அரசாங்கம் நீக்குமாறும் செய்தது. இம்மாபெரும் வெற்றி முழு சர்வதேச இயக்கத்துக்கும் உற்சாகத்தையளித்தது. பிஸ்மார்க்கையும் அவனது பிற்போக்கு சட் டத்தையும் குறிப்பிட்டு எங்கல்ஸ் கூறினுர்: ''பழைய ஆசாமிக்கு நாம் கூலிகொடுப்பவர்களாயிருந்தால் அவன் இதைவிட சிறந்த பணியை எமக்கு ஆற்றமுடியாது''

அகிலத்தைப் புனர்-ஸ்தாபிப்பதற்கு எழுபதுக்களின் பிற்பகுதியிலும், எண்பதுக்களின் முற்பகுதியிலும் மீண்டும் மீண் டும் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. எனினும் மார்க்ஸும் எங்கல்ஸும் இம்முயற்சி பிஞ்சில் பழுப்பதெனநினைத்தனர். அகி லத்தை புதிய அடிப்படைமீது புனர்நிர்மாணிப்பதற்கான நேரம் இறுதியாகக் கனிந்தது. பாரிஸில் 1889ல் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காங்கிரஸில் இயக்கம் கனியவிருந்தது.

இரண்டாவது அகிலத்தை ஸ்தாபித்த காங்கிரஸ் பாரிஸில் 1889 ஜுலை 14ல், மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியில் பஸ்டில் வீழ்ச்சியுற்ற 100வது ஆண்டு நினைவுதின வைபவத்தின் போது ஆரம்பமாகியது. ஜெர்மன் மார்க்ஸிஸ்ட்டுகளால் கூட்டப் பட்டு, பிரெஞ்சு மார்க்ஸிஸ்ட்டுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டம் 20 நாடுகளைச் சேர்ந்த 391 பிரதிநிதிகளை ஒன்று கூட் டியது. இதில் நால்வர் அமெரிக்கர்கள். அந்நாள்வரை, உலகத் தொழிலாளர் வரலாற்றில், இதுவே மாபெரும் சர்வதேசக் கூட்ட மாகும். பேருற்சாகத்தின் மத்தியில் காங்கிரஸ் நடந்தது. மண்ட

பத்தின் குறுக்கே தொங்கவிடப்பட்டிருந்த பதாகைகளில் "1848இனதும் 1871 மார்ச், ஏப்ரல், மேயினதும் பாரிஸின் பெயரால், பாபியூஃப். பிளான்கூய், வார்லின் உடைய பாரிஸின் பெயராலும், இரு உலகங்களையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வாழ்த்துக்கள்" என்ற சுலோகம் பொறிக்கப்பட்டிருந்தது.

காங்கிரஸ் நிறைவேற்றிய மிகவும் குறிப்பிடத்தக்கத் தீர்மானம் மேமுதல்நாளை சர்வதேசத் தொழிலாளர் ஊர்வலத்தினமாக ஸ்தாபித்தலாகும். பிரெஞ்சுப் பிரதிநிதியால் கொண்டுவரப்பட்ட பிரேரணை, எட்டு மணித்தியாள வேலைநேரத்துக்காக 1890 மே 1ம் திகதி அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் நடத்தத் தீர்மானித்திருந்த பொது வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக மொழியப்பட்டதாகும். காங்கிரஸ் தீர்மானம் கூறியது: "வேலைநாளை சட்டபூர்வ எட்டுமணித்தியாளமாகக் குறைப்பதற்கும், பாரிஸ் காங்கிரஸின் ஏனைய தீர்மானங்களை அமுல்படுத்துதற்கும் அரசாங்க அதிகார வட்டாரங்களிடம் எல்லா நாடுகளிலும், எல்லா நகர்களிலும் உழைக்கும் தொழிலாளர்கள் குறிப்பிட்ட தொரு தினத்தில் கோரிக்கை விடுக்கும் வகையில் காங்கிரஸ் மாபெரும் சர்வதேச ஊர்வலமொன்றை நடத்தற்குத் தீர்மானிக்கின்றது. இதுபோன்றதொரு ஊர்வலம் நடத்துவதற்கு ஏற்கெனவே அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் 1888 செய்ன்ட் லூயி மகாநாட்டிகள்போது 1890 மே 1ம் திகதியைத் தெரிவு செய்துவிட்டபடியால் இத்தினம் சர்வதேச ஊர்வலத்துக்கான தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பல்வேறு நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர் ஒவ்வொரு நாட்டிலும் நிலவும் நிலைமைகளுக் கேற்ப ஊர்வலத்தை ஏற்பாடுசெய்ய வேண்டும்." பின்னைய காங்கிரஸ்களில் இத்தீர்மானம் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. மேதினம் ஒழுங்கான ஸ்தாபனமாய் நிறுவப்பட்டது. இவ்வாறு தொழிலாளரது மாபெரும் போராட்ட விடுமுறை நாள் உதயமாகியது.

பின்னர் உலகத்தொழிலாளர்க்கு பல இன்னல்களை விளைவித்த இரண்டாவது அகிலத்தில் காணப்பட்ட வலதுசாரி சந்தர்ப்பவாதப் போக்கு இரண்டு பிரதான ஆதாரங்களைக் கொண்டிருந்தது. அவற்றில் முதலாவதும் மிகவும் பயங்கரமானதும் தொழிற்சங்கங்களின் இருந்த வேலைத் திறன் வாய்ந்த தொழிலாளர்கள் மத்தியிலும், தொழிலாளி வர்க்கத் துரைத்தனத்தார் மத்தியிலும் வளர்க்கப்பட்டது. சம்பளச் சலுகைகளின் மூலம் இவர்களை வேலைகொள்வோர் தொழிலாளிவர்கத்துக்கெதிராக, வேலைநிறுத்தங்களைப் பிசுபிசுக்கச் செய்வதற்கும், தொழிற்சங்கங்களைச் சிறியவைகளாக, பிளவுபட்டவைகளாக வைத்திருப்பதற்கும், வர்க்க உணர்வுக்கெதிராகப் போராடுவதற்கும், சுதந்திரமான தொழிலாளிவர்க்க அரசியல் நடவடிக்கைக் கெதிராகப் போராடுவதற்கும் பயன்படுத்தினர். வலதுசாரி சந்தர்ப்பவாதத்தின் இரண்டாவது ஆதாரம், தொழிலாளிகளது அரசியல் ஸ்தாபனங்களுக்குத் தலைமை தாங்குவதன் மூலம், தொழிலாளிகளின் பிரதிநிதிகளாக, பல்வேறு நகர ராஜ்ய, தேசிய அரசாங்கப் பதவிகளை வகிப்பதன் மூலம் பதவி வேட்டையாடித் திரிந்த பெருவாரியான குட்டிபூர்ஷுவா புத்திஜீவிகள் மத்தியில் காணப்பட்டது. முதலாளி

களுக்கும் குட்டி பூர்ஷுவா வர்க்கத்துக்கும் முக்கியமான மென்மையான சீர்திருத்தத் திட்டமாகத் தொழிலாளர் கொள்கையை மாற்றுவதற்கு அவர்கள் அயராது பாடுபட்டனர்: பொதுவாக, இரண்டாவது அகிலத்தின் ஆயுளின்போது இவ்விரண்டு சந்தர்ப்பவாதப் போக்குகளும், சுதந்திரமாக இணைந்துச் செயல்பட்டன. தொழிலாளிவர்க்க சந்தர்ப்பவாதிகள் பிரதானமாக—எனினும் பிரத்தியேகமாக அல்ல—தொழிற்சங்கங்களில் இயங்கினர்: குட்டிபூர்ஷுவா புத்திஜீவிகள் பெரும்பாலும் அரசியல் துறையில் இயங்கினர். இரண்டு கோஷ்டிகளும், தொழிலாளர் மேற்குடியில் வேரடித்திருந்தன; தொழிலாளிவர்க்க நலன்களை முதலாளிவர்க்க நலன்களுக்கு முற்றிலும் அடிமைப்படுத்த முயன்றன.

இக்காலகட்டத்தின்போது—அதாவது 1914க்கு முன்னர்-ஒப்பு நோக்காகக் கூறுவதாயின் ஒரு சில யுத்தங்களும், புரட்சிகளுமே இடம்பெற்ற காலம்; ஸ்திரமான முதலாளித்துவ அமைப்பொன்று காணப்பட்ட காலம். இதன் விளைவாக—சர்வதேசியம் பெரும்பாலும் சீரமைப்புப் பணியில், கல்விப் பணியில், சோஷலிஸக் கட்சிகளை உருவாக்குவதில், தொழிற் சங்கங்களை, கூட்டுறவு ஸ்தாபனங்களை அமைப்பதில், பொதுவான சூழலில், ரஷ்யாவில் தவிர, ஒப்பு நோக்கலாகக் கூறுவதாயின் மிதமான வர்க்கப்போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது அதன் ''நடைமுறைவாத'' வலதுசாரி தலைவர்களது பிரத்துயேகமான அக்கரை அன்றாட ஜோலியுடன் ஸ்தம்பித்துட்டது.

முதலாளித்துவ உலகமெங்கிலும் தொழிலாளர்கள், வறுமை ஒடுக்குமுறை ஆகிய நிலைமைகளில் அவலமுற்று வாடினர். முந்திய தசாப்தங்களில் யந்திரங்களினாலும், வளர்ச்சியுற்ற முதலாளித்துவ உபாயங்களினாலும் ஏற்பட்ட பிரமாண்டமான உற்பத்திப் பெருக்கம் தொழிலாளர்களது வாழ்க்கை நிலையை சிறக்கச் செய்வதில் அதிக அர்த்தமுள்ளதாகக் காணப்படவில்லை. பிரதான பலாபலன்கள் உற்பத்திச் சொந்தக்காரர்களதும், தேசிய வளங்களின் சொந்தக் காரர்களதும் கஜாவினால் போய்ச் சேர்ந்தன.

உற்பத்தித் தொழில் நிலையங்களில் தொழிலாளர் கொடூரமான நிலைமைகளில் தொழில் புரிந்தனர். வேலையின்மை, வியாதி, வயோதிபம் இவற்றுக் கெதிராக அற்ப நிதிபாதுகாப்பினைக் கொண்டிருந்தனர்; அல்லது நிதி பாதுகாப்பு பெற்றிருக்க வில்லை. வாக்களிக்கும் உரிமை (பெண்களுக்கு அடிக்கடி ஆண்களுக்கு) உட்பட பல அடிப்படை அரசியல் உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டன. சமூக—ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் இவ்வுடனடியானத் தீமைகள் மீது அக்கரை செலுத்தினர். எனினும் இவற்றைப் பிரசவித்த முதலாளித்துவ அமைப்பைத் தாக்குவதற்கு அவர்கள் மறுத்து விட்டனர். இத்தவறுதலே இரண்டாவது அகிலத்தின் சீர்குலைவுக்கு இட்டுச் சென்றது.

இரண்டாவது அகிலத்தின் சாதனைகள், கடுமையான விலை கொடுத்து பெறப்பட்டன; குறிப்பிட்டு சொல்வதாயின்

மார்க்ஸிஸக் கொள்கைகள் கைகழுவப்பட்டன; உடனடியான குறிக்கோள்களை வென்றெடுப்பதில், தலைமை சோஷலிஸத்தின் இறுதி இலக்கை அலட்சியம் செய்துவிட்டது.

நூற்றாண்டின் இருப்பத்தில் இரண்டாவது அகிலத்தின் பொதுவான போக்கு நிச்சயமாக மார்க்ஸிஸத்தை விட்டுத் தூரவில கியதாகவும் வலதுசாரி சந்தர்ப்பவாதத்தை நோக்கி செல்வதாகவும் இருந்தது. இரண்டாவது அகிலத்தின் திரிபுவாதத்தை யெதிர்த்து இடதுசாரியிடமிருந்து வலுவான எதிர்ப்பு வளர்ந்தபோதும் சம்பந்தப்பட்ட நாடுகளுல் ஏகாதிபத்தியம் மேலோங்கிய காலகட்டத்தின் ''செழிப்பு'' ஏற்படுத்திய குட்டிபூர்ஷுவா கானல் மயக்குகளுக்கு இரண்டாவது அகிலத்தின் பிரதான அரசியல் கட்சிகள் பலியாகிக் கொண்டிருந்தன. எதிர்ப்பின் கேந்திரம் ரஷ்யாவிலிருந்தது; அதன் தலைவர் லெனினாக விருந்தார். ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி பிரதான மார்க்ஸிஸ்ட் திரிபுவாத—எதிர்ப்பு சக்தியாக இரண்டாவது அகிலத்தில் விளங்கியது.

இக்காலகட்டத்தில் லெனின் மார்க்ஸிஸத்தின் மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். இரண்டாவது அகிலத்தின் தலைமையிலிருந்த போலி சோஷலிஸ வாதிகள் ஒரேயடியாகப் புதைத்துவிடுவதில் வெற்றிகண்டு விட்டதாக நினைத்திருந்த மார்க்ஸ் ஏங்கல்ஸின் மாபெரும் கொள்கைகளுக்குப் புனர் ஜீவன் வழங்கியது மட்டுமல்லாமல், மார்க்ஸிஸத்தை முன்பைவிட மிக உயர்ந்த கொடுமுடிகளைத் தொடும் வகையில், முதலாளித்துவ அமைப்பின் புதிய ஏகாதிபத்தியக் கட்டத்தில் தொழிலாளர்களது தேவைகளுக்கு ஏற்ப அதைவளர்த்தெடுத்தார் லெனின்.

யுத்தம், இரண்டாவது அகிலத்தின் மீது, சமாதானத்துக்கான நிலையை எடுக்கும் உன்னதப் பொறுப்பைச் சுமத்தியது. தொழிலாளர் நலன்கள் இத்தேவையை வலியுறுத்தியது. சோஷலிஸக் கட்சிகள் யுத்தத்துக் கெதிராகப் போராடுவதுமட்டுமல்லாது அதற்காக ஆட்களும் பணமும் வழங்குவதையெதிர்த்து வாக்களிக்கும்; எல்லாவற்றையும் விடப் பிரதானமாக, ''யுத்தத்தால் உண்டானப் பொருளாதார அரசியற் பிரச்சினைகளை மக்களைக் கிளர்ந்தெழச் செய்வதற்காக உபயோகித்து அதன் மூலம் முதலாளிவர்க்க ஆட்சியை ஒழித்துக்கட்டுவதைத் துரிதப்படுத்தும்'' என சர்வதேசியம் திரும்பத் திரும்பப் பிரகடனஞ் செய்தது, ஆனுல் கடுமையானச் சோதனையின் நேரம் வந்தபோது இரண்டாவது அகிலத்தின் பெரும்பகுதியினர் இப்புனிதப் பிரதிக்ஞைகள் யாவையும் முற்றாகப் புறக்கணித்ததுடன், தொழிலாளி வர்க்கத்துக்குக் காற்ற வேண்டிய புனிதக் கடமைக்கு வெட்கமற்ற முறையில் துரோகமிழைத்தன. தேசிய பூர்ஷுவாக்களைத் துரோகத்தனமாக பின்பற்றி ''தந்தையர் நாட்டின் பாதுகாப்பு'' என்ற ஏகாதிபத்திய வாதிகளின் சுலோகத்தை முழக்கிக் கொண்டு தமது மக்களை ஏகாதிபத்தியக் கசாப்புக்கு இட்டுச் சென்றனர். போல்ஷெவிக்குச் செல்வாக்கு பிரதானமாகக் காணப்பட்ட ரஷ்யா, ஸெர்பியா, ஆகிய இரண்டே இரண்டு நாடுகளில் மட்டுமே உண்மையில் போர் சன்னத்தம் கொண்ட நாடுகளின் சோஷலிஸக் கட்சிகள் யுத்தத்துக்கு ஏதிகார உறுதியாய் நின்றன.

இது சம்பந்தமாக அபிப்பிராயம் வெளியிடுகையில் - லெனின் கூறினார்: ''19ம் நூற்றாண்டின் இறுதியில் புறவயமான நிலைமைகள் எத்தகையதெனில், அவை சந்தர்ப்பவாதத்துக்கு வலுவூட்டின. அமைப்பு வழங்கிய கட்டபூர்வமான பூர்ஷுவா சந்தர்ப்பங்களை உபயோகிப்பதை விட்டுவிட்டு சட்டவழிபாடாகமாற்றின; தொழிலாளி வர்க்கத்தில் துரைத்தனவாத, பிரபுத்துவவாத மென் படலத்தை உருவாக்கியது; அனேக குட்டி பூர்ஷுவா ''வழிபயணிகளை'' சோஷலிஸ— ஜனநாயகக் கட்சிகளின் அணிகளுக்குக் கவர்ந்திழுத்தன; அது சந்தர்ப்பவாதத்தை சமூக குறுகிய தேசியவாதமாக மாற்றியது; அது பூர்ஷுவாக்களோடு சந்தர்ப்பவாதிகளுக்கிருந்த இரகசிய உறவைப் பரகசியமாக்கியது.''

யுத்தத்தில் சந்தர்ந்ப்பவாதிகள் இழைத்த துரோகம் இரண்டாவது அகிலத்தை ஸ்தாபன ரீதியாகவும், சித்தாந்த ரீதியாகவும் பிளவுபடுத்தியது. அனேகம் பொது கட்சிக் கோஷ்டிகள் ஏற்பட்டன; இரண்டு போர்ச்சன்னத்தமான முகாம்களைச் சேர்ந்த, கத்திமுனையிலிருந்த மத்திய சக்திகள், நேச சக்திகள்; பக்கச்சார்பில்லாத நாடுகளைச் சேர்ந்த கட்சிகள்: மற்றைய பட்டியல்களில் சேராத ரஷ்யக் கட்சி ஆதியனவே அவை.

வலது, இடது, மத்திய ஆகியவற்றுக்கிடையிலான சித்தாந்தப் பிரிவினை இரண்டாவது அகிகத்தில் எப்பொழுதுமே ஓர் அம்சமாக இருந்து வந்ததோடு, இது யுத்தத்தினால் பெரிதும் தீவிரமடைந்து, விசேடமாகப் போராட்டம் நீண்டபோது அதன் எதிர்ப்பு திட்டவட்டமான வடிவம் பெறத் தொடங்கியது. மூன்று திட்டவட்டமான சர்வதேச ஸ்தாபனங்களாக வடிவம் பெற்றன புனருத்தாரணம் பெற்ற வலதுசாரி இரண்டாவது அகிலம்; மத்தியப்போக்கினர் இரண்டரை சர்வதேசியம்; கம்யூனிஸ்டுகள் மூன்றாவது உகிலம். வலதுசாரி ரிபிவின் கொள்கை வர்க்கச் சமாதானமும், ஏகாதிபத்தியத்துக்கு முழுமையான ஆதரவுமாகவிருந்தது, மத்தியப்பிரிவு பூர்ஷுவா சமாதானத்தை நாடியது. அதேவேளை இடதுசாரி, முன்னைய தீர்மானங்களின் உணர்வுடன் செயல்பட்டு வெகுஜன யுத்த எதிர்ப்புணர்வை சோஷலிஸத்துக்கான புரட்சிப் போராட்டமாக மாற்ற முயன்றது.

# VIII

# கம்யூனிஸ்ட் அகிலம்

கம்யூனிஸ்ட் அகிலம் என்றும் அழைக்கப்படும் மூன்றாவது அகிலத்தித்தின் ஆரம்ப வேர்கள், ரஷ்ய போர்ஷவிக் கோஷ்டியின் அத்திவாரம் வரைச் செல்கின்றன. மார்க்ஸின் எழுத்துகளுடன் யுத்தத்துக்கு முந்திய கட்டத்தில் லெனின் எழுதிய பிரதான எழுத்துகள் அதன் புரட்சி சித்தாந்தத்தின் அடித்தளங்களாக அமைந்தன. 1905லும் 1917லும் நடந்த மாபெரும் புரட்சிகளில் ரஷ்ய தொழிலாளிவர்க்கத்தின் போராட்டங்கள் உண்மையில் அதன் பாரம்பர்யத்தைச் சேர்ந்தவை. யுத்தத்துக்கு முந்திய இரண்டாவது அகிலத்தில், லெனினால் சுறுசுறுப்புடன் வளர்த்தெடுக்கப்பட்ட இடதுசாரியின் தலையெடுப்பு அதன் ஆரம்ப சர்வதேச வெளிப்பாடாகும். எனினும் இப்புரட்சிப் போக்கு, முதலாவது உலக யுத்தத்துக்கும், ரஷ்யப் புரட்சிக்கும் பின்னர்வரை குறிப்பாக, இவ்வரலாற்றுப் போராட்டங்களுக்கு சந்தர்ப்பவாத சமூக ஜனநாயகத் தலைவர்களால் துரோகமிழைக்கப்படும் வரை, உண்மையில் ஒரு சர்வதேச இயக்கமாக மாறவில்லை.

அக்டோபர் புரட்சி சர்வதேச நிலைமையைப் பாரதூரமாக மாற்றியமைத்து, கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஸ்தாபிதத்துக்குப் புதிய, சாதகமான நிலைமைகளை உருவாக்கியது. சமுதாயத்தைச் சோஷலிஸப் புனர்நிர்மாணம் செய்யவும் மார்க்ஸிஸ-லெனினிஸ கருத்துகளுக்கு நடைமுறை வலுவூட்டுவதற்கும், இறுதியாக இக்கருத்துகளின் உண்மையை அவற்றின் மாபெரும் புரட்சி மயப்படுத்தும் சக்தியை நடைமுறையதார்த்தமாக்கிக் காட்டுவதற்கும் மனித வரலாற்றில் நிகழ்ந்த முதல் புரட்சியிது. சீர்திருந்த வாதத்தின் மீது புரட்சிவாதக் கோட்பாடு ஈட்டிய வெற்றியிது. சமூக ஜனநாயகத்தின் மீது லெனினிஸம் ஈட்டிய வெற்றியிது. உலக வரலாற்றின் முன்னணி ஸ்தானத்துக்கு அக்டோபர் புரட்சி முன்னேறியது. உலகப் புரட்சிப் போக்கில் கம்யூனிஸ்ட்டுகள் தலைமை வகித்தனர். அக்டோபர் புரட்சியின் தாக்கத்தினால் தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்த வளர்ச்சியடைந்த அதிகமதிகம் அரசியல் கோஷ்டிகள் புரட்சியோடையில் சங்கமித்து, லெனினிஸத்தின்

அடிப்படையில் சித்தாந்த ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஐக்கிய முற்றன. தொழிலாளர் இயக்கத்தினுள்ளும் தேசிய விடுதலை இயக்கத்தினுள்ளும் லெனினிஸம் ஒரு சித்தாந்த சக்தியாக நிறுவப்பட்டது.

மார்ச் 4, 1919ல் ஸ்தாபிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சிகளது ஐக்கியத்தையும், இணக்கப்பாட்டையும் வளர்த்தெடுத்து, அவற்றுக்கு மார்க்ஸிஸ—லெனினிஸ சித்தாந்தம், சர்வதேச ஒருமைப்பாடு, உயர்ந்த கொள்கைகள் இவற்றின் உணர்வோடு கல்வியூட்டி சுமார் கால் நூற்றாண்டு காலம் தான் தலைமை தாங்கிய தற்கால கம்யூனிஸ இயக்கத்தைக் தொடக்கி வைத்தது. கம்யூனிஸ்ட் அகிலமும், அதன் பகுதிகளும் எப்பொழுதுமே தம் காலத்தின் மிகவும் முக்கியமான சகல போராட்டங்களுக்கும். மத்தியில் நின்று, அவற்றில் மிகவும் உற்சாகமாகப் பங்குபற்றி வந்துள்ளன. பூர்ஷுவாக்களுக்கு எதிராக, போராட பாட்டாளி வர்க்கத்தை அணிதிரட்டவும் பாட்டாளி வர்க்க ஆட்சியை நிறுவுவதற்கு. சோஷலிஸத்தின் வெற்றிக்குப் போராடுவதற்கும் அவை போராடிவந்துள்ளன.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி சூழலில், உலகம் இரண்டு அமைப்புகளாக—முதலாளித்துவம், சோஷலிஸம்—எனப் பிளவுற்ற நிலைமையில், அத்துடன் அவற்றுக்கிடையிலான சவால் நிலைமைகளில் பாட்டாளி வர்க்கப் போராட்டம் சர்வதேச மயமாக வளர்ச்சியுறுவதன் இயற்கையான வெளிப்பாடாக, புதிய நிலைமையில், பாட்டாளிவர்க்கத்தின் வெவ்வேறு தேசியப் பிரிவுகளின் புரட்சிவாத முன்னணிப் படைகளின் மத்தியில் பரஸ்பர உறவினதும் பரஸ்பர உதவியினதும் மிகவும் தாக்கமான வடிவங்களைக் கண்டுபிடிப்பதற்கான வரலாற்றுத் தேவையின் வெளிப்பாடாகவும் கம்யூனிஸ்ட் அகிலம் பிறவியெடுத்தது. "பல்வேறு நாட்டு உழைப்பாளிமக்களிடையே நிலவவேண்டிய விடுதலைக்கான தமது சகல போராட்டங்களிலும் ஒருவருக்கொருவர் உறுதியான ஆதரவு வழங்கி நிற்கவேண்டிய சகோதரத்துவப் பிணைப்பின் புறக்கணிப்பு, அவர்களின் சிதரிக் கிடக்கும் முயற்சிகளது பொதுவானதட்டழிவினால் தண்டனையுறும்" என்ற அர்த்தத்தில் மார்க்ஸ் மொழிந்த வார்த்தைகளை கம்யூனிஸ்ட்டுகள் எபபொழுதுமே நினைவில் வவத்திருந்தனர்.

உலகத் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு இட்டுச் சென்ற அக்டோபர் புரட்சி, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி கூர்மைபெறல், உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையே ஏகாதிபத்திய நாடுகளுக்கும் காலனிகளை அரைகாலனிகளையும் சேர்ந்த மக்களுக்குமிடையே வளர்ந்துவந்த முரண்பாடுகள்—இவையாவும் உலகப் புரட்சிவாத நெருக்கடியை ஆழப்படுத்தின. பாட்டாளிவர்க்கம் புரட்சியின் சகாப்தம், தேசிய விடுதலை இயக்கத்தின் சக்திமிகு எழுச்சியின் சகாப்தம், முதலாளித்துவத்தின் மீது நேரடியான தாக்குதலின், சோஷலிஸத்துக்கான மனிதகுல மாற்றத்தின் சகாப்தம் தொடங்கியது. இந்நிலைமைகளின் கீழ், தொழிலாளிவர்க்கத்தினது தேசியப் பிரிவுகளுக்கிடையே சர்வ

தேச ஒருமைப்பாடு, அவற்றின் முன்னணிப்படைகள் மத்தியில் நெருங்கிய தொடர்பு, பரஸ்பர உதவி, பொது எதிரிக்கு—சர்வ தேச மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்க முயற்சியின் ஒன்றிணைப்பு யாவும் முன்னென்று மில்லாத வாறு முக்கியத்துவம் பெற்றன.

இவ்வரலாற்றுச் சூழ்நிலைகள் யாவும், தேசியச் சட்டகத்தினுள்ளும், சர்வதேச மட்டத்திலும் குணும்சத்தில் புத்தம்புதிய உண்மையான தொழிலாளிவர்க்க ஸ்தாபனமொன்றின் தேவையை அதிகரித்தன.

கம்யூனிஸ்ட் அகிலம் திட்டவட்டமாய் அத்தகையதொரு புதுவகையான ஸ்தாபனமாகும். அது உலகப் புரட்சிவாத இயக்கத்தின் சிறந்த பாரம்பர்யங்களைத் தன்வயப்படுத்திக் கொண்டு, அவற்றை வளர்த்து செழுமைப்படுத்தி, அவற்றுக்கு புதியதொரு சீரமைப்பு வடிவம் நல்கியது. கம்யூனிஸ்ட் சர்வதேசம் பற்றிய லெனினின் உரையொன்று அனுபந்தம் 1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

உலகக் கம்யூனிஸ இயக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக வரலாற்றில் இடம்பெற்று விட்ட லெனின் கம்யூனிஸ்ட் அகிலத்தின் அமைப்பாளராவார். அதன் ஆரம்ப வருடங்களின்போது அவர் அதன் தலைவாராக விளங்கிஞர்: இதுவே பாட்டாளிவர்க்கத்தின் முதலாவது உண்மையான உலக அமைப்பாகும். மாபெரும் காலனி, அரை காலனி நாடுகளான இந்தியா, சீனு, மத்தியக் கிழக்கு, ஆபிரிக்கா லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றின் பட்டாளி வர்க்கத்தை அது உள்ளடக்கியிருந்தது.

தொழிலாளர் சகோதரத்துவத்தின் சர்வசதேச பிணைப்பைப் புனரமைத்து ஐக்கியப்படுத்தும் பணியை லெனின் தமக்கேயுரிய சக்தியாற்றலோடும், தெள்ளிய நோக்கோடும் சமாளித்தார். விலகிச் சென்ற, ஓடுகாலி தலைவர்கள் கைகழுவிய மார்க்ஸீய சித்தாந்த கொள்கை அத்தளங்களை தொழிலாளர் இயக்கத்துக்கு மீட்பதாக அவர்பெரிதும் பாடுபட்டார். இடதுசாரிக் கோஷ்டிகளைத் தமைச் சுற்றித் திரட்டிஞர். அவை படிப்படியாக அவரது கருத்துகளை ஏற்றுக்கொண்டதோடு போல்ஷ்விக்குகளுடன் சேர்ந்து, சர்வதேசியத்தின் கருவாகஅமைந்தசவதேசகம்யூனிஸ்ட் அகிலத்தை அமைத்தார்.

லெனின் கம்யூனிஸ்ட் அகிலத்தின் சித்தாந்த கொள்கை அடித்தளங்களை யமைத்து, கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு, ஏகாதிபத்தியத்தினதும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மாறுவதினதும் சகாப்தமான புதிய வரலாற்றுச் சகாப்தத்தில சமுதாய வளர்ச்சிக்கு விசித்திரமாகப்பட்ட விசேட அம்சங்கள் பற்றிய அறிவூட்டி, அச்சகாப்தத்தில் புரட்சிப் போராட்டத்தின் தெளிவான புறவயமான நிலைமைகளையும் அகவயமான நிலைமைகளையும் விளக்கிக் காட்டிஞர்.

உலகப் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் ஆசானும், தலைவருமான அவர் கட்சியின் மார்க்ஸிஸக் கோட்பாட்டை, ரஷ்யா

விலும் உலகம் முழுவதிலும் நிகழ்ந்த புரட்சிப் போராட்டங்களின் அனுபவத்தால் செழுமைப் படுத்தினார். சகாப்தத்துக்கு இசைவான தாக இக்கோட்பாட்டை அவர் ஸ்தூலமாய் அமைத்ததோடு, கம்யூனிஸ்ட் அகிலத்தின் அமைப்பு ரீதியான கொள்கைகளையும் வகுத்தெடுத்தார். இக்கொள்கைகளின் மிகப்பிரதான அம்சங்களாவன: கம்யூனிஸ்ட் கட்சிகளது சித்த ஐக்கியத்தையும், செயல்-ஐக்கியத்தையும் உறுதிப்படுத்தும் ஜனநாயகமையப்படுத்துதல்; அவற்றின் நடவடிக்கையின் முயற்சியின், சுயமாகத்தங்கியிருத்தலின் ஆகக் கூடுதலான வளர்ச்சி; கம்யூனிட்டுகள் மத்தியில் காணப்படும் புரக்ஞையின் மீது, மக்களின் நலன்களை வெளிப்படுத்துவதில் நெருக்க முற்று, லெனின் வார்த்தைகளில் சொல்வதாயின், உழைக் மக்களின்பரந்தகூட்டத்தோடு, முதன்முதலாகபாட்டாளிமக்களோடு தொழிலாளர் அல்லாதமக்களோடும் சங்கமிப்பதில் முன்னணிப்படையின் ஆற்றல் மீது அமைந்தகடுமையான கட்சிக்கட்டுப்பாடு; தேசியச் சட்டகத்தினுள் தனது நடவடிக்கைகளின் வெற்றியை எய்துவதில், புரட்சிப் போராட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதில், முழு கம்யூனிஸ இயக்கத்தினதும் விதிப் போக்கின் வரலாற்றுப் பொறுப்பை ஏற்பதில், சர்வதேசத் தொழிலாளி வர்க்கக் கட்டுப்பாடு உப்பட சர்வ தேசிய வாதம்; குறிப்பிட்ட நிலைமைகளில் மிகவும் தகுதியான தாக்கமுள்ள வடிவங்களில் புரட்சிவாதப் பரஸ்பர உதவியின் நடைமுறைப்பிரயோகம்.

தெனினால் வரையறுத் தெடுக்கப்பட்ட கமின்டர்னின் அரசியல், அமைப்புக் கொள்கைகள் சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் அது தனது முன்னணிப் பாத்திரத்தை வெற்றிகரமாக வகிக்க உதவியதோடு, அதன் புரட்சிப் போராட்ட ஆற்றலையும், அரசியல் சாமர்த்தியத்தையும் உறுதிப்படுத்தின. இக்கொள்கைகள் எங்கிலும் பரவியதோடு சகல கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் அடிப்படை முக்கியத்துவ மொன்றைப் பெற்றுத் கொடுத்தது.

உலகக் கயூனிஸ இயக்கத்தின் தந்திரோபாயங்களுக்கும் போர் உபாயங்களுக்கும் கொள்கை நவடமுறை அடித்தளங்களை லெனின் அமைத்தார். இத்தந்திரோபாயத்தை தீர்மானிப்பதற்கும், உபாயங்களை வகுத்தெடுப்பதற்கும் அவர் பல்வேறு நாடுகளில் நிலவும் வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஒழுங்கு முறையை வழங்கினார்; போராட்டத்தின் மாறுதல் கட்டங்களுக்கும், புதிய வரலாற்று நிலைமைகளின் தோற்றங்களுக்கும் ஏற்ப அரசியல் மார்க்கத்தை மாற்ற வேண்டியதன் தேவை தேவையை அவர்காட்டினார். கம்யூனிஸ்ட் அகிலத்தின் வெகு முக்கியத் தீர்மானங்களை வரைந்தெடுப்பதில் லெனின் ஆர்வமான பங்கு வகித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சிகளது கொள்கை, தந்திரோபாயம். போர் உபாயங்கள் இவற்றை வரைந்தெடுப்பதில் லெனினது போதனையின் பின் வரும் அம்சங்கள் . கமிடர்னுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை:

(அ) சோஷலிஸப் புரட்சிவெடிக்கும், தருவாய் ஏகாதிபத்தியத்தை, முதலாளித்துவத்தின் ஆகவும் உயர்ந்த கட்டமாக, இறுதிக் கட்டமாகநுணுகி ஆராய்ந்து பூரணமாகப் பகுப்பாய்வு செய்தது;

(ஆ) புதிய சகாப்தத்தின் முரண்பாடான இரு அமைபுகளாம் முதலாளித்துவத்துக்கும் சோஷலிஸத்துக்கும் இடையேயான, போராட்டத்தினதும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மாறும் தன்மையானதும் நிகழும் குணுகுணத்தை நிர்ணயித்தல்;

(இ) ஏகாதிபத்திய சகாப்பத்தில், உலக சோஷலிஸப் புரட்சியின் பொதுவான போக்குகளுக்கு, குணுகுணமான அம்சங்களுக்கும், எந்த தனியொரு நாட்டிலும் சோஷலிஸத்தின் வெற்றி சாத்தியம் என்று விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களை வழங்கியது. சோஷலிஸப் புரட்சியை நோக்கி மாறுதலடையும் பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சி, புரட்சியின் பல்வேறு கட்டங்களில் பாட்டாளி வர்க்கத்தின் நண்பர்கள், உலகத் பட்டாளிவர்க்கப் புரட்சியின் வளர்ச்சிக்கு தேசிய விடுதலை இயக்கத்தின் முக்கியத்துவம் பற்றிய கோட்பாடுகளுக்கும் விஞ்ஞான பூர்வ ஆதாரங்களை வழங்கியது.

(ஈ) முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கான மாற்றத்தின் பொது விதிகளை வரையறுத்தலும், ஸ்தூலப்படுத்துதலும் மாறுதல் நிகழும் கட்டத்தில் பாட்டாளிவர்க்க ராஜ்யத்தின் பங்கையும், அதன் பல்வேறு வடிவங்களையும் ஆதாரப்படுத்துதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சாராம்சத்தை, அதன் இயக்கப்பாட்டை, சோஷலிஸ ஜனநாயகத்தின் வரலாற்று முக்கியத்துவத்தைப் பகுப்பாய்வு செய்தல்.

லெனின் தலைமையில் கமின்டர்ன் நடவடிக்கைகள் கம்யூனிஸ இயக்க வரலாற்றில் அற்புதமான அத்தியாயமாய் அமைகிறது. லெனினிஸக் கொள்கையையும் நடைமுறையையும் கொண்ட சர்வதேச அமைப்பாக இயங்கும் பணியை கம்யூனிஸ்ட் அகிலம் மேற்கொண்டது. கம்யூனிஸ்ட் அகில கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு லெனினிஸத்தைப் போதித்தது அதைப் பரப்புவதற்கு சாத்தியமான சகல சாதனங்களையும், வழிகளையும் கையாண்டது. கூட்டு முயற்சியால் அதை வளர்த்துச் செழுமை படுத்தியது; வாழ்க்கை முன்வைத்த உடனடியான பிரச்சினைகளைச் சமாளிப்பதில் அதை ஆக்க பூர்வமாகப் பிரயோகித்தது.

கமின்டர்ன் காலனி நாட்டு மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தின் உள்ளடக்கத்தை, உந்துசக்தியை, வீச்சுகளை வரையறுத்தது; தேசியக் காலனிப் பிரச்சினையை உலகப் புரட்சிவாதக் கேந்திர மட்டத்துக்கு உயர்த்தியது; தேசிய விடுதலை இயக்கம் உலகப் புரட்சிப் போக்கின் பிரிக்க முடியாத அம்சமென்பதையும், சோவியத் குடியரசுகள், சர்வதேசத் தொழிலாளி வர்க்கம். ஒடுக்கப்பட்ட மக்கள் இப்போக்கின் உந்து சக்திகள் என்பதையும் காட்டியது. ''எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று படுங்கள்'' என்ற சுலோகத்தின் கீழ் இச்சக்திகளை ஏகத்தனிபிரவாகமாக ஒன்று திரட்டுதற்கு கமின்டர்ன் பாடுபட்டது.

கமின்டர்ன் அதன் கொள்கை, நடைமுறை நடவடிக்கைகளில், சமாதானப் போராட்டத்துக்கும் உலகப் புரட்சிவாதப் போக்கின் வளர்ச்சிக்குமிடையில் காணப்பட்ட பிரிக்க

முடியாத தொடர்பைக் காட்டியது. காலங்காலமாகப் போற்றப்படும். புரட்சிவாதத் தொழிலாளர் இயக்கப் பாரம்பர்யங்களை குறிப்பாக, சமாதானப் போராட்டத்தை, ராணுவவாதத்துக்கும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கும் எதிராக மக்களின் பந்தோபஸ்தை அது உன்னத ஸ்தானத்துக்கு உயர்த்தியது.

மார்க்ஸிஸ—லெனினிஸக் கொள்கையைப் பரப்புவதில், விருத்திசெய்வதில் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தை மார்க்ஸிஸ லெனினிஸத்துடன் இணைப்பதில் கமின்டர்ன் மகத்தான பணியாற்றியது. கமின்டர்ன் எதிர்நோக்கிய பல முக்கியப் பிரச்சினைகளுக்கு கூட்டுவடிவமும், மார்க்ஸிய உள்ளடக்கமும், ஆக்கத் தன்மையும் கொண்ட தீர்வுகளை அது வழங்கியது; பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் அரசியல் தந்திரோபாயங்களையும் போர்தந்திரங்களையும் வடித்தெடுப்பதில் முக்கிய பங்களிப்புச் செய்தது.

கம்யூனிஸ்ட்டுகளது தேசியக் கொள்கை, உலகக் கொள்கை, தந்திரோபாயம் போர்த்தந்திரம் பற்றிய பிரச்சினைகள் மீது லெனினுடைய வழிகாட்டுதலோடும் அவரின் கொள்கைகளுக்கு இசைவாகவும் கமின்டர்ன் நிறைவேற்றிய பின்வரும் பிரமேயங்களைக் கடைப்பிடித்தல் தொழிலாளிவர்க்க வெற்றிக்கு முக்கிய நிபந்தனைகளாகும்;

தொழிலாளி வர்க்கத்தின் பெரும் பகுதியினரை புரட்சியின் பால் வென்றெடுத்தல்—முதலாளித்துவத்தின் தூண்கள் மீது தீர்க்கமான தாக்குதல் தொடுப்பதற்கு அத்தியாவசிய முந் நிபந்தனை;

தொழிலாளர் இயக்கத்தின் பிளவைச் சமாளித்து, ஒரு நாட்டிலோ அல்லது இன்னொரு நாட்டிலோ, ஒரு கட்டத்திலோ அல்லது இன்னொரு கட்டத்திலோ போராட்டத்தின் ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளுக்கு இசைவான வடிவங்களில் அதன் ஐக்கியத்தை உருவாக்குதல் (ஐக்கியத் தொழிலாளர் முன்னணி, ஐக்கிய உற்பத்தி, தேசிய, சர்வதேசியத் தொழிற்சங்க ஸதாபனங்கள், பொதுவான அல்லது ஸ்தூலப் பிரச்சினைகள் மீது செயலாக்கத்தின் ஐக்கியப்பாடு, இத்தியாதி)' ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிலும் ஸ்தூல வரலாற்று நிலைமைக்கு இசைவான விவசாயிகள், மத்தியதரவர்க்கம், சகல ஜனநாயக வடிவங் கொண்ட சக்திகள் இவற்றோடு தொழிலாளி வர்க்கத்தின் நேச உறவை உருவாக்குதல் (வெகுஜன முன்னணி, பாஸிஸ எதிர்ப்பு முன்னணி தேசிய முன்னணி, ஏகபோக எதிர்ப்பு முன்னணி இத்தியாதி);

ஏகாதிபத்தியத்துக் கெதிரானப் போராட்டத்தில் தேசாபிமான சக்திகளது சாத்தியபாடுகளையும் பணிகளையும் வரையறுக்கும் தேசிய—காலனி பிரச்சினைகள் மீதான லெனின் போதனையை நனவாக்கல்;

தேசிய விடுதலைக்கு சமூக முன்னேற்றத்துக்குப் போராடும் நாடுகளில் சகல தேசாபிமான, ஏகாதிபத்திய—விரோத சக்திகள

தும் ஐக்கியத்தை உருவாக்குதல் (ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி)

உலகப் புரட்சியின் சகல அங்கங்களது—வாகைசூடிய பாட்டாளி வர்க்க நாடுகள், முதலாளித்துவ நாடுகளின் புரட்சி இயக்கம், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டம் இவற்றின் செயல் ஐக்கியத்தை உருவாக்குதல்; லெனினும், கமின்டர்னும் உலகப் புரட்சியின் விதிப்போக்குகளுக்காக, சர்வதேச தொழிலாளிவர்க்கத்துக்கும், ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் இடையே நெருங்கிய நெருங்கிய நேச உறவை வலியுறுத்தினர்;

ஜனநாயகத்தின் பந்தோபஸ்துக்கான ஆர்வமிகு போராட்டத்தை, சோஷலிஸப் போராட்டத்துடன் ஒருங்கிணைத்தல்;

ஆக்கபூர்வமான மார்க்ஸிஸ லெனினிஸத்தின் மீதும் கம்யூனிஸ இயக்கத்தில் காணப்பட்ட சகல சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கெதிரான—வலதுசாரி சந்தர்ப்பவாதம் குட்டி பூர்ஷுவா சாஹஸவாதம், செக்டேரியன்வாதம் இவற்றுக்கெதிரான—தீர்க்கமான போராட்டத்தின் மீதும் புரட்சிவாதத் தலைமையின் சித்தாந்த, அரசியல், அமைப்பை உறுதியாக்குதல்; புரட்சிவாத இயக்கத்திலும், சோஷலிஸ நிர்மாணத்திலும் கம்யூனிஸ்ட் கட்சிகளது தலைமைப் பாத்திரத்தை வென்றெடுத்து, தொழிலாளிவர்க்கத்தின் ஏனைய அரசியல் கட்சிகளுடனான சகல உறவுகளிலும் அவற்றின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தக் கூடிய வரலாற்று நிலைமைகளால் தீர்மானிக்கப்படும் வடிவங்களில் கம்யூனிஸ்டுகளின் தேசிய, சர்வதேசிய ஒற்றுமையை நிலைநாட்டுதல்.

புரட்சி இயக்கத்தின் வெகுஜன அரசியல் தலைமை, மக்களைத் தங்கள் தலைமையில் ஒன்று திரட்டல், வர்க்கப்போராட்டத்தின் ஸ்தூல நிலைமைகளில் மார்க்ஸிஸ லெனினிஸ கோட்பாடுகளை ஆக்கபூர்வமாகக் கையாளுதல் முதலிய சிறந்த கடினமான கலையை கமின்டர்ன் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குச் சலிப்பின்றிச் சொல்லிக் கொடுத்தது.

கம்யூனிஸ்ட் அகிலம் பிறவியெடுக்கும்போது, சோவியத் யூனியனுக்கு வெளியே கம்யூனிஸ்ட் கட்சிகள் சித்தாந்த ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் பலஹீன முற்றிருந்தன; அனுபவம் வாய்ந்த தலைவர்கள் அவற்றுக்கிருக்கவில்லை; உறுப்பினர் தொகையும் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. அத்தகையக் கம்யூனிஸ்ட் கட்சிகள் தம்நாட்டு புரட்சி இயக்கத் தலைமை சம்பந்தமான பிரச்சினைகளைச் சமாளித்து வர்க்கப் போராட்டத்தின் போர்தந்திரங்களையும், தந்திரோபாயங்களையும் வகுத்தெடுத்தல், தமது கூட்டுமையப்படுத்தப்பட்ட அமைப்பான கமின்டர்ன் (கம்யூனிஸ்ட் அகிலம்) இன் எல்லா கட்சிகளது கூட்டு முயற்சிகளால் மட்டுமே சாத்தியம். கமின்டர்ன் காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் சித்தாந்த ரீதியாக, அமைப்பு ரீதியாக வளர்ச்சியுற்று வர்க்கப்போராட்டத் தலைமையில் பேரனுபவம் பெற்ற,

மார்க்ஸிஸ—லெனினிஸ உணர்வுடன் பயிற்சிபெற்ற அனுபவம் வாய்ந்த தலைவர் படையை உருவாக்கியது. கம்யூனிஸ்ட் கட்சிகள் எண்ணிக்கையில் பெருகி அவற்றிற் சில தொழிலாளிவர்க்கத்தின் வெகுஜன கட்சியாக மாறியமை மற்றுமொரு முக்கிய அம்சமாகும்

இக்கட்சிகளது நடவடிக்கைகள் அதிகமதிகம் பலதிறப்பட்டனவாகி, பல்வேறு துறைகளையும் தழுவின; இதற்குத் தேசிய நிலைமைகள் தேவைப்பட்டதோடு, பாரம்பரியங்களும் நன்கு கணக்கிலெடுத்துக்கொள்ளப்படவேண்டியிருந்தன.

யுத்தத்தால் உருவாக்கப்பட்ட நிலைமைகள், பல்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளது நிலையையில் காணப்பட்ட பெரும் வித்தியாசங்கள், கம்யூனிஸ்ட்டுகளை எதிர்நோக்கிய பிரச்சினைகளின் பலதிறப்பட்ட தன்மை-யாவும், கம்யூனிஸ்ட் கட்சிகள் அவற்றின் சுதந்திரத்தையும், நெகிழ்வையும் கட்டிக்காப்பதை, யுத்தத்துககு முந்திய காலகட்டத்தில் விட அவசர அவசியமான தேவையென்பதை யுணர்த்தின. உலகக் கம்யூனிஸ இயக்கத்தின் அரசியல் நிலைமையையும், விவகார நிலைமையையும் நன்கு பகுப்பாய்வு செய்ததன் அடிப்படை மீது, 1943 ஜூன் 10ந் திகதியிலிருந்து கம்யூனிஸ்ட் அல்லாத அகிலத்தின் கலைத்துவிடுவதென. கம்யூனிஸ்ட் சர்வதேசிய நிர்வாகக்குழு தீர்மானமொன்றை நிறைவேற்றியது. கம்யூனிஸ்ட் அகிலத்தைக் கலைத்து விடுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் சரியான தன்மையையும், காலப் பொருத்தத்தையும் அதற்குப் பின்னர் நிகழ்ந்த சம்பவங்கள் உறுதிப்படுத்தின.

# IX

# கிழக்குலக புரட்சிவாதிகளின் ஆசான், நண்பன்

அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றி கிழக்குலக மக்களின் விழிப்புணர்ச்சியைக் குறித்தது. காலனி அமைப்பினது நெருக்கடியின் தொடக்கமாக அது அமைந்தது. புரட்சிக்கு முன்னர் ரஷ்யாவின் ஆசியப் பகுதியில் வாழ்ந்த தேசியச் சிறுபான்மையினரை ஜாரும், வெள்ளை ரஷ்யர்ககளும் அடக்கியாண்டனர். ஜாரிஸ்ட் ரஷ்யா தேசிய இனங்களது சிறைக் கூடம் என வர்ணிக்கப்பட்டது.

பல்வேறினங்களுக்கும் தனித்தனி குடியரசுகள் யூனியன் அமைப்பதன் மூலமும், சோவியத் யூனியனுல் சகல குடியரசுகளது சமஷ்டி யூனியனில் அநேகக் குடியரசுகளுக்கு சரிநிகர் சமானமான உரிமைகள் வழங்குவதன் மூலமும் தேசியச் சிறுபான்மைப் பிரச்சினை தீர்த்துவைக்கப்பட்டது.

கிழக்குலக மக்கள் தமது அண்டையயலவரானரஷ்ய ஆசியாவைச் சேர்ந்த தேசிய இனங்கள் வலிமையுறுவதை பிரமாண்டமாகவும் ஏனைய ரஷ்ய மக்களுக்குச் சமதையாகவும் வளர்ச்சியுறுவதைக்கண்டனர். ஆசிய மக்களுக்கு இதுவோர் உதாரணமாய் விளங்கியது. அது எவ்வாறு பலனளித்ததென்பதை அவர்கள் கண்டனர். சோவியத் யூயனினின் ஸ்தாபிதம் இவ்வாறு அவர்கள் மத்தியில் மாபெரும் தாக்கம் உண்டுபண்ணியது.

தேசியப் பிரச்சினைக்கும், காலனிப் பிரச்சினைக்கும் பனிகாரம் காணும் பணிக்கு லெனின் மாபெரும் முக்கியத்துவம் வழங்கினுர். இப்பிரச்சினைபற்றிய அவரது கோட்பாடு கிழக்குலகின்தேசியப்பிரச்சினைகள், புரட்சிகள் சம்பந்தமான அவரது கொள்கைகள் மீதான மாபெரும் பங்களிப்பாகும். கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸில் லெனின் நிகழ்த்திய உரை அனுபந்தம் 7ல் தரப்பட்டுள்ளது.

முன்னென்றும் கண்டிராத தேசிய விடுதலை இயக்கப் பேரெழுச்சி இந்தியா, சீனு,இந்தேனேஷியா, துருக்கி. ஈரான்,கொரியா, சிரியா, மற்றும் நாடுகளில் தொடங்கியது. கிழக்கு நாடுகளில் லெனினின்

கருத்துக்கள் பரவின. கிழக்குலகின் புரட்சிவாதிகளுக்கு அவை மெய்யான வெளிப்பாடுகளாய், வெகுகாலமாக அவர்கள பாடுபட்டுத் தேடிய உண்மையாய் விளங்கியது.

சொல்லொணுக்கஷ்டங்களேச் சமாளித்துக்கொண்டு கிழக்லகுகின் பல்வேறு நாடுகளேச் சேர்ந்த நூற்றுக் கணக்கான தேசபக்தர்கள் சோவியத் ரஷ்யாவை நோக்கி, மாஸ்கோவை நோக்கி, லெனினே நோக்கிப் படையெடுத்தனர். கிழக்குலகின் மக்களது பிரதிநிதிகளிடத்து அவர்களிலொருவர் 1919ல் மொழிந்தார்: ''மாஸ்கோ ஒரு புதிய மக்காவாகிவிட்டது.''

கிழக்குலக மக்களது பிரதிநிதிகளுடன் லெனின் சிநேகபூர்வமான, மனம் நெகிழும் சம்பாஷணைகளே நடத்தியதோடு, காலனி ஒடுக்குமுறையிலிருந்து விடுதலே பெறுவதற்குச் சரியான மார்க்கம் காண்பதற்கு அவர்களுக்கு உதவினர். 1918ல் லெனினேச் சந்தித்த இந்திய முஸ்லிம்களின் பிரதிநிதிகள் இச்சந்திப்பு பற்றி எழுதினார்கள். ''இந்திய முஸ்லிம்களின் இரண்டு பிரதிநிதிகள் இங்கு வந்து தம்மை எங்கள் தலேவர் லெனினுக்கு அறிமுகப் படுத்திக் கொண்டனர். இந்தியாபற்றிய, கிழக்குலகு பற்றிய அனேகப் பிரச்சினேகளே அவர்கள் அவருக்கு விளக்கினர்.'' லெனின் 1919ல் வரவேற்றுபசரித்த இந்திய தேசிய இயக்கத்தின் பிரபலஸ்தர்களில் ஒருவரான மவ்லவி பரக்கதுல்லாஹ் எழுதினர். மனிதகுல விடுதலேயின் நாள் ரஷ்யாவின் விளிம்பில் புலருகின்றது. உல்யானுே லெனின் மனிதகுலத்துக்கு இன்பம் கொணரும் பிரகாசச் சூரியனுவார்.''

சிறப்பானதொரு வருங்காலத்துக்காக, சுதந்திரத்துக்காக, ஜனநாயகத்துக்காக, சோஷலிஸத்துக்காகப் போராடுமாறு கிழக்குலகின் மக்களுக்கு லெனின் அறைகூவல் விடுத்தார். கிழக்குலக மக்களது விடுதலேப் போராட்டத்தின் சர்வதேச முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய லெனின் 1070ல் மொழிந்தார்: ''வர்க்க உணர்வு கொண்ட ஐரோப்பியத் தொழிலாளிகளுக்கு இப்பொழுது ஆசியாவில் நண்பர்களுண்டு, அவர்களது எண்ணிக்கை பல்கிப் பெருகும்.''

ஆசியா ஒரு நாள் விழித்தெழும், கிழக்குலக மக்கள் நல்வாழ்வொன்றை நிர்மாணிக்கும் சித்தமும் ஆற்றலும் கொண்டுள்ளனர் என லெனின் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். ஆசியாவில் கொத்தடிமைத்தனத்தை மீண்டும் கொணரவோ, ஆசிய அல்லது அரை ஆசிய நாடுகளின் மக்களது வீரஞ் செறிந்த ஜனநாயகத்தைத் துடைத்தெரியவோ உலகில் எந்த சக்தியாலும் முடியாது என்று லெனின் நிச்சயமாக நம்பினர். அவர் எழுதினர்: ''ஆசியாவெங்கிலும் பிரமாண்டமானதொரு ஜனநாயக இயக்கம் வளர்ச்சியுற்றுபரவலடைந்து வலிமைபெற்று வருகின்றது. அங்குபூர்ஷுவா வர்க்கம் இன்னும் பிற்போக்கு வாதத்துக்கெதிராக மக்களுக்கு ஆதரவாக நிற்கின்றது. கோடானுகோடி மக்கள் வாழ்வு வேண்டி ஒளி வேண்டி, சுதந்திரம் வேண்டி விழிப்புற்றெழுகின்றனர். கூட்டுவாத்ததுக்கான பாதை ஜனநாயகத்தினூடே உள்ளது என்பதை அறிந்த வர்க்கஉணர்வுபெற்ற தொழிலாளர்இதயங்களில் இவ்வுலக

இயக்கம் பவரசத்தை உண்டுபண்ணுகிறது. சகல உண்மை ஜனநாயக வாதிகளின் உள்ளத்திலும் ஆசியா மீது அனுதாப உணர்வு ஆட்கொண்டுள்ளது!''

செப்டம்பர் 1920 அக்டோபர் சோஷலிஸ மகாபுரட்சி வெற்றியுற்ற மூன்றாண்டுகளின் பின், லெனின் முயற்சியால், வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த பகூநகரில் கிழக்குலக மக்களது முதலாவது காங்கிரஸ் கூட்டப்பட்டது. சுமார் 40 நாடுகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 2,000 பிரதிநிதிகள் அதில் பங்கு பெற்றனர். ஆப்கானிஸ்தான், இந்தியா, எகிப்து, ஈரான், சீனு, கொரியா, சிரியா, துருக்கி, ஜப்பான், மத்திய ஆசியமக்கள், காக்கேஸஸைச்சேர்ந்த மக்கள் இத்தியாதியினது பிரதிநிதிகள் அதில் அடங்கினர்: பிரிட்டன், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ஸ்பெயின், ஒல்லாந்து மற்றும் நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளும் காங்கிரஸில் கலந்துகொண்டனர். கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் நிறைவேற்றிய தேசிய, காலனி பிரச்சினைகள் மீதான லெனின் கோட்பாடுகளோடு ஐக்கிய ஒருமைப்பாட்டுக்கு காங்கிரஸ் குரல் கொடுத்தது, சர்வதேச நிலைமை, கிழக்கு நாடுகளில் சோவியத்துக்கள் விவசாய—விவசாயி பிரச்சினைகள், இன்னோரன்ன மற்றும் அநேக பிரச்சினைகளையும் காங்கிரஸ் கலந்தாலோசித்தது. இரண்டு வேண்டுகோள்களை—ஒன்று கிழக்கு மக்களது போராட்டத்துக்கு, மற்றது ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த உழைக்கும் மக்களுக்கு, தேசிய விடுதலை இயக்கத்துக்கு ஆர்வத்தோடு ஆதரவு வழங்குமாறு அவர்களை வலியுறுத்தி—நிறைவேற்றியது. ''சகல நாடுகளின் பாட்டாளிகளே, முழு உலகின் ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்றுபடுங்கள்!'' என்ற சுலோகத்தைக் காங்கிரஸ் பிரகடனஞ் செய்தது.

தேசிய விடுதலை இயக்கம் வளர்ச்சியுறச் செய்வதில், சகல புரட்சிவாதப் பிரிவுகளதும், ஐக்கியத்தையும், இணக்கப்பாட்டையும், சோவியத் ரஷ்யாவோடு அவற்றின் ஒருமைப்பாட்டையும் வலுவுறச் செய்வதில் கிழக்குலக மக்களது முதலாவது காங்கிரஸ் கவனத்தையீர்க்கும் பாத்திரம் வகித்தது.

காங்கிரஸ் முக்கியத்துவத்தை வலியுறுத்தி லெனின் எழுதினர்: மாஸ்கோ கம்யூனிஸ்ட்காங்கிரஸினதும், பகூவில் நடந்த கிழக்குலக மக்களது கம்யூனிஸ்ட் பிரதிநிதிகளின் காங்கிரஸினதும் சாதனைகளை உடனடியாகக் கணிக்கவோ, நேரடியாகக் கணிக்கவோ முடியாது. எனினும் அவை சில ராணுவ வெற்றிகளைவிடவும் மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த சாதனையாகும்; ஏனெனில், அது போல்ஷவிக்குகளின் அனுபவம், அவர்களது நடவடிக்கைகள், திட்டநிரல், முதலாளித்துவவாதிகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிரான அவர்களது அறைகூவல் உலகு பரந்த அங்கீகாரம் பெற்றுவிட்டதை ஜூலையில் மாஸ்கோவிலும், செப்டம்பரில் பகூவிலும் சாதிக்கப்பட்டவை வரப்போகும் பல மாதங்களுக்கு உலகத்தொழிலாளர்களது, விவசாயிகளது சிந்தனைக்கும்; பகுப்பாய்வுக்கும் விருந்தாக அமையும் என்பதை ருஜூபிக்கின்றது.''

1900ன் தொடக்கத்தில் ஆரம்பமான தேசிய விடுதலை இயக்கம் சாராம்சத்தில் ஏகாதிபத்திய விரோதமானது; நிலப்பிரபுத்துவ விரோதமானது; பூர்ஷுவா ஜனநாயகத்தன்மை வாய்ந்தது என லெனின் கருதினார். அவர் எழுதினார்:............. பின்தங்கிய நாடுகளது மக்கள் தொகையின் பெரும் பகுதி பூர்ஷுவா—முதலாளித்துவ உறவுகளைக் கொண்ட விவசாயிகளாயிருப்பதால், எந்தவொரு தேசிய இயக்கமும் பூர்ஷுவா—ஜனநாயக இயக்கமாக மட்டுமே இருக்க முடியும். தேசிய (காம்பிராடோர் அல்ல) பூர்ஷுவாவைப் பொறுத்தமட்டில், குறிப்பிட்ட சூழ்நிலைகளில், தேசிய விடுதலைப் போராட்டத்தில் அது புரட்சிவாதப் பாத்திரம் வகிக்கமுடியுமாகையால் அதற்கு உற்சாகமும் ஆதரவும் வழங்கப்படல் வேண்டும்.''

இம்முக்கியக் கோட்பாடு விடுதலைப்போராட்டத்தில் தேசிய (காம்பிராடோர் அல்ல) பூர்ஷுவா வர்க்கத்தின் இடமும் பாத்திரமும் பற்றிய லெனினின் ஆழ்ந்த மதிப்பீட்டிலிருந்துஇப்பிரச்சினையில் பக்கச்சார்டான கண்ணோட்டம் குறித்தும், சில சர்வ காலத்துக்கும் பொறுத்தமான சூத்திரத்தால் இதைத் தீர்க்க முயலும் முயற்சி குறித்தும் லெனின் எச்சரிக்கை விடுத்தார். நிச்சயமாகக் கூறின், தேசிய பூர்ஷுவா ஒரு சுரண்டும் வர்க்கமாகும், எனவே அதற்கும் உழைக்கும் மக்களுக்குமிடையே முரண்பாடு உண்டு. அதேவேளை, எவ்வாறுயினும், காலனி நாடுகளிலும், தேசிய பூர்ஷுவா வர்க்கம் தன்சொந்த வீட்டின் எஜமானனுவதற்கு ஆசைப்படுகின்றது. அதற்கேற்ப, அது தனது நாட்டின் மீது அந்நிய ஏகபோகம் ஆதிக்கம் செலுத்துவதையெதிர்த்து போராட்டத்தில் ஈடுபடுகின்றது. நாட்டின் பொருளாதார, கலாச்சார முன்னேற்றத்துக்குக் குந்தகம் விளைத்து அதனுல் அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்துக்கு வழிசமைக்கும் உள்நாட்டு நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராகவும் தேசிய பூர்ஷுவா வர்க்கம் போராடுகின்றது. தேசிய பூர்ஷுவாவர்க்கத்தின் முற்போக்குப் பாத்திரம் இதில் தங்கியுள்ளது.

எனினும், இப்பிரச்சினையின் இன்னேரம்சம் உள்ளது. நாட்டினுள் வர்க்கப் போராட்டம் கூர்மையடைகையில் தேசிய பூர்ஷுவாவர்க்கம் ஏகாதிபத்தியம். உள்நாட்டு பிற்போக்கு சக்தி ஆகியரேடு ஒத்துழைக்க முற்படும் என லெனின் சுட்டிக்காட்டினார். தேசிய பூர்ஷுவாவர்க்கத்தின் இரட்டை இயல்பைஇது விளக்குகின்றதுஎனவே, தேசிய விடுதலைப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் தனது சுயாதீனத்தைப் பாதுகாத்துக் கொள்ளல்வேண்டும். தனது துவஜத்தின் கீழ் புரட்சிவாத ஜனநாயகப் புத்திஜீவிகளை, கைவினைஞர்களை, விவசாயிகளை ஒன்று திரட்டல் வேண்டும்; ஏகாதிபத்தியத்தோடும் உள்நாட்டு நிலப்பிரத்துவ பிற்போக்கோடும், மக்கள் குழுக்களின் பிற்போக்கோடும் தேசிய பூர்ஷுவா உடன்பாடு கொள்வதைத் தடுக்கவேண்டும் என லெனின் வலியுறுத்தினார். காலனிநாடுகளின், அடிமை நாடுகளின் பாட்டாளிகள், தேசிய—காலனி ஒடுக்குமுறையை சமூக அடிமைத்தனத்தை மூர்த்தண்யமாக, உறுதியாக எதிர்க்கும் போராளிகளாவர் என்ற கருத்தை லெனின் கொண்டிருந்தார்.

காலனி அரை காலனி மக்களது சுதந்திர விடுதலைப் போராட்டத்தின் ஆழ்ந்த முற்போக்கான, புரட்சிவாத இயல்பை லெனின் வலியுறுத்தினார். வளர்ச்சியுற்ற நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தினது புரட்சிவாத போராட்டத்தின் வளர்ச்சிக்கு இப்போராட்டம் பங்களிப்பு வழங்குகின்றது. அதன்பிரதியாக, வளர்ச்சியுற்ற நாடுகளின் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் தீவிரம் காலனி மக்களது விடுதலை இயக்கத்திற்குப் பங்களிப்பு வழங்குகின்றது. லெனின் எழுதினார். முன்னேற்றமடைந்த நாடுகளின் வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளர்கள் ஒடுக்கப்பட்ட நாடுகளின் தொழிலாளர், விவசாயிகள் அடிமைகளோடு நெருங்கிய தொடர்பு கொள்வதை சங்கமிப்பதை நாம் இப்பொழுது, எப்பொழுதும்போல், ஆதரிக்கிறோம்; தொடர்ந்து ஆதரிப்போம் காலனிகள் உட்பட சகல ஒடுக்கப்பட்ட நாடுகளையும் சேர்ந்த சகல ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும் எம்மிடமிருந்து பிரிந்து செல்லாமல் நெருங்கிய சாத்தியப்பாடுகளை உருவாக்கி ஒன்றிணைய வேண்டுமென நாம் எப்பொதும் ஆலோசனை வழங்கி வந்துள்ளோம்; தொடர்ந்து ஆலோசனை வழங்குவோம்.''

வளர்ச்சியுற்ற நாடுகளின் தொழிலாளி வர்க்கக் கட்சிகள் காலனி, அரை காலனி மக்களது போராட்டத்தை சாத்தியமான எல்லா வழிகளிலும் ஆதரிக்கவேண்டுமென்பதும் அந்த நாடுகளின் பாட்டாளிவர்க்க இயக்கத்தையும் காலனிகளின் தேசிய விடுதலை இயக்கத்தையும் ஏகாதிபத்தியத்துக்கெதிரான பொதுப்போராட்ட அணியாக ஒன்றிணையச் செய்வது சாத்தியமென்பதும் அது அத்தியாவசியத் தேவையென்பதும் லெனினது முடிவாகும்.

சோஷலிஸத்தின் வெற்றி மட்டுமே சுயாதீன நாடுகளது செல்வச் செழிப்பை உத்திரவாதப்படுத்த முடியுமென லெனின் தூர திருஷ்டியுடன் அறிந்திருந்தார். சோஷலிஸ நாடுகள் மத்தியில் ஒத்துழைப்பு, கம்யூனிஸத்தின் கீழ் அவை சர்வதேசச் சமூகமாக இணைதல் சம்பந்தமான பிரச்சினை மீது, லெனின், நாடுகளது நலன்களைப் புறக்கணிப்பதன் மூலமோ, அல்லது அவற்றில் தலையிடுவதன் மூலமோ அன்றி, சோஷலிஸத்தின் கீழ் இந்நலன்களைப் பூரணமாகக் காண்பதன் மூலமே இதைச்சாதிக்க முடியுமெனச் சுட்டிக்காட்டினார்.

சோஷலிஸத்துக்கான பாதை எல்லா நாடுகளுக்குக் ஒரே விதமாக இராது. ''எல்லா நாடுகளும் சோஷலிஸத்தை அடையும் இது தவிர்க்க முடியாததே. எனினும் எல்லா நாடுகளும் ஒரே வழியில் அதை அடையமாட்டா. ஒவ்வொன்றும் ஒருவகையான ஜனநாயகத்துக்கு, பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் பல திறப்பட்ட வகைக்கு, சமூக வாழ்வின் பல்வேறு அம்சங்களில் சோஷலிஸ மாற்றத்தின் பல்வேறுபட்ட வளர்ச்சி வேகத்துக்கு, அதன் பங்களிப்பை வழங்கும்,'' என லெனின் சுட்டிக்காட்டினார். லெனின், தேசிய—காலனி பிரச்சினை சம்பந்தமானதன் கோட்பாட்டில், உலக மக்கள் தொகையின் பெரும்பான்மையாக அமையும் கிழக்குலக மக்கள் மீது குறிப்பாகக் கவனஞ் செலுத்தினார்.

கிழக்குலகின் பிரச்சினையை லெனின் மார்க்ஸ் எங்கல்ஸ் போன்று ஆனால் புதியதொரு வரலாற்றுச் சகாப்தத்தில்—ஏகாதிபத்தியத்தினதும், பாட்டாளிவர்க்க புரட்சிகளினதும் சகாப்தத்தில் கற்றுத் தெளிந்தார். கிழக்குலக மக்களது போராட்டத்தை பெரிதும் புரிந்து கொள்ளும் தன்மையை அவர்காட்டினர்; சமூக, காலனி ஒடுக்கு முறைகளிலிருந்து அவர்களது விடுதலைக்கான மார்க்கத்தைச் சுட்டிக்காட்டினர். காலனி, அரை காலனிகளைச் சேர்ந்த மக்கள் தாழ்ந்தவர்கள் தம்மைத் தாமே ஆள்வதற்கு அருகதையற்றவர் என்று வலியுறுத்தும் இனவாதக் கொள்கையை அவர் நிராகரித்தார்.

மாஸ்கோவில் 1919 நவம்பர் 22ல், கிழக்குலக மக்களது கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களது காங்கிரஸில் லெனின் நிகழ்த்திய ஒளிபாய்ச்சும் உரையின் ஒரு பகுதி அனுபந்தம் 8ல் தரப்பட்டுள்ளது.

# X

# முதலாளித்துவம் தவிர்த்த வளர்ச்சிப்பாதை

மார்க்ஸும், எங்கல்ஸும் 19ம் நூற்றாண்டு புரட்சிகள், குறிப்பாக பாரிஸ் கம்யூன், தந்த அனுபவங்களின் அடிப்படையில், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கான மாற்றம் புதுவடிவமானதொரு ராஜ்ய அரசாக இருக்கவேண்டுமென்றும் அதன் சாராம்சம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்ற வரலாற்று வடிவத்தில் வெளிப்பாடு பெறுமென்றும் முடிவுசெய்தனர். புது வடிவமான அரசு பற்றிய பிரச்சினை முழுமையான ஸ்தூலவடிவத்தில் லெனின் முன் தோன்றியது. இது எதாக இருக்கவேண்டும்? வரலாற்றிலேயே முதன் முறையாக இப்பிரச்சினை லெனினால் நடைமுறையில் தீர்க்கப்பட்டது.

புதிய அரசு, புரட்சியின் ஆதாயங்களுக்கு நம்பகமான பாதுகாப்பு வழங்குவதற்கும், வரலாற்றுப் போக்கை பின்திசையில் மாற்றமுயலும் சுரண்டும் வர்க்கங்களது முயற்சிகளைத் தவிடு பொடியாக்குவதற்கும் வலிமை மிக்கதாய் விளங்கவேண்டுமென்பது லெனினுக்குத் தெளிவாகியது.

சோஷலிஸ அமைப்பின் நிர்மாணத்தை உத்திரவாதப்படுத்தும் உண்மையான ஆற்றல் வாய்ந்ததாய் புதிய அரசு இருக்கவேண்டுமென்பதும் லெனினுக்குத் தெளிவாகியது. புதியதொரு சமுதாயம் ஒரு சிறுபான்மையினரால், ஒரு தனிக்கட்சியால், ஒரு தனிவர்க்கத்தால் நிர்மாணிக்கப்பட முடியாது என்பதை அவர் எப்பொழுதும் வலியுறுத்தி வந்தார். உழைக்கும் மக்களின் பிரமாண்டமான பெரும்பான்மையினர் சோஷலிஸ நிர்மாணத்தில் ஈடுபடும் நிலைமையில் நவ சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப முடியும். எனவே, சோஷலிஸத்தை நிர்மாணிப்பதற்காக தொழிலாளிவர்க்கத் தலைமையில் முழு உழைக்கும் மக்களினதும் முயற்சிகளை ஐக்கியப்படுத்துவதில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் சாராம்சத்தை லெனின் கண்டார்.

என்றாலும் புரட்சிவாத அரசென்பது தன்னிலேயே நிறைவு காணும் ஒரு குறிக்கோளன்று, அது சோஷலிஸக் கொள்கைகளின் மீது சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கான ஒருசாதனம் மட்டுமே சோஷலிஸத்தின் நிர்மாணத்தோடு பாட்டாளிவர்க்கச் சர்வாதிகார அரசு முழு மக்களினதும் சோஷலிஸ அரசாக வளரச்செய்

கிறதென்பதையும், அதில் கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை தாங்கப்படும் தொழிலாளிவர்க்கம் பிரதான பாத்திரம் வகிக்கிறதென்பதையும் சோவியத் யூனியனின் அனுபவம் காட்டியுள்ளது.

எல்லா ஆசிய நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. கம்ம்யூனிஸத்தின் பொதுவான கொள்கையையும், நடைமுறையையும் அவை கைக்கொண்டன. எனினும், அவை கம்யூனிஸக் கொள்கைகள் சம்பந்தப்பட்ட நாடுகளில் நிலவும் விசேட நிலைமைகளுக்குப் பொருந்தும் வகையிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1920க்களின் முற்பகுதியில் சோவியத் யூனியனின் தென்கிழக்கு எல்லைகளில் உள்ள, ஜனச்செறிவு இல்லாத நாடான மங்கோலியாவின் மக்கள் விடுதலைப் புரட்சியொன்று இடம்பெற்றது. மங்கோலிய ம்க்கள் அரசியல் அதிகாரத்தை வென்றெடுத்ததும் தம் நாட்டைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதில் ஈடுபட்டனர்—காலங்காலமாக நிலவிவந்த பின்தங்கிய நிலைமையை களைந்தெறிந்து மக்களை நவீன நாகரீகத்தோடு தொடர்பு கொள்ளச் செய்யும் சிக்கலான பணி அவர்களை எதிர்கொண்டது. இக்குறிக்கோளை எய்துவது எப்படி எந்தப்பாதையை மேற்கொள்வது என்பது பிரச்சினையாகியது.

அண்டைநாடான ரஷ்யாவில் அப்போது உருவாகி வந்த நவ, சோஷலிஸ உலகின்பால் அவர்கள் ஆகர்ஷிக்கப்பட்டனர். இந் நவ உலகுதான் மங்கோலிய மக்களை அந்நிய ஒடுக்குமுறையாளர்களிடமிருந்து விடுவித்து அவர்களுக்கு சுதந்திரத்துக்கான, விடுதலைக்கான மார்க்கத்தைக்காட்டியது. மங்கோலிய விவசாயிகள் தமக்குப் புதியதொரு தார்மீக சமுதாயத்தை வழங்கக்கூடிய அமைப்பான சோஷலிஸத்தின்பால் இதயம் பறிகொடுத்தனர்.

இது எல்வாறிருப்பினும் நாட்டின் படுபின்தங்கிய நிலை காரணமாக சோஷலிஸத்தை உடனடியாகக் கட்டியெழுப்புதற்கு அத்தியாவசிய நிலைமைகளெதுவும் இருக்கவில்லை. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குச் செல்ல வசதியளிக்கும் பாதையொன்றைத் தேர்ந்தெடுப்பது அத்தியாவசியமாகியது. பின்தங்கிய நாடுகள் முதலாளித்துவப் பாதையூடு செல்லாமல் சோஷலிஸ மாற்றத்தையடைவதற்கான சாத்தியப்பாடு குறித்த லெனின் போதனை புரட்சிவாத மங்கோலியாவின் பிரதான செயல்திட்டமாகியது. மங்கோலிய மக்கள் இப்பாதையை மேற்கொண்டு சோஷலிஸ நிர்மாணத்தில் வெற்றிகண்டனர்.

நூற்றுண்டுகளாகப் பழைமை புரையோடிப்போன மங்கோலியாவின் பின்தங்கிய நிலைமையை நீக்கி நவீன நாகரீகத்தின் மகத்தான சாதனைகளோடு அதன் மக்களைத் தொடர்பு கொள்ளச் செய்வதில் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை மிகுந்த பலனளிக்கக் கூடியதென்பது நிதர்சனமாகியது. இப்பாதை மங்கோலிய மக்கள் இப்போது அனுபவிக்கும் சுதந்திரத்தையும், செல்வச்செழிப்பையும் அவர்களுக்கு வழங்கியது.

நவவாழ்வை நிர்மாணிப்பதில் மங்கோலியா ஈட்டியுள்ள மாபெரும் வெற்றிக்கு பிரதானமாக, தங்களது மங்கோலிய மக்கள் புரட்சிக் கட்சியின் வழிகாட்டலில், புரட்சியால் விடுவிக்கப்பட்ட பின் மங்கோலிய மக்கள் மேற்கொண்ட கடினமான ஆக்கபூர்வமான பணிகாரணமாகும். முதல் சோஷலிஸ நாடான சோவியத் யூனியனிடமிருந்து மற்றைய சோஷலிஸ நாடுகளிடமிருந்து பெற்ற பல திறப்பட்ட, சுயநலன் கலவாத உதவி அவர்களது வெற்றியின் பிரதானமானதோர் அம்சமாகும்.

நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இந்நாடு வறுமையுற்று, அதன் பொருளாதாரம் புராதானமானதாய், அதன் அரசியல் அமைப்பு பத்தாம் பசலித்தனமானதாய், சக்தியற்றதாய், அதன் சமூகம் தேங்கி ஸ்தம்பித்துக் காணப்பட்டது. இன்று மங்கோலியர் மற்றைய ஆசிய மக்களைவிட நன்றாக உண்ணவும், உடுக்கவும் செய்கின்றனர். அவர்களது வீடு வசதிகள் மற்றைய ஆசிய மக்களுடையதை விடவும் சிறப்பானதாகக் காணப்படுகின்றன, கல்வி முறை நன்கு அமைக்கப்பட்டு தனிநபருடைய ஆற்றலுக்கேற்ப சமத்துவமான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. மக்களின் எல்லாப் பகுதியினர் மத்தியிலும் இவ்வுயர்ந்த வாழ்க்கைத் தரம் காணப்படுகின்றது.

இன்று மங்கோலியாவின் அனுபவம் உலகெங்கிலும் அதிக மதிக மக்களின் ஆர்வத்தை ஈர்த்து வருகிறது. அதன் சாதனைகள் சர்வதேசக் கம்யூனிஸ, தொழிலாளர் இயக்கத்தினதும் தேசிய விடுதலைப் போராட்டத்தினதும் ஈடிணையற்ற தலைவர்களது உயர்ந்த பாராட்டுதல்களைப் பெற்றுவருகின்றன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக்குழு அரசியல் குழு உறுப்பினர் எம். எ. ஸுஸ்லோவ் இவ்வாறு அவதானித்துள்ளார்: ''உங்களது கட்சியின் சோஷலிஸத்துக்கான முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை சம்பந்தமான கொள்கைரீதியான பிரச்சினைகளின் விஸ்தரிப்பும், மங்கோலியாவில் சோஷலிஸ நிர்மாணத்தின் அனுபவமும், மார்க்ஸிஸ—லெனினிஸ சித்தாந்தத்துக்கு மதிப்புமிகு பங்களிப்பாக அமைவதோடு, சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்தின் அனுபவத்தைச் செழுமைப்படுத்துகின்றன. சோஷலிஸ நிர்மாணத்தில் மங்கோலியாவின் அனுபவம், இன்று ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் சமுதாய மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது, நிலப்பிரபுத்துத்துவத்தின் கீழ் அல்லது நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய அமைப்பில் இன்னும் லாழ்ந்துகொண்டிருக்கும் அதிக மக்கள் தேசியச் சுதந்திரம் பெற்று தம் நாடுகளின் வருங்காலத்தை தம் கைகளில் எடுத்துக்கொள்ளும் போதெல்லாம் குறிப்பாக முக்கியத்துவம் பெற்றுள்ளது.''

சோஷலிஸ நிர்மாணத்தில் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய விசேட நிலைமைகள் ஒவ்வொரு நாட்டிலும் காணப்படுவது உண்மைதான். எனினும், முன்னர் பின்தங்கியிருந்த நாடுகளுக்கான அல்லது வளர்முக நாடுகளுக்கான முதலாளித்துவத்தைத் தவிர்த்துக்கொள்ளும் அதே வேளையில் சோஷலிஸத்தை நிர்மாணித்து வரும் எல்லா நாடுகளுக்கும் பொருந்துவனவாகும். முத

லாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையை மேற்கொண்ட, சோஷலிஸ நிர்மாணத்தை வெற்றிகரமாக மேற்கொண்ட முதலாவது ஆசிய நாடான மங்கோலியாவின் வரலாற்று அனுபவத்தின் மூலம் இது நன்கு துலாம்பரமாகின்றது.

காலனியல் ஆதிக்கத்திலிருந்து சமீபத்தில் விடுதலை பெற்ற நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் ஒருபுறமிருக்க அவற்றின் நிலைமைகள் கஷ்டமானதாகவே காணப்படுகின்றன. அவற்றின் உற்பத்தித் தொழில் முன்னேற்றம் மந்தகதியில் உள்ளது. ஏகப் பயிர்ச் செய்கையாக—அதாவது ஒன்று அல்லது இரண்டு உற்பத்திகளை மட்டும் கொண்ட, உதாரணமாக, தேயிலை, கொக்கா அல்லது நிலக்கடலை இன்னும் பிரதான உற்பத்தியாக விளங்கும் அவற்றின் விவசாயம், பொருளாதாரத்துக்குத் தேவையான மூலப்பொட்களை வழங்குதற்கோ, மக்களுக்குத் தேவையான உணவை வழங்குவதற்கோ முடியாத நிலையில் உள்ளன. அவற்றில் பல நாடுகளில் வர்த்தகப் பாக்கியும், பணம் செலுத்துவதில் துண்டு விழுதலும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. பொருளாதார முன்னேற்றத்துக்கான போராட்டத்தில் வளர்முக நாட்டு மக்கள் பொருளாதார சமூக அபிவிருத்திக்கான புதிய முறைகளைத் தேடுமாறு தூண்டப்பட்டுள்ளனர். அப்படியானால் அவர்கள் எந்தப்பாதையை மேற்கொள்வது—முதலாளித்துவப் பாதையையா அல்லது சோஷலிஸப் பாதையையா—என்ற கேள்வியெழுகின்றது.

தேச விடுதலை இயக்கத்தின் மீது சோவியத் யூனியனதும், உலக சோஷலிஸ அமைப்பினதும் வளர்ந்துவரும் தாக்கம், இவ் வியக்கம் முதலாளித்துவ உறவுகள் உட்பட, சகல சுரண்டல் உறவுகளுக் கெதிரான போராட்டத்தில் ஈடுபடுவது அதிகரித்து வரும் எதார்த்த நிலையில் தென்படுகின்றது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட்கட்சியின் 24வது காங்கிரஸ் கூறியது: ''தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து பிறந்த சக்திகளின் என்றுமில்லாத பெரும் நிர்ப்பந்தத்துக்கு ஏகாதிபத்தியம் உட்படுத்தப்பட்டுள்ளது. பலநாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டம் நடைமுறையில், நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவச் சுரண்டல் உறவுகளுக்கு எதிராக வளர்ச்சியுறத் தொடங்கியுள்ளது பிரதான விஷயமாகும். முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையை மேற்கொண்டுள்ள நாடுகள், அதாவது சோஷலிஸத்தை நிர்மாணிக்கும் நீண்ட தவணையான மார்க்கத்தை மேற்கொண்டுள்ள நாடுகள் தற்கால தேசிய விடுதலை இயக்கத்தின் முன்னணிப் படைகளாகும்.''

ஆசிய ஆபிரிக்க நாடுகளது தேசிய பூர்ஷுவா வர்க்கதின் அரசியல் முரண்பாடுகள் சமதன்மையற்றனவாகும். நாட்டையும், மக்களையும் பணயம்வைத்து லாபம் தேடிக்கொண்ட பெரும்பூர்ஷுவா வர்க்கமும், ராணுவ, சிவில் துறைத்தனத்தாகும், நிலச் சொந்தக்காரர்களுடன் சேர்ந்து, முதலாளித்துவப் பாதையை மேற்கொண்டுள்ள பல இளம் ராஜ்யங்களில், இப்பொழுது ஆட்சிபுரி

கின்றனர். இந்த வர்க்கங்களும் குழுக்களும், பிரிவுகளும் வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் பலாபலன்களை நன்கு பயன்படுத்திக் கொண்டு, இப்பொழுது தங்களது சொந்த முதலாளித்து வளர்ச்சிப்பாதைக்காகப் பாடுபட்டுக் கொண்டு, ஏகாதிபத்திய அரசுகளது அரசாங்க—ஏகபோக மூலதனத்தை எதிர்பார்க்கின்றனர்.

எனினும் ஏகாதிபத்தியத்துக்கும் தேசியப் பூர்ஷுவாவர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடுகள் முழுமையாக இன்னும் நிலவுகின்றன. இப்பொழுது அவைகள் பெரும்பாலும் தீவிரமான பொருளாதார அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. உள்நாட்டு பூர்ஷுவா வர்க்கத்தின் மேல்தட்டைச் சேர்ந்தவர்கள் மேற்கத்திய ஏகபோக பூர்ஷுவா வர்க்கத்தின் பக்கம் பெரிதும் சாய்கிற அதேவேளை கீழ்தட்டு பூர்ஷுவாவர்க்கம், மத்தியதர பூர்ஷுவாவர்க்கம் கூட, அடிக்கடி ஏகாதிபத்திய எதிர்ப்புநிலையை, ஜனநாயக நிலையை எடுக்கின்றனர். இவர்கள் இன்னும் முற்போக்குப் பாத்திரம் வகிக்கக் கூடியவர்களாகவும், நாடளாவிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக் கூடியவர்களாகவும் திகழ்கின்றனர்.

குட்டி பூர்ஷுவாக்களும், அரை—பட்டாளி வர்க்கத்தினரும் (விவசாயிகள், நகர நாட்டுப்புற கைப்பணியாளர்கள், சிறு வியாபாரிகள், சாதாரண மக்கள் பிரிவைச் சேர்ந்த புத்திஜீவிகள்) அனேக வளர்முக நாடுகளில் பூரணத்தொழில்புரியும் மக்கள் தொகையினரில் முக்கால்வாசி போன்று காணப்படுகின்றனர். அந்நிய முதலாளிகளாலும், பெரும் தேசிய முதலாளிகளாலும் ஒடுக்கப்படும் இத்தொழில்புரியும் பகுதியினரே புரட்சி சக்திகளின் சேமபடைப் பிரிவாய் விளங்குகின்றனர்.

உலக சோஷலிஸ அமைப்பொன்று காணப்படும் சகாப்தத்தில் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதை சோஷலிஸத்துக்கான ஒருவகையான மாறுதலாகும் என்பதை வரலாற்று அனுபவம் காட்டுகிறது. இதன் கீழ்— எந்தவொரு பின்தங்கிய நாடும் தப்பமுடியாத கட்டமான—ஜனநாய மாறுதலுக்கான காலகட்டம்-புரட்சிவாத ஜனநாயகவாதிகளின் தலைமையில் நடத்திச் செல்லப்படுகின்றது. இவர்களில் சிலர் இம்மாறுதல்களின் நிகழ்வுப் போக்கில் விஞ்ஞான சோஷலிஸத்தைக் கைக்கொள்ள முடியும்.

முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதை சமூக வாழ்க்கையில் புதியதொரு திருஷ்டாந்தமாகும். சிரியா, ஜனநாயக யேமன் போன்றநாடுகள் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதையைப் பின்பற்றுகின்றன. இத்திருஷ்டாந்தத்தின் பல அம்சங்களும் அதைச் சார்ந்த தன்மைகளும் கொள்கையளவில் மட்டுமல்லாது நடைமுறையிலும் இன்னும் வரையறுக்கப்படவில்லை. இது இக்குறிப்பிட்டகாலகட்டத்தில் அரசின் பாட்டாளிவர்க்கத் தலைமையை சம்பந்தப்படுத்தாத, எனினும் சோஷலிஸ சமூகத்தின் ஆதரவாலும், சர்வதேச தொழிலாளிவர்க்கத்தோடு, கம்யூனிஸ்ட் இயக்கத்தோடு நெருங்கிய நேச உறவினாலும் சாத்தியமான

சோஷலிஸம் நோக்கிய இயக்கத்தின் திட்டவட்டமான வெளிப் பாடாகும். மங்கோலிய மக்கள் குடியரசினதும், சோவியத் மத்திய ஆசியக் குடியரசுகளினதும் உதாரணங்கள், முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதை மீதான கலந்துரையாடல்களின்போது எடுத்துக்காட்டப்படுகின்றன.

சோஷலிஸ அமைப்பின் கட்டுக் கோப்புக்கு வெளியே முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதை குணசம்ரீதியாக புதியதொரு திருஷ்டாந்தமாகும். மத்திய ஆசியக் குடியரசுகளில் முதலாளித்துவத்தைத் தவிர்த்த, சோஷலிஸம் நோக்கிய வளர்ச்சி பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் இடம் பெற்றது. இம்முதல், பிரமாண்ட முக்கியத்துவமிகு வரலாற்று அனுபவம், வளர்ச்சிப் போக்கில் முதலாளித்துவத்தைத் தவிர்த்துக் கொண்ட நாடுகள் அக்டோபர் சோஷலிஸ மகா புரட்சியின் அயனத்துள் அடங்கிய நாடுகள் என்பதினுலும், நேரடியான அரசாங்க உதவிக்கு அவை சோவியத் யூனியன்பால் திரும்பவும், அதன் வழிகாட்டலை, ராணுவத்தை, அரசாங்க யந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் முடிந்தது என்பதினுலும், மார்க்ஸிஸ—லெனினிஸ போதனையின் அடிப்படையிலான செயல் மார்க்கத்தைக் கைபாண்ட அரசியல் தொண்டர்களாலும், அரசியல் கட்சியாலும் அவை நடத்திச் செல்லப்பட்டன என்பதினுலும் சிறப்பு பெறுகின்றது. இந்நிலைமையில் பாட்டாளி வர்க்கப் பேராதிக்கம் வெறும் தேசிய அர்த்தத்தில் மட்டுமல்லாது குறிப்பிட்டதொரு வகையில் சர்வதேச அர்த்தத்திலும் முதிர்ச்சியுற்றது.

ஆசிய—ஆபிரிக்க நாடுகளின் அனுபவத்தின் அடிப்படை மீது அறுபதுக்களில் முதன்முதல் அங்கீகாரம் பெற்ற முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதை பற்றிய கருத்து இன்னும் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்திலிருந்த விலகாத, சோஷலிஸ சமுதாயத்தைச் சேராத நாடுகளில், பாட்டாளிவர்க்கப் பேராதிக்கத்துக்கும் மார்க்ஸிஸ—லெனினிஸக் கட்சிகளின் தலைமைத்துவத்துக்கும் தேவையான அளவு உள்நாட்டு நிலைமைகள் உருவாகாத நாடுகளில், உலக சோஷலிஸ அமைப்பின் செலவாக்கும் ஆதரவும் பாட்டாளி வர்க்கம் வெற்றியீட்டிய நாடுகளிலிருந்து நேரடியான ராஜ்யத் தலைமையின் வடிவத்தைப் பெறமுடியாத, அவை எல்லாவற்றையும் தழுவிக்கொள்வதாய் இருக்கமுடியாத நாடுகளில் முதலாளித்துவத்துக்கு அப்பால் விலகி சோஷலிஸம் நோக்கி இட்டுச் செல்லக் சில நடவடிக்கைகளை மேற்கொள்வது சாத்தியம் என்ற உண்மையின் மீது தங்கியுள்ளது. மத்திய ஆசியா, கஸாகிஸ்தான் சோவியத் குடியரசுகளில் நடந்ததற்கு மாற்றமாக அநேக ஆசிய—ஆபிரிக்க நாடுகளில் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை வழியான நவீன முன்னேற்றத்தின் அடிப்படை வித்தியாசம் இதில் தங்கியுள்ளது.

சர்வதேச அர்த்தத்தில், உலக சோஷலிஸ அமைப்பு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கெதிராக முற்போக்கு ஆட்சிகளைக் காத்து, அந்நாடுகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தப் பொருளாதார, அரசியல், ராணுவ உதவிகளை வழங்கும் அயரா முயற்சியில், முதலாளித்

துவமற்ற வளர்ச்சியின் வெற்றியை உத்தரவாதம் செய்வதில் வெகுதூரம் செல்கின்றது. உலக சோஷலிஸ அமைப்பு நிலவாவிடில் இந்நாடுகள் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையை மேற்கொள்வது சாத்தியமாயிராது.

தற்போது புதிதாக விடுதலைபெற்ற நாடுகள் முன்னணி முதலாளித்துவ நாடுகளின் வரலாற்று அனுபவத்தைப் பிரயோகித்து மேற்கு ஐரோப்பிய. ஐக்கிய அமெரிக்க நாடுகள் முந்திய காலங்களில் தம்மை உற்பத்தித் தொழில் மயமாக்கிக் கொள்வதற்கு செய்ததை இன்று காப்பியடிக்க வேண்டுமென்று முதலாளித்துவ அரசியல்வாதிகள் பிரகடனஞ் செய்கின்றனர்.

இது வெறும் நம்பிக்கை வரட்சியே யாகும். செத்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியம் இன்னும் அரசு கட்டிலிலிருக்கும் நாடுகள் கடந்து வந்த பாதைக்கும், நமது வரவாற்றுக் காலகட்டத்தில் முன்னேற்றப் பயணத்தில் அடியெடுத்து வைக்கும் இளம் தேசிய அரசுகளை எதிர்நோக்கும் பாதைக்கும் ஸ்நான பிராப்தியும் ஒற்றுமை கிடையாது.

இந்நாளில் பொருளாதார ரீதியாகப் பலஹீன வளர்ச்சியுற்ற நாடுகள் உள்நாட்டு நிலைமைகள் காரணமாகவும், சர்வதேச நிலைமைகள் காரணமாகவும், பிரிட்டனுடைய, ஐக்கிய அமெரிக்காவுடைய அல்லது ஐப்பானுடைய முதலாளித்துவ வளர்ச்சியைக் காப்பியடிக்க முடியாது. இளம் ராஜ்யங்களது தொழிலாளிவர்க்கமும் விவசாயிகளும் சுரண்டிக் கொளுக்கும் வறுமைப்படுத்தும் முதலாளித்துவப் பாதையை நிராகரிக்கின்றனர். தற்கால ஏகாதிபத்திய அரசுகள் செல்வ வளர்ச்சியடைவதற்காகக் கையாண்ட வழிகளைக் இந்நாடுகள் கையாளவிரும்பவில்லை; கையாளவும் முடியாது.

முதலாளித்துவவாதிகள் தம்மைச் சுற்றியுள்ள உலகை, பின் தங்கிய நாடுகளை, தமது பண்டங்களுக்குச் சந்தையாகவும், மூலப் பொருட்களின் விளைநிலமாகவும் பயன்படுத்திக் கொண்டனர். 18ம் 19ம் நூற்றூண்டுகளில் பிரிட்டனும், முதலாளித்துவப் பாதையை மேற்கொண்ட ஏனைய நாடுகளும் பொருளாதார வளர்ச்சி குன்றிய உலகோடு தொடர்புகொள்ள வேண்டியிருந்தது: அது உற்பத்தித் தொழிலற்ற உலகமாகும். சந்தைகளைப் பிடிப்பதும், உணவுப் பண்டங்களை மூலப் பொருட்களைச் சுருட்டுவதும் சுலப சாத்தியமாயிற்று. இன்றைய நிலைமைகளோ நேர்மாற்றமானவை. இளம் நாடுகளின் சகல துறைகளிலுமான, முழு அளவிலான பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக் கட்டைகளைப் போடுவதற்கு வலிமைமிகு முதலாளித்துவ நாடுகள் பகீரதப் பிரயத்தனஞ் செய்கின்றன.

18ம் 19ம் நூற்றூண்டுகளின் தொழிற்புரட்சிக்கு முன்பு பிரிட்டனும், பிரான்சும், ஜெர்மனியும் இந்நாள் ஆபிரிக்க நாடுகளைவிடவும், அநேக ஆசியநாடுகளைவிடவும் செல்வம் மிக்கனவாய், தொழில் உற்பத்தி சக்தி உயர்ந்தனவாய் விளங்கின. நூற்றூண்டுகளான அடிமைத்தனத்தையும், சூறையாடலையும் அனுபவித்திருக்கவில்லை. அதற்கு மாற்றமாக, பெரும் ஐரோப்பிய அரசுகள் பின்

தங்கிய நாடுகளைச் சூறையாடி, தமது உழைப்பாளி மக்களின் வயிற்றிலடித்தது மட்டுமல்லாமல், கலோனியல், அடிமை நாடுகளது வயிற்றிலு மடித்துத் தம்மை உற்பத்தி மயப்படுத்திக் கொண்டன. "மேற்கு ஐரோப்பாவில் உற்பத்தித் தொழில் மயத்துக்கான மாறுதலைக் கொணர்வதற்கான செலவின் பெரும்பகுதி இந்தியா, சீனு ஐரோப்பிய நாடுகளின் அடிமைத்தனத்துக்கு உட்பட்ட பொருளாதாரத்தைக் கொண்ட மற்றும்நாடுகளினுல் செலுத்தப்பட்டது," என ஜவஹர்லால் நேரு எழுதுவதற்கு தகுந்த காரணமுண்டு.

பொருளாதாரத்தின் துரித வளர்ச்சியை முதலாளித்துவம் உத்தரவாதஞ் செய்யவில்லையென்பதை வரலாறு காட்டுகின்றது. முதலாளித்துவம் உழைக்கும் மக்களுக்குத் தனிமையையும், துன்பத்தையுமே கொணர்கின்றது. பொருளாதார வலிமைகுன்றிய நாடுகள் முதலாளித்துவப் பாதையை மேற்கொண்டால் அவை பின்தங்கிய நிலையிலேயே இருக்கும் சாபநிலை தவிர்க்க முடியாததாய் விடும். சமூக ஏற்றத்தாழ்வு பெருகும்—தொழிலாளிவர்க்கம் சலிக்கும் வரைப்பாடுபட அதன் பலனை விரல்விட்டெண்ணக் கூடிய முதலாளிகள் அனுபவிக்கும் இழிநிலையுண்டாகும் என்பதே இதன் அர்த்தம். முதலாளித்துவம் விவசாயிகளைநசித்துவிடும். நகரப்புற மத்தியதர வர்க்கத்தினர் கைப்பணியாளர், சிறு வியாபாரிகள் பாரிய அளவு மூலதனத்துடனுன போட்டியில் தவிர்க்கமுடியாதவாறு தோற்றுவிடுவர். கலாச்சாரத்தினது, கல்வியினது நன்மைகள் முழு உழைக்கும் மக்களுக்கும் தொடர்ந்து மறுக்கப்பட்டுவிடும்.

சோஷலிஸம்—இதற்கு மறுபுறத்தில்—மக்களுக்கு இன்பத்தைக் கொணர்கிறது; பொருளாதாரத்தினதும், கலாச்சாரத்தினதும் துரித வளர்ச்சியை உத்தரவாதப்படுத்துகிறது, மனிதனை மனிதன் சுரண்டும் பழக்கம், சமூக ஏற்றத்தாழ்வு, வேலையின்மை ஒழித்துக்கட்டப்படுகிறது. கூட்டு விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்படுகின்றது. கூட்டு விவசாயத்தை மேற்கொள்ளும் வாய்ப்பை அவர்கள் பெறுகின்றனர். அவர்களது கூட்டுப் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வதற்கு அவர்களுக்கு உதவி நல்கப்படுகின்றது. காலத்துக்கேற்ற நவீன—விவசாய யந்திரங்களை அரசு விவசாயிகட்கு வழங்குவதோடு, பயிற்றப்பட்ட விவசாய நிபுணர்களது ஆலோசனைகளையும் அவர்கள் பெறச்செய்கிறது. சோஷலிஸம் மட்டுமே உழைக்கும் மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தையும் கலாச்சார நன்மைகளையும் உத்தரவாதஞ் செய்யமுடியும். சோஷலிஸம் உலகக் கலாச்சாரத்தின் சாதனைகளை மக்கள் அனுபவிக்க வசதியளிப்பதோடு, மக்களுக்காக வேண்டிப் படைப்புத் தொழிலில் ஈடுபட அறிவுஜீவிகளுக்கு பரவலான சந்தர்ப்பம் வழங்குகின்றது.

முதலாளித்துவ உலகின் தொற்று வியாதியான வேலையின்மையும், பணவீக்கமும் சோஷலிஸ நாடுகளில் காணமுடியாதவை. வேலையில்லாத்திண்டாட்டம் சோவியத் யூனியனில் 1930ல் ஒழிக்கப்பட்டுவிட்டது. அங்கு பணவீக்கமும் கிடையாது. பிரதான உணவு, போக்குவரத்துச் சேவை, வீட்டு வாடகை இவற்றின் செலவு ஸ்திரமானதாக, வழக்கப்படி, உலகிலேயே மிகவும் குறைந்ததாக உள்ளது.

எனினும் சோஷலிஸம் பிரமாண்டமான நவீன உற்பத்தித் தொழிலை, விவசாயத்தின் பாரிய அளவிலான யந்திரமயமாக்கத்தை, மக்கள் மத்தியிலே உயர்தர கலாச்சாரத்தை முன்னெண்ணமாகக் கொண்டுள்ளது. அப்படியானால், இதை, பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய. சூறையாடப்பட்ட மாஜி—காலனி நாடுகளில் சாதிப்பது எப்படி?

வாஸ்தவம் சோஷலிஸத் தீர்வுகளைக் கடைப்பிடிப்பதில் இளம் நாடுகள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் ஏராளம். நடப்புகால உலகின் முன்னேற்றமடைந்த நாடுகளிலிருந்து அவை வெகுதூரம் பின்தங்கி நிற்கின்றன.

ஆசிய ஆபிரிக்க புதிய அரசுகளின் பொருளாதார விடுதலையையும், சுதந்திரத்தையும் ஈட்டுதல் அத்தியாவசியமாய் மிகவும் கஷ்டமானதும், சிக்கலானதுமாகும். மிகவும் பின்தங்கிய புராதன உற்பத்தி சக்திகளையே அவை தம்வசம் கொண்டுள்ளன. அவற்றின் பொருளாதார அமைப்பு தலைகீழாய் கிடக்கின்றது. அவற்றில் பல ஏகப்பயிர்ச் செய்கையின் மீது அமைந்துள்ளன. தம் பண்டங்களை விற்பதற்கும், கருவிகள், எரிபொருள், நுகர்வுப் பொருட்களை வாங்குவதற்கும் அவை முற்றுக அந்நிய வர்த்தகத்தையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. தம் மக்களுக்கு சொந்த உணவுப்பொருட்களை அல்லது மற்றும் அடிப்படைத் தேவைகளை வழங்க அவற்றுல் முடியவில்லை. எங்கு பார்த்தாலும் வேலையில்லாத்திண்டாட்டம், நாட்டுப்புறத்தில் சனத்தொகை பெருக்கம் இவைதான் நாம் காணும் நடைமுறை யதார்த்தம். பொருளாதாரத்தில் முதலீடுசெய்ய அவற்றிடம் மூலதனம் கிடையாது. அவற்றின் உற்பத்தித் தொழிலும், போக்குவரத்திலும் ஈடுபட பயிற்றப்பட்ட நிபுணர்கள் கிடையாது. அநேக நாடுகளில் அந்நிய ஏகபோகங்களின் கையிலே இன்னும் லகான் உள்ளது. இப்படி எவ்வளவோ:

ஏகாதிபத்திய மூலதனம் சுதந்திரநாடுகளையும், கலோனியல் நாடுகளையும் சுரண்ட முடிகிறது என்ற உண்மை நிலையினுல் இக் கஷ்டங்கள் யாவும் இன்னும் மோசமடைகின்றன. இதைத்தான் அது செய்து வருகிறது. ராணுவக் கைப்பற்றுதல் இன்றியே அவற்றைக் கொள்ளையடிக்கின்றன. உலகச்சந்தையின் செயல்பாட்டினுல், சமத்துவமற்ற வர்த்தகப் பரிமாற்றத்தினுல், இவை சாதிக்கப்படுகின்றன. ஏகாதிபத்தியத்தின் கீழ் சர்வதேச தொழில் பங்கீட்டுப்பிரிவு, ஏகபோகங்களின் சர்வதேச ஆட்சியன்றி வேறில்லை.

கடந்த காலத்தில் ஏகாதிபத்திய மூலதனத்தின் பல்தேசியக் கம்பெனிகளின் வர்த்தகத் தொடர்புகள் யாவும் ஆக உயர்ந்தபட்ச ஆதாயத்தைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. எனினும், இன்று அவர்கள் அந்தப் பழைய முறையைப் பின்பற்றும் நிலையில் இல்லை. வளர்முக நாடுகள் உதவிக்காகவும் வர்த்தகத்துக்காகவும் சோவியத் யூனியன் பால், மற்றும் சோஷலிஸ நாடுகள் பால் திரும்ப முடியும். எனவே மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற சில முதலாளித்துவ நாடுகள் வளர் முக நாடுகட்கு சில உபயோகமான உதவிகளை வழங்குகின்றன. அவர்கள் அவ்வாறு செய்யுமாறு

நிர்ப்பந்திக்கப்படட்டுள்ளனர். அல்லா விட்டால் இந்நாடுகளின் மக்கள் சோஷலிஸ நாடுகள் மட்டுமே தமக்கு உண்மையாக உதவுகின்றன என நம்பத்தலைப்பட்டுவிடுவர்.

பரஸ்பரம் நன்மை பயக்கும் வர்த்தகம், சமத்துவமான பொருளாதார உறவுகள் தொழில் நுட்பப் பரிவர்த்தனை இவற்றை எவரும் எதிர்க்க மாட்டார். ஆனால் ஏகபோக மூலதனத்துக்கும், பல்தேசிய கம்பனிகட்கும் இவற்றில் அக்கரையில்லை. தமது சலுகை வாய்ந்த நிலைமையை மாஜிகாலனிகளிலும் அரைகாலனிகளிலுமிருந்து அவை பெறும் ஆதாயத்தை, உபரிலாபத்தைப் பாதுகாத்துக் கொள்ள அவை சங்கற்பம் பூண்டுள்ளன கருவிகள், கடன்கள் தொழில் நுட்ப உத்திகள் வழங்குபவர்களாகத் தங்கள் ஏகபோகத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கே அவை பாடுபடுகின்றன.

இந்நாளில் அவை தமது குறிக்கோளைச் சாதுரியமாக மறைத்துக் கொள்ளும் உபாயத்தைக் கையாள்கின்றன; ''உதவி'' பொருளாதார, தொழில் நுட்ப, அரசியல் ''ஆலோசனை'' போன்ற உன்னதமான சொற்றொடர்களை உபயோகின்றன; ஸ்துதிகள் பாடி, பெரிய வாக்குறுதிகள் வழங்கி எலும்புத்துண்டுகளை வழங்குகின்றன.

நவ கலோனியல் வாதமென குறிக்கப்படும் இம் முறைகள் யாவும் அடிமைப்படுத்துதல், சுரண்டுதல், சூறையாடுதல் என்ற பழைய குறிக்கோள்களையே முன்னெடுத்துச் செல்கின்றன. நவகலோனியல்வாதிகளின் உதவி, மாஜி காலனிகளிலும், அரைகாலனிகளிலுமிருந்து பெருஞ்செல்வத்தைக் கொள்ளை கொண்டு போவதற்கான ஏகபோகங்களின் புதிய உபாயமேயாகும். வழக்கமாக, ஏகாதிபத்தியவாதிகள் உதவி வழங்கும் போதெல்லாம் பொருளாதார முன்னேற்றத்துக்கான தேசியத் திட்டங்களை மாற்றுமாறும், கெடுக்குமாறும் வற்புறுத்தி, அவற்றை அந்நிய ஏகபோகங்களது விருப்பத்தை நிறைவேற்றுமாறு செய்ய எத்தனித்து, நாட்டின் மீது அந்நிய ஆதிக்கத்தையுண்டு பண்ணும் கருவியாக அதைப் பாவிக்கின்றனர்.

அந்நிய மூலதனத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை, முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதை வழியாக சுதந்திரப் பொருளாதார வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. ஏகாதிபத்தியத் தொழிற் பிரிவினையின் தளைகளிலிருந்து விடுதலை சோஷலிஸ நாடுகளோடு நட்புறவிலும், அவற்றுடன் பொருளாதார பிணைப்புகளிலும், சர்வதேசச் சுரண்டல்காரர்களுக்கெதிராக வளர்முக நாடுகள் தங்களது ஐக்கிய அணியை வலுப்படுத்திக் கொள்வதிலும் தங்கியுள்ளது.

புதிய தேசிய அரசுகளது பரஸ்பர ஆதரவும், ஐக்கிய ஒருமைப்பாடும், காலனியல்வாதத்துக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட முழுத் தொடர்சியான அரசியல் நடவடிக்கைகளில் ஏற்கனவே அற்புத வெளிப்பாடு பெற்றுள்ளன போன்று பொருளாதாரத்துறையில் இன்னும் அதேயளவுக்குத் தாக்கத்தை யேற்படுத்தவில்லை. சுரண்டலைக் கட்டுப்படுத்தி, உலக வர்த்தகத்

தில் தமக்கு அதிக சாதகமான நிலைமைகளை உருவாக்குவதில் வளர்முக நாடுகளின் ஐக்கிய ஒருமைப்பாடு பெரும்பங்கு வகிக்க முடியும். பொருளாதாரத்தில் மக்கள் சொந்த துறையும், அந்நிய வர்த்தகத்தில் அரசக் கட்டுப்பாடும் கூட, தேசியப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும், அந்நியச் சுரண்டலைக் கட்டுப் படுத்தும் நியம விதி கொண்டுள்ளது

இது எவ்வாறுயினும். உலக சோஷலிஸ அமைப்பு நாடுகளது நெருங்கிய ஒத்துழைப்போடு, முதலாளித்து மற்ற வளர்ச்சி மூலம் மட்டுமே அந்நியச் சுரண்டலை முற்றுக ஒழித்துக்கட்டுவது சாத்தியமாகும்.

# XI

## லெனினிய சமாதானக் கொள்கை

சோவியத் யூனியன் வெளிநாட்டுக் கொள்கை, அக்டோபர் சோஷலிச புரட்சியிலிருந்து, சர்வதேச ஒத்துழைப்பை உறுதிப் படுத்துவதை, அது சமாதானத்துக்கும் முன்னேற்றத்துக்கும் உதவுவதை, ஆயுதக் குவிப்பைத் தடுப்பதை, ஆயுதப் பரிஹரணத்துக்கும் முடிவமைதிக்குமான பாதையின் உடன்பாடான அடிகளை எடுத்து வைப்பதை ஸ்திரமான குறிக்கோளாக கொண்டுள்ளது.

லெனின் தலைமையில் சோவியத் ஆட்சி நிறைவேற்றிய முதல் ஆக்ஞை சமாதானத்தின் மீதான ஆக்ஞையாகும். எல்லா நாடுகளுக்கும் அது சமாதானத்தை வழங்கியதோடு, முதலாவது உலக யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சகல நாடுகளது மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும், உடனடியாக விரோதங்களை விடுத்து உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்குப் பேச்சு வார்த்தைகளைத் தொடங்குமாறு விண்ணப்பித்தது. (அனுபந்தம் 19 ஐப் பார்க்கவும்)

சமாதான ஆக்ஞை கூறியது; "அக்டோபர் 24-25 புரட்சியால் உருவாக்கப்பட்ட தொழிலாளர் விவசாயிகள் அரசு தொழிலாளர், போர் வீரர், விவசாயிகள் டெப்பியூட்டிகளின் சோவியத்துகளைத் தனது அடிப்படையாகக் கொண்டு, போர்சன்னத்தமான சகல மக்களையும், அவர்களது அரசுகளையும், நியாயமான ஜனநாயகத் தன்மை வாய்ந்த சமாதானத்துக்கான உடனடிப் பேச்சு வார்த்தைகளில் இறங்குமாறு அறைகூவுகின்றது.

"நியாயமான ஜனநாயகத்தன்மையான சமாதானம் என்பதன்மூலம், போரினால் சலித்துப்போன, வேதனையுற்ற, சின்னாபின்னமடைந்த போர்ச்சன்னத்தங் கொண்ட நாடுகளின் தொழிலாளி வர்க்கமும் மற்றும் உழைக்கும் மக்களும் விழைவது ஜாரிஸ முடியாட்சி தூக்கியெறியப்பட்டது முதல் ரஷ்யத் தொழிலாளர் விவசாயிகள் மிகவும் திட்டவட்டமாக, பிடிவாதத்துடன் வேண்டிய சமாதானத்தின் மூலம் அரசு சேர்க்கையில்லாத (அதாவது, அந்நிய நாடுகளைக் கைப்பற்றுதல் இல்லாத, அந்நிய நாடுகளைப் பலவந்தமாக இணைத்துக் கொள்ளுதல் இல்லாத) நஷ்டஈடு இல்லாத உடனடியான சமாதானத்தையே அர்த்தப் படுத்துகிறது."

அப்புறம், அந்நிய நாடுகளைக் கைப்பற்றுதல் அல்லது இணைத்தல் என்றால் என்னவென்பதைக் ஆக்ஞை, தன் கருத்துப்படி விளக்க முற்பட்டது. அதாவது, ''ஒரு சின்ன அல்லது வலிமை குன்றிய நாட்டை அந்நாட்டின் திட்டவட்டமான, தெளிவான, சுயாதீனமான ஆசையோ விருப்பமோ இல்லாமல், ஒரு பெரிய சக்திமிக்க அரசு இணைத்துக்கொள்வது—அத்தகையப் பலவந்தமான இணைப்பு நிகழ்ந்த காலத்தின் பொருட்பாடின்றி, சம்பந்தப்பட்ட அரசுடன் பலவந்தமாக இணைக்கப்பட்ட நாட்டின் அல்லது பலவந்தமாக அதன் எல்லைக்குள் வைத்துக்கொள்ளப்பட்ட நாட்டின் வளர்ச்சித் தரத்தையோ, பின்தங்கிய நிலையையோ பொருட்படுத்துதலின்றி, இறுதியாக இவ்விராஜ்யம் ஐரோப்பாவில் உள்ளதா அலலது தூரத்தில் கடல்தாண்டிய நாடுகளில் உள்ளதா என்ற பொருட்பாடின்றி'' என்று இது அர்த்தப்பட்டது.

''எந்தவொரு நாடும் சம்பந்தப்பட்டவோர் அரசின் எல்லைகளுக்குள் பலவந்தமாக, அதன் விருப்பத்துக்குமாறாக வைத்துக் கொள்ளப்பட்டால், — அது பத்திரிகைகளிளோ, பொதுக் கூட்டங்களிலோ, தரப்பினர்களின் தீர்மானங்களிலோ, அல்லது தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் எழுச்சிகளில் வெளிப்படுத்தப்பட்டிருப்பினுஞ்சரி—இணைத்துக் கொள்ளும் நாட்டின் அல்லது, பொதுவாக, பலம்மிக்க நாட்டின் படைத்துருப்புகள் பூரணமாக அப்புறப்படுத்தப்பட்ட பிறகு, குறைந்தபட்ச நிர்ப்பந்தம்கூட திணிக்கப்படாமல், தன் ராஜ்யத்தின் ஆயுள்வடிவத்ததச் சுதந்திரமாகத் தீர்மானித்துக் கொள்ளும் உரிமை வழங்கப்படாத பட்சத்தில் அத்தகைய இணைப்பு, சேர்க்கையாகும், அதாவது கைப்பற்றுதலும். வன்முறையுமாகும்.''

இந்த ஆக்ஞை முன்னேற்றமடைந்த, போர்சன்னத்தமான நாடுகளின் வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளருக்கு, ''யுத்தத்தின் கொடுமையிலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் மனுக்குலத்தைக் காப்பாற்றுவதற்காக இப்போது அவர்களை எதிர்நோக்கும் கடமையைஉணர்ந்து'' கொள்ளக்கூடிய தொழிலாளருக்கு விண்ணப்பித்தது ''இத்தொழிலாளர் பகுத்தறிவு வாய்ந்த, சங்கற்பம் பூண்ட, மிகவும் வீறுகொண்ட நடவடிக்கை மூலம், சமாதானத்தை வெற்றிகரமாக நிலைநாட்டுவதற்கு எமக்குதவுவர்; அதேவேளை நமது மக்கள் தொகையின் உழைக்கும் சுரண்டப்படும் பஞ்சைப் பஞதிகட்கு சகலவிதமான அடிமைத்தனத்திலிருந்தும் சகலவிதமான சுரண்டலிலிருந்தம் விடுதலை பெற்றுக் கொடுப்பர்'' என்று ஆக்ஞை குறிப்பிட்டது.

லெனினால் வரையறுக்கப்பட்டதுபோல், சமாதானப்பொறுப்பு கொண்ட இந்த ஆக்ஞைதான் கடந்த ஆறு தசாப்த காலகட்டத்தினூடு சோவியத் வெளிநாட்டுக் கொள்கைக்கு உற்சாக உத்வேக மூட்டி வந்துள்ளது. முதலாளித்துவ நாடுகளிலிருந்து அடிப்படை வேறுபாடு கொண்ட, அடிப்படையில் புதியதொரு வெளிநாட்டுக் கொள்கையை, ராஜதந்திரத்தை இது வகுத்தெடுத்தது. லெனினின் சமாதான ஆக்ஞை, ஒரே நேரத்தில் யுத்தநிறுத்தத்துக்கும்,

சமாதானத்துக்கும், கலோனியல்வாதத்தைத் தீர்த்துக் கட்டுவதற்குமான கோரிக்கையாகும். சமாதான ஆக்ஞை பிரகடனஞ் செய்யப்பட்ட 1917 நவம்பர் 8ந் திகதியிலிருந்து, சோவியத் சமாதானக் கொள்கையின் இரண்டு பிரதான மார்க்கங்களாவன (அ) சமாதானத்துக்கும், சமாதான சகவாழ்வுக்குமான போராட்டம் (ஆ) ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் விடுதலைப் போராட்டமும், விடுதலை இயக்கங்களுக்கு வழங்கப்படும் சர்வதேச ஆதரவும், உதவியும்,

உலகைக் கூறுபோடுவதற்கும், காலனிமக்களையும், எல்லேகளையும் அடிமைப்படுத்துவதற்கும் யுத்தம் தொடர்வதை ஆக்ஞை ''மனுக்குலத்துக்கெதிராகப் புரியப்படும் குற்றம்'' என வர்ணித்ததோடு இதன்மூலம், தேசிய விடுதலை இயக்கங்களுடனான தன் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி, விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துமாறு அடிமைப்பட்ட மக்களுக்கு அறைகூவல் விடுத்தது.

பாட்டாளிவர்க்க சர்வதேசியம், வெவ்வேறு சமூக அமைப்புகள் கொண்ட நாடுகள் மத்தியில் வலுவான சமாதான சகஜீவனக் கொள்கை ஆகிய இரண்டு அடிப்படை லெனினிசக் கோட்பாடுகளை ஆக்ஞை ஸ்தூலமாக வெளிப்படுத்தியது. சமாதானக் ஆக்ஞையின் உள்ளடக்கத்தை லெனின் வாசித்த ஒரு விநாடிகளுக்குள்ளேயே, முந்தியநாள் புதிய சகாப்தத்தின் உதயத்தை அறிவித்து குண்டுவெடித்த போர்க்கப்பலான ''அவ்ரோரா''வின் தந்தியறிவிப்பாளர் ஆக்ஞையின் உள்ளடக்கத்தை போர்ச்சன்னத்தமான நாடுகளின் அரசுகளுக்கும், மக்களுக்கும் ஒலிபரப்பினார்.

சமாதான அறைகூவல் பிள்ளைப்பிராய சோவியத் அரசால் முழக்கப்பட்டபோதும், அதற்குச் சமாதானம் சுலபமாகக் கிட்டவில்லை. சமாதானத்தையடைவதற்கும், சமாதான ஆக்கப்பணியில் இறங்குவதற்குமான சந்தர்ப்பத்தைப் பெறுவதற்கும் அது சொல்லொணு கஷ்டங்களையனுபவிக்கவேண்டி நேர்ந்தது.

ஜனநாயகத்தன்மை வாய்ந்த சமாதானத்துக்கான சோவியத் அரசின் பிரேரணைகளை பிரிட்டன், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்க அரசாங்கங்கள் உதாசீனஞ் செய்ததோடு, சோவியத் ஆட்சியின் ஆரம்ப நாட்களிலிருந்தே அதன் வீழ்ச்சியைக் கொணர்வதற்கான சதித்திட்டங்களில் மூர்த்தண்யமாய் ஈடுபட்டன எனவே சோவியத் அரசு ஜெர்மனியரோடு தனியாகப் பேச்சுவார்த்தை நடத்துமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு, மார்ச் 1918ல் ஜெர்மன்யோடும், அதன் நேசநாடுகளோடும் பிரெஸ்ட்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கையை நிறைவேற்றியது. இவ்வுடன்படிக்கை அதன் நிபந்தனைகள் இங்கிதமற்றதாய் இருந்த போதிலும், ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து ரஷ்யா வெளியேறுவதற்கு வழிசெய்தது.சோவியத் யூனியனுக்கெதிராகக் கூட்டுப் போராட்டம் நடத்துவதற்கு பிரிட்டனேடும், பிரான்ஸோடும் ஜெர்மனியும் அதன்நேசநாடுகளும் அணிசேர்வதையும் இது கடினமாக்கியது. இவ்வுடன்படிக்கை

கைச்சாத்தாவதைத் தடுப்பதற்கு அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சுத் தலைவர்கள் மேற்கொண்ட சகல முயற்சிகளும் தவிடுபொடியாகின.

எனினும் மூச்சுவிடுவதற்காகவென்று வெகு கஷ்டமாகத் தேடிக் கொண்ட இடத்தை சோவியத் குடியரசு அதிககாலம் அனுபவிக்கக் கிடைக்கவில்லை. பதவியிறக்கஞ் செய்யப்பட்ட சுரண்டல் வர்க்கம் அதிகாரமும், சலுகைகளுமிழந்த புதிய நிலைமைக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளமுடியவில்லை. அக்டோபர் புரட்சிக்குப் பின் பதவியிறக்கஞ் செய்யப்பட்ட சுரண்டல்காரர்கள்-நிலவுடைமையாளர்கள், முதலாளிகள்-உடனே தமது படைப்பிரிவை உருவாக்கி சோவியத் ஆட்சியை வீழ்த்துவதற்காக வெண்காவலர் படையை அமைத்தனர்.

தொழிலாளர் விவசாயிகளது ஆட்சி நிலவும் ஒருநாடு இருப்பதை அந்நிய ஏகாதிபத்தியவாதிகளாலும் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதன் உதாரணம் முதலாளித்துவ நாடுகளின் உழைக்கும் மக்கள் மீது புரட்சிகரமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஜாரிஸ்ட் அரசுக்கும் பூர்ஷுவா தற்காலிக அரசுக்கும் வழங்கியிருந்த கோடிக்கணக்கான ரூபிள்களை இழப்பதற்கோ, அல்லது ரஷ்யாவில் அவர்களுக்குச் சொந்தமாகவிருந்த பாக்டரிகள், சுரங்கங்கள் இன்னபிறவற்றிலிருந்து வாரிச்சுருட்டிய பெருந்தொகையான லாபங்களை இழப்பதற்கோ ஏகபோகக்காரர்கள் விரும்பவில்லை. மேலும், சோவியத் ரஷ்யா அதன் சமாதானக் கொள்கை மூலம், வெறுக்கப்பட்ட யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பது எப்படியென ஏனைய நாட்டுத் தொழிலாளர்களுக்கு உதாரணமாய்த் திகழுமென அவர்கள் பயந்தனர்.

முறியடிக்கப்பட்ட நிலச்சொந்தக்காரர்கள், முதலாளிகள், குலாக்குகள் உருவாக்கிய எதிர்ப்புரட்சி சோவியத் ஆட்சிக்கெதிரக ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கியது. ரஷ்யாவின் மாஜி நண்பர்களான பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான். அமெரிக்கா எதிர்ப்புரட்சிக்கு எல்லா உதவிகளையும் வழங்கின. சர்ச்சில் கசப்புடன் கூறியது போல் ''ரஷ்யப் புரட்சியைத் தொட்டிலில் திருகிக் கொல்லும்'' பந்தயத்தில் பதினலு முதலாளித்துவ நாடுகள் ரஷ்யாவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதற்காகப் படைத்துருப்புகளை அனுப்பிவைத்தன.

சோஷலிஸப் புரட்சியின் லாபங்களைப் பாதுகாப்பதற்காக ரஷ்யாவின் உழைக்கும் மக்கள் பொங்கியெழுந்தனர். செஞ்சேனை உருவாக்கப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டு விரோதிகளுக்கெதிராக அது வெற்றிகரமாகப் போரிடத் தொடங்கியது. 1922 அளவில் தலையீட்டாளர்களது சகல சக்திகளையும் ரஷ்யாவை விட்டு வெளியேறச் செய்வதில் செஞ்சேனை வெற்றிகண்டது.

செஞ்சேனையின் வெற்றி, தலையீட்டுக்கெதிராக சர்வதேச பாட்டாளிவர்க்கம் நடத்திய புரட்சிப் போராட்டத்தினுல் எளிதாக்கப்பட்டது. முதலாளித்துவ நாடுத் தொழிலாளர்கள் ஆயுதம் வழங்குவதை நிறுத்தினர்; ''ரஷ்யாவில் கைவையாதே'' குழுக்களை

அமைத்தனர். இவ்வாறு தலையீட்டாளர்கள் நடவடிக்கையெடுப்பதை மிகவும் கடினமாக்கி, சோவியத் குடியரசின் உழைக்கும் மக்களுக்கு உதவினர். சர்வதேச ஒருமைப்பாடு பற்றிப் பேசுகையில் லெனின் கூறினார்:

"திட்டமாக இவ்வாதரவு தான், திட்டமாக தொழிலாளர், விவசாயிகள், நிலத்தை உழுவோரான—உழைக்கும் மக்கள் உலகெங்கிலும், எமக்கு விரோதமான நாடுகளில் கூட, காட்டிய ஆதரவுதான், நியாயமான இவ்வாதரவும், இவ்வனுதாபமும்தான் எமக்கெதிரான சகல முற்றுகைகளும் தோல்வியடைவதற்கான இறுதியான மிகவும் தீர்மானமான வழியும், தீர்மானமான காரணமுமாகும்."

தலையீட்டுச் சக்திகள் முறியடிக்கப்பட்டவுடனே, முதலாளித்துவ அரசுகளோடு உறவுகளைச் சுமுகப்படுத்திக்கொள்வதற்கு சோவியத் அரசு ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொண்டது.

போலந்துடன் தற்காலிக யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்று நிறைவேற்றப்பட்டு, மார்ச் 1921ல் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதற்குச் சற்று முன்பு எஸ்தோனியாவுடனும், லித்துவேனியாவுடனும், லத்வியாவுடனும் சமாதான உடன்படிக்கைகள் நிறைவேறின.

இவ்வேளையில், பிரிட்டன் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தபடியால் பிரிட்டிஷ் அரசாங்கத்தைச் சேர்ந்த அநேக செல்வாக்கு மிகு உறுப்பினர்கள் ரஷ்யாவுடன் வர்த்தகத் தொடர்புகள் புறக்கணிக்கப்படக் கூடாது என நம்பினர். அப்போது லண்டனிலிருந்த சோவியத் தூதுகோஷ்டி இரு நாடுகளுக்கிடையே வர்த்தக உறவுகளைப் புதுப்பிப்பதற்காக சோவியத்—பிரிட்டிஷ் ஒப்பந்தமொன்றை மார்ச் 16, 1921ல் கைச்சாத்திடுவதற்காக இதைப் பயன்படுத்திக்கொண்டது. இந் நடவடிக்கையின் முக்கியத்துவம் பொருளாதாரத்துறையைக் கடந்து அதற்கு அப்பாலும் வெகுதூரம் சென்றது. சோவியத் அரசை பிரிட்டன் அங்கீகரித்தது. சோவியத் ரஷ்யாவும் முதலாளித்துவ நாடுகளும் இப்போது வர்த்தக உறவுகளை ஸ்தாபித்துக் கொள்ளத் தொடங்கின. முதலாளித்துவ நாடுகளுடன் சமாதான சகஜீவனம் ஆரம்பாகியது.

சோவியத் குடியரசுக்கும் கிழக்கு நாடுகளுக்குமிடையே சினேக உறவுகளை ஸ்தாபிப்பதில் 1921ம் வருடம் முக்கியமானதொரு காலகட்டமாக விளங்கியது. அக்டோபர் புரட்சி மக்களின் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் பிரகடனஞ் செய்தது; கலோனியல் ஒடுக்குமுறையையும் அடிமைத்தனத்தையும் கண்டித்தது; அரசியல், பொருளாதாரச் சுதந்திரத்துக்கான மக்களின் உரிமையை அங்கீகரித்தது.

சோவியத் குடியரசு உருவாக்கப்பட்டதுமே அரசாங்கம் ஈரான், துருக்கி, ஆப்கானிஸ்தான், சீன அரசுகளோடு பேச்சு

வார்த்தைகளைத் தொடங்கியது. பிரிட்டனிலும் பிரான்ஸிலும் இது அவற்றின் காலனிகளது விதிசம்பந்தமான ஐயப்பாடுகளைக் கிளப்பியது. கிழக்குநாடுகளுடன் சோவியத் பேச்சுவார்த்தையைத் தடுப்பதற்கு அவர்கள் பகீரதப் பிரயத்தனஞ் செய்தனர். குறிப்பாக ஈரானில் சோவியத் செல்வாக்கு குறித்து பிரிட்டனுக்குக் கிலிபிடித்தது.

அக்டோபர் புரட்சிக்குப்பின் சோவியத் அரசு, ஜார் ரஷ்யாவுக்கும் ஈரானுக்குமிடையே நிறைவேறியிருந்த சகல சமத்துவமற்ற உடன்படிக்கைகளையும் ரத்துசெய்தது. மேலும், அது ரஷ்ய துருப்புகளை ஈரானிலிருந்து வாபஸ்செய்து அந்நாட்டின் சுதந்திரத்தையும், சுயாதிபத்தியற்றதயும் அங்கீகரித்தது.

பிரிட்டன் இதற்கு நேர்மாற்றமாக 1919ல், ஈரானிய எல்லைகளை பிரிட்டன் பிடித்துக் கொண்டிருப்பதை சட்டபூர்வமாக்கி அதன் சரணாகதியைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுமாறு ஈரானை நிர்ப்பந்தித்தது. ஷாவின் மீதும் ஈரானிய பாராளுமன்றமான மஜ்லிஸ் மீதும் லண்டன் பெரும் நிர்ப்பந்தத்தைக் கொணர்ந்தது. ''போல்ஷ்விஸ பயப்படுத்தல்'' என்று ஈரானுக்குப் பூச்சாண்டி காட்டப்பட்டது. பிரிட்டிஷ் கலோனியல் சாம்ராஜ்யத்தில் முக்கிய கேந்திர ஸ்தானம் வகித்த ஈரானிய எண்ணெய், அதன் இயற்கை வளங்கள், செல்வம் இவற்றின் மீது பிரிட்டிஷ் பிடியை வைத்திருக்கும் ஒரே நோக்கோடு. அதற்குப் பலவிதமான வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

சமத்துவமின்மை, தமது அரசின் சரணாகதி இவற்றுக்கெதிராக ஈரானிய மக்களின் போராட்டத்துக்கு சோவியத் வெளிநாட்டுக் கொள்கை பயன்மிகு உதவி வழங்கியது. சோவியத்—ஈரானியப் பேச்சுவார்த்தை மாஸ்கோவில் நவம்பர் 1920ல் தொடங்கி, பெப்ரவரி 26, 1921ல் முடிவற்றது. ஜார் ரஷ்யாவுக்கும் ஈரானுக்குமிடையே கைச்சாத்தான சகல சமத்துவமற்ற உடன்படிக்கைகள் ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்படுவதை, சகல ஈரானியக் கடன்களும் ரத்துசெய்யப்படுவதை சோவியத் அரசு மீளவும் உறுதிப்படுத்தியதோடு ர ஈரானிடமிருந்து பெற்ற சலுகைகளையும் சொத்துகளையும் ஈரானிடம் திருப்பிக் கொடுத்தது. சோவியத் அரசு ஈரானிடம் கையளித்த சொத்துகள் மட்டும் 58.2 கோடி தங்க ரூபில்கள் பெறுமதி வாய்ந்ததாகும்.

ஈரானிய மக்களின் விடுதலைப் போராட்டத்தில் சோவியத் உதவி ஏற்படுத்திய தாக்கம், பெப்ரவரி 26, 1921 சோவியத் ஈரானிய ஒப்பந்தம் இவற்றின் காரணமாக, மஜ்லிஸ் 1919ன் ஆங்கிலோ—ஈரானிய உடன்படிக்கையை உறுதிப்படுத்த மறுத்தது

தேசிய விடுதலைப் போராட்டத்தின் பொதுவான எழுச்சி கிழக்கில் ஆப்கானிஸ்தானுக்குப் பரவியது இளமையும் சுறுசுறுப்பும் மிகு அமிர் அமானுல்லாஹ்கான் 1919ல் அந்நாட்டில் அதிகாரத்துக்கு வந்தார். ஆப்கானிஸ்தான் மீதுதான் அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்ள முயன்ற பிரிட்டனின் பிரயத்தனங்

களை அவர் எதிர்த்ததோடு, சோவியத் குடியரசுடன் நட்புறவை ஸ்தாபித்துக் கொள்வதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொண்டார். 1919ன் இறுதியில் ஆப்கன் தூதுகோஷ்டியொன்று மாஸ்கோவுக்கு விஜயஞ் செய்தது. அதேவேளை சோவியத் பிரதிநிதியொருவர் காபூல் போய்ச் சேர்ந்தார். இருநாடுகளுக்கிடையே பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாய் நடைபெற்றன. 1920ன் இறுதியில் அமானுல்லாஹ்கான், ஆப்கன் மக்கள் சோவியத் குடியரசு மீது நட்புறவு பாராட்டுகின்றனர் என லெனினுக்கு எழுதினார். சோவியத்—ஆப்கன் பேச்சுவார்த்தைகளின் வெற்றி குறித்து திருப்தி தெரிவித்தார். லெனின் தனது பதிலில், கிழக்கின் எல்லா நாடுகளும், மக்களும் விடுதலையுறவேண்டுமென விரும்பும் இரு நாடுகளும் பொதுவான அபிலாஷைகளைக் கொண்டிருப்பதைக் குறிப்பிட்டார்.

சோவியத்—ஆப்கன் உறவுகள் பலமடைவதைத் தடுக்க பிரிட்டிஷ் கலோனியல்வாதிகள் சதிகள் செய்தனர். ஆனாலும். ஆர். எப். எஸ். ஆர். உம் ஆப்கானிஸ்தானும் மாஸ்கோவில் 1921 பெப்ரவரி 28ந் திகதி உடன்படிக்கையை செய்துக் கொண்டன. அது இன்னும் அமுலில் உள்ளது.

இது ''ரஷ்யாவுக்கும் ஆப்கானிஸ்தானுக்குமிடையே நட்புறவை வலுவுறச் செய்வதையும், ஆப்கானிஸ்தானின் உண்மையான சுதந்திரத்தைப் பாதுகாப்பதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது,'' என உடன்படிக்கையின் முகவுரை கூறுகின்றது. எந்தவொரு வல்லரசுடனும் ஆப்கானிஸ்தான் கைச்சாத்திட்ட சமத்துவமான முதல் உடன்படிக்கை இதுவேயாகும். இருதரப்பினரும் அவரவர் சுதந்திரத்தை அங்கீகரித்தனர்; சுமுகமான ராஜதந்திர உறவுகளை ஸ்தாபிப்பதற்கு-ஒப்புக் கொண்டனர், ''ஒப்பந்தஞ் செய்து கொள்ளும் தரப்பினரில் எத்தரப்பினருக்கேனும் குந்தகம் உண்டு பண்ணும் வகையில் மூன்றுவது சக்தியொன்றுடன் எத்தகைய ராணுவ அல்லது அரசியல் ஒப்பந்தமும் செய்து கொள்ளாதிருப்பது'' எனப் பொருந்திக் கொண்டன. ''ரஷ்யாவின் அரசஸ்தாபனங்களின் மூலமோ அல்லது வேறெங்கோ வெளிநாட்டில் வாங்கிய எந்த பொருட்களையும் அதன் எல்லைகளினூடே கொண்டு செல்வதற்கு கட்டுப்பாடில்லாத வரி அறவிடப்படாத அனுமதியை'' சோவியத் அரசு வழங்கியது. சோவியத் அரசு தனது தெற்கு அண்டை நாட்டுக்கு நிதியுதவியும் மற்றும் பொருளுதவியும் கூட வழங்குதற்கு, குறிப்பாக விமானங்கள் வழங்குவதற்கு, விமான மோட்டல் பயிற்சிப் பாடசாலை நிறுவுவதற்கு, தோட்டாக்களோடு 5,000 சுழல் துப்பாக்கிகள் வழங்குவதற்கு, புகைவெழுப்பாத வெடிமருந்து நிலையமொன்று அமைப்பதற்கு, இக்காரணத்துக்காக சோவியத் நிபுணர்களை அனுப்பிவைப்பதற்கு, அத்துடன் பத்து லட்சம் ரூபிள் தெறுமதியான தங்கத்தை வட்டியில்லாக் கடனாக வழங்குவதற்கும் ஒப்புக் கொண்டது. காபூலில் வானொலி நிலையமொன்று அமைக்கப்பட்டு ஆப்கன் அரசிடம் ஒப்படைக்கப்பட விருந்தது. 1923ம் ஆண்டின் இறுதிவாக்கில் சோவியத் அரசு உடன்படிக்கை மூலம் பொருந்தியிருந்த சகல உதவிகளையும் வழங்கிவிட்டது.

சோவியத்—ஆப்கன் உடன்படிக்கை ஆப்கானிஸ்தானின் உள்நாட்டு, சர்வதேச நிலைமைகளை வலுவுறச் செய்ததோடு, தனது சுதந்திரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக ஆப்கன் மக்கள் மேலும் நடத்திய போராட்டத்திலும், அந்நாட்டில் தனது செல்வாக்கை மீட்பதற்கான பிரிட்டனின் ஏகாதிபத்திய முயற்சிகளை முறியடிப்பதிலும் மிகவும் முக்கிய பாத்திரம் வகித்தது. அதன் உறுதிப்பாட்டின் மீது, பிரிட்டன் இறுதியான உடன்படிக்கையொன்றை (அக்டோபர் 1921), அதன் பூரண சுதந்திரத்தை அங்கீகரித்தல், சுமுகமான ராஜதந்திர உறவுகளை நிறுவுதல் என்ற அடிப்படையின் மீது கைச்சாத்திட வேண்டி நேர்ந்தது.

சோவியத் ரஷ்யா நெகழும் தன்மை வாய்ந்த வெளிநாட்டுக் கொள்கையொன்றைக் கடைப்பிடித்தது. அது விட்டுக் கொடுப்பதற்குத் தயாராயிருந்ததோடு ஏகாதிபத்திய சக்திகளைப் பிரித்து வைக்கும் முரண்பாடுகளைப்பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றலையும் காட்டியது.

முதன் முறையாக சோவியத் ரஷ்யா சர்வதேச மகாநாடொன்றில் பிரதிநிதித்துவம் வகித்தது, ஏப்ரில் 1922ல் ஜெனோவாவில் நடந்த ஐரோப்பிய மகாநாட்டிலாகும். ''ஐரோப்பாவைப் புனருத்தாரணம் செய்தலு''க்காக ஐரோப்பிய நிதி அமைப்பொன்றுக்காக இம்மகாநாட்டில் திட்டங்கள் வரைந்தெடுக்கப்பட்டன. சோவியத் தூதுகோஷ்டி சார்பில் பேசும்போது வெளிவிவகார மக்கள் கமிஸார் ஜியார்ஜி சிச்சேரின், ''இவ்வரலாற்று சகாப்தத்தில், பழைய அமைப்பும் தலைதூக்கிவரும் புதிய அமைப்பும் சமாந்தரமாக நிலவிவருவதை, சொத்துடைமையின் இவ்விரு அமைப்புகளை பிரதிநிதித்துவப் படுத்தும் நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பை சாத்தியப் படுத்தி வைத்தல் உலகப் பொருளாதார மீட்சிக்கு மிகவும் அத்திவசியமென ரஷ்ய தூதுகோஷ்டி நம்புகிறது. எல்லா நாடுகளது அரசுகளோடும் உற்பத்தித் தொழில் வட்டாரங்களோடும் பரஸ்பர நலன், சமத்துவம், பூரண, நிபந்தனையற்ற அங்கீகாரம் என்ற அடிப்படையில்—வர்த்தக உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கே ரஷ்ய தூதுகோஷ்டி இங்குவந்துள்ளது,'' என்று குறிப்பிட்டார். வித்தியாசமான சமூக அமைப்பு கொண்ட நாடுகளையே சமாதான சகஜீவனத்துக்கும், ஒத்துழைப்புக்கும் வழிவகுக்கும் லெனினிஸக் கொள்கையின் உத்தியோக பூர்வ பிரகடனம் இது.

அதே-வேளை பொதுவான ஆயுதக் குறிப்பையும் சோவியத் தூதுகோஷ்டி பிரேரித்தது. ஆயுதப் பரிஹரணப் பிரச்சினையை நடைமுறை ரீதியாகக் கிளப்புவதற்கு சோவியத் ஆட்சி மேற்கொண்ட முதல் முயற்சியும் இதுவேயாகும். ஆயுதப் பரிஹரணம் சோஷலிஸத்தின் லட்சியமாகும் என்ற லெனின் கொள்கைக்கு அது என்றுமே விசுவாசமுள்ளதாய் இருந்து வந்துள்ளது. எனினும் மகாநாட்டை ஏற்பாடு செய்தவர்கள் ஆயுதப் பரிஹரணம் பற்றி உரையாட ஒரேயடியாய் மறுத்துவிட்டனர்.

குறிப்பாக வெற்றிசக்திகளுக்கும் முறியடிக்கப்பட்ட ஜெர்மனிக்குமிடையே வித்தியாசங்களும், விரோதமனப்பான்மையும்

நிலவியமையால் ஜெனோவா மகாநாட்டில் எத்தகைய உடன்பாடுகளும் ஏற்படவில்லை. இந்நிலை, ஜெனோவாவிலிருந்து ஜெர்மன் பிரதிநிதிகளுடன் உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திடுவதற்கு வகைசெய்தது. இதன்மூலம் இருதரப்பினரும் ராஜதந்திர உறவுகளை மீட்டதோடு முக்கியமான பிரச்சினைகளை சமத்துவ அடிப்படையில் தீர்த்துக்கொள்வதற்கு இணங்கினர். ரப்பலோ உடன்படிக்கை சமாதான சகஜீவனக் கொள்கை வடிவம் கொண்ட முதலாவது உடன்படிக்கையாகும். ''ரப்பலோ உடன்படிக்கை, நாம் எல்லா நாடுகளோடும் செய்து கொள்ளவிரும்பும் உடன்படிக்கைகளுக்கு ஓர் உதாரணமாகும். நாம் இம்மார்க்கத்தை உறுதியுடன் பின்பற்றி வருவதோடு தொடர்ந்தும் அவ்வாறே செய்வோம். இது, எல்லா மக்களுடனும் மிகவும் நெருங்கிய அரசியல் பொருளாதார உறவுகளை வளர்த்துக் கொள்ளும் மார்க்கமாகும்''

சோவியத் யூனியன் ஸ்தாபிதமான நாள்தொட்டு அதன் சமாதானக் கொள்கை தொடர்ச்சியான வளர்ச்சியுற்று வந்துள்ளது. தொடக்கத்திலிருந்து சோவியத் சமாதானக் கொள்கையின் தனித்துவமான குணவியல்பு உலகின் சகல மக்களுக்கும் தனது சொந்த நாட்டுக்கும் உலக சமாதானத்தைக் கொணர்வதற்காக அயராது பாடுபட்டுவருதலாலும். சர்வதேச அரசியலிலும் இக்குறிக்கோளை யடைவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சோவியத் யூனியனின் வலிமை அதிகரிக்கத் தொடங்கியதோடு உலகச் சமாதசனத்துக்கான சோவியத் யூனியனின் போராட்டத்தின் வகையும், அளவும் தொடர்ந்து விரிந்து விஸ்தீரணமடைந்துள்ளது. இன்று உலகின் சக்தி மிக்க நாடுகளில் ஒன்றாக வளர்ச்சியடைந்துள்ள சோவியத் யூனியன் எல்லா நாடுகளதும் சமாதானப் போராட்டத்துக்கு உற்சாகமாகத் தலைமை தாங்குவதில் தனது வரலாற்றுப் பாத்திரத்தை முன்னெடுத்துச் செல்கிறது.

சமாதான ஆக்ஞை பிரகடனஞ் செய்யப்பட்டவுடனே லெனின் கூறினார் ''யுத்தத்துக்கு எதிராக திட சங்கற்பமானதொரு போராட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.''. இன்னும் ''இது கடினமானதொரு போராட்டமாகும். எனினும் பூர்ஷுவா வர்க்கம் எங்கள் மீதும் எமது சமாதான இயக்கத்தின் மீதும் காட்டும் கொடிய வெறுப்பினால் நாம் தளர்ந்து விடமாட்டோம்'' என்று வலியுறுத்திக் கூறினார். அறுபது வருடங்கட்கும் அதிகமாக இன்று லெனினது கட்சியும் சோவியத் ராஜ்யமும், லெனின் கொள்கைக்கு விசுவாசமாய், சமாதானத்துக்காக அயராமல் போராடி வருகின்றன. அக்டோபர் புரட்சியின் பிறந்தகம் சமாதானத்தினதும், சமூக முன்னேற்றத்தினதும் அரணாக தனது மகோன்னதப் பணியை மதிப்புடன் நிறைவேற்றி வருகின்றது.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் 30வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி 1979 அக்டோபரில் பெர்லினில் நடந்த மாபெரும் கூட்டத்தில். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் குழு செயலாளர் நாயகம் லியோனித் பிரெஷ்னேவ் சோவியத் யூனியனின் கேந்திரக் கொள்கையை விவரித்து இவ்வாறு கூறினார்:

''சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில், நாம் ராணுவ வல்லமையை விரும்பவில்லையென்பதை நான் திரும்பத் திரும்ப வலியுறுத்த விரும்புகிறேன். எந்தவொரு ராஜ்யத்தையும், ராஜ்யக் குழுவையும் அச்சுறுத்தும் நோக்கம் எமக்கிருக்கவில்லை. எமக்கு அந்நோக்கம் கிடையாது. எமது நேரடியான கொள்கை வெறும் பாதுகாப்புத் தன்மை படைத்ததேயாகும். சோவியத் யூனியன் ஐரோப்பியக் கண்டத்தில் தனது பாதுகாப்புத்தேவைக்கும் அதிகம் ராணுவ சக்தியை அதிகரித்து வருகிறது என்ற அனுமானம் உண்மையல்ல, இது திட்டமிட்டவெகுஜன கபடத்தனமாகும்.

''உலகின் மற்றெந்த பகுதிகளிலும் போல, ஐரோப்பாவில் நாம் சமாதானத்தை, நிலையான சமாதானத்தை, விரும்புகிறோம்; இதுவே எம் வெளிநாட்டுக் கொள்கையின் முதுகெலும்பாகும். நாம் இக்கொள்கையை விட்டுக்கொடாமல், அதிலிருந்து விலகிச் செல்லாமல் பின்பற்றுகிறோம்.''

சமாதான சோவியத் வெளிநாட்டுக் கொள்கை, சோவியத் மக்களால் 1977 அக்டோபர் 7ல் நிறைவேற்றப்பட்ட சோவியத் யூனியனின் புதிய யாப்பில் அடங்கியுள்ளது. ஷரத்து 28 குறிப்பிடுகிறது:

''சோவியத் யூனியன் லெனினிஸ சமாதானக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றுவதோடு நாடுகளின் பந்தோபஸ்தை வலுவுறச் செய்வதையும், பரந்த சர்வதேச ஒத்துழைப்பையும் ஆதரிக்கின்றது.

சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை, சோவியத் யூனியனில் கம்யூனிஸத்தை நிர்மாணிப்பதற்குச் சாதகமான சர்வதேச நிலைமைகளை உறுதிப்படுத்துவதையும், சோவியத் யூனியனின் ராஜ்ய நலனை பாதுகாப்பதையும், உலக சோஷலிஸத்தின் நிலைமையை ஸ்திரப்படுத்துவதையும், தேசிய விடுதலைக்கும், சமூக முன்னேற்றத்துக்குமான போராட்டத்தை ஆதரிப்பதையும், ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தடுப்பதையும், உலக, பூரண ஆயுதப்பரிஹரணத்தை சாதிப்பதிலும், வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகள் மத்தியில் சமாதான சகஜீவனக் கொள்கையை உறுதியாக அமுல்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது;

''சோவியத் யூனியனில் யுத்தப் பிரச்சாரம் தடைசெய்யப்பட்டுள்ளது''

சமாதானத்தை வலுவுறச் செய்வதற்கும், ஆயுதப்போட்டிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் ஆயுதப்பரிஹரணத்துக்கும் சோவியத் யூனியனைப்போல் வேறெந்த நாடும் அனேக, முக்கியத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை முன்வைத்தது கிடையாது. சோவியத் யூனியனைப் போல் வேறெந்தநாடும் முடிவமைதிக்கும் உலக சமாதானத்துக்கும் இவ்வளவு பாடுபட்டது கிடையாது.

**அநுபந்தம்-**
*லெனின் நூல்களிலிருந்து*

## 1-ஆசியாவின் விழிப்பு

நூற்றாண்டுகளாகத் தேக்கமுற்று ஸ்தம்பித்துநின்ற நாடுகளுக்கு உதாரணமாகச் சீனுகருதப்பட்டது வெகுகாலத்துக்கு முன்பாகவா? இன்று சீன அரசியல் நடவடிக்கையின் கொந்தளிப்புமூண்ட தேசமாய், வீறுகொண்ட சமூக இயக்கத்தின், ஜனநாயக எழுச்சியின் அரங்காகக் காணப்படுகின்றது. 1905 ம் ஆண்டின் ரஷ்ய இயக்கத்தைத் தொடர்ந்து ஜனநாயகப் புரட்சி துருக்கிக்கும் பாரசீகத்துக்கும், சீனுவுக்கும்-முழு ஆசியாவுக்கும் பரவியது. பிரிட்டனிலும் இந்தியாவிலும் கொந்தளிப்பு மூண்டுவருகிறது.

டச்சு கிழக்கிந்தியப் பகுதிகளுக்கும் ஜாவாவுக்கும் நாலுகோடி மக்களைக்கொண்ட ஏனைய டச்சுக் காலனிகளுக்கும் புரட்சிவாத ஜனநாயக இயக்கம் பரவியமை முக்கியத்துவம் வாய்ந்த வளர்ச்சியாகும்.

முதலாவதாக, தேசிய இயக்கம் இஸ்லாமிய துவஜத்தின்கீழ் எழுச்சி பெற்றுள்ள ஜாவாவில் பொதுமக்கள் மத்தியில் ஜனநாயக இயக்கம் வளர்ச்சியுற்று வருகிறது. இரண்டாவதாக, டச்சு கிழக்கிந்தியப் பகுதிகளில் முதலாளித்துவம் சூழலுக்கேற்ப மாறியுள்ள ஐரோப்பியர் அடங்கிய உள்நாட்டு புத்திஜீவிவர்க்கமொன்றை உருவாக்கியுள்ளது. மூன்றுவதாக ஜாவாவையும் ஏனைய தீவுகளையும் சேர்ந்த கணிசமான மக்கட் பெருந்தொகையினர் தம் தாய்நாட்டிலிருந்து புரட்சிவாத இயக்கத்தைக் கொணர்ந்துள்ளனர்.

டச்சு மார்க்ஸிஸ்ட்டான வொன் ரவெஸ்ட்டெயன், டச்சுக் கிழக்கிந்தியப் பகுதிகளின் எழுச்சியை வர்ணிக்கையில், டச்சு அரசின் காலத்தால் பழைமை தட்டிப்போன கொடுங்கோலாட்சிக்கு இப்பொழுது நாட்டுமக்கள் மத்தியில் தீர்க்கமான எதிர்ப்பு கிளம்பியுள்ளதென சுட்டிக்காட்டுகிறுர்.

புரட்சிக்கு முந்திய கட்டத்தின் வழக்கமான சம்பவங்கள் தொடங்கிவிட்டன. அதிசயிக்கத்தக்க வேகத்தில் கட்சிகளும், யூனி

யன்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. அரசு அவற்றுக்குத் தடை விதிக்கின்றது. அதன்மூலம் வெறுப்புக்குத் தூபம் வார்க்கவும், இயக்கத்தின் வளர்ச்சியைத் துரிதப் படுத்தவுமே செய்கிறது. உதாரணமாக, ''இந்தியக்கட்சி''யை, அதன்திட்டங்களும் விதிகளும்சுதந்திரப்போராட்டமும் பற்றிப் பிரஸ்தாபித்தமையால், அது சமீபத்தில் கலைத்தது. டச்சு டார்ஸிமோடாக்கள் (சந்தர்ப்பவசமாய் சமயக்குரவர்களதும், லிபரல்களதும் அங்கீகாரத்தோடு-ஐரோப்பிய லிபரலிஸம் முற்றாக அழுகிப்போயுள்ளது.) இந்த ஷரத்தை நெதர்லாந்திலிருந்து பிரிந்து செல்லும் நோக்கம் கொண்ட குற்ற முயற்சியாகக் கருதியது. கலைக்கப்பட்ட கட்சியோ இன்னொரு பெயரில் புத்துயிர் பெற்றது.

நாட்டு மக்கள் தொகையினரின் தேசிய யூனியன் ஒன்று ஜாவாவில் ஸ்தாபிக்கப்பட்டது. எற்கனவே அதன் உறுப்பினர் தொகை 80,000 ஆகும். அது பொதுக்கூட்டங்களை நடாத்தி வருகிறது. ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியாது.

உலக முதலாளித்துவமும், 1905 ம் ஆண்டின் ரஷ்ய இயக்கமும் ஆசியாவை இறுதியாகத் தட்டியெழுப்பியுள்ளது.

நசுக்கி மிதிக்கப்பட்டு அறியாமையில் உழலும் லட்சோப லட்சம் மக்கள் மத்தியகால தேக்கத்திலிருந்து, நல்வாழ்வு வேண்டி விழிப்புற்று அடிப்படை மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்திற்கும் போராட வீறுகொண்டெழுகின்றனர்.

வளர்ச்சியுற்ற நாடுகளின் தொழிலாளர், விடுதலை இயக்கம் அதன் பல்வேறு வடிவங்களில், உலகின் ஒவ்வொரு பகுதியிலும் வலுப்பெற்று வளர்வதை ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் அவதானித்து வருகின்றனர். தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வலிமைகண்டு கிலிகொண்ட ஐரோப்பிய பூர்ஷுவாக்கள் பிற்போக்கையும் ராணுவவாதத்தையும் சமயக்குரவர்வாதத்தையும் சூனியவாதத்தையும் தழுவிக்கொள்கின்றனர். ஆனால் ஐரோப்பிய நாடுகளின் தொழிலாளிவர்க்கமும், ஆசியாவின் இளம் ஜனநாயகமும் தன் வலிமையில் முழு நம்பிக்கை கொண்டு, மக்கள்மீது விசுவாசம் வைத்து, க்ஷீண தசையுற்ற, சுக்கலாகக் கூடிய பூர்ஷுவாவர்க்கத்தின் இடத்தைப் பிடித்துக்குக் கொள்வதற்காக முன்னேறிச் செல்கின்றது.

ஆசியாவின் விழிப்பும், ஐரோப்பாவின் வளர்ச்சியுற்ற தொழிலாளிவர்க்கம் ஆட்சியைப் பிடிப்பதற்காக நடத்தும் போராட்டத்தின் தொடக்கமும் இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலக வரலாற்றில் புதிய கட்டத்தின் குறியீடாக விளங்குகின்றன.

# 2-மார்க்ஸியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும்

மார்க்ஸின் போதனை, நாகரிக உலகெங்கிலும் அதிகாரத்தரப்பினதும், மிதவாதிகளதும் ஆகிய இருவகையான முதலாளித்துவ விஞ்ஞானத்திடமிருந்தும் அளவற்ற பகைமையையும் வெறுப்பையும் கிளப்பி விடுகிறது. மார்க்ஸியம ஒரு வகையா "நச்சுத்தன்மை கொண்ட குறுல்குழுவாதம்" என்று அது கருதுகிறது. அதனிடமிருந்து வேறு எந்த விதமான போக்கையும் எதிர்பார்க்க முடியாதுதான். ஏனெனில் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ள ஒரு சமுதாயத்தில் "ஒரு சார்பற்ற" சமுதாய விஞ்ஞானம் எதுவும் இருக்கமுடியாது. அதிகாரத் தரப்பைச் சேர்ந்த விஞ்ஞானம் அனைத்தும் மிதவாதிகளது விஞ்ஞானம் அனைத்தும் எதாவதொரு விதத்தில் கூலி அடிமை முறையை ஆதரிக்கிறது. மார்க்ஸியமோ கூலி அடிமைமுறையை ஈவிரக்கமின்றி எதிர்த்துப் போர்ப் பிரகடனம் செய்துள்ளது. மூலதனத்துக்குக் கிடைக்கும் லாபத்தைக் குறைப்பதன் மூலம் தொழிலாளர்களின் கூலியை உயர்த்தலாமா என்ற பிரச்சினையில் முதலாளிகள் ஒரு சார்பற்ற வர்க்கமாய் இருப்பார்களென எதிர்பார்ப்பது எப்படி அசட்டுத்தனமாகுமோ, ஏமாளித்தனமாகுமோ, அப்படித்தான் கூலி அடிமை முறைச் சமுதாயத்தில் விஞ்ஞானம் ஒரு சார்பற்றதாக இருக்குமென எதிர்பார்ப்பதும் அசட்டுத்தனமாகும். ஏமாளித்தனமாகும்.

இது மட்டுமல்ல, தத்துவஞானத்தின் வரலாறும் சரி, சமுதாய விஞ்ஞானத்தின் வரலாறும் சரி, மார்க்ஸியத்தில் "குறுல்குழுவாதம்" போன்றதெதுவும் கிடையாது என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன. அதாவது, அது ஒரு இறுகிப்போன வரட்டுத் தத்துவமல்ல. உலக நாகரிக வளர்ச்சியின் ராஜபாட்டையின் வழியே வராமல் அதனின்று விலகி வேறொருவழியே முளைத்த போதனை அல்ல. மாறாக, மனிதகுலத்தின் முன்னணிச் சிந்தனையாளர்கள் ஏற்கனவே எழுப்பியிருந்த கேள்விகளுக்கு மார்க்ஸ் விடைகள் தந்தார் என்பதில்தான் குறிப்பான அவருடைய மேதாவிலாசம் அடங்கியுள்ளது. தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம் சோஷலிஸம் ஆகியவற்றின் தலைசிறந்த பிரதிநிதிகளுடைய

போதனைகளின் நேரடியான உடனடியான தொடர்ச்சியாகத் தான் மார்க்ஸின் போதனை எழுந்தது.

மார்க்ஸின் போதனை மெய்யானது. பிழையற்றது. அதனால் தான் அது எல்லாம் வல்ல தன்மை பெற்றிருக்கிறது அது முழுமையான, உள்ளிணக்கம் கொண்ட போதனை. ஒரு ஒன்றிணைந்த உலகப் பார்வையை அது மக்களுக்கு அளிக்கிறது. எந்த வடிவத்திலுமமைந்த மூடநம்பிக்கைகளோ இந்த உலகப் பார்வையுடன் ஒத்துவர முடியாது. ஜெர்மானியத் தத்துவஞானம், ஆங்கிலேய அரசியல் பொருளாதாரம், பிரெஞ்சு சோஷலிஸம் என்ற வடிவத்தில் 19ம் நூற்றாண்டில் மனிதகுலம் படைத்துத் தந்த தலைசிறந்த படைப்புகளின் உரிமைபெற்ற வாரிசுதான் மார்க்ஸியம்.

இவை மார்க்ஸியத்தின் மூன்று தோற்றுவாய்களாகும். மூன்று உள்ளடக்கக் கூறுகளாகும், இவற்றைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

பொருள் முதல்வாதம்தான் மார்க்ஸியத்தின் தத்துவஞானமாகும். பொருள் முதல்வாதம் ஒன்றுதான் முரணற்ற தத்துவஞானமாகும். இயற்கை விஞ்ஞானங்களுடைய எல்லாப் போதனைகளுக்கும் ஏற்புடையதாகும். மூட நம்பிக்கைகளுக்கும் பகட்டுக்கும் பசப்புக்கும் இன்னபிறவற்றுக்கும் தீராப் பகையாகும் என்பது ஐரோப்பாவின் நவீனகால வரலாறு பூராவிலும் இன்னும் முக்கியமாய் மத்தியகாலக் குப்பைக்கூளங்களை எதிர்த்தும் நிறுவனங்களிலும் கருத்துக்களிலும் ஆட்சி புரிந்த நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்தும் நடைபெற்ற முடிவான கடும்போரின் களனயிருந்த பிரெஞ்சு நாட்டில் 18ம் நூற்றாண்டின் இறுதியிலும் தெளிவாக மெய்ப்பிக்கப்பட்டது. ஆகவே, பொருள் முதல்வாதத்தை ''மறுப்பதற்கு'' பலவீனப்படுத்துவதற்கும், பழிப்பதற்கும், ஜனநாயகத்தின் எதிரிகள் முழுமூச்சுடன் முயன்று பார்த்தார்கள். தத்துவஞானக் கருத்து முதல்வாதத்தின் பலவகை வடிவங்களை இவர்கள் ஆதரித்தனர். இவ்வகைக் கருத்து முதல்வாதம் ஏதாவது ஒரு வழியில் எப்பொழுதும் மதத்தைப் பாதுகாக்கவோ ஆதரிக்கவோ தான் செய்கிறது.

மார்க்ஸும் எங்கெல்ஸும் தத்துவஞானப் பொருள் முதல்வாதத்தை மிகுந்த மனத்திண்மையோடு ஆதரித்துப் பாதுகாத்தனர். இந்த அடிப்படையிலிருந்து விலகிச் செல்லும் ஒவ்வொரு திரிபும் மிகவும் தவறாயிருப்பதை அவர்கள் அடிக்கடி விளக்கிவந்தார்கள். எங்கெல்ஸ் எழுதிய லுத்விக் ஃபாயர்பாக், டூரிங்குக்கு மறுப்பு8 என்கிற நூல்களில் அவர்களுடைய கருத்துக்கள் மிகத் தெளிவாகவும் முழுமையாகவும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. கம்யூனிஸ்ட் அறிக்கை என்கின்ற நூலைப் போலவே இவ்விரண்டு நூல்களும் வர்க்க உணர்வுபெற்ற ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவசியமான கைப்புத்தகங்களாகும்.

18-ம் நூற்றாண்டின் பொருள் முதல் வாதத்துடன் மார்க்ஸ் நின்றுவிடவில்லை. அவர் தத்துவஞானத்தை முன்னேறச் செய்தார் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானம் திரட்டிய செல்வங்களைக்

கொண்டு குறிப்பாக ஹெகலின் தத்துவமுறை—இதிலிருந்தே ஃபாயாபாகின் பொருள்முதல்வாதம் தோன்றியது-திரட்டிய செல்வங்களைக் கொண்டு அவர் பொருள் முதல்வாதத்தை வளப்படுத்தினர். இந்த செல்வங்களில் பிரதானமாக விளங்கியது இயக்கவியல் என்பது மிக மிக முழுமையான ஆழமான ஒருதலைப் பட்சமில்லாத வடிவத்தில் வளர்ச்சியைப் பற்றி விளக்கி விபரிக்கும் போதனையாகும்; நிரந்தரமாக வளர்ச்சியுற்ற வண்ணமுள்ள பருப்பொருளை நமக்குப் பிரதிநிதித்துக் காட்டும் மனித அறிவின் சார்பு நிலையை வலியுறுத்தும் போதனையாகும். ரேடியம் மின்னணுக்கள் தனிமங்களின்று மற்றென்ருக மாறுவது-இவைபோன்ற இயற்கை விஞ்ஞானத்தின் மிக நவீனகண்டுபிடிப்புகளெல்லாம் மார்க்ஸின இயக்கவியல் பொருள் முதல் வாதமே சரியானது என்று வியக்கத்தக்க முறையில் உறுதிப்படுத்தியுள்ளன. அழுகிப்போன பழைய கருத்துமுதல் வாதத்தைப் பற்றிய ''புதிய'' மறு வியாக்கியானங்களைக் கொண்டு முதலாளித்துவத் தத்துவ ஞானிகள் தந்த போதனைகளால் இதைத் தடுக்க முடியவில்லை.

தத்துவஞானப் பொருள் முதல் வாதத்தை மார்க்ஸ் ஆழமாக்கி வளர்த்து நிறைவு பெறச் செய்தார். இயற்கை பற்றிய அறிவாகவும் விரிவாக்கினர். மாக்ஸின் வரலாற்றுத் துறைப் பொருள் முதல் வாதம் விஞ்ஞானச் சிந்தனைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக அமைந்தது முன்பெல்லாம் வரலாற்றையும் அரசியலையும் பற்றிய கருத்துக்களில் குழப்பமும் தான் தோன்றித்தனமும் ஆதிக்கமும் செலுத்தி வந்தன. இப்போது அவை போய் வியப்பூட்டும் அளவுக்கு ஒருத்த முழுமையும் உள்ளிணக்கமும் கொண்ட ஒரு விஞ்ஞானத் தத்துவம் வந்து விட்டது. வரலாற்றுத் துறைப் பொருள் முதல் வாதம் என்ற இந்தத் தத்துவம் காட்டுவதென்ன? உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக ஒரு சமுதாய அமைப்பு முறையிலிருந்து அதைவிட உயர்தரமான இன்னெரு சமுதாய அமைப்புமுறை எப்படி வளர்கிறது என்பதை-உதாரணமாக, நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்புமுறை வளர்கிறது என்பதை அது காட்டுகிறது.

இயற்கை என்பது—அதாவது வளர்ச்சி பெற்றுக் கொண்டே இருக்கும் பருப்பொருள் என்பது—மனிதனுக்கு அப்பால் சுயமாக இருந்து வருகிறது. இந்த இயற்கையை மனித அறிவு பிரதிபலிக்கிறது. அதே போலத்தான் மனிதனின் சமுதாய அறிவு எனப்படுவது (அதாவது, தத்துவஞானம், மதம் அரசியல் முதலானவை சம்பந்தமாக மனிதன் கொண்டிருக்கும் பல்வேறு கருத்துக்களும் போதனைகளும்) சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையைப் பிரதிபலிக்கிறது. அரசியல் நிறுவனங்கள் என்பவையெல்லாம் பொருளாதார அடித்தளத்தின் மீது நிறுவப்பட்டமேல் கட்டுமானமேயாகும். உதாரணமாக, நவீன ஐரோப்பிய அரசுகளின் பல்வேறு அரசியல் வடிவங்கள் எல்லாம் பாட்டாளி வர்க்கத்தின் மேல் முதலாளி வர்க்கம் செலுத்தி வரும் ஆதிக்கத்தைப் பலப்படுத்த எப்படி பயன் படுகின்றன என்பதை நான் பார்கிறேம்.

மார்க்ஸின் தத்துவஞானம் முழு நிறைவு பெற்ற தத்துவ ஞானப் பொருள் முதல் வாதமாகும். இந்தப் பொருள் முதல்வாதம் மனித குலத்திற்கு, குறிப்பாகத் தொழிளாளி வர்க்கத்துக்கு மகத்தான அறிவுச் சாதனங்களை வழங்கியிருக்கின்றன.

2

பொருளாதார அமைப்பு முறை என்ற அடித்தளத்தின் மீது தான் அரசியல் மேல் கட்டுமானம் கட்டப்படுகிறது என்று தெளிந்து ஏற்று கொண்டவுடன் மார்க்ஸ் தமது பெரும்பாலான கவனத்தை இந்தப் பொருளாதார அமைப்பு முறையின் மீது செலுத்தினர். மார்க்ஸின் பிரதான நூலாகிய மூலதனம் நவீன காலத்தினை அதாவது முதலாளித்துவ சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையை ஆராயும் நூலாகும்.

மார்க்ஸுக்கு முற்பட்ட மூலச்சிறப்புகள்ள அரசியல் பொருளாதாரம் முதலாளித்துவ நாடுகள் எல்லாவற்றிலும் அதிக வளர்ச்சி பெற்றிருந்த இங்கிலாந்திலே உருவாயிற்று. ஆதாம் ஸ்மித்தும் டேவிட் ரிக்கார்டோவும் பொருளாதார அமைப்பு முறையை ஆராய்ந்து மதிப்பு பற்றிய உழைப்புத் தத்துவத்துக்கு அஸ்திவாரமிட்டார்கள். அவர்களுடைய பணியை மார்க்ஸ் தொடர்ந்து நடத்தினர். இந்தத் தத்துவத்தை அவர் திட்டமாக நிரூபித்து முரணற்ற வகையில் விவரித்தார். ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பும் அதை உற்பத்தி செய்வதில் செலவழிக்கப்பட்ட சமுதாய ரீதியில் அவசியமான உழைப்பு நேரத்தின் அளவைக் கொண்டுதான் நிர்ணயிக்கப்படுகிறது என்று அவர் விளக்கிக் காட்டினர்,

முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் பொருட்கள் இடையிலான (ஒரு பண்டம் மற்றொன்றுடன் பரிமாற்றம் செய்து கொள்ளப்படும்) உறவு என்பதாக விவரித்ததில் மனிதர்கள் இடையிலான உறவு நிலவுவதை மார்க்ஸ் புலப்படுத்தினர். பண்டப் பரிமாற்றம் தனித்தனியான உற்பத்தியாளர்களிடையே சந்தை மூலமாக ஏற்படும் பிணைப்பைக் காட்டுகிறது. பணம் என்பது இந்தப் பிணைப்பு தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் பொருளாதார வாழ்க்கை முழுவதையும் பிரிக்க முடியாதபடி முழு மொத்தமாக இணைத்து மேலும் மேலும் நெருக்கமாவதைக் குறிக்கிறது மூலதனம் என்பது இந்தப் பிணைப்பு மேலும் வளர்ச்சியுறுவதைக் குறிக்கிறது. அதாவது மனிதனின் உழைப்புச் சக்தியே ஒரு பரிமாற்றப் பண்டமாகி விடுவதைக் குறிக்கிறது. கூலி பெறும் உழைப்பாளி நிலம் ஆலைகள் உழைப்புக் கருவிகள் ஆகியவற்றின் சொந்தக்காரர்களிடம் தனது உழைப்புச் சக்தியை விற்கிறான். தொழிலாளி வேலை நாளின் ஒரு பகுதியைத் தன்னையும் தனது குடும்பத்தையும் பராமரித்துக் கொள்வதற்கு வேண்டிய செலவுக்காக (அதாவது, கூலிக்காக) உழைப்பதில் கழிக்கிறான். மறு பகுதியில் ஊதியமின்றியே உழைத்து முதலாளிக்கு மிகுதி மதிப்பை உண்டாக்கித் தருகிறான். இந்த மிகுதி மதிப்புத்தான் லாபத்துக்குத் தோற்றுவாய் அதுதான் முதலாளி வர்க்கத்தின் செல்வத்துக்குத் தோற்றுவாய்

மிகுதி மதிப்பைப் பற்றிய போதனைதான் மார்க்ஸின் பொருளாதாரத் தத்துவத்துக்கு மூலக்கல் ஆகும்

தொழிலாளியின் உழைப்பால் உண்டாக்கப்பட்ட மூலதனம் சிறு உற்பத்தியகளர்களை அழித்து வேலையில்லாதோர் பட்டாளத்தைப் படைப்பதின் மூலமாகத் தொழிலாளியை நெருக்குகிறது. தொழில்துறையில் பெருமளவான உற்பத்தி பெறுகிற வெற்றி பளிச்சென்று தெரிகிறது. ஆனுல் இதே நிகழ்ச்சியை விவசாயத்துறையிலும் நாம் பார்க்க முடியும். பெருமளவான முதலாளித்துவ விவசாயத்தின் உயர்நிலை அதிகமாகிக் கொண்டே போகிறது. விவசாயத்தில் யந்திரங்களை உபயோகிப்பதும் அதிகரிக்கிறது. பண மூலதனத்தின் சுருக்குக் கயிற்றில் விவசாயம் பொருளாதாரம் சிக்கிக் கொள்கிறது. அது தனது பிற்பட்ட தொழில் நுட்பத்தின் சுமையால் அழுத்தப்பட்டு அழிகிறது. விவசாயத் துறையில் சிற்றளவான உற்பத்தியின் சீர்குலைவுக்குரிய வடிவங்கள் வேறுயிருப்பினும் இச்சீர்குலைவு ஏற்படுவது மறுக்க முடியாத உண்மையாகும்.

மூலதனம் சிற்றளவான உற்பத்தியை ஒழிப்பதன் மூலம், உழைப்பின் உற்பத்தித்திறன் அதிகரிப்பதற்கும் பெரிய முதலாளிகளின் கூட்டுகளுக்கு ஏகபோக நிலை உற்பத்தியே மேலும் மேலும் சமூதாயத் தன்மை பெறுகிறது. ஒரு முறையான பொருளாதார ஒழுங்கமைப்பிலே லட்சக்கணக்கான, கோடிக் கணக்கான தொழிலாளர் பிணைக்கப்பட்டு விடுகின்றனர் ஆனுல், அந்தக் கூட்டு உழைப்பின் உற்பத்திப் பொருளை விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சில முதலாளிகள் உடைமையாக்கிக் கொள்கிருர்கள் உற்பத்தியில் அராஜகம் வளர்கிறது; அதே போல் நெருக்கடிகளும் வளர்கின்றன: சந்தைகளைப் பிடித்துக் கொள்வதற்கான ஆவேச வேட்டையும் அதிகமாகிறது; திரளான மக்களின் வாழ்க்கைக் காப்புறுதியின்மையும் அதிகரிக்கிறது.

தொழிலாளர்கள் மூலதனத்தை அண்டிப் பிழைக்கவேண்டிய நிலையை முதலாளித்துவமுறை தீவிரப்படுத்தும் அதே சமயத்தில், ஒன்று திரண்ட உழைப்பு எனும் மாபெரும் பலத்தையும் பிறப்பித்துவிடுகிறது.

பரிமாற்றப் பண்டப் பொருளாதாரத்தின் ஆரம்பவித்துக்களிலிருந்து, சாதாரணப் பரிமாற்றத்திலிருந்து தொடங்கி மிக உயர்ந்த வடிவங்கள் வரையில், பெருமளவான உற்பத்தி வரையில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை மார்க்ஸ் ஆராய்ந்து காட்டினுர்.

பழையவையும் புதியவையும் அடங்கலான எல்லா முதலாளித்துவ நாடுகளின் அனுபவமும் இந்த மார்க்ஸியத்தத்துவம் பிழையற்றதாகும் என்பதை ஆண்டுதோறும் மேலும் மேலும் கூடுதலான தொழிலாளர்களுக்குத் தெளிவாக நிரூபித்துக் காட்டி வருகிறது.

உலகெங்கும் முதலாளித்துவம் வெற்றிபெற்றுவிட்டது. ஆனால் இந்த வெற்றி மூலதனத்தின்மீது உழைப்பு காணப்போகும் வெற்றியின் முன்னறிவிப்பே ஆகும்.

8

நிலப்பிரபுத்துவ அமைப்புமுறை வீழ்த்தப்பட்டு ''சுதந்திரமான'' முதலாளித்துவச் சமுதாயம் இப்பூவுலகில் தோன்றிய பொழுது இந்தச் சுதந்திரம் உழைப்பாளிகளை ஒடுக்கவும் சுரண்டவும் அமைந்த புதியதோர் அமைப்பு முறையையே குறித்தது என்பது உடனே தெளிவாக விளங்கலாயிற்று. இந்த ஒடுக்கு முறையின் பிரதிபலிப்பாகவும் இதற்கான கண்டனமாகவும் பல்வேறு சோஷலிஸப் போதனைகள் உடனே தலைதூக்கத் தொடங்கின. ஆனால், ஆரம்ப காலத்திய சோஷலிஸம் கற்பனு சோஷலிஸமாகத்தான் இருந்தது. அது முதலாளித்துவச் சமுதாயத்தை விமர்சித்தது, கண்டித்தது, சபித்தது. அந்தச் சமுதாயத்தை ஒழிக்க வேண்டும் என்று கனக்கண்டது; அதைவிட மேலான ஓர் அமைப்பு முறையைப் பற்றி ஆகாயக் கோட்டைகட்டி வந்தது. சுரண்டுவது ஒழுக்கக்கேடான செயல் என்று பணக்காரர்களுக்கு உணர்த்த முயற்சித்தது.

ஆனால்,கற்பனு சோஷலிஸத்தினல் விடுதலைக்கான மெய்யான வழியைக்காட்ட முடியவில்லை. முதலாளித்துவத்தில் நிலவும் கூலி அடிமை முறையின் சாராம்சத்தை அதனுல் விளக்க முடியவில்லை. முதலாளித்துவ முறையின் வளர்ச்சி பற்றிய விதிகளை அதனுல் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு புதிய சமுதாயத்தின் படைப்பாளியாக அமையவல்ல சமுதாயச் சக்தியை அதனுல் சுட்டிக்காட்டவும் முடியவில்லை.

இதற்கிடையில், நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியையும், பண்ணை அடிமை முறையின் வீழ்ச்சியையும் தொடர்ந்து ஐரோப்பா முழுவதிலும், குறிப்பாக பிரான்ஸில் ஏற்பட்ட புயல் போன்ற புரட்சிகள், வர்க்கங்களின் போராட்டம் தான் எல்லா வளர்ச்சிக்கும் ஆதாரமாயும் உந்து விசையாகவும் உள்ளது என்பதை மேலும் மேலும் தெளிவாக வெளிப்படுத்தின.

நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக் கெதிராய் அரசியல் சுதந்திர வட்சியத்துக்கு கிடைத்த எந்த ஒரு வெற்றியும் அவ்வர்க்கத்தின் மூர்க்கமான எதிர்ப்பில்லாமல் கிடைத்து விடவில்லை முதலாளித்துவச் சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களிடையே ஜீவமரணப் போராட்டம் இல்லாமல் எந்த முதலாளித்துவ நாடும் ஓரளவு சுதந்திரமான, ஜனநாயக அடிப்படையில் வளர்ச்சியுற்றுவிடவில்லை.

வேறு எவருக்கும் முன்பாக மார்க்ஸுக்குத்தான் உலக வரலாறு போதிக்கும் முடிவை இதிலிருந்து கண்டறியவும், அந்த முடிவை முரணின்றிச் செயல்படுத்தவும் முடிந்தது, இதில் தான் அவருடைய மேதாவிலாசம் இருக்கிறது. வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய போதனைதான் அந்த முடிபாகும்.

நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்பந்தமான எல்லாவிதச்
சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும்
பின்னே ஏதாவதொரு வர்க்கத்தின் நலன்கள் ஒளிந்து நிற்பதைக்
கண்டுகொள்ள மக்கள் தெரிந்துகொள்ளாத வரையில் அரசிய
லில் அவர்கள் முட்டாள்தனமான ஏமாளிகளாகவும் தம்மைத்
தாமே ஏமாற்றிக் கொள்வோராகவும் இருந்தனர். எப்போதும்
இருப்பார்கள், பழைய ஏற்பாடு ஒவ்வொன்றும் எவ்வளவுதான்
அநாகரிகமானதாகவும் அழுகிப்போனதாகவும் தோன்றிய போதி
லும் ஏதாவது ஓர் ஆளும் வர்க்கத்தின் சக்திகளைக் கொண்டு அது
நிலைநிறுத்தப்பட்டு வருகிறது. சீர்திருத்தங்கள், மேம்பாடுகள்
ஆகியவற்ற்ன் அமைப்பு முறையின் பாதுகாவலர்கள் அவர்களை
என்றென்றும் முட்டாள்களாக்கிக் கொண்டேயிருப்பார்கள். இந்த
வர்க்கங்களின் எதிர்ப்பைத் தகர்த்து ஒழிப்பதற்கு ஒரே ஒரு வழி
தான் உண்டு. அது என்ன? பழைமையைத் துடைத்தெறியவும்
புதுமையைப் படைக்கவும் திறன்பெற்றவையும் சமுதாயத்தில்
தங்களுக்குள்ள நிலையின் காரணமாக எப்படிப் படைத்துத் திர
வேண்டிய கட்டாயத்திலிருக்கிறவையுமான சக்திசளை நம்மைச்
சூழ்ந்துள்ள இதே சமுதாயத்திற்குள்ளேயே நாம் கண்டுபிடித்து
அந்தச் சக்திகளுக்கு அறிவொளி யூட்டிப் போராட்டத்திற்கு
ஒழுங்கதைத்துத் திரட்டவேண்டும். இது ஒன்றேதான் வழி.

மார்க்ஸின் தத்துவஞானப் பொருள்முதல்வாதம் ஒன்று
தான் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களெல்லாம் அதுவரை உழன்று
கொண்டிருந்த வெளியேறும் வழியைப் பாட்டாளி வர்க்கத்திற்குக்
காட்டியிருக்கிறது. மார்க்ஸின் பொருளாதாரத் தத்துவம் ஒன்று
தான் பொதுவான முதலாளித்துவ அமைப்பு முறையில பாட்டாளி
வர்க்கத்தின் உண்மை நிலையை விளக்கியுள்ளது.

அமெரிக்காவிலிருந்து ஜப்பான் வரை ஸ்வீடனிலிருந்து தென்
னாப்பிரிக்கா வரை உலகமெங்கும் பாட்டாளி வர்க்கத்தின் சுயேச்
யான நிறுவனங்கள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. தனது
வர்க்கப் போராட்டத்தை நடத்திச் செல்வதன் வாயிலாகப்பாட்
டாளி வர்ககம் அறிவொளியும் கல்வியும் பெற்று வருகிறது; முத
லாளித்துவச் சமுதாயத்திற்குரிய சார்புத் கருத்துகளினின்று தன்னை
விடுவித்துக் கொண்டு வருகிறது; தன் அணிகளை நெருக்கமாகத்
திரட்டிச் சேர்த்து வருகிறது; தனது வெற்றிகளின் வீச்சை அளந்
தறியக் கற்றுக் கொண்டு வருகிறது. தன் சக்திகளை எஃகு போல்
திடப்படுத்தி வருகிறது தடை செய்ய முடியாதபடி வளர்ந்து வரு
கிறது.

# 3-சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன?

சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன? மிகப் பல நாடுகளின் மக்களும் இன்னமும் புரிந்து கொள்ள விரும்பாத, அல்லது புரிந்து கொள்ள முடியாத இந்தப் புதிய ஆட்சியதிகாரத்தின் சாராம்சம் என்ன? ஒவ்வொரு நாட்டிலும் மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைக் கவர்ந்திழுக்கும் இந்த ஆட்சியதிகாரத்தின் தன்மை பின்வருவது தான் கடந்த காலத்தின் இந்த நாடு ஏதேனும் ஒரு வழியில் செல்வந்தர்காளால் அல்லது முதலாளிகளால் ஆளப்பட்பட்டு வந்தது. ஆனல் இப்பொழுது முதன் முதலாய் இந்நாடு முன்பெல்லாம் முதலாளித்துவம் ஒடுக்கி வந்த அதே வர்க்கங்களால், அதுவும் அவ்வர்க்கங்களது வெகுஜனங்களால் ஆளப்படுகிறது. மிகமிக ஜனநாயகமான மிகமிக சுதந்திரமான குடியரசுகளிலும் கூட, மூலதனம் ஆதிக்கம் செலுத்துகிற வரை, நிலம் தனியார் சொத்தாம் இருக்கிற வரை அரசாங்கமானது எப்பொழுதும் மிகச் சிறிய சிறுபான்மையோரில் பத்தில் ஒன்பது பேர் முதலாளிகள் அல்லது செல்வந்தராய் இருப்பர்.

உலக வரலாற்றிலே முதன் முதலாய் இந்த நாட்டில், ருஷ்யாவில், சுரண்டலாளர்கள் ஒதுக்கி விலக்கப்பட்டுத் தொழிலாளர்களும் உழைக்கும் விவசாயிகளும் மட்டும் சோவியத்துகள் எனப்படும் வெகுஜன நிறுவனங்களால் அமையும் படியும் இந்த சோவியத்துகள் அரசு அதிகாரம் அனைத்தையும் வகிக்கும் படியும் நாட்டின் அரசாங்கம் அனைத்தையும் வகிக்கும் படியும் நாட்டின் அரசாங்கம் அமைக்கப் பட்டிருக்கிறது. எனவேதான் எல்லா நாடுகளிலும் முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகள் ருஷ்யாவைப் பற்றி பரப்பும் அவதூறுகளையும் மீறி உலகெங்கும் இப்போது ''சோவியத்'' என்னும் சொல் புரியக் கூடியதாய் மட்டுமின்றி மக்களுடைய அபிமானத்துக்குரியதாகவும் ஆகிவிட்டது. தொழிலாளர்களுக்கு உழைப்பாளி மக்கள் எல்லோருக்கும் மிகப் பிடித்தமான ஆதரவாளாகள் பல்வேறு நாடுகளிலும் எவ்வளவு தான் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட போதிலும், சோவியத் ஆட்சியதிகாரம் உலகெங்கிலும் அவசியமாகவும் தவிர்க்க முடியாதபடி

யும் தொலை நெடுங் காலமின்றி கூடிய சீக்கிரத்தில் வெற்றிவாகை சூடவே செய்யும்.

இந்த நாட்டில் சோவியத் ஆட்சியதிகாரத்தின் ஒழுங்கைமப்பில் இன்னமும் பல குறைபாடுகள் இருப்பதை நாம் நன்கு அறிவோம். சோவியத் ஆட்சியதிகாரம் மாய வித்தை புரியும் மந்திரத் தாயத்து அல்ல, எழுத்தறியாமை, கலாசாரம் இல்லாத நிலை, காட்டுமிராண்டி யுத்ததின் தீய விளைவுகள கொள்ளைக்கார முதலாளித்துவம் விட்டுச் சென்ற கொள்ளைக்கார முதலாளித்துவம் விட்டுச் சென்ற கொடுமைகள் ஆகிய கடந்த காலத்துப் பிணிகளை எல்லாம் அது நொடிப் பொழுதில் தீர்த்து விடவில்லை. ஆயினும், அது சோஷலிஸத்துக்குப் பாதையைச் செப்பனிடவே செய்கிறது. முன்பெல்லாம் ஒடுக்கப் பட்டோராய் இருந்தவர்கள் நிமிர்ந்து, நிற்கவும், மேலும் மேலும் அதிக அளவுக்கு நாட்டின் அரசாங்கம் அனைத்தையும், பொருளாதாரத்தின் நிர்வாகம் அனைத்தையும், பொருளுற்பத்தியின் நிர்வாகம் அனைத்தையும் தாமே மேற் கொள்ளவும் அவர்களுக்கு அது வாய்ப்பளிக்கின்றது.

சோவியத் ஆட்சியதிகாரமானது சோஷலிஸத்தை அடைவதற்காக உழைப்பாளி மக்களின் பெருந் திரளானோர் கண்டு பிடித்த பாதையாகும். எனவேதான் அது மெய்யான பாதையாகவும் இருக்கிறது. எனவே தான், அது வெல்லற்கரிய பலம் படைத்திருக்கிறது.

## 4-ஏகாதிபத்தியம்: முதலாளித்துவத்தின் விசேஷ கட்டம்

பொதுவாக முதலாளித்துவத்தின் அடிப்படைக் குணாதிசயங்களின் வளர்ச்சியாகவும், நேரடியான தொடர்ச்சியாகவும் ஏகாதிபத்தியம் எழுந்தது, ஆனால் திட்டவட்டமான, மிக உயர்ந்த ஒரு கட்டத்தில் தான் முதலாளித்துவத்தின் சில அடிப்படை குணாதிசயங்கள் அவற்றின் நேர் எதிரானவையாக மாற ஆரம்பித்தன. முதலாளித்துவத்திலிருந்து மேலானதொரு சமுதாய பொருளாதார அமைப்புக்கு மாறி செல்வதற்கான காலத்தினுடைய இயல்புகள் உருப்பெற்று எழுந்து எல்லாத் துறைகளிலும் தம்மை வெளிக்காட்டிக் கொண்டன. பொருளாதார வழியில் இதந் நிகழ்ச்சிப் போக்கின் மிகமுக்கிய அம்சம் தடையில்லாத முதலாளித்துவப் போட்டி அகற்றப்பட்டு அதனிடத்தில் முதலாளித்துவ ஏகபோகம் எழுந்தது தான். தடையில்லாப் போட்டிதான். முதலாளித்துவத்துக்கும் பொதுவாகப் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்திக்கு முரிய அடிப்டை இயல்பு; ஏகபோகம் தடையில்லாப் போட்டிக்கு நேர் எதிரானதாகும். ஆனால் தடையில்லாப் போட்டி நம் கண் முன்னால் ஏகபோகமாக மாற்றப்படக் கண்டோம். பெருவீதத் தொழில்துறையைத் தோற்றுவித்துச் சிறு தொழிலை நெறித்து வெளியேற்றவும், பெருவீதத் தொழில் துறையின் இடத்தில் மேலும் பெரியதான பெருவீதத் தொழில்துறை அமரவும் கண்டோம். இவ்விதம் உற்பத்தியின், மூலதனத்தின் ஒன்றுகுவிப்பு அந்த அளவுக்கு அதிகமாக்கப்பட்டு அதிலிருந்து ஏகபோகம் வளர்ந்தெழுந்துள்ளது, தொடர்ந்து வளர்ந்தெழுந்து வருகிறது: கார்ட்டல்களும் சிண்டிக்கேட்டுகளும் டிரஸ்டுகளும் இவற்றுடன் இன்று கலந்துவிடும் பத்துப் பதினைந்து வங்கிகளின், நூறு கோடிக் கணக்கிலான தொகைகளைத் தம் பிடியில் கொண்டு காரியமாற்றும் வங்கிகளின் மூலதனமுமாகிய ஏகபோகமுமாகும், இது தடையில்லாப் போட்டியில் இருந்து வளர்ந்தெழுந்த இந்த ஏகபோகங்கள் அதே போது போட்டியை அகற்றிவிடவில்லை போட்டிக்கு மேலும் அதனுடன் கூடவும் நிலவுகின்றன. இவ்வழியில் மிகுந்த கடுமையும் உக்கிரமும் வாய்ந்த மிகப் பல முரண்பாடுகளையும் பூசல்களையும் மோதல்களையும்

தோற்றுவிக்கின்றன ஏகபோகமானது முதலாளித்துவத்திலிருந்து அதைவிட மேலானதோர் அமைப்புக்கு மாறிச் செல்வதாகும்.

ஏகாதிபத்தியத்தைப் பற்றி இயன்ற அளவுக்கு சுருக்கமான இலக்கணம் அளிக்க வேண்டுமாயின், முதலாளித்துவத்தின் ஏக போகக் கட்டமே ஏகாதிபத்தியம் என்று கூற வேண்டும் இத்தகைய இலக்கணம் யாவற்றிலும் முக்கியமானதைத் தன்னுள் கொண்டதாக இருக்கும். ஏனெனில், ஒரு புறத்தில் நிதி மூலதனம் என்பது தொழிலதிபர்களின் ஏகபோகக் கூட்டுகளின் மூலதனத்துடன் ஒன்று கலந்துவிட்ட ஒரு சில மிகப் பெரிய ஏகபோக வங்கிகளின் வங்கி மூலதனமாகும் மறுபுறத்தில் உலகின் பங்கீடானது எந்த முதலாளித்துவ அரசாலும் கைப்பற்றப்படாத பிரதேசங்களுக்குத் தடையின்றிப் பரவிச் செல்லும் காலனியாதிக்கக் கொள்கையிலிருந்து முற்றும் பங்கிடப்பட்டுக் கொண்டுவிட்ட உலக நிலப்பரப்பை ஏக போக உடைமையாக கொண்டிருப்பதற்குரிய காலனியாதிக்கக் கொள்கைக்கு மாறிச் செல்வதாகும்

ஆனால் மிகவும் சுருக்கமான இலக்கணங்கள் முக்கிய அம்சங்களைத் தொகுத்துத் தருவதால் வசதியாக இருந்தாலும் கூட அவை பற்றாக்குறையானவையே, ஏனெனில் வரையறை செய்யப்பட வேண்டிய நிகழ்ச்சியின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை அவற்றிலிருந்து வருவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே பொதுவாக எல்லா இலக்கணங்களும் நிபந்தனைக்குட்பட்ட சார்பு நிலையிலான மதிப்பே கொண்டவை நிகழ்வினது முழு வளர்ச்சியிலும் அதன் தொடர் புடைமைகள் யாவும் அடங்கியனவாய் ஒருபோதும் இருக்க முடியாது என்பதை மறக்காமல் மனதிற் ககாண்டு ஏகாதிபத்தியத்தின் பின்வரும் ஐந்து அடிப்படை இயல்புகளுடன் உள்ளடங்குமாறு அதற்கு இலக்கணம் கூறியாக வேண்டும்'' (1) பொருளாதார வாழ்வில் தீர்மானகரமான பங்காற்றும் ஏகபோகங்களைத் தோற்றுவிக்கும்படியான உயர்ந்த கட்டத்துக்கு உற்பத்தியின் மூலதனத்தின் ஒன்றுகுவிப்பு வளர்ந்துவிடுதல் (2) வங்கி மூலதனம் தொழில் துறை மூலதனத்துடன் ஒன்று கலத்தலும் இந் ''நிதி மூலதனத்தின்'' அடிப்படையில் நிதியாதிக்கக் கும்பல் உருவாதலும். (3) பண்ட ஏற்றுமதியிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டியதாகிய மூலதன ஏற்றுமதி தனி முக்கியத்துவம் பெறுதல் (4) சர்வாம்ச ஏக போக முதலாளித்துவக் கூட்டுகள் உருவாகி உலகையே இவை தமக்கிடையே பங்கிட்டுக் கொள்ளுதல் (5) மிகப் பெரிய முதலாளித்திவ அரசுகளிடையே அனைத்து உலகப் பரப்பும் பங்கிடப்பட்டுக் கொள்ளுதல் நிறைவுறுகிறது முதலாளித்துவத்தின். வளர்ச்சியின் எந்தக் கட்டத்தின் ஏகபோகங்கள் நிதிமூலதன ஏற்றுமதி முனைப்பான முச்கியத்துவம் பெற்று விட்டதோ சர்வதேச டிரஸ்டுகளுக்கிடையில் உலகம் பங்கிடப்படுவது தொடங்கியுள்ளதோ உலகின நிலப்பரப்பு அனைத்தும் மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளுக்கிடையே பங்கிடப்படுவது நிறைவு பெற்று விட்டதோ. அக் கட்டத்திலான முதலாளித்துவமே ஏகாதிபத்தியமாகும்.'

ஜூன் 196.

## 5-உழைக்கும் மக்களதும், சுரண்டப்பட்ட மக்களதும் உரிமைப் பிரகடனம்

*அரசவை தீர்மானிக்கின்றது:*

I. 1. ரஷ்யா இத்தால் தொழிலாளர், போர்வீரர், விவசாயிகளது டெப்பியூட்டிகளின் சோவியத் குடியரசாகப் பிரகடனஞ் செய்யப்படுகின்றது; சகல அதிகாரமும் மத்தியிலும், பிரதேசவாரியாகவும் இச்சோவியத்துகளுக்கு வழங்கப்படுகின்றது.

2. ரஷ்ய சோவியத் குடியரசு, சுயாதீன ராஜ்யங்களின் சுதந்திர யூனியன் என்ற கொள்கை மீது, சோவியத் தேசியக் குடியரசுகளின் சமஷ்டியாக ஸ்தாபிக்கப்படுகின்றது.

II. மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழித்துக்கட்டுதலே, சமூகங்கள் வர்க்கங்களாகப் பிரிந்திருப்பதை முற்றாக நீக்குதலே, சுரண்டுவோரின் தாக்குப்பிடிப்பை இரக்கமற்ற முறையில் நசுக்குவதை, சமூகத்தின் சோஷலிஸச் சீராக்கத்தை நிறுவுவதை, சகல நாடுகளிலும் சோஷலிஸ வெற்றியைச் சாதிப்பதை அடிப்படை நோக்காகக் கொண்டு, அரசவை மேலும் தீர்மானிக்கின்றது:

1. தனிநபர் சொத்துடைமை இத்தால் ஒழிக்கப்படுகின்றது; சகல கட்டிடங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் விவசாய உற்பத்திச் சாதனங்கள் உட்பட எல்லா நிலமும் முழு உழைக்கும் மக்களின் உடைமையாகப் பிரகடனஞ் செய்யப்படுகின்றது;

2. சுரண்டுவோர் மீது உழைக்கும் மக்களின் ஆதிக்கத்தை உத்திரவாதப்படுத்தும் நோக்குடனும், பாக்டரிகள், சுரங்கங்கள் ரெயில்வே மற்றும் உற்பத்தி, போக்குவரத்துச் சாதனங்கள் தொழிலாளர் விவசாயிகள் ராஜ்யத்தின் உடைமையாக முற்றிலும் மாற்றப்படுவதன் முதற்படியாகவும், தொழிலாளர் கட்டுப்பாட்டினதும் அதிவுயர் பொருளாதாரச் சபையினதும் சோவியத் சட்டம் இத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

3. சகல வங்கிகளும் தொழிலாளர் விவசாயிகள் அரசின் உடைமையாக மாற்றப்படல் மூலதன நுகத்தடியிலிருந்து உழைக்கும் மக்களின் விடுதலைக்கான நிபந்தனைகளில் ஒன்றாக இத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

4. சமூகத்தின் ஒட்டுண்ணிப் பகுதிகளை ஒழித்துக்கட்டும் நோக்குடன் சகல மக்களதும் கட்டாய உழைப்பு இத்தால் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

5. உழைக்கும் மக்களின் பூரண அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக, சுரண்டுவோரின் அதிகாரம் மீட்கப்படுவதற்கான சகல சாத்தியப்பாடுகளையும் நீக்குவதற்காக, உழைக்கும் மக்கள் ஆயுதமேந்தச் செய்வதற்காக, தொழிலாளர் விவசாயிகளது சோஷலிஸச் செஞ்சேனையின் உருவாக்கத்துக்காக, சொத்துடைமை வர்க்கங்களைப் பூரண நிராயுதபாணிகளாக்குவதற்காக இத்தால் கட்டளைவிடுக்கப்படுகின்றது.

III. படுகுற்றமான இந்த யுத்தங்களில் உலகை ரத்தத்தில் மூழ்கடித்த நிதிமூலதனத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் பிடிகளிலிருந்து மனுக்குலத்தை விடுவிப்பதற்கு உறுதியான திடசங்கற்பம் பூண்டு அரசவை, சோவியத் ஆட்சி ரகசிய ஒப்பந்தங்களை மறுதலித்து, யுத்தத்தில் ராணுவங்களின் தொழிலாளர் விவசாயிகள் நட்புறவை மிக விஸ்தீரணமாய் உருவாக்கி, எல்லா விதத்திலும், புரட்சிவாத முறைகளால் நாடுகளுக்கிடையே ஜனநாயகச் சமாதானத்தை, ஆக்கிரமிப்புகளும் நஷ்டஈடுகளுமின்றி, நாடுகளின் சுயாதீன சுயநிர்ணயத்தின் அடிப்படையில் நிலைநாட்டுவதை இதயபூர்வமாக அங்கீகரிக்கின்றது.

2. இதே நோக்குடன் ஆசியாவிலும், பொதுவாகக் காலனி நாடுகளிலும் மற்றும் சிறிய நாடுகளிலும் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் அடிமைத்தனத்தின் மீது ஒரு சில தேர்ந்த நாடுகளைச் சேர்ந்த சுரண்டுவோரின் செல்வச் செழிப்பைக் கட்டியெழுப்பிய பூர்ஷுவா நாகரீகத்தின் காட்டுமிராண்டிக் கொள்கையுடன் ஒட்டுறவை முற்றாக நீக்கிக் கொள்ளவேண்டுமென அரசவை வலியுறுத்துகிறது.

பின்லாந்தின் பூரண சுதந்திரத்தைப் பிரகடனஞ்செய்வதிலும், பாரசீகத்திலிருந்து துருப்புகளை வாபஸ் பெறுவதிலும், ஆர்மேனியாவுக்கு சுயநிர்ணய உரிமைச் சுதந்திரத்தைப் பிரகடனஞ் செய்வதிலும் மக்கள் கமிஸார் கவுன்ஸிலின் கொள்கையை அரசவை வரவேற்கின்றது.

3. ஜார் அரசும், நில எஜமானர்களும், பூர்ஷுவாக்களும் ஒப்பந்தஞ் செய்துகொண்ட கடன்களை ரத்துசெய்தலானது சர்வதேச வங்கிமுறைக்கும் நிதிமூலதனத்துக்கும் கொடுக்கப்படும் அடியாக அரசவை கருதுவதோடு, மூலதன நுகத்தடிக்

கெதிராக சர்வதேசத் தொழிலாளர் வெகுண்டெழுந்து பூரணவெற்றி ஈட்டும்வரை சோவியத் அரசு இம்மார்க் கத்தை உறுதியாகக் கடைப்பிடிக்குமென அரசவை நம்பிக்கை கொண்டுள்ளது.

IV. அக்டோபர் புரட்சிக்கு முன்னர், சுரண்டுவோர்க் கெதிராக மக்கள் இன்னும் வெகுஜன எழுச்சிகொள்ள முடியாதநிலையில் இருக்கையில், சுரண்டுவோர் அவர்தம் வர்க்க நலன்களைக் கட்டிக் காத்துக்கொள்வதற்காக முழுவலுவான தாக்குப் பிடிப்பு நடத்துவதை இன்னும் அனுபவித்திராத நிலையில், சோஷலிஸ சமுதாய நிர்மாணப் பணியை நடைமுறையில் இன்னும் மேற்கொள்ளாத நிலையில், கட்சிப் பட்டியலின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அரவை, சம்பிரதா யத்துக்காக வேனும் தான் சோவியத் ஆட்சிக்கு விரோத பாவனையாய் இருப்பது அடிப்படைத் தவறாக முடியுமெனக் கருதுகின்றது.

இப்போது மக்கள் தம்மைச் சுரண்டுவோருக்கெதிராக இறு திப் போராட்டம் நடத்துகையில் எந்த அரசாங்க அங்கத்திலும் சுரண்டுவோருக்கு இடமிருக்க முடியாது என அரசவை சாராம் சத்தில் கருதுகின்றது. அதிகாரம் முழுமையாக உழைக்கும் மக்களி டமும் அவர்களது அதிகாரம் வாய்ந்த பிரதிநிதிகளான—தொழி லாளர் விவசாயி டெப்பியூட்டிகள் சோவியத்துகளிடமும் இருக்க வேண்டும்

சோவியத் ஆட்சியையும் மக்கள் கமிஸார் கவுன்ஸிலின் கட் டளைமையும் ஆதரித்து, சமுதாயத்தின் சோஷலிஸப்புனர்நிர்மாணத் துக்கான அடிப்படைக் கொள்கைகளை நிறுவுவதிலேயே தன்பணி அடங்கியுள்ளதென அரசவை கருதுகிறது.

அதேவேளை, ரஷ்யாவின் சகல ராஜ்யங்களையுஞ் சேர்ந்த தொழிலாளி வர்க்கங்களின் உண்மைச் சுதந்திரம் வாய்ந்த தன் னிச்சையான—அதன் விளைவாக இன்னும் அதிக உறுதியும் ஸ்திர மும் வாய்ந்த—ஐக்கியத்தை உருவாக்குவதற்காகப் பாடுபட்டு அரசவை, ஒவ்வொரு ராஜ்யத்தையும் சேர்ந்த தொழிலாளர் விவ சாயிகள் சமஷ்டி அரசிலும் மற்றும் சமஷ்டி சோவியத் ஸ்தாபனங் களிலும் பங்குபற்ற விரும்புகின்றதா, என்ன அடிப்படையில் என் பதை தமது அதிகாரம் வாய்ந்த சோவியத்துகளின் காங்கிரஸில் சுதந்திரமாகத் தீர்மானித்துக்கொள்ள விட்டுவிடும் அதேவேளை, ரஷ்ய சோவியத் குடியரசுகள் சமஷ்டியின் அடிப்படைக் கொள் கைகளை உருவாக்குவதோடு தன்பணியை மட்டுப்படுத்திக் கொள் கிறது.

# 6-கம்யூனிஸ்ட் அகிலம்

இந்த 1919ம் ஆண்டு மார்ச்சில் கம்யூனிஸ்ட்டுகளின் சர்வதேசக் காங்கிரஸொன்று மாஸ்கோவில் நடத்தப்பட்டது. இக்காங்கிரஸ் மூன்றுவது கம்யூனிஸ்ட் சர்வதேசியத்தை ஸ்தாபித்தது. இது சோவியத் ஆட்யை எல்லா நாடுகளிலும் நிறுவுவதற்குப் பாடுபடும் முழு உலகத் தொழிலாளர்களதும் ஸ்தாபனமாகும்.

மார்க்ஸ் அமைத்த முதலாவது சர்வதேசியம் 1864ல் இருந்து 1872 வரை நீடித்து நிலைத்தது. வீரஞ் செறிந்த பாரிஸ் தொழிலாளர்களது—பிரக்கியாதி பெற்ற பாரிஸ் கம்யூனது—தோல்வி இச்சர்வதேசியத்தின் இறுதியைக் குறித்தது. இது மறக்கமுடியாததாகும். தொழிலாளர்களது விடுதலைப் போராட்ட வரலாற்றில் அது என்றும் நிலைத்திருக்கும். அது உலக சோஷலிஸக் குடியரசின். கட்டுமான அத்திவாரத்தை அமைத்துக் கொடுத்தது. அதைக் கட்டியெழுப்பும் அதிர்ஷ்டம் இப்பொழுது நம்முடையதாகும்.

இரண்டாவது ஆகிலம் 1889ல் இருந்து 1914வரை, மாபெரும் புரட்சிகள் இல்லாத யுத்தம்வரை நீடித்தது. இக்காலகட்டத்தின்போது தொழிலாளிவர்க்க இயக்கம் அநேக நாடுகளில் வலிமைபெற்று முதிர்ந்தது, எனினும் அநேக தொழிலாளர் கட்சிகளின் தலைவர்கள் சமாதான நிலைமையில் பழக்கமுற்று புரட்சிவாதப் போராட்டம் நடத்தும். திராணியிழந்துவிட்டனர். 1914ல் தொடங்கிய யுத்தத்தின்போது நான்காண்டுகளாக அது உலகை ரத்தக்களரியில் மூழ்கடித்த யுத்தத்தின்போது லாபங்களைப் பங்குபோட்டுக் கொள்வதற்காக முதலாளித்துவவாதிகளுக்கிடையில் கடந்த யுத்தத்தின்போது சின்னஞ்சிறிய வலிமை குன்றிய நாடுகளின் மீது மேலாதிக்கம் பெறுவதற்கான யுத்தத்தின்போது இத்தலைவர்கள் தமது அரசாங்கங்களின் பக்கம் போய்ச் சேர்ந்து கொண்டனர். அவர்கள் தொழிலாளர்களுக்குத் துரோக மிழைத்தனர்; உயிர்ப்பலி நீடிக்க உதவினர்; சோஷலிஸத்தின் சத்துருகளாக மாறினர்; முதலாளித்துவவாதிகள் பக்கம் போய்ச்சேர்ந்து கொண்டனர்;

அச் சோஷலிஸத் துரோகிகள் பக்கம் தொழிலாளர் தம் முதுகைத் திருப்பினர். உலகெங்கிலும் புரட்சிவாதப் போராட்டத்துக்கான திருப்பம் ஏற்பட்டது. முதலாளித்துவத்துக்கு அழிவு வந்துவிட்டதென்பதை யுத்தம் நிரூபித்தது. அதனிடத்தைப் பிடித்துக்கொள்வதற்கு புதியதொரு அமைப்பு வந்துகொண்டிருக்கின்றது. சோஷலிஸம் என்றப்பழம் வார்த்தை சோஷலிஸத்தின் துரோகிகளால் மாசுபடுத்தப்பட்டது.

இன்று, மூலதன நுகத்தடியைத் தூக்கியெறியும் லட்சியத்துக்கு விஸ்வாசமாய் விளங்கிய தொழிலாளர்கள் தம்மைக் கம்யூனிஸ்ட்டுகள் என அழைக்கின்றனர். உலகெங்கிலும் கம்யூனிஸ ஸ்தாபனம் வளர்ச்சியுற்று வருகின்றது, அநேக நாடுகளில் சோவியத் ஆட்சி ஏற்கனவே வெற்றிவாகை சூடியுள்ளது. உலகெங்கிலும் கம்யூனிஸம் வெற்றிவாகை சூடுவதை நாம் சீக்கிரம்காணப் போகிறோம்; சோவியத்துகளின் சமஷ்டிக் குடியரசு ஸ்தாபிதமாவதை நாம் காண்போம்.

மார்ச் 1919

# 7-தேசிய இன, காலனிப் பிரச்சினைகள்

தோழர்களே, சுருக்கமான முன்னுரையுடன் நான் நிறுத்திக் கொள்கிறேன். எங்கள் கமிஷனின் முன்னுள் செயலாளரான தோழர் மாரில், விரிவுரைகளில் நாங்கள் செய்திருக்கும் திருத்தல்கள் குறித்து இதன்பின் உங்களுக்கு விவரமாய்க் கூறுவார். கூடுதல் விரிவுரைகளை வகுத்திடும் தோழர் ராய் அவருக்கும் பிற்பாடு பேசுவார். பூர்வாங்க விரிவுரைகளையும் எங்கள் கமிஷன் ஒரு மனதாய் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வாறு எல்லாப் பிரதான பிரச்சினைகளிலும் நாங்கள் முழு அளவுக்கு ஒரு மனதான நிலையை எய்தியிருக்கிறோம். இப்பொழுது சுருக்கமாய் ஒரு சில கருத்துரைகள் கூறுகிறேன்.

முதலாவதாக எங்களுடைய விரிவிரைகளுக்கு அடிப்படையாய் அமைந்த தலைமையான கருத்து என்ன? ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் ஒடுக்கும் தேசங்களுக்கும் இடையிலான வேறுபாடுதான் தலைமையான கருத்து. இரண்டாவது அகிலத்தையும் முதலாளித்துவ ஜனநாயகத்தையும் போலல்லாது நாம் இந்த வேறுபாட்டை வலியுறுத்திக் காட்டுகிறோம் இந்த ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் ஸ்தூலமான பொருளாதார உண்மைகளை நிலைநாட்டி எல்லாக் காலனி, தேசிய இனப் பிரச்சினைகளிலும் ஸ்தூலமான எதார்த்த நிலவரங்களிலிருந்து—கருத்தினமான மூதற்கோள்களிலிருந்து அல்ல—தொடங்குவது பாட்டாளி வர்க்கத்துக்கும் கம்யூனிஸ்டு அகிலத்துக்கும் குறிப்பான முக்கியத்துவமுடையது.

அனைத்து உலகும்—இப்பொழுது நாம் கண்ணுறுவது போல மிகப் பல ஒடுக்கப்பட்ட தேசங்களாகவும் மிகச் சொற்பமான ஒடுக்கும் தேசங்களாகவும் பிரிக்கப்பட்டு, பின்னவை பிரம்மாண்ட செல்வங்களும் சக்தி மிகுந்த ஆயுதப்படைகளும் பெற்றிருப்பதில் தான் ஏகாதிபத்தியத்தின் தனித்த இயல்பு அடங்கியுள்ளது. உலக மக்களில் மிகப் பெருவாரியானோர், நூறு கோடிக்கு மேற்பட்டோர்—உலக மக்கள் தொகையை 175கோடி என்று கொண்டால் 125 கோடிப் பேர் என்றுகூடச் சொல்லலாம், அதாவது உலக மக்கள் தொகையில் சுமார் 70 சதவீதத்தினர் ஒடுக்கப்பட்ட தேசங்

களைச் சேர்ந்தவர்கள். இந்த ஒடுக்கப்பட்ட தேசங்கள் காலனிகளாய் நேரடியான சார்பு நிலையிலோ, அல்லது பாரசீகத்தையும் துருக்கியையும் சீனுவையும் போல் அரைக் காலனிகளாகவோ, அல்லது ஏதேனும் ஒரு பெரிய ஏகாதிபத்திய அரசால் தோற்கடிக்கப்பட்டு சமாதான ஒப்பந்தங்களின் மூலமாய் அந்த அரசுக்கு வெகுவாய்க் கீழ்ப்பட்டு விட்டவையாகவோ இருந்து வருகின்றன. இப்படி வேறுபடுத்திக் கூறும் ஒடுக்குகிறவை, ஒடுக்கப்பட்டவை என்பனவாய்த் தேசங்களைப் பிரித்துக் கூறும் இந்தக் கருத்து விரிவுரைகள் பூராவிலும் முன்னதாக என்னுடைய கையெழுத்துடன் வெளியிடப்பட்ட முதலாவது விரிவுரைகளில் மட்டுமின்றி தோழர் ராய் சமர்ப்பித்தவற்றிலும்கூட இழையோடுவதைக் காணலாம். தோழர் ராயினுடைய விரிவுரைகள் பிரதானமாய் இந்தியாவிலும் பிரிட்டனுல் ஒடுக்கப்பட்டு வரும் ஏனைய பெரிய ஆசிய நாடுகளிலுமுள்ள நிலைமையின் கண்ணேட்டத்திலிருந்து வகுக்கப்பட்டவை. இவற்றின் பெரிய முக்கியத்துவம் இதில் தான் அடங்கியுள்ளது

எங்களுடைய விரிவுரைகளின் இரண்டாவது அடிப்படைக் கருத்து என்னவெனில், ஏகாதிபத்திய யுத்தத்தைத் தொடர்ந்து நிலவும் தற்போதைய உலக நிலைமையில் பல்வேறு மக்கள் இனங்களுக்கு இடையிலான உறவுகள். உலக அரசியல் அமைப்பு அனைத்தும் ஏகாதிபத்தியத் தேசங்களாகிய ஒரு சிறு கோஷ்டி சோவியத் இயக்கத்தையும் சோவியத் ருஷ்யாவைத் தலைமையில் கொண்ட சோவியத் அரசுகளையும் எதிர்த்து நடத்தும் போராட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன. இதை நாம் மனதிற் கொண்டால் ஒழிய எந்த ஒரு தேசிய இன அல்லது காலனிப் பிரச்சினையையும் உலகின் தொலைதூர ஒதுக்குப் புறப்பகுதியைப் பற்றியதாய் இருப்பதையும்கூட, நம்மால் சரிவர எடுத்துரைத்து முன்வைக்க முடியாமற் போய்விடும். நாகரீக வளர்ச்சி கண்ட நாடுகளிலும் சரி பிற்பட்ட நாடுகளிலும் சரி, கம்யூனிஸ்டுக் கட்சிகள் இந்த அடிப்படைக் கருத்தைத் தமது துவக்க நிலையாய்க் கொண்டால்தான் அவற்றுல் அரசியல் பிரச்சினைகளைச் சரிவர முன்வைக்கவும் அவற்றுக்குத் தீர்வு காணவும் முடியும்.

மூன்றுவதாக, பிற்பட்ட நாடுகளில் முதலாளித்துவ—ஜனநாயக இயக்கத்தைப்பற்றிய பிரச்சினையைக் குறிப்பாய் வலியுறுத்த விரும்புகிறேன். ஓரளவு வேறுபாடுகளை உண்டாக்கிய ஒரு பிரச்சினை இது. பிற்பட்ட நாடுகளில் முதலாளித்துவ—ஜனநாயக இயக்கமாகவேதான் இருக்க முடியுமென்பதில் ஐயமில்லை, ஏனெனில் பிற்பட்ட நாடுகளில் மிகப் பெருவாரியான மக்கள் பூர்ஷுவா—முதலாளித்துவ உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விவசாயிகளாவர். இந்தப் பிற்பட்ட நாடுகளில் பாட்டாளி வர்க்கக் கட்சிகள்—அவை இந்நாடுகளில் உதித்தெழ முடியுமாயின்—விவசாயி இயக்கத்துடன் திட்டவட்டமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளாமலும், அதற்குப் பயனுள்ள முறையில் ஆதரவு அளிக்காமலும், கம்யூனிஸ்டுப் போர்த்தந்திரத்தையும் கம்யூனிஸ்டுக் கொள்கையையும் பின்பற்ற முடியுமென நினைப்பது கற்பனுவாதமே ஆகும். ஆயினும் நாம் முதலாளித்துவ—ஜனநாயக இயக்கம் என்பதாய்ப் பேசுவோமாயின் சீர்திருத்தவாத இயக்கத்துக்கும் புரட்சிகர இயக்கத்துக்கும் இடை

லான எல்லாப் பாகுபாடுகளையும் விட்டொழிக்க வேண்டியதாகி விடுமே என்று ஆட்சேபங்கள் எழுப்பப்பட்டன. பிற்பட்ட நாடுகளிலும் காலனி நாடுகளிலும் இந்தப் பாகுபாடுகள் அண்மையில் மிகத் தெளிவாகவே வெளிப்பட்டு வருகின்றன. ஏனெனில் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கம் ஒடுக்கப்பட்ட தேசங்களிலும் கூட சீர்திருத்தவாத இயக்கத்தைத் தோற்றுவிப்பதற்காக தன் சக்திக்கு இயன்றது அனைத்தையும் செய்து வருகிறது. சுரண்டும் நாடுகளுடைய முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையே ஒரு வித இணக்கம் ஏற்பட்டுள்ளதன் பயனாய் அடிக்கடி—மிகப் பல சந்தர்ப்பங்களிலும் என்றுகூடச் சொல்லலாம்—ஒடுக்கப்பட்ட நாடுகளுடைய முதலாளித்துவ வர்க்கம் தேசிய இயக்கத்துக்கு ஆதரவாய் இருப்பினும், அதே நேரத்தில் எல்லா புரட்சிகர இயக்கங்களுக்கும் எதிராக ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்துக்கு முழுமையான ஆதரவு நல்கி, அல்லது அதனுடன் சேர்ந்து போராடி வருகிறது. மறுக்க முடியாதவாறு இது கமிஷனில் நிரூபிக்கப்பட்டது. இந்தப் பாகுபாட்டைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அநேகமாய் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் "முதலாளித்துவ—ஜனநாயக" என்ற தொடருக்குப் பதிலாக "தேசிய—புரட்சிகர" என்னும் தொடரை கையாளுவது தான் சரியான ஒரே வழியாகும் என்று தீர்மானித்தோம். இந்த மாற்றத்தின் தனி முக்கியத்துவம் என்னவெனில், காலனிகளில் முதலாளித்துவ விடுதலை இயக்கங்கள் மெய்யாகவே புரட்சிகரமாகவும், விவசாயிகளையும் ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களையும் புரட்சிகர மனப்பாங்குடையோர் ஆகும்படிப் போதமளிப்பதற்கும் ஒழுங்கமையச் செய்வதற்குமாய் நமது பணிக்கு அவை இடையூறாய் இல்லாமலும் இருக்கும் போதும் மட்டுமே கம்யூனிஸ்டுகளாகிய நாம் அவற்றை ஆதரிக்க வேண்டும். ஆதரிக்கவும் செய்வோம். இந்த நிலைமைகள் இல்லையேல், இந்நாடுகளில் கம்யூனிஸ்டுகள் சீர்திருத்தவாத முதலாளித்துவ வர்க்கத்தைத் சேர்ந்தவர்களே. காலனி நாடுகளில் சீர்திருத்தவாதக் கட்சிகள் ஏற்கனவே இருந்து வருகின்றன. இவற்றின் பிரதிநிதிகள் சில சமயம் தம்மை சமூக—ஜனநாயகவாதிகள் என்றும் சோஷலிஸ்டுகள் என்றும் அழைத்துக் கொள்கிறார்கள். நான் குறிப்பிட்டுள்ள இந்தப் பாகுபாடு எல்லா விரிவுரைகளிலும் செய்யப்படுகிறது. இதன் விளைவாய் நமது கருத்தோட்டம் மேலும் துல்லியமாய் வரையறுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

அடுத்து விவசாயிகளின் சோவியத்துகள் குறித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பழைய ஜாரிஸ்டுக் காலனிகளாகிய துர்க்கிஸ்தான் முதலான பிற்பட்ட நாடுகளில் ருஷ்யக் கம்யூனிஸ்டுகளின் நடைமுறைச் செயற்பாடுகள், முதலாளித்துவத்துக்கு முற்பட்டதான நிலைமைகளில் கம்யூனிஸ்டுப் போர்த்தந்திரத்தையும் கொள்கையையும் எப்படிச் செயல்படுத்துவது என்னும் கேள்வியை எங்கள் முன்னே எழுப்பின. இந்நாடுகளில் முதலாளித்துவத்துக்கு முற்பட்டதான நிலைமைகள் மலிந்திருப்பதே இன்னமும் பிரதான நிர்ணயக் கூறாய் விளங்குகிறது. ஆகவே, இவற்றில் முற்றிலும் பாட்டாளி வர்க்கத் தன்மையதான இயக்கம் குறித்துப் பேசுவதற்கில்லை. இந்நாடுகளில் தொழில்துறைப் பாட்டாளி வர்க்கம் அனேகமாய்க் கிடையாது; இருந்த போதிலும் இங்கும் கூட நாம்

தலைமைப் பாத்திரம் ஏற்றுள்ளோம், ஏற்கத்தான் வேண்டும். இந் நாடுகளில் பிரமாண்டமான இன்னல்களை நாம்சமாளித்தாகவேண்டு மென்பதை அனுபவம் தெளிவுபடுத்தி இருக்கிறது. இருப்பினும் இந்த இன்னல்களையும் மீறி, சுயேச்சையான அரசியல் சிந்தனையி லும் சுயேச்சையான அரசியல் செயலிலும் ஈடுபடுவதற்கான ஊக்கத்தை—பாட்டாளி வர்க்கம் அனேகமாய் இல்லாத இடங்களி லும்கூட வெகுஜனங்களுக்கு உண்டாக்க முடிகிறது என்பதை எங்களுடைய பணியின் நடைமுறை விளைவுகள் புலப்படுத்தியுள் ளன. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தோழர்களுக்கு இருக்கக் கூடியதைக் காட்டிலும் இந்தப் பணி எங்களுக்குக் கடினமாய் இருந்துள்ளது. ஏனெனில், ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கம் அர சாங்க நிர்வாக வேலைகளில் மூழ்கியிருக்கிறது. அரைப் பிரபுத்து துச் சார்பு நிலைமைகளில் வாழ்ந்து வரும் விவசாயிகள் சோவியத் துகள் மூலமான ஒழுங்கமைப்பு என்னும் கருத்தினை எளிதில் கிர கித்துச் செயல்படுத்த முடியுமென்பது புரிந்து கொள்ளக் கூடியதே ஒடுக்கப்பட்ட வெகுஜனங்கள், வர்த்தக மூலதனத்தால் மட்டு மின்றி பிரபுத்துவவாதிகளாலும் மற்றும் பிரபுத்துவத்தை அடிப் படையாய்க் கொண்ட அரசாலும் சுரண்டப்படுவோர், இந்த ஆயுதத்தை, இவ்வகையான ஒழுங்கமைப்பினைத் தமது நிலைமையி லுங்கூட கையாளமுடியும் என்பதும் தெளிவாய் விளங்குகிறது. சோவியத்துகள் மூலமான ஒழுங்கமைப்பு என்னும் கருத்து எளிமை யான ஒன்று: பாட்டாளிவர்க்க உறவுகளில் மட்டுமின்றி விவசாயி களின் சோவியத்துகள். சுரண்டப்படுவோரின் சோவியத்துகள் முதலாளித்துவ நாடுகளில் மட்டுமல்லாது முதலாளித்துவத்துக்கு முற்பட்டதான உறவுகளைக் கொண்ட நாடுகளிலும் கையாளப்படக் கூடிய ஆயுதமே என்பதையும் பிற்பட்ட நாடுகளும் காலனி நாடுகளின் சோவியத்துகளுக்கு அல்லது உழைப்பாளி மக்களின் சோவியத்துகளுக்கு ஆதரவாய்ப் பிரசாரம் நடத்துவது கம்யூனிஸ் டுக் கட்சிகளுக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் நிறுவத் தயாராயுள்ள கூறுகளுக்கும் உரித்தான முழு முதற் கடமையாகும் என்பதையும் எங்கெல்லாம் நிலைமைகள் அனுமதிக்கின்றனவோ அங்கெல்லாம் அவை உழைப்பாளி மக்கள் சோவியத்துகளை உடனே நிறுவமுயற்சி களை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் கம்யூனிஸ்டு அகிலத் தின் விரிவுரைகள் குறிப்பிடவேண்டுமென்று ஐயமறத் தெளிவு படுத்திற்று.

நமது நடைமுறை வேலைகளுக்கு இது முகவும் சுவையான மிகவும் முக்கியமான ஒரு துறையைத் திறந்து விடுகிறது. இந்த விவகாரத்தில் இதுகாணும் நமது கூட்டு அனுபவம் விரிவானதாய் இல்லை ஆனால் மேலும் மேலும் அதிகமான உண்மை விவரங்கள் சிறிது சிறிதாய்ச் சேகரிக்கப்படும். முன்னேறிய நாடுகளின் பாட்டாளி வர்க்கம் பிற்பட்ட நாடுகளின் உழைப்பாளி வெகுஜனங் களுக்கு உதவமுடியும் உதவவேண்டும் என்பதும் சோவியத் குடி யரசுகளின் வெற்றிகரப் பாட்டாளி வர்க்கம் இந்த வெகுஜனங் களுக்குக் கைகொடுத்து உதவி அவர்களுக்கு ஆதரவளிக்குபடி யான ஒரு நிலையை வந்தடையும்போது பிற்பட்ட நாடுகள் அவற் றின் தற்போதைய வளர்ச்சிக் கட்டத்திலிருந்து வெளிப்பட்டு முன்னேற முடியும் என்பதும் மறுக்கமுடியாதவை.

கமிஷனில் இந்தப் பிரச்சினை குறித்து நான் கையெழுத்திட்ட விரிவுகள் சம்பந்தமாய் மட்டுமின்றி, இன்னும் அதிகமாய் தோழர் ராயின் விரிவுரைகள் சம்பந்தமாகவும் விறுவிறுப்பான விவாதம் நடைபெற்றது. தோழர் ராய் தமது விரிவுரைகளை இங்கு சமர்பித்துப் பேசுவார். அவருடைய விரிவுரைகளுக்குச் சில திருத்தங்கள் ஒருமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பிரச்சினை பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டது; தற்போது விடுதலைப் பாதையில் நடைபோடுகிறவையும் யுத்தத்துக்குப் பிற்பாடு முன்னேற்றத்தை நோக்கி ஓரளவு வளர்ச்சி அடைந்திருப்பவையும் ஆன பிற்பட்ட தேசங்களுக்கு முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டம் தவிர்க்க முடியாதது என்னும் கூற்று சரி என்று நாங்கள் ஏற்றுக் கொள்ள முடிடிமா? இதற்கு நாங்கள் எதிர்மறையில் பதிலளித்தோம். வெற்றிப் பெற்ற புர்ட்சிகரப் பாட்டாளிவர்க்கம் அவற்றிற்கிடையே இடையறுது பிரசாரம் நடத்துமாயின், சோவியத் அரசாங்கங்கள் தம் கையிலுள்ள எல்லாச் சாதனங்களையும் கொண்டு அவர்களுக்கு உதவிபுரியுமாயின் பிற்பட்ட நிலையிலுள்ள தேசங்கள் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்துள் தவிர்க்க முடியாதபடி போயாக வேண்டுமெனக் கொள்வது அப்பொழுது தவறுகிவிடும். எல்லாக் காலனிகளிலும் பிற்பட்ட நாடுகளிலும் நாம் சுயேச்சையாகச் செயல்படக் கூடிய போராட்ட வீரர்களின் அணிகளையும் கட்சி நிறுவனங்களையும் தோற்றுவிக்க வேண்டும் என்பது அன்னியில், விவசாயிகளது சோவியத்துகளை நிறுவி அவற்றை முதலாளித்துவத்துக்கு முற்பட்டதான நிலைமைகளுக்குத் தகவமைக்க முயல்வதற்கான பிரசாரத்தை உடனடியாகத் துவக்கவேண்டும் என்பது என்னியில், முன்னேறிய நாடுகளது பாட்டாளி வர்க்கத்தின் உதவியுடன் பிற்பட்ட நாடுகள், குறிப்பிட்ட சில வளர்ச்சிக் கட்டங்களைத் தாண்டி முதலாளித்துவக் கட்டத்தினுள் செல்ல வேண்டிய அவசியமில்லாமலே — சோவியத் அமைப்புக்கும், கம்யூனிஸத்துக்கும் மாறிச் செல்லமுடியும் என்ற நிர்ணயிப்பையும் கம்யூனிஸ்டு அகிலம் தக்க தத்துவார்த்த அடிநிலையுடன் முன்வைக்க வேண்டும்.

இப்படி மாறிச் செல்வதற்கு தேவையான வழிவகைகளை முன்கூட்டியே சுட்டிக் காட்டுவது சாத்தியமல்ல. நடைமுறை அனுபவம் இவற்றைப் புலப்படுத்தும். ஆனால் மிகவும் தொலை தூரத் தேசங்களிலும்கூட உழைப்பாளி வெகுஜன மக்களுக்கு சோவியத்துகள் என்னும் கருத்து உயிரனையாகி விட்டது என்பதும் முதலாளித்துவத்துக்கு முற்பட்டதான சமுதாய அமைப்புக்குறிய நிலைமைகளுக்கு சோவியத்துகளைத் தகவமைத்திட வேண்டும் என்பதும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் இத்திசையில் உடனே வேலை தொடங்கவேண்டும் என்பதும், திட்டவட்டமாய் நிலைநாட்டப்பட்டிருக்கின்றன-

கம்யூனிஸ்டுக் கட்சிகள் தமது நாடுகளில் மட்டுமின்றி, காலனி நாடுகளிலும், மற்றும் முக்கியமாய் சுரண்டும் நாடுகள்

பாலனி மக்கள் இனங்களை அடிமைப்படுத்தி வைப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் துருப்புகளிடையிலும் புரட்சிகரப் பணி புரிவதன் முக்கியத்துவத்தையும் நான் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தோழர் குவெல்ச் எங்கள் கமிஷனில் இதைப் பற்றி பேசினர். அடிமைப்படுத்தப்பட்ட தேசங்களில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துக் கிளம்பும் எழுச்சிகளுக்கு உதவுவது தேசத்துரோகச் செயலாகுமென சாதாரண ஆங்கிலேயத் தொழிலாளி கருதுவதாய் அவர் கூறினர். மெய்தான் பிரிட்டனையும் அமெரிக்காவையும் சேர்ந்த குறுகியதேசிய வெறி கொண்ட தேசியவாதத் தொழிலாளர் உயர்குலத்தோர் சோஷலிசத்துக்கு மிகவும் அபாயகரமானவர்கள் தான். இவர்கள் அகிலத்தின் உறுதியான தூண்களாவர். இந்த முதலாளித்துவ அகிலத்தைச் சேர்ந்த தலைவர்களும் தொழிலாளர்களும் புரியும் மிகப் பெரிய துரோகத்தை இங்கே நாம் எதிர்நோக்குகிறோம். இரண்டாவது அகிலத்திலும் காலனிப் பிரச்சினை விவாதிக்கப்பட்டிருக்கிறது. பாசெல் அறிக்கை இது குறித்து தெட்டத்தெளிவானதாகவே இருக்கிறது. இரண்டாவது அகிலத்தின் கட்சிகள் புரட்சிகரச் செயலை மேற்கொள்வோமென சூளுரைத்திருக்கின்றன. ஆனல் மெய்யான புரட்சிகரப் பணிபுரிவதாகவோ, சுரண்டப்பட்டு சார்பு நிலையில் இருத்தப்பட்டுள்ள தேசங்கள் ஒடுக்கும் தேசங்களை எதிர்த்து புரியும் கலகத்துக்கு உதவுவதாகவோ இந்தக் கட்சிகளில் எந்த அறிகுறியையும் காணேம். இரண்டாவது அகிலத்திலிருந்து வெளியேறிய, மூன்ருவது அகிலத்தில் சேர விரும்புகிற கட்சிகளில் பலவற்றுக்குக் கூட இது பொருந்துமென நினைக்கிறேன். எல்லோர் காதிலும் விழும்படி இதை நாம் பகிரங்கமாய்ப் பறையறைந்தாக வேண்டும். இது மறுக்கமுடியாத உண்மை. இதை மறுக்க எந்த முயற்சியும் செய்யப்படுகிறதா என்று பார்ப்போம்.

இந்த எல்லாக் கருத்துக்களும் தான் நமது தீர்மானங்களுக்கு அடிப்படையாய் அமையலாயின. இத்தீர்மானங்கள் மிகவும் நீளமானவை என்பது மெய்தான். ஆனல் இவை பயனுடையவை என்பதிலும் தேசிய இன காலனிப் பிரச்சினைகள் சம்பந்தமான மெய்யாகவே புரட்சிகரமான பணி ஓங்கவும் ஒழுங்கமையவும் துணை புரியுமென்பதிலும் ஐயமில்லை. இதுவே நமது தலையாய பணி.

# 8-இலக்குலக நிலவரம்

கீழ்த்திசைத் தேசிய இனல்கள் குறித்து வளர்ந்துவரும் நிலைமையைப் பற்றிச் சிலவற்றைக் கூற அனுமதியளியுங்கள். கீழ்த்திசையின் பல்வேறு மக்களின் கம்யூனிஸ்டு நிறுவனங்கள், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் நீங்கள். ருஷ்ய போல்ஷுவிக்குகள் பழைய ஏகாதிபத்தியத்தில் உடைப்பை உண்டாக்குவதிலும், புரட்சிக்குப் புதிய பாதைகளை வகுக்கும் மிக மிகக் கடினமான அதேபோதில் மிக மிகப் புனிதமான பணியைச் செய்வதிலும் வெற்றியீட்டியிருக்கிறார்கள். ஆனால் கீழ்த்திசை உழைப்பாளி மக்களது பிரதிநிதிகளான உங்கள் முன்னால் இதனிலும் பெரிய புதிய பணி ஒன்று இருக்கிறது. அனைத்துலகிலும் நடைபெற விருக்கும் சோஷலிசப் புரட்சி ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கம் அதன் சொந்த நாட்டு முதலாளித்துவ வர்க்கத்தின் மீது பெறும் வெற்றியாய் இருப்பதோடு மட்டும் நின்றுவிடாது என்பது முற்றிலும் தெளிவாகி வருகிறது. புரட்சிகள் எளிதாகவும் விரைவாகவும் வருமாயின் அது சாத்தியமாயிருக்கும்.

ஏகாதிபத்தியவாதிகள் இதை அனுமதிக்க மாட்டார்கள். எல்லா நாடுகளும் தமது உள்நாட்டு போல்ஷுவிஸத்துக்கு எதிராய் ஆயுதமேந்தி நிற்கின்றன, உள்நாட்டில் போல்ஷுவிஸத்தைத் தோற்கடிக்க வேண்டுமென்பதே அவற்றின் சிந்தனையெல்லாம். எனவேதான் ஒவ்வொரு நாட்டிலும் உள்நாட்டு யுத்தம் ஒன்று மூண்டு வருகிறது. பழைய சோஷலிஸ்டு-சமரசவாதிகள் இந்த யுத்தத்தில் முதலாளி வர்க்கத்தினரின் தரப்பில் அணிதிரட்டப்பட்டிருக்கின்றனர். ஆகவே சோஷலிஸ்டுப் புரட்சியானது முற்றிலுமோ, பிரதானமாகவோ, அந்தந்த நாட்டின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தினர் தமது முதலாளி வர்க்கத்தினரை எதிர்த்து நடத்தும் ஒரு போராட்டமாயிராது-இல்லை, ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்படும் எல்லாக் காலனிகளும், நாடுகளும் எல்லாச் சார்பு நாடுகளும் சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்தும் ஒரு போராட்டமாய் இருக்கும். கடந்த மார்ச் மாதத்தில் நாங்கள் ஏற்ற கட்சி வேலைத்திட்டத்தில் உலகச் சமூகப் புரட்சி நெருங்கி வருவது பற்றி குணநிர்ணயம் செய்கையில்,

முன்னேறிய எல்லா நாடுகளிலும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் சுரண்டலாளர்களுக்கும் எதிராய் உழைப்பாளி மக்கள் நடத்தும் உள்நாட்டுப்போர் சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய யுத்தங்களுடன் இணையத் தொடங்குகிறது என்று கூறினோம். புரட்சியின் போக்கு இதை ஊர்ஜிதம் செய்திருக்கிறது. காலம் செல்லச் செல்ல மேலும் மேலும் இது ஊர்ஜிதம் செய்யப்படும். கிழக்கிலும் இது இப்படியேதான் இருக்கும்.

கீழ்த்திசை மக்கள் பெருந்திரள் புதுவாழ்வில் சுயேச்சையாய்ப் பங்குகொள்வோராய் அதன் நிறுவகர்களாய்க் கிளர்ந்தெழுவார்கள் என்பது நமக்குத் தெரியும். ஏனெனில், கோடானுகோடியான மக்கள் சார்பு நிலையிலுள்ள முழு உரிமை பெறாத தேசிய இனங்களைச் சேர்ந்தோராய் இருக்கிறார்கள். இதுகாறும் இவர்கள் ஏகாதிபத்தியத்தின் சர்வதேசக் கொள்கையின் இலக்குகளாகவே, முதலாளித்துவக் கலாசாரத்தையும் நாகரீகத்தையும் வளப்படுத்துவதற்கான உரமாகவே இருந்துள்ளனர். காலனிகள் மீதான தர்மகர்த்தா ஆட்சியுரிமைக் கட்டளையை வினியோகிப்பது பற்றிப் பேசுகிறார்கள் என்றால் சூறையாடும் உரிமையையும் கொள்ளைப் பொருளையும் பங்கிட்டு கொள்வதென்பதே உலகின் பெரும்பான்மை மக்களைச் சிறுபான்மையோருக்கு அளிப்பதென்பதே-அதன் பொருள் என்று நமக்கு நன்றாகத் தெரியும். இந்தப் பெரும்பான்மை மக்கள் சுயேச்சையான புரட்சிகர சக்தியாய் அமைய முடியாத காரணத்தால், அதுவரை வரலாற்று முன்னேற்றத்தின் செயல் வரம்புக்கு முற்றிலும் அப்பாற்பட்டோராய் இருந்தவர்கள் இவர்கள் இதுபோன்ற செயலற்ற பாத்திரம் வகிப்பது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முடிவடைந்துவிட்டதை நாம் அறிவோம். 1905ஐத் தொடர்ந்து துருக்கியிலும் பாரசீகத்திலும் சீனாவிலும் புரட்சிகள் நடைபெற்றன என்பதும், இந்தியாவில் புரட்சிகர இயக்கம் வளர்ச்சியடைந்தது என்பதும் நமக்குத் தெரியும். ஏகாதிபத்தியப் போரும் இதேபோல் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பங்காற்றியது. ஏனெனில், ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள் தமது போராட்டத்துக்கு முழுமையான காலனிப் படைப் பிரிவுகளைத் திரட்டிக் கொள்ள வேண்டியிருந்தது. ஏகாதிபத்தியப் போர் கிழக்கு உலகையும் தட்டி எழுப்பி, அதன் மக்களை சர்வதேச அரசியலுக்குள் இழுத்துக் கொண்டது. இங்கிலாந்தும் பிரான்சும் காலனி நாடுகளின் மக்களை ஆயுதம் தரிக்கச் செய்து, அவர்களுக்கு இராணுவ நுட்ப முறைகளிலும் நவீன இயந்திரங்களிலும் பரிச்சயம் ஏற்பட உதவின. இந்த அறிவை அவர்கள் ஏகாதிபத்தியக் கனவான்களுக்கு எதிராய் உபயோகித்துக் கொள்வார்கள். தற்போதையப் புரட்சியில் கிழக்கு உலகு விழிப்புற்று எழுந்த காலகட்டத்தைத் தொடர்ந்து கீழ்த்திசை மக்கள் ஏனையோர் செல்வம் திரட்டுவதற்கான இலக்குகளாய் தீர்மானிப்பதில் பங்கெடுத்துக் கொள்ளும் காலகட்டம் வந்து கொண்டிருக்கின்றது. கீழ்த்திசை மக்கள் நடைமுறைச் செயலின் அவசியத்தை மனிதகுலம் அனைத்தின் எதிர்காலத்தையும் உருவாக்குவதில் ஒவ்வொரு தேசமும் பங்கு கொள்வதன் அவசியத்தை உணர்ந்து வருகிறார்கள்.

எனவேதான் உலகப் புரட்சியின் வளர்ச்சி வரலாற்றில்— இப்புரட்சியின் துவக்கத்தைக் கொண்டு பார்க்கையில் இதுபல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நடைபெறும் மிகுந்த முயற்சியைக் கோருவதாயிருக்கும் என்பது தெரிகிறது— இந்தப் புரட்சிகரப் போராட்டத்தில், புரட்சிகர இயக்கத்தில் நீங்கள் பெரிய பல்காற்ற வேண்டியிருக்கும். சர்வதேச ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எங்களுடைய போராட்டத்துடன் ஒன்று சேர வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன் சர்வதேசப் புரட்சியில் நீங்கள் பங்கெடுத்துக் கொள்வதானது ஒரு சிக்கலான கடினமான பணியை உங்கள் முன்னே வைக்கும். இந்தப் பணி நிறை வேற்றப் படுவதானது நம் எல்லோரது பொது வெற்றிக்குரிய அடித்தளமாய் அமையும். ஏனெனில் முதன் முதலாய் இங்கு மக்களில் பெரும்பான்மையோர் சுயேச்சையாய்ச் செயல்பட முற்படுகின்றனர் சர்வதேச ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவதற்கான போராட்டத்தில் செயல் முனைப்புள்ள சக்தியாய்த் திகழ்வார்கள்.

கீழ்த்திசை மக்களில் மிகப் பெருவாரியானோர் ஐரோப்பாவின் மிகவும் பிற்பட்ட நாடான ருஷ்யாவைக் காட்டிலும் மோசமான நிலையில் இருக்கிறார்கள், ஆனால், எதிரான எங்கள் போராட்டத்தில் நாங்கள் ருஷ்யாவின் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் ஒன்றுபடச் செய்வதில் வெற்றி பெற்றோம், மூலதனத்தையும் பிரபுத்துவத்தையும் எதிர்த்து விவசாயிகளும் தொழிலாளர்களும் ஒன்றுபட்டதால் தான் எங்களுடைய வெற்றி அவ்வளவு சுலபமாய் இருந்தது. இங்கே கிழக்கு உலகின் மக்களுடனான தொடர்பு குறிப்பான முக்கியத்துவமுடையது. ஏனெனில், கீழ்த்திசை மக்களில் பெரும்பான்மையோர் உழைப்பாளி மக்களது மாதிரிப் பிரதிநிதிகளாவர். முதலாளித்துவ ஆலைகள் மூலமான பயிற்சிக்கு உள்ளாகிய தொழிலாளர்களல்ல அவர்கள். மாறாக மத்திய காலத்திய ஒடுக்கு முறைக்குப் பலியான உழைப்போரும் சுரண்டப்படுவோருமான விவசாயப் பெருங்குடி மக்களின் மாதிரிப் பிரதிநிதிகள் அவர்கள். ருஷ்யப் புரட்சியானது பாட்டாளிகள் முதலாளித்துவத்தை தோற்கடித்த பின் கோடானு கோடியான உழைக்கும் விவசாயிகளாகிய மிகவும் சிதறுண்ட பெருந்திரளுடன் எப்படி ஒன்றுபட்டு எதிர்த்து கிளம்பினர் என்பதைக் காட்டிற்று. நமது சோவியத் குடியரசு இப்பொழுது விழித்தெழும் கீழ்த்திசை மக்கள் அனைவரையும் தன் பக்கத்தில் ஒன்று திரட்டி அவர்களுடன் சேர்ந்து சர்வதேச ஏகாதிபத்திசத்திற்கு எதிராய்ப் போராட்டம் நடத்தியாக வேண்டும்.

இத்துறையில் உங்களை எதிர்நோக்கும் பணி உலகின் கம்யூனிஸ்டுகளை இதன்முன் எதிர்நோக்கி இராத ஒன்றாகும். கம்யூனிசத்தின் பொதுத் தத்துவத்தையும் நடைமுறையையும் ஆதாரமாய்க் கொண்டு நீங்கள் ஐரோப்பிய நாடுகளில் இல்லாதவையான, பிரத்தியேகமான நிலைமைக்ளுக்கு உங்களைத் தகவமைத்துக் கொண்டாக வேண்டும். அந்தத் தத்துவத்தையும் நடைமுறையையும் நீங்கள் பெருவாரியான மக்கள் விவசாயிகளாய் இருக்கும் நிலைமைகளுக்கு மூலதனத்தை அல்ல, மத்திய காலத்திய மீதமிச்சங்களை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதே பணியாயுள்ள

நிலைமைகளுக்கு ஏற்பச் செயல்படுத்திக் கொள்ளக் கூடியோராய் இருத்தல் வேண்டும். அது கடினமான, பிரத்தியேகமான பணி; ஆனால் மிகுந்த நன்றிக்குரிய பணி. ஏனெனில் போராட்டத்தில் இது வரை பங்கெடுத்துக் கொள்ளாத வெகுஜனங்கள் அதனுள் ஈர்க்கப்பட்டு வருகிறார்கள். மற்றும் கிழக்கில் கம்யூனிஸ்க் கோஷ்டிகளை நிறுவுவதானது மூன்றாவது அகிலத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்பினை உங்களுக்கு அழித்திடுகிறது. உலகின் முன்னிலைப் பாட்டாளிகள் கீழ்த்திசை உழைப்பாளர்களும் சுரண்டப்படுவோருமான வெகுஜனங்களுடன் பல சந்தர்ப்பங்களில் மத்திய காலத்திய நிலைமைகளில் இருப்போரான இவர்களுடன் கூட்டணி கொள்வதற்கான பிரத்தியேக வடிவங்களை நீங்கள் கண்டறிந்து கொண்டாக வேண்டும். பெரிய அளவிலும் பெரிய நாடுகளிலும் நீங்கள் செய்யப்போவதை, நாங்கள் எங்கள் நாட்டில் சிறிய அளவில் செய்திருக்கிறோம். உங்களுடைய இந்தப் பணியை நீங்கள் வெற்றிகரமாய்ச் செய்திடுவீர்களென்று நம்புகிறேன். இங்குள்ள நீங்கள் பிரதிநிதிகளாயிருக்கும் கீழ்த்திசைக் கம்யூனிஸ்டு நிறுவனங்களின் பயனால் நீங்கள் முன்னேறிய புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டு மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில் கம்யூனிஸ்டுப் பிரசாரம் நடைபெறும்படித் தொடர்ந்து செய்து வரும்படி பார்த்துக் கொள்வது உங்கள் கடமையாகும்.

உலகின் முன்னேறிய நாடுகள் அனைத்தின் பாட்டாளி வர்க்கத்தால் மட்டும்தான் இறுதி வெற்றி கிட்டும்படிச் செய்யமுடியும் என்பது கூறாமலே விளங்கும் ஒன்று. ருஷ்யர்களாகிய நாங்கள் இவ்வேலையைத் துவக்கி வைக்கிறோம்; ஆங்கிலேய, பிரெஞ்சு அல்லது ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் இவ்வேலையை உறுதிபெறச் செய்யும்; ஆனால் ஒடுக்கப்பட்ட எல்லாக் காலனி மக்களின், முதன்மையாகவும் முக்கியமாகவும் கீழ்த்திசை உழைப்பாளி மக்களின் உதவி இல்லாமல் அவர்களால் வெற்றி பெறமுடியாதென்பது தெரிகிறது. கம்யூனிஸத்துக்கான மாற்றத்தினை முன்னணிப் படையினால் மட்டும் சாதித்துவிட முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். உழைப்பாளி வெகுஜனங்களை— அவர்கள் வந்தடைந்துள்ள வளர்ச்சி மட்டம் எதுவாயினும்— தட்டி எழுப்பிப் புரட்சிகரச் செயற்பாட்டிலும் சுயேச்சையான செயல்களிலும் நிறுவன ஒழுங்கமைப்பிலும் ஈடுபடச் செய்தல்; அதிக அளவு முன்னேறிய நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்காக வகுக்கப்பட்ட மெய்யான கம்யூனிஸ்டுப் போதனையை ஒவ்வொரு நாட்டின் மக்களது மொழியிலும் பெயர்த்திடல் உடனடியாய்ச் செய்யப்படவேண்டிய அந்த நடைமுறைப் பணிகளை நிறைவேற்றுதல், பிறநாடுகளின் பாட்டாளிகளுடன் ஒரு பொதுப் போராட்டத்தில் ஒன்று சேர்த்தல் ஆகிய இவையே நம் முன்னுள்ள பணிகள்.

பிரச்சினைகள் இத்தகையனவே. இவற்றுக்கான தீர்வை எந்தக் கம்யூனிஸ்டுப் புத்தகத்திலும் காணத்தற்கில்லை. ருஷ்யா துவக்கியுள்ள பொதுப்போராட்டத்திலே தான் நீங்கள் காண்பீர்கள்

உங்களுடைய சொந்த அனுபவத்தின் வாயிலாகவே நீங்கள் இப்பிரச்சினைகளைச் சமாளித்துத் தீர்வு கண்டாக வேண்டும். அதில் ஒரு புறத்தில் பிறநாடுகளின் தொழிலாளி மக்கள் அனைவரது முன்னணிப் படைப்புடன் உள்ள நெருங்கிய கூட்டணியும், மறுபுறத்தில் இங்கே நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் கீழ்த்திசை மக்கள்பால் சரியான அணுகு முறையைக் கண்டு கொள்வதற்குரிய உங்கள் வல்லமையும் உங்களுக்குத் துணை புரியும். நீங்கள் முதலாளித்துவத் தேசிய வாதத்தை உங்களுக்கு அடித்தளமாய்க் கொள்ள வேண்டியிருக்கும், இந்த முதலாளித்துவத் தேசிய வாதம் இம்மக்களிடையே விழிப்பூட்டி வருகிறது, விழிப்பூட்டியே ஆகவேண்டும். இந்த முதலாளித்துவத் தேசிய வாதம் வரலாற்று வழிப்பட்ட நியாயமுடையதாகும். அதே போதில், நீங்கள் ஒவ்வொரு நாட்டின் உழைப்பாளர்களும் ஒடுக்கப்பட்டவர்களுமான வெகுஜனங்களிடம் செல்வதற்கான உங்கள் வழியைக் கண்டு கொண்டாக வேண்டும். சர்வதேசப் புரட்சியின் வெற்றிதான் அவர்கள் விடுதலை பெறுவதற்கான ஒரேயொரு நம்பிக்கைச் சுடராகும் என்பதையும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் தான் கீழ்த்திசை உழைப்பாளர்களும் சுரண்டப்பட்டோருமான கோடானு கோடியான மக்களுக்கு ஒரேயொரு கூட்டாளியாகும் என்பதையும் அவர்களுக்குப் புரியும்படியான மொழியில் சொல்லியாக வேண்டும்,

இதுவே உங்களை எதிர்நோக்கும் பிரமாண்டமான பணி. புரட்சிக்கும் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கும்—இது குறித்து ஐயப்பாட்டிற்கு இடமே இல்லை—உரிய இந்தச் சகாப்தத்தின் பயனாய் இந்தப் பணி கீழ்த்திசைக் கம்யூனிஸ்டு நிறுவனங்களது கூட்டு முயற்சிகளால் வெற்றி கரமாய்ச் செய்து முடிக்கப்பட்டு, சர்வதேசு ஏகாதிபத்தியத்தின் மீதான முழுமையான வெற்றியினால் முடிசூட்டப் பெறும்.

## 9- சமாதானக் கட்டளை

அக்டோபர் 24- 25 புரட்சியால் உருவாக்கப்பட்ட தொழிலாளர், போர்வீரர், விவசாயிகள் டெப்பியூட்டிகளை அடிப்படையாகக் கொண்டு போர்சன்னத்தமான சகல மக்களும் அவர்களது அரசுகளும் நியாயமானதொரு ஜனநாயக சமாதானத்துக்கான உடனடி பேச்சுவார்த்தைகளைத் தொடங்குமாறு அறைகூவியழைக்கின்றது.

சலிப்பும் வேதனையும் நலிவுமுற்ற, போர்சன்னத்த நாடுகளின் மிகப்பெரும்பான்மையான தொழிலாளர்கள் காண ஏங்கும் ஒரு நியாயமான அல்லது ஜனநாயக சமாதானத்தின் மூலம்—ஜாரிஸ முடியாட்சி வீழ்த்தப்பட்ட நாள்தொட்டு ரஷ்யத் தொழிலாளரும் விவசாயிகளும் மிகத்திட்டவட்டமாய், உறுதியாய்க்கோரும் சமாதானத்தின் மூலம்—ஆக்கிரமிப்புகள் இல்லாத (அதாவது, அந்நிய நாடுகளைக் கைப்பற்றாத, அந்நிய நாடுகளை பலவந்தமாகப் பிடித்துக் கொள்ளாத) நஷ்டஈடு இல்லாத உடனடியான சமாதானத்தையே அரசு அர்த்தப்படுத்துகிறது.

சகல போர்சன்னத்த நாடுகளாலும் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய இத்தகைய சமாதானத்தை ரஷ்ய அரசு பிரேரித்து, அத்தகைய சமாதானத்தின் சகல நிபந்தனைகளும் எல்லா நாடுகளதும் எல்லா ராஜ்யங்களதும் மக்கள் பிரதிநிதிகளின். அதிகாரம் வாய்ந்த சபைகளால் இறுதியாக அங்கீகரிக்கப்படும் என எதிர்பார்த்து, எத்தகையத் தாமதமுமின்றி இப்பொழுது தீர்க்கமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான ஆயத்தத்தை வெளிப்படுத்துகின்றது.

அந்நிய நாடுகளை இணைத்துக் கொள்வதும் கைப்பற்றுவதுமானது, சின்னஞ் சிறிய அல்லது வலிமைகுன்றிய ஒருநாடு, அதன் திட்டவட்டமான தெளிவான தன்னிச்சையான விரும்பம் வெளிப்படுத்தப்படுதல் இன்றி, அத்தகையப் பலவந்த இணைப்பு நிகழ்ந்த நேரத்தின் குறிக்கோள்கள் கருதப்படாமல், சம்பந்தப்பட்ட ராஜ்யத்துடன் பலவந்தமாய் இணைக்கப்பட்ட, அல்லது பலவந்தமாய் அதன் எல்லைகளுக்குள் வைத்துக்கொள்ளப்பட்ட அந்நாட்டின் பின்தங்கிய நிலை கருதப்படாமல், இறுதியாக அந்நாடு ஐரோப்பாவிலோ அல்லது தூரத்தில் கடல்கடந்த இடங்களிலோ இருப்பது பற்றியும் கருதப்படாமல், பெரிய வலிமைமிக்க நாடொன்றால் இணைத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு செயலையும் அர்த்தப்படுத்துகிறதென அரசு கருதுகின்றது.

எத்தகையதொரு நாடும் சம்பந்தப்பட்டதொரு ராஜ்யத்தின் எல்லைகளுக்குள் பலவந்தமாக அதன் விருப்பத்துக்குமாருக வைத்திருக்கப்பட்டால்—பத்திரிகைகளிலும், பொதுக் கூட்டங்களிலும், கட்சித் தீர்மானங்களிலும் அல்லது தேசிய ஒடுக்குமுறைக் கெதிராக ஆர்ப்பாட்டங்களிலும், கிளர்ச்சிகளிலும் இவ்விருப்பம் வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் பாதகமில்லை—ராஜ்யத்தின் நிலைப்பாடான வடிவங்களைத் தீர்மானித்துக் கொள்வதற்கு, எல்லைகளைப்பிடித்திணைக்கும் நாட்டின் அல்லது பொதுவான அந்நிய நாட்டின் துருப்புகள் பூரணமாக அப்புறப்படுத்தப்பட்டபின், சுதந்திர வாக்கெடுப்பு நடத்தும் உரிமை வழங்கப்படாவிட்டால் அது, அத்தகைய இணைப்பு இடம்பிடித்தலேயாகும். அதாவது கைப்பற்றுதலும் வன்முறையும் ஆகும்,

பலம்வாய்ந்த செல்வம் மிக்கநாடுகள் அவைவெற்றி கொண்ட வலுவற்ற தேசிய இனங்களைத் தமக்குள் பங்குபோட்டுக் கொள்ளும் பிரச்சினை மீது இவ்யுத்தத்தைத் தொடர்வதானது மனித இனத்துக் கெதிராக இழைக்கப்படும் மாபெரும் குற்றமாகும் என அரசு கருதுவதோடு விதிவிலக்கேதுமின்றி சகல தேசிய இனங்களுக்கும் சமநீதியாகச் சுட்டிக்காட்டப்படும் நிபந்தனைகள் மீது இவ் யுத்தத்தை நிறுத்துவதற்கான சமாதான ஒப்பந்தத்தை உடனடியாகக் கைச்சாத்திடும் அதன் திடசங்கற்பத்தை பவித்திரமாய் அறிவிக்கின்றது.

அதேவேளை மேற்குறிப்பிட்ட சமாதான நிபந்தனைகளை இறுதியானதாகத் தான் கருதவில்லையென அரசு அறிவிக்கின்றது; வேறுவார்த்தைகளில் சொல்வதாயின், அது வேறெந்த சமாதான நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளத்தயாராய் உள்ளது; போர்ச்சன்னத்த நாடுகள் எதுவொன்றினுலும் முடிந்தவரை வேகமாக அவை முன்வைக்கப்படல் வேண்டுமென்றும், சமாதானப் பிரேரணைகள் தெள்ளத் வெளிவானதாய் இருக்கவேண்டுமென்றும், தெளிவற்றதாகவும் மூடுமந்திரமானதாகவும் இருக்கக்கூடாது என்றும் மட்டுமே அது வலியுறுத்துகின்றது.

அரசு இரகசிய ராஜதந்திர உறவுகளைத் தடைசெய்கின்றது, தன் பங்குக்கு' மக்கள் முழுமையும் அறியும் வகையில் சகல' பேச்சுவார்த்தைகளையும் பகிரங்கமாகவே நடத்துதற்கு உறுதியான விருப்பத்தை வெளிப்படுத்துகின்றது. நில எஜமானர்களதும் முதலாளித்துவவாதிகளதும் அரசினுல் பெப்ரவரியிலிருந்து அக்டோபர் 25, 1917 வரை அங்கீகரிக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட இரகசிய ஒப்பந்தங்களை அது உடனடியாக முழுமையாய் வெளியிடத் தொடங்கும். அதிகமாகத் தென்படுவதுபோல், ரஷ்ய நில எஜமானர்களதும், முதலாளிகளதும் நலன்களையும் சலுகைகளையும் பாதுகாப்பதையும் மகா ரஷ்யர்களால் பிடித்திணைக்கப்பட்ட பகுதிகளை வைத்துக்கொள்வதை அல்லது விஸ்தரிக்கப்படுவதையும் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் பட்சத்தில், இவ்விரகசிய ஒப்பந்தங்களில் அடங்கியுள்ளவை யாவையும் நிபந்தனையேதுமின்றி உடனடியாகச் செல்லுபடியாதவையென அரசு பிரகடனஞ் செய்கின்றது.

சகல நாடுகளையும் சேர்ந்த மக்களும் அரசுகளும் உடனடியாக வெளிப்படையான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குமாறு

பிரேரிப்பதுடன் அரசு தன்பங்குக்கு இப்பேச்சுவார்த்தைகளை எழுத்தில்' தந்திமூலம் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கிடையில் அல்லது அத்தகையப் பிரதிநிதிகளின் மகாநாட்டில் பேச்சுவார்த்தைகள் மூலம் நடத்துதற்கு ஆயத்தமாயுள்ளதை அறிவிக்கின்றது. இத்தகையப் பேச்சு வார்த்தைகளை எளிதாக்குவதற்காக அரசு அதன் பூரண அதிகாரம் வாய்ந்த பிரதிநிதிகளை பக்கச்சார்பற்ற நாடுகளுக்கு நியமிக்கின்றது.

சகல போர்சன்னத்த நாடுகளின் அரசுகளுக்கும் மக்களுக்கும் உடனடியான யுத்த நிறுத்தத்தை அரசு பிரேரிக்கின்றது; அது தன்பங்குக்கு, இந்த யுத்த நிறுத்தம் மூன்றுமாத காலத்துக் குறையாமல், அதாவது, யுத்தத்தில் சம்பந்தப்பட்ட அல்லது கலந்துகொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட எல்லா மக்களது அல்லது நாடுகளது பிரதிநிதிகளும் விதிவிலக்கின்றி கலந்து கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் நிறைவேறுவதற்குப் போதுமான காலகட்டத்துக்கு நிறைவேற்றப்படல் விரும்பத்தக்கதெனக் கருதுகின்றது; அத்துடன் சமாதான நிபந்தனைகளின் இறுதியான உறுதிப்பாட்டுக்காக சகல நாட்டு மக்களதும் பிரதிநிதிகளது அதிகாரம் வாய்ந்த சபைகளைக் கூட்டுவதும் விரும்பத்தக்கதெனக் கருதுகின்றது.

சகல போர்சன்னத்த நாடுகளது அரசுகளையும் மக்களையும் நோக்கி சமாதானப் பிரேரணைகளை விடுக்கும் அதேவேளை, ரஷ்யாவின் இடைக்காலத் தொழிலாளர் விவசாயிகள் அரசு குறிப்பாக மனுக்குலத்தின் முன்னேற்றமடைந்த மூன்று மிகப்பெரும் ராஜ்யங்களின், தற்போதைய யுத்தத்தில் பங்குபற்றும் மிகப் பெரும் ராஜ்யங்களின், பெயர் குறிப்பிடுவதாயின் மகா பிரித்தானியா, பிரான்சு, ஜெர்மனியின் வர்க்க உணர்வுபெற்றத் தொழிலாளர்களுக்கும் விண்ணப்பிக்கின்றது இந்நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் முன்னேற்றத்துக்கும், சோஷலிஸத்துக்கும் மிகப்பெரும் பங்களிப்பு வழங்கியுள்ளனர்; இங்கிலாந்தில் மனித உரிமைசாசன இயக்கத்தின் மாபெரும் உதாரணங்களையும், பிரெஞ்சு தொழிலாளி வர்க்கத்தால் நடத்தப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அநேக புரட்சிகளையும், இறுதியாக, ஜெர்மனியில் சோஷலிஸ விரோதச் சட்டத்துக்கெதிரான வீரஞ் செறிந்த போராட்டத்தையும், முழுஉலகத் தொழிலாளர்களுக்கும் முன்மாதிரியாய்த் திகழும் தொழிலாளிவர்க்க வெகுஜன ஸ்தாபனங்களை ஜெர்மனியில் உருவாக்கும் உறுதிவாய்ந்த நீடித்த கட்டுப்பாடான பணிகளையும் அவர்கள் வழங்கியுள்ளனர். தொழிலாளி வர்க்க வீரத்தினதும், வரலாற்றுரீதியான ஆக்கப் பணியினதும் இவ்வுதாரணங்கள் யாவும், மனுக்குலத்தை யுத்தத்தின் குரூரங்களிலிருந்துவிளைவுகளிலிருந்து காப்பாற்றுதற்காய்இப்போது தம்மைஎதிர்நோக்கும் கடமையை குறிப்பிடப்பட்ட நாடுகளின் தொழிலாளர்கள் புரிந்து கொள்வார்கள் என்பதையும், இத்தொழிலாளர்கள் அறிவுபூர்வமான, சங்கற்பம்பூண்ட அதிமேன்மை வாய்ந்த வீறுகொண்ட செயல்தன்மை மூலமாய், நாம் சமாதானத்தை வெற்றிகரமாக நிலைநாட்ட உதவி, அதேவேளை நமது மக்கள் தொகையின் உழைக்கும் மக்களை, சுரண்டப்பட்ட மக்களை, சகல விதமான அடிமைத்தனத்திலிருந்தும், சகல விதமானச் சுரண்டலிலிருந்தும் விடுதலைப் பெறச் செய்வார்கள் என்பதையும் பிரதிக்கினைச் செய்கின்றன.

[illegible] ாயர் த. துரைசிங்கம் ஒ[illegible] ழககறிஞர். 1927ல் முற்[illegible] இளைஞர் ஸ்தாபனமான யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரஸில் சேர்ந்த இவர் பின்னால் அதன் உயர் கமிட்டி அங்கத்தவரானார். பூரணமான தேசிய சுதந்திரத்துக்காகக் குரல் எழுப்பிய இலங்கையின் முதலாவது அரசியல் ஸ்தாபனம் இதுதான்.



த. துரைசிங்கம்

1930க்களின் ஆரம்பத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்த-எதிப்பு சூரிய மலர் இயக்கத்தின் ஒருதீவிர அங்கத்தவராக இருந்தவர்; அதன் உயர் கமிட்டிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். சூரிய மலர் இயக்கத்தில் இருந்த இடது சாரிகள் 1935ல் இலங்கை சம சமாஜக் கட்சியைத் தோற்றுவித்தனர். நூலாசிரியர் அக்கட்சியின் இலக்கியத் துறைச் செயலாளராக இருந்தார்.

அப்போது மார்க்ஸிய-லெனினிய பேரிலக்கியங்களின் இறக்குமதிக்கு தடைவிதிக்கப் பட்டிருந்தது. அவற்றை இங்கு மீண்டும் பிரசுரிக்கும் பணியை இவர் மேற்கொண்டார். இந்த நோக்கத்துக்காக 1930க்களில் ''மோகன் ஆர்ட் பாட்'' என்ற நிறுவனத்தை [illegible]பித்தார் சோவியத் யூனியனிலிருந்தும் இதர நாடுகளிலிருந்தும் கம்யூனிஸ சோஷலிஸ இலக்கியங்களை இறக்குமதி செய்த முதல் நிறுவனம் இதுதான்.

1940ல் இவரும் இதர கம்யூனிஸ்டுகளும் லங்கா சமசமாஜக் கட்சியை விட்டு விலகி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடியாக அமைந்த ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சியை உருவாக்கினர்.

1942ல், 2வது உலக யுத்தத்தின் போது சோவியத் யூனியனின் இலங்கை நண்பர்கள் அமைப்பை உருவாக்க உதவி செய்த இவர் அந்த அமைப்பின் வெளியீடான ''இலங்கை—சோவியத் ஜேர்னல்'' இன் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

உலக சமாதானக் கவுன்ஸிலின் உறுப்பினரான இவர் இலங்கை சமாதானக் கவுன்ஸிலின் பழம்பெரும் உழைப்பாளியுமாவார். அத்துடன் இலங்கையில் உள்ள ஆபிரிக்க-ஆசிய ஒருமைப்பாட்டுச் சங்கத்தின் செயலவை உறுப்பினராகவும் உள்ளார்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக சட்ட, உலக சமாதான, கூட்டுச்சேரா இயக்கத்தின் உயர்கட்ட, ஆபிரிக்க, ஆசிய ஒருமைப்பாடு, ஆசிய பந்தோபஸ்து குறித்த சர்வதேச மகா நாடு[illegible]ல் கலந்து கொள்வதற்காக பல நாடுகளுக்கு விஜயம் செய்துளளார்.

சஞ்சிகைகள், பத்திரிகைகளில் பல கட்டுரைகளை எழுதியுள்ள இவர், உழைக்கும் வர்க்க இயக்கத்தின் வரலாறு, இந்திய உபகண்டத்தின் சமாதானம், இலங்கையின் முற்போக்கு இயக்கத்தின் தோற்றம் பற்றிய பல நூல்கள், பிரசுரங்களின் ஆசிரியராகவும் உள்ளார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக உறுப்பினரான இவர் 1960 முதல் அக்கட்சியின் மத்திய கட்டுப் பாட்டுக் கமிஷனின் தலைவராகவும் இருந்து வருகிறார்.